# எழுதி வைத்தாய் என்னை

## 1

"நல்லதாக் கொஞ்ச நேரம் ஏதாவது நினைக்கலாம்னுதானே இங்கே வந்தோம். சுத்தியும் எவ்வளவு கலகலப்பா இருக்கு. கொஞ்ச நேரம் அதிலயெல்லாம் மனசு செலுத்தேன்டி!" என்றாள் சங்கீதா.

தேனருவி அவளைப் பார்த்து அன்பாகப் புன்னகைத்தாள்.

தன் மனதைத் தேற்றுவதற்கு அவள் வெகுவாக முயற்சி செய்வது தேனருவிக்குப் புரிந்தது. சுற்றிலும் ஒரு முறை பார்வையை ஓடவிட்டாள்.

பொருட்காட்சித் திடல். அந்தப் பெரிய ராட்சத ராட்டினம் சுழன்று மேலெழுகையில் உணர்ச்சி வசப்பட்டுக் கலக்கமும், ரசிப்புமாய்ச் சத்தம் போட்டுக் கொண்டு அதை அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள்.

பெரிய பஞ்சு மிட்டாய்க் குச்சியைக் கையில் வைத்துக் கொண்டு சிறு குழந்தைகளைப் போல் சாப்பிட்டு இதழ்களெல்லாம் சிவப்பாக நடந்து கொண்டிருந்த நடுத்தர வயதுக்காரர்கள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவர்களுக்கெல்லாம் உலகம் ரம்யமாக இருக்கிறது - அனுபவிக்கிறார்கள். ஆனால் தனக்கு? ஏதாவது சொன்னால் சங்கீதாவுக்கு வருத்தம். பாவம், காரைப் போட்டுக் கொண்டு வேலை மெனக்கெட்டு வந்து தன்னை அழைத்து வந்திருக்கிறாள். அவள் மனத்தை நோகடிக்கக் கூடாது.

''சரிடி. கொஞ்ச நேரத்துக்கு எல்லா நினைப்பையும் கழற்றி வச்சாச்சு!'' என்றாள். உற்சாகமானாள்.

அதற்குப் பிறகு ஒரு இரண்டு மணி நேரம் இலக்கில்லாமல் சுற்றினார்கள். பேசினார்கள். சிரித்தார்கள்.

தேனருவி மனது வைத்துப் பேசினால் கேட்கிறவர்கள் சிரித்துச் சிரித்து வயிறு வலிக்கச் செய்து விடுவாள். அதற்காகவும்தானே சங்கீதா அவளை நாடி வருவது.

சங்கீதா எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொண்டாள்.

''பாரு! என்னைக்காவது ஒரு நாள் திருப்பிக் கொடுப்பேன்!'' என்றாள் தேனருவி.

சங்கீதா அவளை வருத்தத்துடன் பார்த்தாள்.

''ஏய். என்ன நீ! இவ்வளவு நேரம் எவ்வளவு மனசு விட்டுச் சிரிச்சேன். அதுக்கெல்லாம் நான் எவ்வளவு குடுக்கறது?'' என்றாள்.

''ஓ.கே.! ஓ.கே.! ஸ்டேட்மென்ட் வாபஸ்!'' என்றாள் தேனருவி. ''ஒரு ஜோக் சொல்லட்டுமா?'' என்றாள்.

''ம்...'' என்றாள் சங்கீதா உற்சாகமாக.

''ஒரு இடத்துல எல்லாரும் கூட்டமா நின்னுகிட்டிருந் தாங்க. எப்பவும் தன்னை அறிவாளின்னு நினைச்சுக்கற ஒரு இளைஞன் அங்கே போனான். என்ன விஷயம்னு விசாரிச்சான் இல்லே! ஆக்ஸிடென்ட், அடிபட்டிருக்கு அப்படீன்னாங்க. உடனே அவன் கூட்டத்தை விலக்கறதுக்காக வேண்டி, 'எல்லாரும் நகருங்க! அடிபட்டுக் கிடக்கிறது என்



தம்பி!' என்றான். எல்லாரும் ஒரு மாதிரியாப் பாத்துகிட்டு விலகி வழி விட்டாங்க.''

''ஏன்?''

''ஏன்னா... அங்க அடிபட்டுக் கிடந்தது ஒரு கழுதை!...'' என்றாள் தேனருவி.

சங்கீதா ரசித்துச் சிரித்தாள்.

இரண்டு எட்டு நடந்ததும் மறுபடியும் சிரித்தாள். தேனருவி 'என்ன?' என்பது போல் பார்க்க,

''இல்லே! அந்தப் பிஸ்தா முகத்தில் எவ்வளவு அசடு வழிஞ்சிருக்கும் கழுதையைப் பார்த்ததும்!'' என்று மீண்டும் சிரித்தாள்.

தேனருவி சிரித்து விட்டாள். பிறகு கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு, ''ஏய்! சங்கீதா! அம்மா, பாவம்! தனியா அவதிப்படுவாங்க. ஒன்பது மணிக்கு என்னைக் கொண்டு போய் விட்டுரு!'' என்றாள்.

''சரி! இப்ப மணி எட்டாச்சு. நாம எங்கயாவது போய்ச் சாப்பிட்டுட்டுப் போலாமா?'' என்றாள்.

என்ன மறுத்தாலும் கேட்க மாட்டாள். ''சரி.. வா.. போலாம்,'' என்றாள் தேனருவி.

காந்திபுரத்தில் ஏ.சி. அறை உள்ள ஹோட்டலுக்கு அழைத்துப் போனாள்.

சங்கீதா கோயமுத்தூரில் ஒரு தொழிலதிபரின் மகள். தேனருவி அவள் தோழி.

தேனருவியின் நட்பு அவளுக்கு மிகவும் தேவையாய் இருந்தது. எந்த எதிர்பார்ப்புகளுமில்லாமல், பிறரைப் போல், அவளுடைய பணத்துக்காகவும், அவளால் ஆக வேண்டிய காரியங்களுக்காகவும் இல்லாமல், வெறும் கல்லூரித் தோழியாகவே பார்த்துப் பழகுபவள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

உண்மையில் சங்கீதா ஒரு பெரிய தொழிலில் பங்குதாரர் என்ற போதும் உதவிக்கென்று ஒரு நாளும் கை நீட்டியதில்லை.

தேனருவி இப்போது பெரும் சிக்கலில் இருந்தாள். அவளது அப்பாவின் கிட்னி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. டயாலிஸிஸ் செய்து உயிர் பிழைக்க வைத்துக் கொண்டிருந் தார்கள்.

அவள் அண்ணன் பாரி திருமணமானவன். மதுரைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய் விட்டான். மனைவியும் இரண்டு குழந்தைகளுமாகத் தன் குடும்பச் செலவு போக மாதம் இரண்டாயிரம் அனுப்பி வைப்பான்.

ஒரு தம்பி கிள்ளி வளவன். தங்கை கயல்விழி. இவர்களுக்கு இளையவனாகப் பதின்மூன்று வயதில் ஒரு பையன் கோப்பெருஞ் சோழன்.

ஐந்து குழந்தைகளைச் சற்றும் யோசிக்காமல் பெற்ற அப்பா பெயர்களை மட்டும் யோசித்து யோசித்து அழகாகத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தார்.

தனியார் கம்பெனியில் நல்ல வேலையில்தான் இருந்தார். ஆனால் கிட்னி ஃபெயிலியர் என்றால் எத்தனை நாள் வைத்துக் கொள்வார்கள். கையில் ஒரு தொகையைக் கொடுத்து அனுப்பி விட்டார்கள்.

வாரத்துக்கு இரண்டு டயாலிசிஸ். மருந்துகள் மாத்திரைகள் குடும்பச் செலவுகள் என்று அந்தத் தொகை கரைந்து கொண்டிருந்தது. ஏன், கிட்டத்தட்ட முடிந்து போயிற்று.

ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளாக கிட்னி ஆபரேஷன் செய்து விட வேண்டுமென்று டாக்டர்கள் சொல்கிறார்கள்.

அவர்கள் குடும்பத்தில் யாருடைய கிட்னியைக் கொடுப்பது என்ற பிரச்சினை வந்தபோது, அம்மா தன் கிட்னியைக் கொடுக்கத் தயாராகி விட்டார். நல்ல வேளையாகப் பொருந்தவும் செய்தது.



கிள்ளி வளவன் மூன்றாமாண்டு கல்லூரியில் இருந்தான். கயல்விழி முதலாமாண்டில் இருந்தாள். தம்பி எட்டாம் வகுப்பில் இருந்தான்.

அப்பா தியாகராஜனின் நண்பர் அருணாசலம் தன்னுடைய மின்சாரப் பொருட்கள் விற்கும் கடையில் அவளைக் கல்லாவில் உட்கார வைத்து மூவாயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தார். அதுவே அதிகம் என்பது தெரியும்.

எப்படியாவது சர்ஜரி முடித்து விட்டால் கூட, பிறகு அரசாங்க நிதி உதவி பெற்றுக் கொள்ளலாம் என்றார்கள். எம்.எல்.ஏ., எம்.பி., ஃபண்ட், லயன்ஸ் கிளப் என்று எல்லாப் பக்கமும் உதவிகளுக்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள். ஆனால், உதவி செய்கிற அமைப்புக்கள் காட்சிப் பொருளைப் போல் அவளை வரச் சொல்லிப் பேசச் செய்வதெல்லாம் அவளுக்கு மிகவும் துன்பமாக இருந்தது. ஆனால் வேறு வழியிருக்கவில்லை.

அண்ணி பாமா வேறு ஃபோன் செய்து, "தேனு, ஆம்பளைங்களே ரொம்ப மோசம். உங்கண்ணனுக்குக் கல்லு மனசு. நானாக்கும் வற்புறுத்தி இந்த இரண்டாயிரத்தை அனுப்பறேன்," என்று சொல்லும்போது, மேற்கொண்டு அண்ணனிடம் உதவி கேட்பதே கேவலமாக இருந்தது.

வயதுக்கு மீறிய துக்கங்களைச் சுமந்து கொண்டிருக்கிறாள் தன் தோழி என்று சங்கீதாவுக்கு அவள் மேல் அனுதாபம். அதே சமயம் அனுதாபத்தை விரும்பாத அவள் குணம் பற்றி அவளுக்குப் பெருமை.

சங்கீதாவின் அம்மா, "என்னடி, உனக்கு அந்த மாதிரிப் பொண்ணுங்களோடெல்லாம் பழக்கம்?" என்று சிடுசிடுத்தாலும் கூட, "அம்மா.. ஸ்டேட்டஸ், பணம் இதெல்லாம் மறந்துட்டுக் கொஞ்ச நேரம் அவ கூட நிம்மதியா இருக்க முடியுது!" என்று வாயடைத்து விடுவாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"இப்ப என்னடி, உனக்கு வழக்கமான பணியாரமா?" என்றாள் சங்கீதா.

அவள் சற்றும் எதிர்பாராத விதமாக, "பிட்ஸா. பிட்ஸா சாப்பிட்டுப் பார்க்கலாமா?" என்றாள் தேனருவி.

"ஹேய்! தட்ஸ் ரியலி குட்!" என்று ஆர்டர் செய்தாள்.

"கீதா, நல்லதா ஒரு இலக்கியக் கூட்டம் நடக்குது. இன்னைக்குப் பேசாம அதுக்குப் போயிருக்கலாம்," என்றாள் தேனருவி.

"இலக்கியக் கூட்டம்? நான்? நீங்க அறிவு ஜீவிகள் எல்லாம் பெரிய விஷயமாப் பேசி உலகத்தையே சுமக்கற மாதிரி பாவனை செஞ்சுகிட்டிருப்பீங்க.. நான் அங்க இரும்படிக்கிற இடத்துல ஈக்கு என்ன வேலைன்னு கெக்கே பிக்கேன்னு முழிச்சுகிட்டிருக்கணும்!" என்றாள்.

"இந்தக் கிண்டல்தானே வேணாங்கறது?" என்றாள் தேனருவி.

"பின்ன, என்னடி. அறிவு ஜீவிகள் ஏன் சுத்தி வளைச்சுக் காதைத் தொடறீங்க? ஸ்ட்ரெயிட்டா இருக்க மாட்டீங்களே!" என்று சங்கீதா ஒரு சண்டைக்குத் தயாரானாள்.

"அது வேற டாபிக். அதை இன்னொரு நாளைக்கு வச்சுக்கலாம். நவ் ஐம் கோயிங் டு டாக்கின் பிட்ஸா!" என்று கட் செய்து எடுத்து வாயில் வைக்கையில் சோழனின் ஞாபகம் வந்தது.

தயக்கத்துடன் வைத்து விட்டாள். அவளை ஒரு நிமிடம் ஆழப் பார்த்த சங்கீதா, 'இதோ வரேன்,' என்று போனாள். ஓரிரு நிமிடங்களில் புன்னகையுடன் திரும்பி வந்து,

"நாலு பிட்ஸா பார்சல் சொல்லிட்டேன். வீட்ல உங்க அம்மாவுக்கு ஃபோன் செய்து டிஃபன் எதுவும் செய்ய வேண்டாம்னு சொல்லிட்டேன். இப்ப நிம்மதியா சாப்பிடு!" என்றாள்.



தேனருவியின் கண்கள் கலங்கி விட்டன. "ஏய்! நான் உனக்கு இதுக்கெல்லாம் எப்படிக் கைம்மாறு பண்ணப் போறேன்?"

"ஜஸ்ட் பை கிவிங் யுவர் வால்யுபிள் கம்பெனி நவ் அன்ட் தென்," என்றாள் சங்கீதா.

கனமானதொரு மௌனத்தில் அவர்கள் ஆழ்ந்த போது சற்றுத் தள்ளியிருந்த காபினில் இருந்து வெடிச் சிரிப்புக் கிளம்பியது.

இளைஞர்கள் ஒரு மூன்று நான்கு பேர்கள் இருந்தார்கள் போலும்.

"டேய்! இந்தப் பெரிய பிஸினஸ் மேக்னட் இங்க உட்கார்ந்திருக்கான்னு தெரிஞ்சா... பேட்டி யெடுக்க வந்திருவாங்கடா..!" என்றான் ஒருவன்.

"சும்மா.. வாராதீங்கடா.. கொஞ்ச நேரம் என்ஜாய் பண்ண விடுங்க..." என்றது ஒரு குரல்.

"என்ஜாய் பண்றதுன்னா என்னன்னு உனக்கு வேற தெரியுமாக்கும்? ட்ரிங்க்ஸ் கிடையாது. ஸ்மோக்கிங் கிடையாது. அப்புறம் என்னடா லைஃப்?"

"அது சரி.. ஒரே ஒரு விஷயத்திலயாவது உண்மையைச் சொல்றா. ஏதாவது கேர்ள் ஃபிரண்ட்ஸ்?" என்றான் ஒருவன்.

"அட போங்கடா! உலகத்துலயே ரொம்ப சீப்பான விஷயம் அதுதான். கூரை மேல சோத்தைப் போட்டா கூட்டம் கூட்டமாய்க் காக்கா வருமில்ல. அது மாதிரித்தான்!" என்றான் ஒருவன்.

"ஹேய்! ரொம்ப மட்டமாப் பேசாதடா!" என்றான் மற்றொருவன்.

தேனருவியின் முகம் சிவந்தது. 'பெண்கள்னா இவ்வளவு மட்டமாப் போச்சாடா, உங்களுக்கு!' என்று எழுந்து

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

கூச்சலிடலாமா என்று நினைத்தாள். ஆனால், சண்டைக்குப் போவது என்பது எப்போதும் அவள் குணமாய் இருந்ததில்லை.

சங்கீதாவுக்கு அவள் முகம் பார்த்துச் சிரிப்பு வந்தது.

"ஏய்! ஊர்ல யாரோ என்னமோ பேசறதுக்கெல்லாம் நாம பதில் சொல்ல முடியுமா? நீ ஏன் டென்ஷனாகறே?" என்று மெல்லிய குரலில் ஆசுவாசப்படுத்தினாள்.

"இருந்தாலும் பப்ளிக் பிளேஸ்ல... ஒரு டீசன்ஸி வேண்டாமா?" என்று முணுமுணுத்தாள் தேனருவி.

சங்கீதா கஷ்டப்பட்டுச் சற்று நேரம் வேறு விஷயங்கள் பேசித் திசை திருப்பினாள்.

"சரிடி. ஃபர்தரா அப்பாவுக்கு எப்ப சர்ஜரி? ஏதாவது ஹெல்ப் வேணுமா?" என்றாள்.

"வேண்டாம் கீதா. ஏற்கெனவே இருபத்தைஞ்சு முப்ப தாயிரத்துக்குப் பக்கம் உங்கிட்ட வாங்கியாச்சு..." என்றாள் வருத்தத்துடன்.

"சரி, எப்ப முடியுதோ அப்ப வட்டியோட திருப்பிக் குடு!" என்றாள்.

"அசலுக்கே வழியைக் காணோம். வட்டிக்கு எங்கடி போவேன்?" என்றாள் வருத்தத்துடன்.

"பின்னே நான் திருப்பிக் குடுன்னு கேட்டனா?"

"நீ ரொம்ப நல்ல மனசுக்காரி. கேட்க மாட்டே. ஆனா, உங்கம்மா ரொம்ப ஸ்ட்ரிக்ட். இதுக்கு மேலயும் நான் உங்கிட்ட ஹெல்ப் கேட்டா உங்கம்மா நம்ப ஃபிரண்ட் ஷிப்புக்கே 144 போட்டுடுவாங்க. வேண்டாம்!" என்றாள் தேனருவி.

அதில் உண்மை இருந்தது சங்கீதாவுக்குத் தெரியும். ஆனாலும் சொன்னாள்.



"சரிப்பா... ரொம்ப அவசியமான நேரத்துல ஹெல்ப் கேளு. அம்மாவை நான் சமாளிச்சுக்கறேன்!" என்றாள் ஆறுதலாக.

"இப்போதைக்கு உன் ஃப்ரண்ட்ஷிப்பே எனக்குப் பெரிய பலமா இருக்குடி. அந்த சோஷியல் சர்வீஸ் கிளப்ல உன் ஃப்ரண்டுன்னு சொன்னவுடனே நல்ல மரியாதை.

"ஆனா சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இந்த மாதிரி கிளப் மெம்பர்ஸ் எல்லாம் ஐந்நூறு ரூபாய் ஹெல்ப் பண்ணிட்டு, ஐயாயிரம் ரூபாய்க்கு விளம்பரம் செஞ்சுக்கறாங்க. கொஞ்சம் ஓரத்துல வலிக்குதடி!" என்றாள்.

சங்கீதா பெருமூச்சு விட்டாள். "ஆமாடி. அதுவும் நிஜம் தான். என்ன செய்யறது, உலகம் பலவிதம்தான்!" என்றாள்.

எப்போதும் பரபரப்பாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு எப்போது ஓடலாம் என்று பரபரக்கிற தேனருவி அன்று சற்று நிதானமாகச் சாப்பிடுவதைப் பார்த்த சங்கீதாவுக்கு ஆச்சரியம்.

'என்ன விஷயம்?' என்பது போல் ஒற்றைப் புருவத்தை உயர்த்தினாள்.

அதே நேரம் அந்த இன்னொரு கேபினில் இருந்து மூன்று பேர் வெளியே வந்தார்கள். மெதுவாக ரிலாக்ஸ்டாக நின்று பேசிக் கொண்டு நகர்ந்தார்கள்.

"இவங்கதானே கீதா, அப்படிப் பேசினது?" என்று தேனருவி முணுமுணுக்க, சங்கீதா திரும்பிப் பார்த்தாள். பிறகு ஒரு புன்னகையுடன் திரும்பித் தேனருவியைப் பார்த்தாள்.

"அதுல ஒரு ஆளை எனக்குத் தெரியும். பெரிய புள்ளி. ஆனா, பொதுவா அவன் பெண்கள் கிட்டே நெருங்க மாட்டானே. ஆனா, இப்படிப் பேசறான்!" என்றாள் ஆச்சரியம் போல.

தேனருவி லேசாக எட்டிப் பார்த்தாள்.

கம்பீரமாக இருந்தான். சற்று உயரமாகவே இருந்தான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

முழுக்கைச் சட்டை அணிந்திருந்தான். மற்ற இருவரும் கூடப் பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருந்தார்கள். அதிலும் அந்தக் குறிப்பிட்ட ஆள் லேசாக மீசையை நீவியபடி பேசிக் கொண்டிருந்தான். பணக்காரத்தனம் நன்றாகத் தெரிந்தது.

''யாரைடி சொல்றே?'' என்றாள் தேனருவி.

சங்கீதா காட்டிய ஆள் வேறு. அவள் பார்த்த ஆள் வேறு. அதற்குள் அந்த மூவரும் சிரித்தார்கள். பிறகு நகர்ந்தார்கள்.

தேனருவி அவர்களை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன, இப்படிப் பார்க்கறே?'' என்றாள் சங்கீதா.

''இல்லே. என்னைக்காவது ஒரு நாள் அந்த ஆளோட சட்டைக் காலரைப் பிடிச்சு இழுத்து நிக்க வச்சு.. 'பொண்ணுங்கன்னா என்ன கிள்ளுக் கீரையா நினைச்சு கிட்டியா?'ன்னு கேட்கணும்னு தோணுது,'' என்றாள்.

சங்கீதா சட்டென்று சிரித்து விட்டாள்.

''ஐயோ! தேனருவி!'' என்று மறுபடியும் சிரித்தாள்.

தேனருவி ஆனால் சிரிக்கவில்லை.

## 2

தேனருவியின் முகத்தை ஜாடைமாடையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார் அருணாசலம்.

முகம் வாடி இருந்தாள்.

பாவம். குழந்தை வயதுக்கு மீறிச் சுமக்கிறாள் என்று எண்ணிக் கொண்டார்.

''அம்மா, தேனருவி! என்னம்மா பிரச்னை?'' என்று கேட்டார்.

''எல்லாம் வழக்கமான பிரச்னைதான், மாமா!'' என்றாள்.



தொடர்ந்து, ''நேத்து டயாலிசிஸ் முடிஞ்சது. அடுத்ததுக்கு என்ன செய்யறதுன்னு புரியலே!'' என்றாள்.

''அம்மா, நான் ஒரு இடத்துல உதவி கேட்டிருக்கேன். மனசு வச்சாங்கன்னா உன் பிரச்னையெல்லாம் தீரும். நம்ம பில்டிங் ஓனர் கிட்டே....'' என்றார்.

அவர்கள் கடை இருந்த இடம் ஒரு காம்ப்ளெக்ஸ். முப்பது கடைகள் இருந்தன. அந்தக் காம்ப்ளெக்ஸின் ஓனருக்கு என்று ஒரு சிறிய அலுவலகம் கூட முதல் மாடியில் இருந்தது என்றார்கள்.

அவள் அதையெல்லாம் கவனித்ததில்லை. தேனருவி ஒரு ஏழெட்டு மாதங்களாகத்தான் இந்த வேலைக்கே வருகிறாள்.

அதற்கு முன்னர் மேல்படிப்பு, கம்ப்யூட்டர் கோர்ஸ் என்று போய்க் கொண்டிருந்தாள். அப்பாவுக்கு உடல் சரியில்லாமல் போனதும் அவள் களத்தில் இறங்க வேண்டியதாய்ப் போயிற்று.

நாளும் பணப்பிரச்சினையே அவளைத் தின்று கொண்டிருந்தது. சுற்றுப் புறங்களைக் கவனிக்கக் கூடிய சூழ்நிலையில் கூட அவள் இல்லை.

அருணாசல மாமா எவ்வளவோ அனுசரணையாகத்தான் இருந்தார். அதற்காக வேலையில் எந்தச் சலுகையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள்.

வேலை நேரத்தில் எல்லாவற்றையும் தூக்கி வைத்து விட்டு வேலை பார்ப்பாள். பல நாட்களாக இருக்கிற கடை, தரமான பொருட்களையே விற்பார் என்பதால் வாடிக்கையாளர் வரவு எப்போதும் இருக்கும். அருணாசலம் தானே கடையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருக்கும் ஐம்பதுக்கும் மேலே ஆகி விட்டதால் தேனருவி வந்தது உதவியாகத்தான் இருந்தது. நஷ்டம் ஒன்றும் இல்லை.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவரும் ஓரளவு முன் பணம் கொடுத்திருந்தார். அவர் சொல்லக் கூடிய இடம் என்றால் தயங்காமல் போய்ப் பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

"ஆனா, அதுல ஒரு பிரச்னை!" என்றார்.

"என்னங்க மாமா?" என்றாள். "அவர் பெரும்பாலும் சனிக்கிழமையோ ஞாயிற்றுக்கிழமையோ தான் பில்டிங்குக்கு வருவார். அதுவும் காலை நேரத்துல வருவார். ஒரு ரவுண்டு பாத்துட்டு காம்ப்ளெக்ஸ் மேனேஜர்கிட்டே பேசிட்டு ஒரு அரை மணி நேரம் இருந்துட்டுப் போயிருவாரு. காலைல ஏழு மணிக்கெல்லாம் வந்துருவாரு," என்றார்.

"அதனாலென்ன, அங்கிள்! பாக்கறேன், தப்பில்லை," என்றாள்.

"அப்ப.. நான் ஃபிக்ஸ் பண்ணிட்டு நான் ஃபோன் பண்ணட்டா?" என்றார் அருணாசலம்.

"சரிங்க மாமா!" என்றாள்.

"அம்மா, ஞாபகம் வச்சுக்க. நாளைக்குச் சனிக்கிழமை. எதுக்கும் சீக்கிரம் ரெடியாகி இரு. நான் காலையில் போன் செய்யறேன்," என்றார்.

அந்தக் காம்ப்ளெக்ஸின் பின்புறத்திலேயே ஒரு அபார்ட்மென்ட் கொடுத்து மேனேஜரை அங்கேயே தங்க வைத்திருந்தார் ஓனர்.

அருணாசலம் அன்று கடை சாத்திய பிறகு போய் மேனேஜரைப் பார்த்து விட்டு வந்தார்.

"அம்மா! மேனேஜர் சொல்றாரு, ஓனர்கிட்டே பேசினாராம். சொல்ல முடியாதாம். நாளைக்கே வந்தாலும் வருவாராம். நாளன்னைக்கு வந்தாலும் வருவாராம்," என்றார்.

"சரிங்க.. அங்கிள்.. நான் நாளைக்கே வர்றேன்..." என்றாள்.



"சரி.. வா.. நான் டிராப் செய்றேன்!" என்று தன் பைக்கிலேயே அழைத்துக் கொண்டு போய் வீட்டில் விட்டார்.

தியாகராஜன் அருணாசலத்திடம் மிகவும் வருத்தப்பட்டார்.

"நான் இப்படியெல்லாம் ஆகும்னு நெனக்கலயேடா, அருணாசலம். இப்ப எல்லாச் சுமையும் இந்தப் புள்ளையைச் சுமக்க விட்டுட்டு கையாலாகாம உட்கார்ந்திருக்கேன்!" என்றார்.

நீங்க நல்லாயிருக்கும்போது எங்களுக்குச் செய்யலியா? இப்ப உங்களுக்குக் கொஞ்சம் உடம்பு தேறட்டும்ப்பா. எல்லாம் சரி பண்ணிக்கலாம்..." என்றாள், தேனருவி.

நல்ல வேளையாக அந்தக் காலனியில் அவர்களுக்கென்று ஒரு பி டைப் வீடு இருந்தது. வீட்டை விற்று விடலாமா என்று கூடத் தியாகராஜன் யோசித்தார் ஏற்கெனவே வீடு சொஸைட்டியில் அடமானத்தில் இருந்தது.

"வேண்டாம்ப்பா.. வாடகை கொடுத்து நம்மால் சமாளிக்க முடியாது!" என்று ஒரேயடியாக மறுத்து விட்டாள் தேனருவி. அதனால் விற்கும் யோசனையைக் கைவிட்டு விட்டார்கள்.

"சரி. தியாகு! ஒண்ணும் கவலைப் படாதே! கடவுள் அளவுக்கு மீறிய துக்கத்தைக் குடுத்தா பின்னால் ஏதோ நல்லதா வரப்போகுதுன்னு அர்த்தம்!" என்றார் அருணாசலம்.

"இப்போதைக்கு நல்லது நான் போய்ச் சேர்றதுதான். இவர்களுக்கு அலைச்சலும் மிச்சம். செலவும் மிச்சம்!" என்றார், தியாகராஜன் வேதனையுடன்.

தேனருவி அப்பாவை முறைத்தாள். "அப்பா! இப்படிப் பேசாதிங்கன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். பிரச்னைகளுக்காகச் சாகறதுன்னா உலகத்திலே மனுஷங்களே இருக்க மாட்டாங்க!" என்றாள் கடுப்பாக.

தேனருவியின் அம்மா சங்கரியின் கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அப்பா! இது ஒண்ணும் எனக்குச் சுமையில்லை."

"அப்பா! உங்களுக்கு அஞ்சு வாரிசுகள் இருக்கோம். அப்படியெல்லாம் விட்ர மாட்டோம்!" என்றாள் மறுபடியும்.

"அஞ்சு இல்லைம்மா. நாலு. இந்தப் பாரிப் பயலைப் பத்திப் பேசாதே!" என்றார்.

"சரிப்பா! நாலு. ஆனா, விஷயம் அதேதான். போராடலாம். பயப்பட வேண்டாம், என்ன?" என்றாள்.

"அப்படிப் போடுக்கா. உனக்கென்னப்பா இனிக் கவலை. ஜான்சி ராணி மாதிரி அக்கா தலையில கிரீடம் வச்சுட்டா... நாளைக்கே போய் அந்த ஓனரைப் பார்த்துட்டு வந்து இடுப்புலே வாள் எடுத்துச் செருகிடுவா... அப்புறம் என்ன கவலை?" என்றான் தம்பி கிள்ளிவளவன்.

எல்லாரும் சிரித்தார்கள்.

"டேய்! நீ கிள்ளி வளவன் இல்லடா! லொள்ளு வளவன்!" என்றாள் தேனருவி.

"ஆமா. இவனுக்கு வளவன்னு பேரு வச்சது தப்பாப் போச்சும்மா. எப்பப்பாரு வளவளன்னு வெறும் பேச்சுத்தான்!" என்று அப்பா கூடச் சிரித்தார்.

துக்கத்துக்கு நடுவிலேயும் சிரித்து மகிழ்கிற அவர்களைப் பார்த்து அருணாசலம் நெகிழ்ந்து போனார்.

இறைவன் ஏன் நல்லவர்களையே இப்படிச் சோதிக்கிறான் என்று சிந்தித்துக் கொண்டே புறப்பட்டார்.

★ ★ ★

ஏழு மணிக்கு முன்பாகவே கிள்ளிவளவனின் சைக்கிளில் வந்து இறங்கினாள் தேனருவி.

"நானும் துணைக்கு வரட்டுமா?" என்றான் கிள்ளிவளவன்.



"வேண்டாம். நீ போ.." என்றாள்.

பணத்துக்காக ஒவ்வொரு இடத்திலும் தான் காத்துக் கிடப்பதைப் பார்த்தால் அவன் நொந்து போய்ப் படிப்பு வேண்டாம்க்கா என்று ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்று அவளுக்கு உள்ளூரப் பயம்.

ஓனரின் அலுவலக அறை என்று நேற்று அருணாசலம் காண்பித்த அந்த அலுவலகத்துக்கு வந்தாள்.

திறந்திருந்தது.

இரண்டே அறைகள்.

உள்ளறையை இரண்டாகக் கண்ணாடியால் தடுத்திருந் தார்கள்.

முன் பகுதியில் மேனேஜரின் இருக்கை, உள்ளே காபின் காலியாக இருந்தது.

எட்டிப் பார்த்த இவளைப் பார்த்து விட்டு மேனேஜர் வெளியே வந்தார். விவரம் கேட்டுக் கொண்டு, முன்னறையில் இருக்கச் சொன்னார்.

எப்போதும் போல் காத்திருக்கிற நேரத்தில் அவள் லைப்ரரியில் இருந்து எடுத்து வந்திருந்த அந்தப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தாள். வின்சென்ட் பீல், ஷிவ் கேரா, ஓஷோ என்று நிறையப் படிப்பாள்.

சுய முன்னேற்றப் புத்தகங்கள் விரும்பிப் படிப்பாள்.

புத்தகத்தில் ஆழ்ந்து விட்டாள்.

மின்னலாய் ஒரு உருவம் கடந்து உள்ளறைக்குள் போனது. அவள் நிமிர்ந்து பார்ப்பதற்குள் போய் விட்டதை உணர்ந்து புத்தகத்தை மூடி வைத்து விட்டு நிமிர்ந்தாள்.

உள்ளே மெல்லிய பேச்சுக்குரல் கேட்டது. அதுவும் சற்று நேரத்தில் நின்றது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

காபின் கதவைச் சாத்திக் கொண்டு விட்டார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் காத்திருந்தாள். பிறகு மேனேஜர் வந்து அழைக்க, உள்ளே நுழைந்தாள்.

நுழைந்தவள் திகைத்து நின்றாள். அங்கே -

இருந்தது ஒரு இளைஞன்.

ஓனர், ஓனர் என்று அருணாசல மாமா பேசியதிலிருந்து ஒரு ஐம்பது வயது இருக்கும் என்று எண்ணிக் கொண்டதற்கு மாறாக இளைஞன்.

அதைவிட அதிர்ச்சி என்னவென்றால் அவன்...!

அவன்...!

அன்றைக்கு ஹோட்டலில் பெண்களை மட்டமாகப் பேசிய மூவரில் ஒருவன்.

ஏதோ கையிலிருக்கிற ஃபைல் நழுவுகிற உணர்வோடு இறுகப் பிடித்துக் கொண்டாள்.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"சொல்லுங்க... என்ன வேணும்..?" என்றான்.

அவள் அதற்குள் தேறிக் கொண்டாள்.

"அருணாசலம்... மாமா... அனுப்பினாங்க..." என்றாள்.

"எதற்கு...?" என்றான் கேள்விக்குறியாய். அதற்குள் மேனேஜர் குறுக்கிட்டு, "அதான்... சார்... கிட்னி பேஷண்ட்... ஹெல்ப்..." என்று கோடி காட்ட....

"ஓ...! உட்காருங்க... விஷயத்தைச் சொல்லுங்க!" என்றான்.

அவள் ஃபைல் நீட்டினாள். அவன் ஓரிரு நிமிடங்கள் புரட்டிப் பார்த்து விட்டு ஒரு நிமிடம் அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்தான்.



பிறகு, "என்ன... ஹெல்ப் எதிர்பார்க்கறீங்க?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் விழித்தாள்... பிறகு, "சார்! பெக்கர்ஸ் கெனாட் பி சூசர்ஸ்..." என்றாள்.

'நோ... நோ... நோ... உங்களை அந்தக் கோணத்துல நினைச்சு நான் கேட்கலே! உங்களால எவ்வளவு முடியும்? மொத்தச் செலவு என்ன? எல்லாம் ஒரு எஸ்டிமேட் இருக்கணுமில்ல... அதைக் கேட்டேன்!" என்றான்.

எல்லோரையும் போல் ஒரு ஐந்தாயிரம் பத்தாயிரம் தரக்கூடும் என்று எதிர்பார்த்த தேனருவி இந்தச் சரமாரிக் கேள்விகளை எதிர்பார்க்கவில்லை.

"பாருங்க... மிஸ்...!" என்று தயங்கினான்.

"தேனருவி...!" என்றாள்.

"நைஸ்... நேம்..!" என்று புன்னகைத்தான்.

"ஜென்"வனா இருந்தா.. ஹெல்ப் பண்றதுல பிரச்னையில்லை. எதுக்கும் நீங்க.. நாளைக்கு... இதே நேரத்துக்கு ஃபுல் பிக்சரோட வாங்க. வி வில் டிஸ்கஸ்..." என்றான்.

"சரிங்க... சார்!" என்றாள்.

நீங்க போகலாம் என்பது போல் அவன் வேறு ஃபைலை எடுக்க, அவள் எழுந்தாள்.

"யுவர் குட் நேம்.. சார்?" என்றாள்.

"இளந்திரையன்!" என்றான்.

வியப்பால் அவள் கண்கள் விரிவதை அவன் சுவாரசியமாகப் பார்த்தான். மெதுவாக இதழ்கள் விரிய அவன் புன்னகைத்தான்.

"ரியலி... குட் நேம், சார்!" என்றாள்.

அவன் மீண்டும் புன்னகைத்தான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் பார்வை அவள் கையிலிருந்த புத்தகத்தின் மேல் சென்றது.

"என்ன புத்தகம்... அது? பார்க்கலாமா?" என்றான்.

அவள் கை நீட்டினாள். "டைரக்ட் ஃபிரம் டெல்!" என்றாள்.

அவன் தலையாட்டிக் கொண்டான். 'நல்ல புத்தகம்!' என்றான்.

அவள் தள்ளு கதவுக்கருகில் நெருங்கிய நேரம்.

"மிஸ் தேனருவி! அருணாசலம் சாரை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க," என்றான்.

"சரிங்க சார்," என்று அவசரமாகத் தலையாட்டி விட்டு வெளியே வந்தாள்.

லேசாகத் திறந்த கதவுக்கருகில், "இந்தக் கேஸோட ஜெனுவனிட்டி வெரிஃபை பண்ணுங்க..." என்று சொல்வது கேட்டது.

"சார்... ஜெனுவன்தான்!" என்று அவர் பதில் சொல்வது காதில் விழுந்தது.

வெளியே வந்தவுடன் அவளுக்கு அன்றைக்குச் சங்கீதாவிடம் இந்த ஆளோட சட்டைக் காலரைப் பிடித்து இழுத்துக் கேள்வி கேட்க வேண்டுமென்று சொன்னது நினைவுக்கு வந்தது.

அப்படி ஆளிடம் உதவி கேட்க வைத்த விதியை நினைத்து அவளுக்கு வேதனையாகவும் இருந்தது. ஆனால், அப்படியாவது உதவி கிடைத்தால் போதும் என்ற ஏக்கமும் மனதில் நிறைந்தது.

3

ஏழு மணிக்கெல்லாம் தயாராய்த் தங்கள் அலுவலகத்திற்கு முன்னே வந்து நிற்கிற தேனருவியைப் பார்த்ததும், மேனேஜரின் முகம் மலர்ந்தது.



"இதுவரைக்கும் தம்பி வாரத்துல ஏதாவது ஒரு நாள்தான் வருவாரு. இந்தத் தடவை இன்னைக்கு மறுபடியும் வரேன்னு சொல்லியிருக்காரு. உங்க நல்ல நேரம்!" என்றார்.

தேனருவி பொதுவாய்ப் புன்னகைத்து வைத்தாள்.

ஐந்தே நிமிடங்களில் அவனும் வந்து விட்டான். காலையிலேயே பிரிஸ்க்காகவும் ஃபிரெஷ்ஷாகவும் இருக்கிறான் என்று எண்ணிக் கொண்டாள்.

"வாங்க! மிஸ் தேனருவி!" என்றான் உள்ளே நுழைந்தபடி.

தேனருவி சனிக் கிழமையன்று அருணாசலத்திடம் விடுமுறை வாங்கிக் கொண்டு, ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கி, முழு விவரங் களையும் சேகரித்துக் கொண்டு வந்திருந்தாள்.

அவன் முழுவதையும் பத்து நிமிடங்களுக்கு மேல் பொறுமையாகப் படித்தான்.

இடையிலே காபி வந்தது.

"சாப்பிடுங்க!" என்று அவனும் டம்ளரை இடது கையில் வைத்துக் கொண்டு காபியைக் குடித்தபடியே படித்து முடித்தான்.

அவளும் மௌனமாகப் பருகி முடித்தாள்.

பிறகு, 'ஹாஸ்பிடல் எக்ஸ்பென்ஸஸ் மட்டும் தானே இதுல இருக்கு. போஸ்ட் ஆபரேஷன் செலவு ஒரு ஆறு மாசத்துக்கும் மெடிஸன்ஸ் செலவும் நிறைய ஆகும்கறாங்களே..." என்றான்.

தயக்கமாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு -

"சார்! முதல்ல இது ரெடியானாலே பெரிய விஷயம் சார். அதுக்கப்புறம் நாங்க எப்படியோ சமாளிக்கறோம்..." என்றாள்.

"எப்படி? இல்லல்லே. அதையும் நீங்க கால்குலேட் பண்ணி நீங்க நாளைக்குக் கொண்டு வாங்க..." என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''சார். எது அரேன்ஜ் பண்ணினாலும் கொஞ்சம் ஈஸி இன்ஸ்டால்மென்ட்ஸா திரும்பக் கட்ற மாதிரி ஏற்பாடு செஞ்சாலும் போதும்...'' என்றாள்.

''ஐயோ! பெண்ணே!'' என்பது போல் அவன் இரக்கத்துடன் பார்த்தான்.

''லோனா? இரண்டு லட்சமா? எந்த அடிப்படையில?'' என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள். ''அப்படியே செய்தாலும் அதுக்கே நாலைந்து வருஷத்துக்கு ஏழாயிரம், எட்டாயிரம் கட்ட வேண்டி வரும். அப்புறம் குடும்பச் செலவுகள்?''

கேள்வி அம்பாகத் தைத்தது. ஆனால் உண்மை அதுதானே!

அவள் துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டு கேட்டாள், மெல்லிய குரலில்.

''பின்னே? வேற எப்படி? எந்த பேஸிஸில் ஹெல்ப் பண்ணுவீங்க... சார்?'' என்றாள்.

அவன் அவளை ஆழ்ந்து பார்த்தான். ''என்ன நிபந்தனைன்னாலும் ஒத்துக்குவீங்களா?'' என்றான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. கூரை மேல் சோறு போட்டா எத்தனையோ காக்கா வரும் என்ற அவன் குரல் அவள் காதுகளுக்குள் எதிரொலிக்கிறாற்போல் இருந்தது.

தன்னுடைய வார்த்தைகளே அவளுக்குள் மீண்டும் ஒலித்தன.

எந்த நேரத்தில் பெக்கர்ஸ் கெனாட் பி சூசர்ஸ் என்று சொன்னோமோ, இப்படி நிஜமாகவே அவன் நிபந்தனைக்குக் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகி விட்டோமே என்ற எண்ணமும் தோன்றியது. ஆனாலும் மெதுவாகச் சொன்னாள்.



''யாருடைய கௌரவத்தையும் பாதிக்காத வகையில் எந்த நிபந்தனைன்னாலும் சரிங்க... சார்..'' என்றாள்.

அவன் கண்கள் மின்னின.

லேசான குறுநகையுடன் அவளைப் பார்த்தான். பிறகு, ''அதிருக்கட்டும். அருணாசலம் சாரை வரச் சொன்னேனே?'' என்றான்.

''சார்! நேத்து இந்தப் பார்ட்டி குலர்ஸ் கலெக்ட் பண்றதுக்காக நான் லீவ் போட்டுட்டேன். மாமாகிட்டே சொல்லலே. இன்னைக்கு வரச் சொல்றேன். சார்,'' என்றாள்.

''சரி.. பத்து மணிக்கு நான் திரும்பவும் வரவேண்டியிருக்கு. அப்ப வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்க,'' என்றான்.

''அப்புறம்.. ரெண்டு நாள் டைம் எடுத்துக்கிட்டு, எல்லாச் செலவையும். போக்குவரத்துச் செலவு உட்பட ஒரு எஸ்டிமேட் போட்டுக் கொண்டு வாங்க. புதன்கிழமை காலைல பத்து மணிக்கு வாங்க...'' என்றான்.

''தாங்க்ஸ் சார்!'' என்று எழுந்தாள்.

''எந்த ஹாஸ்பிடல்?'' என்றான்.

சொன்னாள்.

''டாக்டர் யாரு?'' என்றான்.

சொன்னாள்.

''சரி.. நான் ஹாஸ்பிடல்ல பேசிக்கறேன். அடுத்த டயாலிசிஸ் எப்ப?''

செவ்வாய்க் கிழமை என்றாள்.

''சரி... நீங்க போய்க்குங்க. எதுவும் பே பண்ண வேண்டாம். என் பேரைச் சொன்னா போதும்!'' என்றான்.

வியப்பால் அவள் கண்கள் விரிவதை அவன் பரிவுடன் பார்த்தான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"தாங்க்ஸ் சார்!" என்றாள்.

"வரேன் சார்!" என்றாள்.

"வாங்க!" என்றான். அடுத்த வேலையில் ஆழ்ந்தான்.

★ ★ ★

அப்பாவை டயாலிசிஸுக்கு உள்ளே அனுப்பிவிட்டு வெளியே காத்திருந்தார்கள், அவளும் கிள்ளி வளவனும்.

இளந்திரையன் என்ற பெயர் மந்திரம் போல் வேலை செய்வதைக் கண்டு அவளுக்கு ஒரே ஆச்சரியம்!

"டேய்! பணக்காரரா இருக்கறதுன்னா ஈசின்னு நினைக்காதே. ஒண்ணுமில்லே, இந்த ஹெல்ப் பண்றதுக் குள்ளே எத்தனை தடவை வரச் சொன்னார் தெரியுமா, அந்த ஆள்! எவ்வளவு ஷார்ப் அனாலிஸிஸ். எத்தனை கேள்விகள். ஆனா, எப்படியும் எல்லாத்தையும் திருப்பிக் குடுத் துரணும்டா..." என்றாள் தேனருவி.

"அக்கா, எனக்கென்னமோ யு ஆர் நாட் டூயிங் ஜஸ்டிஸ் டு தட் மிஸ்டர் இளந்திரையன்னு தோணுது!" என்றான்.

அவளுக்கே அப்படித் தோன்றியது. ஆனால் முதன் முதலாக அவனிடமிருந்து கேட்க நேர்ந்த வார்த்தைகள் அப்படி என்று அவளால் கிள்ளி வளவனிடம் சொல்ல முடியவில்லை.

பேசிக்கொண்டே திரும்பியபோது அவள் கண்கள் நிலை குத்தி நின்றன.

அந்த நீள வராண்டாவில் அந்தக் கோடியில் இளந்திரையன் வந்து கொண்டிருந்தான்.

"டேய்! வளவா! இவர்தான்டா!" என்று முணுமுணுத்தாள்.

"வாவ்! என்று வாயைப் பிளந்தான் கிள்ளிவளவன்.

"ரியல் பர்ஸனாலிட்டி!" என்றான் முணுமுணுப்பாக.



"ஹலோ!" என்றான். கையாட்டினான்.

அவன் வணக்கம் சொன்னான். அவர்கள் அருகில் வந்து நின்றான்.

"உங்க விஷயமாத்தான் வந்தேன். டாக்டரைப் பாத்துர லாமா?" என்றான்.

அவள் ஏதோ கனவில் இருக்கிறாற்போல் தலையாட்டினாள்.

"சார்! இது என் தம்பி கிள்ளி வளவன்!" என்று அறிமுகம் செய்தாள்.

"காலேஜ்ல தர்ட் இயர் படிக்கிறவன் இவன்தானா?" என்று சிரித்தான்.

"உங்களுக்கு எப்படி...?" என்று அவள் விழிக்க,

"உங்க அருணாசலம் மாமா வந்திருந்தார்!" என்றபடியே உள்ளே போனான்.

உள்ளே எழுந்து கை குலுக்கி வரவேற்றார் டாக்டர்.

"சார்! நான் சொன்னேனே, மிஸ்டர் தியாகராஜன்... க்ளோஸ் ரிலேடிவ் சார்!" என்றான்.

"அதை இவங்க இதுவரைக்கும் சொல்லலியே!" என்றார் டாக்டர் ஆச்சரியமாய்.

"சம் இன்டர்னல் பாலிடிக்ஸ். அவங்க கொஞ்சம் ரோஷக்காரங்க. அவ்வளவு சீக்கிரம் சொல்லிக்க மாட்டாங்க!" என்றான் புன்னகையுடன்.

அதற்குப் பிறகு பத்தே நிமிடப் பேச்சில் பத்து நாட்களுக்குள்ளாக ஆபரேஷன் செய்து விடலாம் என்று ஃபிக்ஸ் செய்து விட்டுத்தான் வெளியே வந்தான்.

அவர்களுக்குக் காண்டீனில் இருந்து ஸ்நாக்ஸ் காப்பி என்று வந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இரண்டு நாட்களுக்குள்ளாகவே அட்மிட் ஆகிக் கொள்ளலாம் என்றார் டாக்டர்.

இன்னொரு வேலையும் செய்திருந்தான், இளந்திரையன். வெளியே வந்தவுடன் சொன்னான்.

''மிஸ் தேனருவி! கிட்னி டோனர் கூட வேறொருத்தர் அரேன்ஜ் பண்ணியாச்சு. ஏன்னா, உங்கம்மா டொனேட் பண்ணினா, அவங்களும் கொஞ்ச நாள் ரெஸ்ட்ல இருக்கணும். அதான்...'' என்றான்.

அவள் மௌனமாய்த் தலையாட்டிக் கொண்டாள்.

''சரி! நான் மில்லுக்குப் போகணும். பை தபை... தாங்க்ஸ் சொல்ல மாட்டீங்களா?'' என்றான்.

''சார்! நான் திகைச்சுப் போயிருக்கேன் என்ன சொல்றதுன்னே தெரியலை..!'' என்று தடுமாறினாள்.

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். ஆனா, எந்த நிபந்தனைக்கும் ஒத்துக்குவேன்னு சொல்லியிருக்கிங்க. ஞாபகம் வச்சுக்குங்க!'' என்றான். நகர்ந்தான்.

''சார்!'' என்றான் கிள்ளிவளவன்.

''என்னப்பா?''

''சார்! அந்த ரகசியத்தை மட்டும் சொல்லுங்க சார்!'' என்றான்.

''எதை!''

''இந்தச் சின்ன வயசுல இவ்வளவு இன்ஃப்ளுயன்ஷியலா இருக்கறது எப்படிங்கறதுதான்.''

அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

''அதுக்குப் பெரிய கிளாஸே எடுக்கணும் யங்மேன்.. எனிஹவ் ஐ லைக் யு!'' என்று சிரித்துக் கொண்டே போய் விட்டான்.



ஒரு பக்கம் விடுதலையுணர்வு தோன்றினாலும், இன்னொரு பக்கம் இதற்கெல்லாம் என்ன விலை கொடுக்க வேண்டி வருமோ? பணக்காரர்கள் எதையும் சும்மா செய்து விடுவதில்லை என்றெல்லாம் எண்ணங்களும் அவளுக்குள்ளே தோன்றிக் கொண்டேயிருந்தன.

வாய்விட்டே சொல்லித் தம்பியிடம் பகிர்ந்து கொண்டாள். அவன் அவளை முறைத்தான்.

''அக்கா.. நீ படிக்கறது பூராவும் பாஸிடிவ் திங்கிங் பத்தி.. ஆனா, உனக்குள்ளே ஓடறது பூராவும் நெகடிவ் திங்கிங்தான்!'' என்றான்.

தேனருவி ஒன்றும் பேசவில்லை.

இனிமேல் தான் செய்வதற்கு ஒன்றுமில்லை என்ற நிலைக்கு வந்து விட்டாள்.

★ ★ ★

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது.

நான்கைந்து நாட்களில் பொருத்தப்பட்ட கிட்னி சரியாகவே வேலை செய்கிறது என்று டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

சர்ஜரி அன்றைக்கு அம்மாவின் அருகிலேயே இருந்து தைரியம் கொடுத்துக் கொண்டிருந்தாள் தேனருவி.

பாரி கூட வந்து விட்டான்.

எல்லாருக்கும் தங்குவதற்கு என்று ஒரு அறை கூடக் கொடுத்து விட்டார்கள் ஆஸ்பத்திரியில்.

சரியாக சர்ஜரி முடிந்தவுடன் இளந்திரையன் வந்து விசாரித்து விட்டுச் சென்றான். தினமும் ஒரு முறை ஃபோன் செய்து விசாரித்தான்.

அப்பாடா! இனி டயாலிசிஸ் அலைச்சல் இல்லை என்ற நிம்மதி ஏற்பட்டது. ஆனாலும் ஓராண்டுக்காவது எந்த

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

விதமான இன்ஃபெக்ஷனும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்கள்.

அருணாசலம் மாமா உதவிக்கு வந்தார். வீட்டில் இருந்த ஒரு ஸ்டோர் ரூமைச் சிறிய பெட் ரூமாக மாற்றினார்கள்.

ஏ.சி. ரூமாக மாற்றி அமைத்தார்கள். கண்ணாடிக் கதவு கூடப் போட்டு விட்டார்கள்.

''அக்கா! எல்லாம் இளந்திரையன் சார் ஏற்பாடு!'' என்றான் கிள்ளிவளவன்.

தினமும் அதிகாலையில் வீட்டுக்குப் போய்க் குளித்து விட்டு எல்லாருக்கும் உணவு தயாரித்து எடுத்துக் கொண்டு வருவாள் தேனருவி.

ஆபரேஷனுக்கு முதல் நாள் அண்ணிக்கு ஃபோன் செய்தாள்.

''அண்ணி! நீங்க கூட வந்தா கொஞ்சம் உதவியாய் இருக்கும். ஜஸ்ட் வீட்ல நீங்க இருந்தால் போதும், மத்ததெல்லாம் நான் பார்த்துப்பேன்,'' என்றாள்.

பாமா அந்தப் பக்கம், ''தேனு! நான் எவ்வளவோ சொன்னேன், உங்க அண்ணன்கிட்டே! அவரு கேட்கவே யில்லை. குழந்தைகளுக்கேதாவது இன்ஃபெக்ஷன் ஆயிட்டா என்ன செய்யறதுங்கறாரு. நீ வேணா கேட்டுப்பாரு! கதையவே மாத்துவாரு. நான்தான் வர மாட்டேன்னு சொன்னேம்பாரு. என்னை என்னம்மா செய்யச் சொல்றேம்பாரு!'' என்றாள் வருத்தம் தொனித்த குரலில்.

''ஓ...! சரிங்கண்ணி! பரவாயில்லை எங்களால உங்களுக்குள்ள எதுக்குப் பிரச்னை?'' என்றாள் தேனருவி.

தானே எல்லாமும் செய்தாள். ''இந்த.. பாமா கழுதை... எத்தனை தரம் கூப்பிட்டேன். வரமாட்டேங்கறா!'' என்று பாரி புலம்பியபோது மட்டும் கசப்பாகப் புன்னகைத்துக் கொண்டு,



''பரவாயில்லைண்ணா. கயல்விழியும் நானுமே பாத்துக்கறோம்,'' என்றாள்.

இதை யெல்லாம் நினைத்துக் கொண்டே, சமையல் செய்ததையெல்லாம் இரண்டு மூன்று டிபன் காரியரில் நிறைத்துக் கொண்டிருந்தாள்.

நல்ல வேளையாக அப்பாவுக்கு ஆஸ்பத்திரியிலேயே கொடுத்து விடுகிறார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

கார் ஒன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது.

''வாங்க சார்! வாங்க மாமா!'' என்று கயல்விழி வரவேற்கும் குரல் கேட்க, எட்டிப் பார்த்தவள் விதிர் விதிர்த்துப் போனாள்.

''வரலாமா?'' என்று சிரித்துக் கொண்டே, அருணாசலத்துடன் கூட இளந்திரையனும் உள்ளே நுழைந்தான்.

''சார் வாங்க!'' என்று பரபரப்பாக வரவேற்றாள்.

''வந்தாச்சு!'' என்று சிரித்தபடி அந்த வீட்டில் இருந்த சேர் ஒன்றை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

கூடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த டிபன் காரியர்களைப் பார்த்து,

''என்ன! ஒரு மெஸ்ஸுக்கே சாப்பாடு குடுத்தர்லாம் போலிருக்கு!'' என்றான்.

''சார்! நாலைஞ்சு பேருக்கு டிபன் சாப்பாடு எல்லாம் கொண்டு போறேன். கான்டீனில் வாங்கினா செலவு ரொம்ப ஆகும். அம்மாவுக்கும் சேராது,'' என்றாள்.

''சார்! சாப்பிடறீங்களா! மாமா சாப்பிடுங்க!'' என்று சூடாகப் போட்டு வைத்திருந்த சப்பாத்தியையும் குருமாவையும் தட்டுக்களில் பரிமாறி எடுத்து வந்தாள்.

ரொம்பவும் பெரிதாக மறுக்காமல் சாப்பிட்டான் இளந்திரையன். பின்பு அருணாசலத்தைப் பார்த்து அர்த்தத்துடன் சிரித்தபடி,

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"சமையலும் நல்லாத்தான் இருக்கு..!" என்றான்.

அவரும், "அப்பவே சொன்னேன் இல்ல!" என்பது போல் பார்த்தார்.

அப்பாவின் அறை ஏற்பாடுகளைப் பார்வையிட்டு விட்டுக் கிளம்பினான்.

அதற்குப் பிறகு அப்பா வீட்டுக்கு வந்து இரண்டு மாதங்கள் வரை அவ்வப்போது ஃபோன் செய்து விசாரித்துக் கொண்டான்.

அப்பாவுக்கு அதிகச் சிரமப்படாமல் ஆபரேஷன் செய்து முடித்தாயிற்று என்பதே இன்னும் தேனருவிக்கு நம்ப முடியாததாக இருந்தது.

எல்லாரும் இளந்திரையனைப் பற்றி ஒரு நன்றியுணர்வுடன் பேசிக் கொண்டிருக்கையில் அவள் மட்டும் உள்ளூர ஒரு பயத்துடனேயே இருந்தாள்.

அவள் பயந்தபடியேயும் ஆயிற்று.

4

"உங்க வீட்டுக்கு நல்ல காலம் பொறந்தாச்சு!" என்று கலகலப்பாகச் சிரித்தபடி உள்ளே நுழைந்தார் அருணாசலம்.

தியாகராஜன் வியப்புடன் விழிக்க, "ஆமாப்பா! நிஜமாத்தான் சொல்றேன்!" என்று அவர் விளக்க, வீடே ஆச்சரியத்தால் நிறைந்து போனது.

அந்த நேரம் தேனருவி வெளியில் போயிருந்தாள். விஷயத்தைச் சொன்னார்.

தியாகராஜன் முதலில் மகிழ்ச்சியடைந்தாலும் பிறகு கவலைப்பட்டார்.

"அருணாசலம்! இதெல்லாம் நடக்கற காரியமா? அவங்க வசதியென்ன... நம்ம நிலைமையென்ன. ஒரு பத்துப் பவுன்



நகை கூடப் போடற நிலைமையிலே நான் இல்லே!" என்றார் தியாகராஜன்.

"பொண்ணை மட்டும் குடுத்தால் போதுமாம். ரொம்ப அருமையான பையன்ப்பா. உன் பொண்ணு ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியிருக்கா. ரொம்ப தூரம் எங்கிட்ட துருவித் துருவி விசாரிச்சுட்டு அவளோட பொறுப்பான குணம் பார்த்து இவளைத்தான் கல்யாணம் செஞ்சுக்குவேன்னு நிக்கறாரு!" என்றார்.

"அக்காவை என்ன கேக்கறது. நாமளே சரின்னு சொல்லீரலாம்ப்பா!" என்றான் கிள்ளிவளவன்.

அன்றைக்கே இன்னொரு அதிசயமும் நடந்திருந்தது.

வேள்பாரி மதுரையிலிருந்து வந்திருந்தான். "அப்பா! திரையன் என்னை வரவழைத்துப் பேசினாரு! நானாச்சு இந்தக் கல்யாணத்துக்குன்னு வாக்குக் குடுத்துட்டேன்!" என்றபடி உள்ளே வந்தான்.

அப்பாவுக்கு மாத்திரை, மருந்துகள் வாங்கிக் கொண்டு வந்தாள் தேனருவி.

வீட்டிலே ஏதோ மாற்றம் தெரிவதை உணர்ந்தாள். எல்லார் முகத்திலும் உற்சாகம் ததும்பி வழிவதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்தாள்.

"என்ன, விஷயம்டா, கிள்ளி?" என்றாள் கேள்விக்குறிப் பார்வையுடன்.

"வேள்பாரி அவர்களைக் கேட்கவும்!" என்றான் அவன்.

"அண்ணா!" என்று அவனைப் பார்க்க, அவனும் உற்சாக மூடில் இருந்தான்.

"திரு மற்றும் திருமதி தியாகராஜன் அவர்களைக் கேட்கவும்!" என்றான்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தேனருவி கடுப்பானாள்.

''எப்படியும் தெரியத்தானே போகுது? எனக்கு நிறைய வேலையிருக்கு!'' என்றபடி நகர,

''இரு.. இரு!'' என்றார்கள் கோரஸாக. அமர்ந்தாள்.

அப்பா அவளைப் புன்னகையுடன் பார்த்தார். ''அம்மா... இளந்திரையன் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசைப்படறார்!'' என்றார்.

தேனருவி திகைத்துப் போனாள்.

''ஓ...!'' என்றாள்.

மௌனமாகி விட்டாள்.

எல்லாருடைய உற்சாகமும் வடிந்து விட்டது.

''யோசித்துச் சொல்லலாம்பா!'' என்றாள்.

பாரிக்குக் கோபம் வந்தது. ஏதோ வேகமாகச் சொல்ல ஆரம்பிக்க, அப்பா தியாகராஜன்,

''பொறு பாரி! அவளுக்கும் கொஞ்சம் யோசிக்க டைம் குடு,'' என்று கையமர்த்தினார்.

அவள் சமையலில் ஆழ்ந்தாள்.

''இதுதான்... அந்த நிபந்தனையோ...!'' என்று எண்ணிக் கொண்டாள்.

பல்வேறு சிந்தனைகள் நெஞ்சை அழுத்தச் சமையல் வேலையில் ஆழ்ந்தாள்.

அருணாசலம் சமையலறைக்கே வந்தார்.

''அம்மா... ரொம்ப நல்ல பையன்ம்மா. உன்னைத் தங்கமா வச்சுக்குவான். உன் குடும்பத்துக்கும் பெரிய மாரல் சப்போர்ட் கிடைக்கும்!'' என்றார்.

அவள் நிமிர்ந்து அவரைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள்.



''யம்மா! ரொம்ப மீறின இடம்! நம்ம சக்திக்குத் தகுந்ததா, கொஞ்சம் மெதுவாப் பார்த்துக்கக் கூடாதா?'' என்றாள்.

''என்னம்மா நீ! வலிய வர சீதேவியை வேண்டாங்கறே?'' என்று அவரே சலித்துக் கொள்ளவும், என்ன பேசுவதென்று தெரியாமல் திகைத்தாள்.

''சரிம்மா! நான் நாளைக்கு வரேன். யோசிச்சு வைங்க..!'' என்று கிளம்பினார்.

அப்பா.. அம்மாவைத் தவிர, எல்லாரும் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு சாப்பிட்டார்கள்.

அவளுக்கு என்னமோ அவன் செய்த இத்தனை உதவிகளும் கூரை மேல் போட்ட சோறாகவும், தானும் அந்தக் காக்காக் கூட்டத்தில் ஒருத்தி என்ற எண்ணமுமே தோன்றிக் கொண்டிருந்தது. ஆனால் தம்பி, தங்கைகளுடைய முகம் பார்த்தால் தான் மாட்டேன் என்று சொன்னால் அவர்களுக்கெல்லாம் எவ்வளவு பெரிய ஏமாற்றம் ஏற்படும் என்பதும் புரிந்தது.

வேள்பாரி, 'ஏய்! தேனருவி! இந்த மாப்பிள்ளையென்ன வயசானவரா? குருடா? முடமா? எப்படி பர்சனாலிட்டி, என்ன இன்ஃப்ளுயன்ஸ் உள்ள ஆளு! இப்படிப் பிகு பண்ணிக்கற அளவுக்கு நமக்கு என்ன தகுதி இருக்கு?'' என்றான்.

அவள் வேதனையுடன் நிமிர்ந்து பார்த்தாள். ''அண்ணா, நான் பிகு பண்ணலே. பயப்படறேன்!'' என்றாள்.

அப்பா குறுக்கிட்டார். ''அம்மா, அவரு ஒண்ணும் தான் செய்த உதவிக்குப் பதிலா இதைக் கேக்கலயாம். அந்த இஷ்யூ வேற. இந்த இஷ்யூ... வேற... எல்லாருக்கும் பிடிச்சு சம்மதிச்சாப் போதும்னாராம்!'' என்றார்.

அவளுக்கு ஒன்றும் பேச முடியவில்லை.

''ஒரே ஒரு நாள் டயம் குடுங்கப்பா!'' என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"சரிம்மா!" என்றார். பிறகு மற்றவர்களைப் பார்த்து, "அவளை யோசிக்க விடுங்க. குழப்பாதீங்க..." என்று சொல்லி விட்டார்.

★ ★ ★

கலக்கத்தில் ஆழ்ந்தபடி அமர்ந்திருக்கிற தேனருவியைப் பார்த்துச் சங்கீதாவுக்குச் சிரிப்பு வந்தது.

"ஏய்! எதுக்கு இப்படிக் குழப்பிக்கறே!" என்றாள். பிறகு சீரியஸான குரலில்,

"பாரு தேனருவி, உன் பிரச்னையே இப்ப அவரைப் பத்தி உனக்குப் பெரிய இடமென்று ஒரு பயம் இருக்கிறதுதான். ஒரு பொன்மொழி இருக்கு தெரியுமா? மற்றவர்களின் குற்றங்களை வெறுக்கலாம். ஆனால், அவர்களையே வெறுக்கக் கூடாது, அப்படீன்னு. நீ மிஸ்டர் இளந்திரையனை ஒரு சாலன்ஜுக்காகவே கல்யாணம் செய்யணும்!" என்றாள்.

தேனருவி மீண்டும் கவலையுடன் பார்த்தாள். "உனக்குத் தெரியாது! ஹீ இஸ் எ ஸ்ட்ராங் பர்சனாலிட்டி!" என்றாள். "நிபந்தனைக்காகக் கல்யாணம் செய்யறதா?"

"அப்ப, இன்னும் உற்சாகமாய் ஃபைட் செய்ய ஆரம்பிக்கணும் நீ. நிபந்தனைக்கெல்லாம் அப்பாற்பட்ட ஆள்ன்னு நிரூபிக்கணும் நீ."

தேனருவி பெருமூச்சு விட்டாள். "கீதா! நீ சொல்ற மாதிரி ஃபைட்டுக்காகவெல்லாம் ஒத்துக்க முடியாது. எத்தனையோ பேர் மாப்பிள்ளையைப் பற்றி ஒண்ணும் தெரியாமலேயே செஞ்சுக்கறதில்லையா? அது மாதிரி நினைச்சுத்தான் பண்ணிக்கணும்," என்றாள்.

"தட்ஸ் குட்!" என்றாள் சங்கீதா.

தேனருவி தொடர்ந்தாள். "அது மட்டுமில்லே. எங்க ஃபாமிலியிலே என்னமோ எல்லாரும் இந்தக் கல்யாணம் எங்க



குடும்பத்தையே தூக்கி விடும்னு கனவு காணறாங்க. அதுக்காக ஒத்துக்க வேண்டியதுதான். என் ஒருத்தியோட உணர்வுகளை எல்லாம் விலையாக் குடுக்க வேண்டியதுதான். மறுப்புச் சொல்ல முடியாதபடி அவருக்கு நாங்க ரொம்ப நன்றிக்கடன் பட்டிருக்கோம்!" என்றாள். பெருமூச்சு விட்டாள்.

சங்கீதா சற்றே கவலையுடன் பார்த்தாள். சங்கீதாவிடம் அன்று ஓட்டலில் பார்த்த மூவரில் ஒருவன் என்று அவள் சொல்லவில்லை.

இப்படிப்பட்ட உணர்வுகளுடன் நடைபெறும் திருமணம் எத்தனை நாட்களுக்கு நிலைக்கும்? எல்லாத்துக்கும் காலம்தான் பதில் சொல்லணும் என்று எண்ணிக் கொண்டாள் சங்கீதா.

★ ★ ★

"அப்புறம் தேனருவியோட ரியாக்ஷன் என்ன?" என்று கேட்டுக் கொண்டிருந்தான் இளந்திரையன்.

"எதிர்பார்த்த அளவுக்கு இல்லைங்க தம்பி!" என்றார் அருணாசலம் சற்றே சலிப்பாக.

இளந்திரையன் புன்னகைத்துக் கொண்டான். "ஒரு மாதிரி நான் எதிர்பார்த்ததுதான்!" என்றான்.

அருணாசலம் வியப்பாகப் பார்த்தார். "ஆமாங்க அங்கிள்! அவ என் பணத்தைப் பார்த்துப் பயப்படறா. சும்மா யாருகிட்டயும் எதையும் வாங்கக் கூடாதுன்னு நினைக்கிறா. பொறுப்பா யோசிக்கறா. இதெல்லாம்தான் அவகிட்டே எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!" என்றான் இளந்திரையன்.

"நல்ல ஆள் தம்பி நீங்க!" என்றார் அருணாசலம் புன்னகையுடன்.

"அங்கிள்! ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். பதில் பாசிட்டிவ்தான்!" என்று அலட்டிக் கொள்ளாமல் எழுந்து கிளம்பினான் இளந்திரையன்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அருணாசலம் யதார்த்தமாக அன்று மாலை தேனருவியிடம், "அம்மா! தம்பி கண்டிப்பா பதில் பாசிட்டிவ்தான்னு சொன்னாப்ல!" என்றபோது தேனருவியின் முகம் இருண்டு போனதையும், அவள் சட்டென முகம் திருப்பிக் கொண்டதையும் கவனிக்கவில்லை.

★ ★ ★

அந்த மாலை நேரம்!

ரம்யமாக இருந்தது.

எல்லாரும் உற்சாகமாக இருந்தார்கள். தேனருவியைத் தவிர. ஆனால், உற்சாகமாக இருப்பது போலவே அவளும் காட்டிக் கொண்டாள்.

சற்று நேரம் கவனத்தை மாற்றினால் தேவலை போல் இருந்தது.

தோட்ட வேலையில் இறங்கினாள். வீட்டுக்கு முன்னாலே இருந்த கொஞ்ச இடத்தில் நாலைந்து ரோஜாச் செடிகள், ஒரு ஜாதி முல்லைக் கொடி என்று வைத்திருந்தார்கள். அவைகளை எல்லாம் கவனித்து நாளாகி விட்டதே என்று அந்த வேலையில் ஈடுபட்டாள்.

புடவையை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டு சின்னக் குடத்தில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து ஆசை தீரத் தண்ணீர் ஊற்றினாள்.

குனிந்து ரோஜாச் செடி ஒன்றின் பழுத்த இலைகளைக் கிள்ளியெறிந்து விட்டு அழகான அந்த மஞ்சள் நிற ரோஜாவை ஆசையுடன் தட்விக் கொடுத்துக் கொண்டு நிற்கையில், அவர்கள் காம்பவுண்ட் வாயிலில் இளந்திரையன் நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அதைக் கவனிக்கவில்லை. அது மட்டுமல்லாமல் அவன் பின்னாலேயே வந்த இரண்டு பேரிடமும் அவன்



அதைப் புன்னகையுடன் காட்டுவதையும் அவள் கவனிக்கவில்லை. பின் மெதுவாக அவர்களுக்குப் பின்னால் போய் நின்று கொள்வதையும் கூடக் கவனிக்கவில்லை.

"வரலாமாம்மா?" என்ற குரல் கேட்ட பின்புதான் நிமிர்ந்து பார்த்தாள்.

அந்தப் பெரியவரைப் பார்த்தவுடன் இளந்திரையனின் சாயல் அப்படியே இருப்பதைப் பார்த்து யோசித்துக் கொண்டே,

"வாங்க! வாங்க!" என்று வரவேற்றாள். இடுப்புப் புடவையை எடுத்து விட்டுக் குடத்தை எடுத்து வலக்கையில் பிடித்தபடி நிற்கையில் இளந்திரையன் முன்னால் வந்து,

"எங்க பேரன்ட்ஸ், அருவி!" என்றான்.

அவள் படபடப்பானாள்.

அவன் அப்பா கபகபவெனச் சிரித்துக் கொண்டு,

"அம்மா! இந்த வீட்ல என்னை மாதிரியே ஒரு பைத்தியக்காரர் இருக்கிறாராமே. அவரைப் பார்க்கணுமே!" என்றார்.

அவள் விழிக்க "அப்பா! அவளைப் பயப்படுத்தாதீங்க!" என்று சிரித்தான் இளந்திரையன்.

அதற்குள் அவன் அம்மா, "இவரு இப்படித்தாம்மா.. நீ ஒண்ணும் கண்டுக்காதே," என்று சட்டென்று முன்னால் வந்து அவளை லேசாக அணைத்துக் கொண்டார்.

அவள் ஒன்றும் பேச வாயற்றவளாய் உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

அவள் குடும்பமே அவர்கள் வருகையால் கலகலப்பாகி விட்டது.

★ ★ ★

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சங்கரி சட்டென உள்ளே வந்து,

"தேனு! முகங்கழுவு புடவையை மாத்து!" என்று படபடக்க, பின்னாலேயே வந்த இளந்திரையனின் அம்மா,

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். இருக்கிறபடி இருக்கட்டும்!" என்றார்.

எனினும், தேனருவி உள்ளே போய் முகந்திருத்திக் கொண்டு வந்தவள் சமையலறையில் நுழைந்து கொண்டாள்.

மடமடவென எளிமையாக ஒரு டிபன் தயாரித்தாள். கயல்விழியிடம் கொடுத்தனுப்பினாள்.

"அம்மா! நீ வெளிய வா! படிச்ச பொண்ணுன்னாங்க. நீ என்ன இப்படி ஒளிஞ்சுக்கறே!" என்று பெரியவரே குரல் கொடுக்கவும் தயங்கியபடி வெளியே வந்தாள்.

## 5

"வணக்கம்! என் பெயர் விவேகானந்தன். இது என் மனைவி செல்லம்மாள். திருமிகு இளந்திரையன் அவர்களின் பெற்றோர்!" என்று இரு கைகளையும் கூப்பி அழகாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அப்பாவைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் இளந்திரையன்.

"வணக்கம்! வாங்க! ரொம்ப சந்தோஷம்!" என்று தடுமாறியபடி வரவேற்றார் தியாகராஜன்.

இது நடந்தது பத்து நிமிடங்களுக்கு முன்பு. அவர்கள் சோபாவில் அமர்ந்துகொள்ள டைனிங் டேபிள் சேர் ஒன்றை இழுத்துப் போட்டு அமர்ந்து கொண்டான் இளந்திரையன்.

"எங்கப்பா எனக்கு விவேகானந்தன்னு பேரு வச்சப்ப எங்க ஊர்ல அது ஒரு புதுமை. நான் இளந்திரையன்னு இவனுக்குப் பேரு வச்சப்ப இன்னும் கொஞ்சம் புதுமை. ஆனா, நீங்க அஞ்சு



குழந்தைகளுக்கும் அழகாத் தமிழ்ப் பேரு வச்சிருக்கீங்க. அது ரொம்பப் புதுமை!" என்றார் மகிழ்ச்சியாக.

"அங்கிள், ஐந்து குழந்தைகளைப் பெற்றது புதுமைங்கறீங்களா? பேர் வச்சது புதுமைங்கறீங்களா?" என்றான் கிள்ளிவளவன்.

வேள்பாரி அவனை முறைத்தான்.

"பேசட்டும். விடு, தம்பி!" என்று உதவிக்கு வந்த அவர், "ரெண்டுமே புதுமைதான்ப்பா. எங்க பரம்பரையில பாரு. எல்லாருக்குமே ஒரே ஒரு மகன்தான். அதுக்கென்ன சொல்றே?" என்றார்.

"நான் என்ன சொல்ல? அவரவர் வாங்கி வந்த வரம் அப்படி!" என்று கிள்ளிவளவன் தத்துவம் பேச, எல்லாரும் சிரித்தார்கள்.

"அதை விடுங்க.. இந்தத் தமிழ்ப் பெயர் செலக்ட் செய்றதிலயே நம்ம குடும்பத்துல ஒத்துமை பார்த்தீங்களா? இன்ஃபாக்ட் பிசிராந்தையார்ங்கற பேரு எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனா, என் மனைவி ஒரே எதிர்ப்பு. சுருக்கமாக் கூப்பிடும்போது, ஆளாளுக்கு ஆந்தைன்னு கூப்பிடுவாங்க. இல்லே பிசிருன்னு கூப்பிடுவாங்க. தேவையான்னு..." என்று சிரித்தார்.

எல்லாரும் சிரித்தார்கள்.

"அதுதானே! இவ்வளவு அழகான மாமாவை ஆந்தைன்னு கூப்பிட்டா எப்படி இருக்கும்!" என்றான் தொடர்ந்து. "நானும் இது மாதிரி ஒரு விபத்தில் இருந்து தப்பிச்சவன்தான்..." என்றான் கிள்ளிவளவன்.

"சொல்லு. கேட்போம்," என்றார் விவேகானந்தன். "எனக்குப் பேகன்னு வைக்கலாம்னு அப்பாவுக்கு ஆசை அப்ப... அண்ணன்தான் வேற பேரு வைக்கலாம்ப்பா.. ஏன்னா

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

ஆளாளுக்கு பேக்கு பேக்கான்னு கூப்பிட்டா, பேரோட அர்த்தமே போயிரும்னு சொன்னாராம்,'' என்றான்.

மறுபடியும் சிரித்தார்கள்.

''ஆமா... ஏதாவது ஃபாரின் கிரின்னு போனேன்னு வச்சுக்க. அர்த்தம் இன்னும் அசிங்கமாய்ப் போயிடும்!'' என்று கூறினாள் கயல்விழி.

உள்ளே புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டே டிபனைத் தட்டுக்களில் எடுத்து வைத்தாள் தேனருவி. அப்போதுதான், வெளியே வாம்மா என்று அழைத்தார் விவேகானந்தன்.

வெளியே வந்தாள். செல்லம்மாள் அவளை அன்புடன் தன் அருகில் அமர்த்திக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்துக்குள் அவள் தயாரித்திருந்த கேசரியும், வாழைக்காய் பஜ்ஜியும் எல்லாருக்கும் பிடித்திருந்தது.

இளந்திரையன் அம்மாவிடம் ஏதோ முணுமுணுத்தான்.

''என்ன அங்கே, முணுமுணுப்பு?'' என்றார் அப்பா.

''இல்லே.. தேனருவி.. நல்லா சமைப்பாளாம்! உங்க மகன் சொல்றான்!'' என்று போட்டு உடைத்தார் செல்லம்மா.

''ஓ...! சாப்பிட்டுப் பார்த்தாச்சா..'' என்று சிரித்தார் விவேகானந்தன்.

இளந்திரையனின் அழுத்தத்திற்கு நேர் மாறாக அவன் அப்பா கலகலப்பாக இருந்தது தேனருவிக்கு ஒரே ஆச்சரியம்.

அதற்குள் கிள்ளிவளவன், ''மாமா, உங்களை எப்படி வீட்டுல கூப்பிடுவாங்க?'' என்றான் இளந்திரையனிடம்.

விவேகானந்தனே மறுபடியும் பேசினார்.

''ஆமாப்பா! அதுக்கும் ஒரு பட்டிமன்றம் நடந்தது. உங்க அத்தையம்மாவுக்குப் பிடிச்ச பேரு அறிவுடை நம்பி. எனக்குப் பிடிச்ச பேரு இளந்திரையன். அதென்ன திரையன்னு



நரையன்னுகிட்டு அறிவுடை நம்பின்னுதான் வைக்கணும்கறது அவளோட வாதம். நான் உடனே அறிவுடை நம்பின்னா அப்ப வீட்டுல மத்தவங்கள்லாம் அறிவிலா நம்பிகளான்னு வாதம் செய்தேன். அப்புறம் ஒரு காம்ப்ரமைஸ்க்கு வந்தோம். இளந்திரையன்னு பேரு வச்சோம். வீட்ல கூப்பிடறது நம்பின்னு!'' என்றார்.

''நம்பி.. நல்லாருக்கு!'' என்றான் பாரி. அன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் பாரியும் அப்பாவைப் பார்க்க வந்திருந்தான்.

விவேகானந்தன் விஷயத்துக்கு வந்தார். ''எங்க பையன் ஏற்கெனவே லூவ் பண்ணிச் சம்மதம் வாங்கிட்டான் போலே. இருந்தாலும் முறைப்படி நாங்க பொண்ணு கேட்டு வந்திருக்கோம்,'' என்றார்.

''ரொம்ப சந்தோஷம்!'' என்றார் அப்பா, மறுமொழியாக. சற்றுக் கழித்துக், ''கொஞ்சம் அவகாசம் கொடுத்தா, நாங்க பொண்ணுக்கு நகை கிகைன்னு ஏதாவது..'' என்றார்.

''ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். எந்த எதிர்பார்ப்பு மில்லை. எங்களுக்கு ஒரே பையன்தான். ஒரு பெரிய பேப்பர் மில் ஊருக்குப் பக்கத்தில் இருக்கு. அதோட ஆபீஸ் இங்க. நம்பிதான் பாத்துக்கறான். ஊர்ல நிலம் இருக்கு. அதெல்லாம் யாருக்கு? இந்தக் குழந்தைகளுக்குத்தான். அதனால, நீங்க ஒண்ணும் சிரமப்பட வேண்டாம். பொண்ணை மட்டும் குடுத்தாப் போதும்!'' என்றார்.

தியாகராஜன் பாரியைப் பார்க்க, அவன் 'சரின்னு சொல்லுங்க!' என்பது போல் கண்ணமர்த்தினான்.

''என் மகன்... பொண்ணுங்களை அவ்வளவு கவனிச்சுக் கூடப் பார்க்க மாட்டான். அவனுக்கு உங்க பொண்ணைப் பிடிச்சிருச்சு. அவன் சந்தோஷம்தான் எங்களுக்கு முக்கியம். போனஸ் மாதிரி எங்களுக்கும் பொண்ணைப் பிடிச்சிருச்சு...'' என்று வெளிப்படையாய்ப் பேசினார்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"நாங்க இங்கே இரண்டு நாள் இருக்கப் போறோம். நீங்க சரின்னா.. நாளைக்கே ஒரு நிச்சயதார்த்தம் வச்சுர்லாம்!" என்றார்.

ஒத்துக் கொண்டார்கள். ஒரே மாதத்தில் கல்யாணம் என்றார்கள்.

அடுத்த நாள் நிச்சயதார்த்தம்.

வீட்டளவுக்குச் செய்தார்கள்.

இளந்திரையனின் குடும்பம், இவர்களின் குடும்பம், அருணாசலம் மாமா. காம்ப்ளெக்ஸ் மானேஜர். இவ்வளவு பேர்தான்.

சங்கீதா வந்திருந்தாள்.

அதற்குப் பிறகு எல்லாமே ஒரு வேகத்துடன் நடந்தது.

நிச்சயதார்த்தத்துக்கு அவர்கள் கொண்டு வந்த நகை செட்டைப் பார்த்த பாரிக்கே என்ன தோன்றியதோ என்னவோ, தங்கைக்கு இருபத்தைந்து பவுன் நகைக்கு ஏற்பாடு செய்தான்.

வீட்டின் மேல் மேலும் கடன் வாங்கித் தங்களால் இயன்றது என்று ஒரு ஐம்பதாயிரம் கொடுத்தார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் அதை மாப்பிள்ளையின் துணி மணிகளுக்கு மட்டுமே ஒதுக்கினார்கள். மற்ற கல்யாணச் செலவு முழுக்க அவர்களே ஏற்றுக் கொண்டார்கள்.

இதற்கிடையில் பாரிக்கு மதுரையிலேயே தனக்குத் தெரிந்த அலுவலகத்தில் நல்ல வேலையாக வாங்கிக் கொடுத்தான் இளந்திரையன். அவனும் குடும்பத்துக்கென்று ஒரு தொகை அனுப்ப ஒத்துக் கொண்டான்.

அதற்குப் பிறகுதான் தேனருவி ஓரளவு நிம்மதியானாள்.

இளந்திரையன் எப்படியும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை எட்டிப் பார்த்து விட்டுப் போவான்.



வீட்டில் எல்லாருக்கும் அவன் திருமணத்துக்கென்று எடுத்துக் கொடுத்த துணிமணிகளைப் பார்த்தே எல்லாரும் மருண்டு போனார்கள்.

கிள்ளிவளவனுக்கும், இளந்திரையனுக்கும் இடையே ஒரு ஒட்டுறவு வளர்ந்திருந்தது.

"என்னடா, வளவா! இத்தனை தடவை வர்றேன். உங்க அக்கா பேசக்கூட மாட்டேங்கறா..!" என்று அவன் ஒரு தடவை சொல்ல, அதை அவன் பெற்றோரிடம் சொன்னான். அதனாலேயோ என்னமோ அடுத்த முறை எல்லாரும் பேசி வைத்துக் கொண்டு அவர்களைத் தனியாய் விட்டார்கள்.

"என்ன.. என்கிட்டே பேசறதில்லேன்னு முடிவா..?" என்றான்.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே..!" என்றாள் அவள். பிறகு மெதுவாக, "கஷ்டமாயிருக்கு. இதை யெல்லாம் நாங்க எப்படித் திருப்பிக் கொடுக்கறது?" என்று முணுமுணுத்தாள்.

அவன் அவள் சங்கடத்தை ரசனையுடன் பார்த்தான்.

"பணமாத்தான் குடுக்கணும்னு என்ன இருக்கு? எத்தனையோ விதங்கள்ல திருப்பிக் குடுக்கலாம்!" என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்க்க.. அவன் சிரித்தான்.

"ஹேய்! பயப்படாதே! கல்யாணத்துக்கு அப்புறம்தான்... எல்லா ரீ பேமென்டும்!" என்றான் மறுபடி. அவன் யதார்த்தமாகப் பேசுவதை அவள் அனர்த்தமாக எடுத்துக் கொள்வதை அவன் புரிந்து கொள்ளவில்லை.

"வட்டியும், முதலுமா வாங்கிக்கறேன்!" என்று அவன் மேலும் சிரிக்க, அவள் படபடப்பாகி விட்டாள்.

அவன் ஆர்வமாக ஆனால் ஆழமாகப் பார்ப்பதைக் கண்டு அவள் திணற,

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"ஓ.கே... ஓ.கே.. ரிலாக்ஸ்..." என்றான். போய் விட்டான்.

அவன் பேச்சு ஒவ்வொன்றும் அவளைக் கவலைக் குள்ளாக்கியதை அவர்கள் யாருமே புரிந்து கொள்ளவில்லை.

★ ★ ★

நடந்த எல்லாவற்றையும் பாமாவிடம் அழாத குறையாய்ச் சொல்லி முடித்தாள் தேனருவி.

பாமாவின் முகத்தைப் பார்த்து எந்த உணர்வையும் கண்டு பிடிக்க முடியவில்லை, நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"எப்பவும் நான் சொல்வேன் இல்லே. பெண்கள் தலையெழுத்தே இதுதான். நம்ம விருப்பத்துக்கு எதுவும் நடக்காது. மத்தவங்க விருப்பத்துக்குத்தான் நாம வாழணும்னு!" என்றாள் குரலில் சோகத்தைக் காட்டி.

"நான் என்ன செய்யட்டும், அண்ணி?"

"நீ என்ன செய்வே? இல்லை, என்ன செய்ய முடியும்? உன்னோட மாப்பிள்ளை தன்னோட பணத்தாலே எல்லாத்தையும் அடிச்சுட்டாரு. உன் சக்திக்கு மீறின விஷயத்துக்கு நீ என்ன செய்ய முடியும்? இன்னும் சொல்லப் போனா உன்னை விலை குடுத்து வாங்கின மாதிரி காரியத்தை முடிச்சுகிட்டாரு!" என்றாள்.

தேனருவியின் மனத்தை அந்த வார்த்தைகள் எவ்வளவு தூரம் தாக்கின என்பது பாமாவுக்குப் புரியவில்லை. மேலும் தொடர்ந்தாள்.

"ஆனால், பிடிக்குதோ, பிடிக்கலையோ... நாம எல்லாத்தையுந்தான் விட்டுக் குடுக்கணும்!" என்றாள்.

"எல்லாத்தையுமா?" என்றாள் தேனருவி அச்சத்துடன். "அதெப்படி?... மனசு ஒப்பாமல்?"

"எப்படியோ... அவர்களை மாத்த முடியாது. நம்ம மனசைத்தான்... தேத்திக்கணும்!" என்றாள்.



அப்போது...

இளந்திரையன் வீட்டுக் கார் டிரைவர் ஒரு பார்சலோடு நின்றான்.

"அம்மா... சின்னய்யா குடுத்தனுப்பிச்சாங்க..." என்றான்.

வாங்கிப் பார்த்தார்கள். பதினைந்து பட்டுப் புடவைகள் இருந்தன.

"உங்களை ஃபோன் பண்ணச் சொன்னாங்க!" என்றான், தேனருவியைப் பார்த்து.

தேனருவி தலையாட்டி வைத்தாள். அம்மா சங்கரி அவசர அவசரமாக டிரைவருக்கு டீ போட்டுக் கொடுப்பதைக் கயல்விழி ஒரு புன்சிரிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

தேனருவி தானே எப்படி ஃபோன் செய்வது என்று தயங்கிக் கொண்டிருக்கையிலேயே அவனிடமிருந்து போன் வந்தது.

"அருவி! அம்மா குடுத்தனுப்பிச்சிருக்காங்க. உனக்கு.. உங்க மதருக்கு உங்க அண்ணிக்கு கயல் விழிக்குன்னு அவங்களுக்கு ஆளுக்கு மூணு புடவையாம். உனக்கு மீதி!" என்றான்.

"எங்களுக்குத் தேவையான அளவுக்குப் பட்டுப் புடவைகள் இருக்கு..." என்றாள்.

"அந்த விளக்கமெல்லாம் நீ அம்மா கிட்டே சொல்லிக்க வேண்டியது. நமக்குச் சம்பந்தமில்லைப்பா. அப்புறம்.. அம்மா.. இங்கேதான் இருக்காங்க. உன்கிட்ட பேசணுமாம்," என்றான்.

அவள் மௌனமாய் நின்றாள். "தேனு...! ஒரு அரை மணி நேரம் டிரைவரை வெயிட் பண்ணச் சொல்றேன். நீ புறப்பட்டு வா. ஊர்ல நமக்கு ரொம்ப நெருங்கினவங்களுக்கெல்லாம் கொஞ்சம் புடவைகள் செலக்ட் செய்யணும். நீ வேணா கிள்ளியைக் கூட்டிட்டு வா, துணைக்கு!" என்றார்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள் பெற்றோரிடம் சொன்னாள். அதற்குள் பாமாவும், கயல்விழியும் ஆர்வமாகப் புடவைகளைப் பிரித்து இது உனக்கு, எனக்கு என்று பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இத்தனை நேரம் பாமா அண்ணி பேசியதென்ன? இப்போது பறந்து பறந்து புடவை செலக்ட் செய்வதென்ன என்று அவள் கசப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே பாமா அண்ணி அவள் அருகில் வந்து,

''ஏய், தேனருவி.. நான்தான் சொன்னேனே, நம்ம மனசில இருக்கற எதையும் காட்டிக்கக் கூடாதுன்னு... போயிட்டு வா!'' என்றாள்.

போனாள்.

இளந்திரையனும், கிள்ளிவளவனும் பேசிக் கொண்டிருக்க, அவளும் செல்லம்மாவும் புடவைகளை செலக்ட் செய்தனர்.

ஒவ்வொரு புடவையும் ஐயாயிரத்துக்கு மேல் எடுத்தார்கள்.

''உன் வயசுப் பொண்ணுங்க.. ஒரு ரெண்டு மூணு பேருக்குக் கொடுக்கணும். ஒரு நாலைஞ்சு புடவை உன் டேஸ்ட்டுக்குத் தகுந்த மாதிரி எடு,'' என்றார் செல்லம்மா.

செலக்ட் செய்து கொடுத்தாள்.

''உனக்கு எதுவும் எடுத்துக்கலையா?'' என்றான் இளந்திரையன்.

அவள் அவனை நிமிர்ந்து பாராமல், ''இருக்கறதே போதும்..!'' என்றாள்.

இளந்திரையனும் செல்லம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''நான் புறப்படட்டுமா?'' என்றாள், அவசரமாக. இளந்திரையன் கிள்ளிவளவனைப் பார்த்துச் சிரித்தான். கிள்ளிவளவனும் புரிந்து கொண்டவனாய்ப் புன்னகைத்தான்.



திருமணத்துக்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. ஏற்பாடுகள் எல்லாம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தன. செல்லம்மா இளந்திரையனைப் பார்த்து,

''நம்பி! வேறென்னமோ கேக்கணும்னயேப்பா?'' என்றார்.

''அது வேறொண்ணுமில்லே. என்னோட புரொஃபசர்ஸ் ரெண்டு மூணு பேரு, முக்கியமான ஃபிரண்ட்ஸ் ரெண்டு மூணு பேருக்கெல்லாம் இன்விடேஷன் கொடுக்க நீ வந்தா சௌகரியமா இருக்கும். இதோ... இந்தப் பயலையும் வேண்ணாக் கூடக் கூப்பிட்டுக்கலாம்...'' என்றான் இளந்திரையன்.

''அம்மா... அப்பாகிட்டே... கேட்டுட்டு...'' என்று அவள் இழுக்கவும்,

''அதை... நான் பாத்துக்கறேன்... நீ வர்றயா என்ன? அதைச் சொல்லு...'' என்றான்.

அவள் சரியெனத் தலையாட்டி விட்டுக் கிளம்பினாள்.

''என்னடா இப்படித் தயங்கறா? அதுவும் இந்தக் காலத்துப் பொண்ணு!'' என்று செல்லம்மா சிரிப்பது அவளுக்குக் கேட்டது. நிற்காமல் நடந்தாள்.

## 6

''அக்கா.. எனக்கு முக்கியமான வேலை இருக்கு. இன்னும் ஐம்பது பேருக்கு மேலே நாளைக்குள்ள இன்விடேஷன் குடுத்து முடிச்சுட்டு... அட்லீஸ்ட்.. நாளன்னைக்காவது போய் அவர்களுக்குக் கல்யாண ஏற்பாடுகள்ல ஹெல்ப் பண்ணணும். பணமா நெறைய... செய்யலே. அட்லீஸ்ட் உழைப்புலயாவது ஹெல்ப் செய்யணுமில்லே!'' என்றான் கிள்ளிவளவன்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் சொல்வதும் நியாயமாகப் பட்டது.

''அக்கா.. நான் சொல்றதைக் கேளு. மாமா அவங்கம்மா ரெண்டு பேருமே கூப்பிட்டிருக்காங்க, நீ போகலேன்னா.. நல்லாருக்காது. இந்தச் சோழ மகாராஜாவைத் துணைக்குக் கூட்டிட்டுப் போ...'' என்றான். பெற்றோரும் அதையே சொன்னார்கள்.

அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை.

★★★

இளந்திரையனின் காரை டிரைவர் ஓட்டிக் கொண்டு வர, அவர்கள் வீட்டுக்கே வந்தான்.

புறப்படும்போது அவன் பின் சீட்டில் அமர, தேனருவி வெகு எச்சரிக்கையாகக் கோப்பெருஞ்சோழனை இடையிலே அமர்த்தி அவள் அந்தப்புறம் அமர்வதை அவன் ஒரு குறுஞ் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

வெகு இயல்பாகத் தன் தம்பி, அந்தப் பன்னிரண்டு வயதுப் பையனிடம் அவன் உரையாடுவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

பிற்பகலுக்குள் அழைப்பும் கொடுத்து முடித்து விட்டார்கள்.

''நம்ம வீட்ல சாப்பிட்ரலாமா...?'' என்றான். அவள் பதிலுக்குக் காத்திருக்கவில்லை. வீட்டுக்குப் போனார்கள்.

புதியதொரு பங்களா. சுற்றிலும் இடம் நிறைய இருந்தது.

''முதல்ல நம்பி மட்டும்தானேன்னு சின்னதா ஒரு பங்களா வாடகைக்கு எடுத்திருந்தோம். அதையே வாங்கலாம்னு யோசிச்சோம். நம்பிதான், 'அம்மா! அவளுக்குச் செடி கொடி வளர்க்கறதுன்னா ரொம்ப இஷ்டம்... கொஞ்சம் சுத்தி வர இடம் இருக்கற மாதிரி வாங்கலாம்!'னான். அந்தச் சமயத்துல இந்த பங்களா விலைக்கு வந்தது. பிடிச்சுது. வாங்கிட்டோம்.



இனிமே நீ வந்து தோட்டம் போட வேண்டியதுதான்!'' என்று சிரித்தார்.

அவள் பொதுவாகப் புன்னகைத்து வைத்தாள்.

''வா... சுத்திப் பார்க்கலாம்..'' என்று அழைத்தான்.

அம்மா அதற்குள் பையனுக்கு ஐஸ்கிரீம் கப் ஒன்றை எடுத்துக் கொடுக்க, அவன் சுவாரசியமாக அதில் ஆழ்ந்தான்.

அவள் தயக்கத்துடன் போனாள். கீழேயே ஒரு பெரிய ஹால். சமையலறை. அதுபோக அறைகள் இருந்தன. முதல் தளத்தில் வேறு மூன்று நான்கு அறைகள் இருந்தன.

''இது நம்ம யூசுக்கு...'' என்றான்.

''இப்போதைக்கு என்னுடைய ரூம். பாக்கறியா?'' என்று அழைத்துப் போனான். அங்கே...

அவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ஒரு அழகான ஓவியம்!

இடக்கையில் குடத்தைப் பிடித்தபடி வலக்கையால் ரோஜாச் செடியில் பூத்திருந்த மஞ்சள் ரோஜாவைக் குனிந்து பார்த்து வருடிக் கொடுத்த நிலையில் நின்றிருந்த பெண்...

முகம் அவள் முகத்தைப் போலவே இருந்தது...

அவன் சிரித்தான்.

''உன் போட்டோவைக் குடுத்து, உன் முகமா இருக் கணும்னு சொன்னேன். என் ஃபிரண்ட் வரைஞ்சது...'' என்றான்.

அவள் முகத்தில் ஒரு விதத் திகைப்புத் தெரிய நிற்பதைப் பார்த்து,

''ஹேய்! அருவி! எப்படி உன்னால் இப்படி சாமியார் மாதிரி நிக்க முடியுது. எப்படா பத்து நாள் ஓடும், எப்ப நீ இந்த வீட்டுக்கு வந்து சேருவேன்னு நான் தவிக்கறது உனக்குப் புரியலையா?'' என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள், "ப்ளீஸ்..." என்றாள். நகர்ந்து விட்டான்.

அவள் பின்னாலேயே வந்தபடி, "கார்லயாவது சிம்மாசனம் கிடைக்குமான்னு பார்த்தேன். அங்கயும் சோழமகாராஜா நம்ம இடத்தைப் பிடிச்சிட்டாரு. உனக்கே இது நியாயமா?" என்று எட்டி, அவள் கையைப் பிடிக்க,

அவள் மௌனமாகவும், தவிப்போடும் நிற்பதைப் பார்த்து, "சரி.. வா..." என்று கையை விடுவித்தான்.

கீழே போனார்கள்.

சாப்பிட அமர்ந்தவுடன் அம்மா.. பரிமாற வந்ததைப் பார்த்து, "ம்மா.. ப்ளீஸ். உட்காருங்க!" என்று அவள் பரிமாற எழுந்தாள்.

"இல்லல்லே.. நீயும் உட்காரு..!" என்று ஆட்களை விட்டுப் பரிமாறச் செய்தார்.

அம்மாவிடம் அவள் மெல்லிய குரலில் இயல்பாகப் பேசுவதையும், சிரிப்பதையும் அவன் பார்க்காதவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அருவி.. உனக்கு முக்கியமானவங்க யாருக்காவது நான் பத்திரிகை கொடுக்க வரணுமா?" என்றான்.

அவள் விழித்தாள்.

"உன் க்ளோஸ் ஃபிரண்ட் சங்கீதாவைக் கூப்பிட்டர லாமா?" என்றான்.

"சரி...!" என்றாள்.

போனார்கள்.

எப்போதும் அவள் போனால், 'வாம்மா!' என்று ஒற்றைச் சொல்லில் கடனே என்று அழைத்து விட்டுப் போகிற சங்கீதாவின் அம்மா, அவன் யார் என்று தெரிந்ததனாலேயோ என்னவோ, விழுந்து விழுந்து உபசரித்தாள்.



"எனக்கு அப்பவே தெரியும், இந்தத் தேனருவிக்கு முகத்திலே மகாலட்சுமி களை யிருக்கு. இவளுக்கு வசதியில்லேன்னாலும் நல்ல இடத்துக்குப் போய்ச் சேருவான்னு!" என்றார்.

சங்கீதா ஒரு விதமான எரிச்சலுடன் அம்மாவைப் பார்க்க,

"பணத்துல என்னங்க ஆன்ட்டி இருக்கு? மனசுதான் முக்கியம்!" என்று இளந்திரையனே பதில் கொடுக்க, அந்த அம்மா மிகவும் சாமர்த்தியமாக,

"அது அப்படித்தான்!" என்று சமாளித்தார்.

சங்கீதாவும், தேனருவியும் சற்று நேரம் குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள்.

அவன் நாகரீகமாக இடம் கொடுத்து ஒதுங்கி நிற்கையில்,

"தம்பி, உங்க ஃப்ரண்ட்ஸ் வட்டத்துல நல்ல மாப்பிள்ளை பையன் இருந்தா எங்க சங்கீதாவுக்குச் சொல்லுங்க!" என்றார்.

"ஆகட்டும் ஆன்ட்டி, கண்டிப்பா..!" என்றான்.

வரும்போது கோப்பெருஞ்சோழன், "மாமா.. நான் ஜன்னல் ஓரத்துல உட்கார்ந்துக்கவா...?" என்றான்.

"ஓ! தாராளமா!" என்று உரத்த குரலில் சொல்லி விட்டு, "ரொம்ப சௌகரியமாப் போச்சு..." என்று அவளுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்து, அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான். அவள் செய்வதறியாது அமர்ந்திருந்தாள். மௌனமாகவே அந்தப் பத்து நிமிடப் பயணம் நடந்து முடிந்தது.

வீட்டில் அவளை விட்டு விட்டு ஐந்து நிமிடம் கூட இருக்கவில்லை.

புறப்பட்டு விட்டான்.

★ ★ ★

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"என்ன இருந்தாலும் பணத்துக்கு இருக்கிற மதிப்பு தனிதான் அண்ணி. எப்பவும் கண்டுக்காத சங்கீதாவோட அம்மா... விழுந்து விழுந்து உபசரிக்கறாங்க!" என்றாள்.

"என்ன செய்ய? உலகம் அப்படித்தான்!" என்று அவள் ஒத்து ஊதினாள்.

அதே நேரத்தில்...!

செல்லம்மா சற்றே கவலையுடன், "ஏம்ப்பா... ரொம்பத் தாழ்வு மனப்பான்மை இருக்கும் போல இருக்கே?" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

"அதெல்லாம் இல்லம்மா. ரொம்ப சுயமரியாதைக்காரி. அதுவும்... முதல் முதல்ல.. ஹெல்ப் வேணுங்கற சூழ்நிலையில் என்னைச் சந்திச்சா. அதனால இன்னும் இதையெல்லாம்... புரிஞ்சுக்க முடியலே..!" என்றான்.

அம்மா மகனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"ஏப்பா.. உனக்கு அவளை ரொம்பப் பிடிச்சிருச்சு..." என்றார்.

"ஆமாம்மா..!" என்று சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தான். அவரும் சிரித்தார்.

★ ★ ★

திருமணம் வெகு விமரிசையாக நடந்தது.

எதற்காக அத்தனை விலையுயர்ந்த புடவைகளை அவன் வீட்டிலிருந்து அனுப்பினார்கள் என்று அவர்கள் குடும்பத்தினருக்குப் புரிந்தது.

அதிலும் செல்லம்மாள் அவர்கள் குடும்பத்தினரின் மனத்தை எந்த விதத்திலும் புண்படுத்தாமல் ஆனால், சபையில் அவர்களின் மரியாதை குறையாமல் பார்த்துக் கொண்டார்.

அந்த விதத்தில் தேனருவிக்குத் தன் மாமியாரை மிகவும் பிடித்தது. ஒரு ஒட்டுதல் கூட ஏற்பட்டு விட்டது.



கல்யாணத்தின் போது வழக்கம்போல் மாமனார் ஒரு பக்கம் கலாட்டா செய்து கொண்டிருந்தார்.

பெண் வீட்டழைப்பு, மாப்பிள்ளை வீட்டழைப்பு என்று இரண்டு நாட்கள் வேகமாகக் கடந்தன.

சங்கீதா கூடவே இருந்தாள். அதனாலேயோ என்னவோ, தேனருவி சற்று உற்சாகமாகவே இருந்தாள்.

இளந்திரையனின் நண்பர்கள் அதிலும் கல்லூரி நண்பர்கள் நிறைய வந்திருந்தார்கள்.

அதில் ஒருவன், "என்னமோ பெரிய விசுவாமித்திரன் மாதிரி அலம்பல் செஞ்சுகிட்டிருந்தே. இப்ப... என்னடான்னா.. ஆளே மிதக்கறே..!" என்றான்.

"இரு.. இரு.. உன்னோட டர்ன் வருமில்ல. அப்ப நான் பாத்துக்கறேன்!" என்றான் இளந்திரையன்.

"டேய்... நம்பி... நீ உன்னை மாதிரி நினைச்சுகிட்டு... பேசாதே. இவரு லெஃப்ட் அன்ட் ரைட் டர்ன்... அபவுட் டர்ன் எல்லாம் அடிச்சுப் பார்த்துட்டாரு. பொண்ணுங்க எல்லாரும் இவரைப் பார்த்தாலே... டர்ன் பண்ணிட்டு ஓடறாங்களே தவிர.. இவன் டர்ன் ஒண்ணும் இப்போதைக்கு வர்ற மாதிரித் தெரியலே!" என்றான் இன்னொருவன்.

சங்கீதாவும் தேனருவியும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

அந்த நேரம்,

ஒரு இளைஞன்... பார்த்தாலே கம்பீரமாக இருந்தான். வந்து வாழ்த்தினான்.

அவன் சற்று தூரத்தில் வரும் போதே, "ஹேய்! அருவி.. அங்க வரான்... பாரு... அசோக்... அவனை நல்லாக் கவனிச்சுக்கோ..." என்றான் இளந்திரையன்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் வந்தவுடன், "அருவி! இவன் என்னோட பெஸ்ட் ப்ரண்ட்.. அசோக்... நெஃப்ராலஜிஸ்ட்!" என்று அறிமுகப் படுத்தினான். பிறகு,

"டேய்... சாப்பிட்டுட்டு வாடா.. வந்து கண்டிப்பாப் பேசிட்டுப் போ...!" என்றான். பிறகு மெதுவான குரலில்...

ஹேய்! அருவி... இவன் உன் ஃப்ரண்டு சங்கீதாவுக்குப் பொருந்துமான்னு பாரு. அவங்களுக்கும் காட்டு... பிடிச்சிருந்தா... மேற்கொண்டு பார்க்கலாம்!" என்றான்.

தேனருவி இதையெல்லாம் சொல்லாமல், "ஹேய்! சங்கீதா... இந்த அசோக்கைக் கவனிச்சுப் பாத்துக்க. ஒரு விஷயம் இருக்கு. அப்புறம் சொல்றேன்," என்று மட்டும் சொன்னாள்.

பிறகு மற்ற விருந்தினர்கள் வரக் கவனம் மாறினார்கள்.

மூன்றாம் நாள்!

அவர்கள் ஊருக்குப் போனார்கள்.

பசுமையான ஊர்.

பெரிய தொட்டிக்கட்டு வீடு. அப்பாவுக்கு அந்த வீட்டை இடித்துக் கட்ட இஷ்டம் இல்லையாம். அறைகளை மட்டும் உள்ளே நவீனப்படுத்தியிருந்தார்கள்.

மாடியிலும் அறைகள் இருந்தன.

பெரியவர்கள் எல்லாரும் குசுகுசுவெனப் பேசிக் கொண்டு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்கள்.

அவள் வழக்கம் போல் அமைதியாக இருந்தாள். சற்று நேரம் அவனைக் காணவில்லை. கிராமம் என்பதாலோ என்னவோ பெண்கள் நிறைய வந்து அவளைப் பார்த்து விட்டுச் சென்றார்கள்.

சற்று நேரம் கணவனைக் காணவில்லை என்று அவள் கண்கள் தேடுவதைப் பார்த்த பாமா அருகில் வந்து,



"அவரு மாடிக்குப் போயிட்டாரு. இன்னைக்கு சடங்கு வைப்பாங்க போல இருக்கு..." என்றாள்.

அதே போல் பத்து மணி வாக்கில் அவளை மேலே அனுப்பினார்கள்.

விட்டால் போதும், எங்காவது ஓடி விடலாம் என்ற திகிலுடனேயே அவள் மேலே போனாள்.

கால்கள் பின்னிக் கொண்டன. மாடி ஏறும்போதே கவனித்தாள். அவன் துறுதுறுவென்று சிறுநடை நடந்து கொண்டிருந்தான்.

முகத்தில் லேசான புன்னகை உறைந்திருந்தது. நேர் எதிராக.

அவளுக்கு நடந்த திருமணமே ஒரு கனவு போல இருந்தது.

மகிழ்வோ, உற்சாகமோ எந்த உணர்வும் இல்லாமல் விட்டேற்றியாகவே இருந்தாள். இப்போது திடீரென்று தனிமையில் அவனைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

எல்லாப் பெண்களையும் போல அவன் பணமும் வசதியும் உறவுக்காரக் கூட்டமும், ஊரில் அந்தக் குடும்பத்துக்கிருக்கிற மதிப்பும் அவளை உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக அவளது அச்சத்தை அதிகரிக்கவே செய்தன.

திருமணம் என்ற வலையை வீசி அவன் தன்னைச் சிறைப்படுத்தி விட்டதாகவே உணர்ந்தாள். புரிந்து கொள்ள முடியாத உணர்வுகளுடன் அவள் உள்ளே நுழைந்தாள்.

செத்து விடலாம் போல் மனது பதைபதைத்தது. ஆனால், ஆர்வமும் உற்சாகமும் பொங்க அவன் நிற்பதைப் பார்த்து,

'என்னைப் புரிந்து கொள்ள மாட்டாயா?' என்பது போல் அவள் மனது ஓலமிட்டது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

## 7

''வணக்கம், மகாராணி! தங்கள் வரவு நல்வரவாகுக!'' என்று குனிந்து வணக்கம் போடுகிற அவனுக்கு எப்படிப் பதில் தருவது எனத் தெரியாமல் தயங்கி நின்றாள்.

அவன் நிமிர்ந்து சிரித்தபடி அருகில் வந்து இடக்கையால் அணைத்தபடி வலக்கையால் அறைக் கதவைச் சாத்தினான்.

பிறகு, 'வா! உட்கார்!' என்று அருகில் அமர்த்திக் கொண்டான்.

''உன்கிட்ட நிறையப் பேசணும்...'' என்றான். பிறகு மெதுவாகப் புன்னகையை மலர விட்டபடி,

''ஆனா... இன்னைக்கு இல்லே! அப்புறம் எப்பவாச்சும்...!'' என்றான்.

அவள் அப்படி மெதுவாகச் சிரிப்பை மலர விட்டுச் சிரிக்கிற போது பார்க்க நன்றாகத்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

சற்று நேரம் தன் பெற்றோர் பற்றிச் சொன்னான். அப்பா நன்கு படித்தவராம். பக்கத்தில் கோபியில் இருந்த கல்லூரியில் ஆசைக்காக ஒரு பதினைந்து ஆண்டுகள் பேராசிரியராக வேலை பார்த்தாராம். வரலாற்றுத் துறையாம். ஆங்கில அறிவு அதிகமாம். பிறகு அவருடைய அப்பாவுக்கு வயசு அதிகமாகவே வேலையை விட்டு விட்டு வந்து விவசாயம் பார்க்க ஆரம்பித்தாராம். அவர்தான் பேப்பர் மில்லை ஆரம்பித்தாராம்.

சுற்று வட்டாரத்தில் மில்லுக்காரர் வீடு என்று அவர்கள் குடும்பம் புகழ் பெற்றிருக்கிறதாம்.

அம்மாவும் நல்ல வசதியான குடும்பம்தானாம். ஒரே ஒரு தாய் மாமன் என்று உற்சாகமாக ஆனால் மெதுவான குரலில் விவரங்கள் சொன்னான்.



அவள் குடும்பத்தையும் பற்றி நன்றாக விசாரித்து வைத்திருந்திருக்கிறான். விவரமாக எல்லாம் சொன்னான். அவள் குடும்பத்தை அவனுக்கு மிகவும் பிடித்து விட்டதாம்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு அவன், ''ஹேய்! என்ன ஒரே சைலண்டா இருக்கறே. உனக்கேதாவது சொல்லணுமா?'' என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். பிறகு, ''நீங்க அப்பாவுக்காகச் செய்த செலவை எப்படியாவது திருப்பிக் குடுக்கணும்...'' என்றாள்.

அவன் இதை எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியடைந்தாற் போல் அவளை வெறித்துப் பார்த்தான். ''ஹேய்! விளையாடறியா?'' என்றான். பின் சிரித்து, 'அட ஆண்டவா!' என்று தலையில் கை வைத்தாற் போல் நடித்தான். அவள் அதைக் கண்டு கொள்ளாதவளாய், ''அதுவும் என் உழைப்பிலிருந்து சம்பாதிச்ச பணத்திலிருந்து திருப்பிக் குடுக்கணும்..!'' என்றாள்.

அவன் திடீரென்று மௌனமாகி விட்டான். சட்டென்று எழுந்து அவளுக்கு முகம் காட்டாமல் நின்று கொண்டான். பிறகு தேற்றிக் கொண்டவன் போல் அவள் அருகில் வந்தான்.

அதற்குள் அவளும் எழுந்து நின்று கொண்டிருந்தாள். அவன் மெதுவாக அவளருகில் வந்தான். மெல்லத் தன் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான்.

''சரி! இது ஒரு பிரச்னையேயில்லை. ஏதாவது பிளான் செய்வோம். என்ன?'' என்றான்.

தன் வலக்கையால் அவள் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் இதழ் பதித்தான்.

''ஹேய்! தேனருவி! உங்கப்பா பொருத்தமா பொறுக்கி யெடுத்துத்தான் பேரு வச்சிருக்காரு...'' என்று

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

முணுமுணுத்தான். மெல்லிய குரலில் அவளைக் கொஞ்சியபடி முகம் நோக்கிக் குனிந்தான். கழுத்துப் புறத்தில் முகம் பதித்தான். ஓரிரு நிமிடங்களிலேயே அவனுக்கு ஒன்று புரிந்தது. அவள் ஒரு இறுக்கத்தில் இருக்கிறாள் என்பது புரிய நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

கண்களை இறுக மூடிக் கொண்டு, உடல் நடுங்க, முகமெல்லாம் வியர்க்க, அவள் நின்ற கோலம் பார்த்து அவன் மனதில் திகைப்புத் தோன்றியது.

"ஹேய்! அருவி! என்ன இது? திஸ் இஸ்.. ஆல்.. நேச்சுரல்... என்ன இப்படி பயம்..." என்றான். தேற்ற முயன்றான். ஆனால், எந்த வித எதிர் விளைவும் இல்லை என்பதை ஓரிரு வினாடிகளில் புரிந்து கொண்டான்.

இரண்டு நாட்களாகவே அவனைத் தனிமையில் சந்திப்பது குறித்த அச்சத்தில்தான் இருந்தாள் தேனருவி. தப்போ ரைட்டோ.. கல்யாணத்தை ஏற்றுக் கொள்வோம், மகிழ்வாய் வாழ்வதற்கு முயற்சி செய்வோம் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால், அவன் கைகள் அவளை அணைத்த அந்தக் கணத்தில் ஒரு பெரிய ஓட்டு வீட்டின் மேல் சோறு வீசப்படுவது போலவும், அதைக் கொத்த வருகிற காக்கைகளில் தானும் ஒருத்தி போலவும் அவள் உள்ளத்தில் தோன்றியது. அன்று கேட்ட சொற்களின் பொருள் முழு வீச்சோடும், வலிமையோடும் தன்னைத் தாக்குவதாய் உணர்ந்தாள்.

அறிவு பூர்வமாக அவள் யோசித்து வைத்ததெல்லாம் மறந்து போய் ஒரு மறுப்புணர்வும் எதிர்ப்புணர்வுமே தோன்றுவதை உணர்ந்தாள். தன்னை மீறிய அந்த உணர்வுகளைக் கையாளத் தெரியாத ஒரு திகைப்புடன் நின்றாள்.

அவன் மெதுவாக அவளை விடுவித்தான். "சரி.. நீ டயர்டா இருக்கே.. தூங்கு!" என்றான்.



அவள் மறுபடியும் திகைப்புடன் அவனைப் பார்க்க, "எஸ்... டார்லிங்... தூங்கலாம்... குட்நைட்!" என்றான்.

மேற்கொண்டு பேச்சுக்கு இடம் வைக்காமல் விளக்கை அணைத்தான்.

அவள் மெல்லிய குரலில், "கோபமா?" என்றாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லே... இனி எல்லா நாளும் ஒண்ணாத்தானே இருக்கப் போறோம். பாத்துக்கலாம்... மெதுவா!" என்றான்.

பிறகு திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

★ ★ ★

இரண்டு மூன்று நாட்கள் ஊரில் தங்கினார்கள்.

உறவினர்களின் வீடுகளில் விருந்துகள், சென்று வருதல் என்று வேகமாகப் பொழுது கழிந்தது.

நாள் முழுதும் மற்றவர்கள் முன்னிலையில் இயல்பாகவே நடந்து கொண்டான் இளந்திரையன். வெகு கலாட்டாப் பேர்வழியாக இருந்தான். மற்றவர்கள் முன்னிலையில் நெருக்கமாகவே அமர்வான். நிற்பான். ஆனால் தனிமையில் மட்டும் அவளைத் தொல்லை செய்யாமல் ஒரு தொலைவி லேயே நின்றான்.

இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அவளுக்கு அந்த விதமான பயம் தெளிந்தது. ஆனாலும் அவள் அவனிடம் கலகலப்பாகப் பேசி விடவில்லை.

நேர் மாறாகச் செல்லம்மாவிடம் இயல்பாக ஒட்டிக் கொண்டாள்.

"அம்மா... எங்களுக்குப் பெண் குழந்தை இல்லை யேங்கறது... பெரிய ஏக்கம். நீதான் இனிமே அந்த ஏக்கத்தைத் தீர்க்கணும்!" என்றார், மென்மையாக.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அதிலெல்லாம் எந்தக் கவலையும் வேண்டாம். சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் உங்க மகளேதான்..!" என்றாள் அவள்.

வேலைகள் செய்வதற்கு அச்சப்படாதவள் என்பதாலோ என்னவோ, நன்றாக வேலை செய்தாள். அதனால் அவளை எல்லாருக்கும் பிடித்தது.

அவர்கள் மூன்று நான்கு குடும்பங்களிலுமாகச் சேர்ந்து ஒரே ஒரு பெண்தான் இருந்தாள். பெயர் லாவண்யாவாம். வெளியூரில் படித்த பெண் என்றார்கள். எம்.எஸ்ஸி. படித்திருக்கிறாள் என்றார்கள்.

அன்றைக்கு வந்தாள். நுனி நாக்கு ஆங்கிலமும் மாடர்ன் டிரஸ்ஸுமாக அலம்பல் செய்தாள்.

"ஸோ யு ஆர் சப்போஸ்ட் டு பி மை ஸிஸ்டர் இன் லா..." என்றாள் கிண்டலாக.

"நாட் சப்போஸ்டு டு பி மேடம். ஐம் யுவர் சிஸ்டர் இன் லா!" என்றாள் தேனருவி அலட்டிக் கொள்ளாமல்.

யாரிடமோ பேசிக் கொண்டிருந்த இளந்திரையன் வேகமாகத் திரும்பிப் பார்த்தான். ஒரு கணம் அவன் பார்வையில் மின்னல் தோன்றி மறைந்தது. மீளவும் கண்டு கொள்ளாதவன் போல் திரும்பிக் கொண்டான்.

லாவண்யா சிரிப்புடன் அவளது பதிலை எதிர்கொண்டாள்.

"தட்ஸ் குட்... யு சீம் டு பி ஸ்மார்ட்!" என்றாள்.

"தாங்க்ஸ் அண்ணி!" என்றாள் தேனருவி. சற்று நேரம் பொதுப் படையாய்ப் பேசினார்கள். பிறகு கண்டிப்பா சாப்பிட்டுட்டுப் போகணும் என்று தேனருவி வற்புறுத்தவே அவள் சாப்பிட அமர்ந்தாள்.

செல்லம்மா... பெருமையாக, "எல்லாம் எங்க தேனருவி சமையல்தான்!" என்றார்.



"நான் சமையலுக்கெல்லாம் போறதில்லே!" என்றாள் லாவண்யா அமர்த்தலாக.

"நேரம் இல்லையோ? ஏதாவது பிசினஸ் பாத்துக் கறீங்களோ?" என்றாள் தேனருவி அப்பாவியாய்.

"இல்லல்லே.. இன்ட்ரஸ்ட்.. இல்லே.. சமையற்காரங் கள்ளாம் எதுக்கு இருக்காங்க?" என்றாள்.

"ஓ...!" என்றாள் தேனருவி. பிறகு மெதுவாகப் புன்னகைத்து, "சமையல் தெரிஞ்சிருந்தா ஒரு பாதுகாப்பு..." என்றாள்.

"எப்படி?" என்று அவள் நிமிர்ந்து பார்க்க...

"நம்ம பிரிப்பரேஷன்னு... தைரியமா... சாப்பிடலாம்... உடம்புக்கும்... மனசுக்கும் நல்லது... நம்ப வயிற்றுக்காகப் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டாமில்லே!" என்றாள்.

வாயடைத்துப் போனாற்போல் அமைதியாகச் சாப்பிட்டாள் லாவண்யா. உண்மையாகவே சுவையாய் இருந்தது என்பதனால், கடைசியாகப் புறப்படும்போது பாராட்டி விட்டும் போனாள்.

அவர்கள் இருவரும் பேசிக் கொள்கையில் அம்மாவும் இளந்திரையனும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

அவள் போனதற்குப் பிறகு செல்லம்மாவும் இளந் திரையனும் கலகலவென்று சிரித்தார்கள்.

"லாவண்யா எல்லார் வாயையும் அடைச்சுடுவா. இன்னைக்கு அவ வாயை அடைக்கறதுக்கும் ஆள் வந்தாச்சு!" என்றான் இளந்திரையன்.

தேனருவி அவனுக்குப் பதில் சொல்லாமல் செல்லம் மாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

செல்லம்மா... "தேனு! உன் சமையலைச் சாப்பிட்டு எனக்கே கோயம்புத்தூர் வந்தர்லாமான்னு ஆசையா இருக்கு!" என்றார்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"வாங்கத்தே! எல்லாரும் ஒண்ணா இருக்கலாம்!" என்றாள் தேனருவி ஆசையாக.

அவள் அன்பாக அப்படி அழைப்பதே மனதுக்கு இதமாக இருக்கிறது என்று மகனிடம் தனியாகப் பாராட்டிக் கொண்டார் செல்லம்மா...

மனநிறைவோடு அன்றைக்கு அவர்கள் அறைக்கு வந்த இளந்திரையன், "தாங்க்ஸ், அருவி! அம்மா ரொம்ப ஹேப்பியா ஃபீல் பண்றாங்க... ரொம்பப் பிரியமா இருக்கியாம்..." என்றான்.

"மனுஷங்க மேலே பிரியமா இருக்கறதுல என்ன குறைஞ்சு போகுது?" என்றாள் இயல்பாக.

"ஹலோ... மறுபடியும் அதைச் சொல்லுங்க..." என்றான் இளந்திரையன்.

"பிரியம்... யார் மேலயும் வைக்கலாம்... உங்க மேலே... அது இல்லேன்னு சொன்னேனா?" என்றாள் முணுமுணுப்பாக.

"அப்பாடா! கல்யாணம்னு ஒண்ணு ஆனதிலேயிருந்து... இன்னைக்குத்தான் ஒரு நல்ல சேதி கிடைச்சிருக்கு..!" என்றான் இளந்திரையன். பெருமூச்சு விடுபவன் போல் நடித்தான்.

அவள் புன்னகையுடன் படுக்கையைத் தட்டிப் போட ஆரம்பித்தாள்.

"ஊருக்குப் போனதும் உங்க ரொட்டீன்... அப்புறம்... புரொகிராம்ஸ் என்னன்னு சொன்னா அதுக்கேற்ப பிளான் பண்ணிக்குவேன்!" என்றாள்.

அவனும் சொல்ல ஆரம்பித்தான்.

★ ★ ★

அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்து தேனருவி வேலைகளை ஆரம்பித்து விடுவாள்.



குளித்து முடித்து யோகா செய்வாள். பிறகு அடுக்களைக்குள் நுழைந்து அவனுக்குத் தேநீர் தயாரித்து எடுத்து வருவாள்.

அவனும் எழுந்து தேநீர் அருந்திச் சற்று நேரம் உடற்பயிற்சி செய்வான். பிறகு குளித்து முடித்துக் காலை உணவருந்தி விட்டுப் புறப்படுவான்.

அவர்கள் அலுவலகம் கோவையிலிருந்து முக்கால் மணி நேரப் பயணத்தில் இருக்கிற மாதிரி வைத்திருந்தான். அங்கிருந்து முக்கால் மணி நேரப் பயணத்துக்குள்ளாக மில்லும், அவர்கள் ஊரும் இருந்தது.

எப்போது விரும்பினாலும் ஊருக்குச் செல்வதற்கேற்ப இப்படி ஒரு ஏற்பாடு செய்திருந்தான்.

ஒரு வாரத்திற்குள்ளாக அவர்களது வேலைகள் ஒரு ஒழுங்குக்குள் வந்தன.

இரண்டு மூன்று முறைகள் மாலை நேரத்தில் தேனருவியின் வீட்டுக்கும் போய் வந்தார்கள். நம்பி தனிமையின் போதும் மிக நாகரீகமான ஒரு தோழனைப் போலவே நடந்து கொண்டான்.

தேனருவிக்கு ஒரு குற்ற மனப்பான்மை ஏற்பட்டு விட்டது என்றே சொல்லலாம்.

ஒரு புதன்கிழமை. நம்பி அலுவலகத்துக்குக் கிளம்பிப் போனதும், அண்ணி பாமாவுக்கு ஃபோன் செய்தாள்.

தங்களுக்குள் இருக்கும் நிலை பற்றிப் பேசினாள். அண்ணி ஒரு விதமாகச் சிரித்தாள்.

"ரொம்ப நாகரீகமா நடக்கறாரேன்னு நம்பிடாதே... அதெல்லாம் ஆரம்பத்துல அப்படித்தான் இருப்பாங்க. அப்புறம்தான் சுயரூபம் தெரியும். ஆனா, எதையும் காட்டிக்காதே. அழுத்தமாவே இரு. கொஞ்ச காலம் போனதும் நிஜமான ரூபம் தெரிஞ்சதுக்கப்புறம் முடிவு கட்டிக்கலாம். ஆனா, என்னைக் காட்டிக் குடுத்துராதம்மா!" என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தேனருவி திகைத்துப் போய் ஃபோனை வைத்தாள். கணவன் பரவாயில்லை, நல்லவன்தான் போலும் என்று லேசாகத் தோன்றிய எண்ணத்தையும் அண்ணியின் பேச்சு முழுமையாக அழித்து விட்டது.

அதே சமயத்தில் தேனருவியின் கோரிக்கையைத் தன் தந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தான் இளந்திரையன்.

விவேகானந்தன் சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

## 8

"அவளே சொன்னாளா?" என்றார் விவேகானந்தன்.

"ஆமாப்பா...!"

"எப்ப...?"

"கல்யாணம் ஆன ரெண்டு நாள்லயே..."

"ஏம்ப்பா... நீ கல்யாணத்துக்கும், இந்த உதவிக்கும் சம்பந்தமே இல்லைன்னு... க்ளீயராச் சொல்லலையா?" என்றார்.

"சொல்லிட்டேம்ப்பா. ஆனா, தேனருவி ரொம்ப சுயமரியாதைக்காரியா இருக்காளே. இந்த உறுத்தலையும் நீக்கிடுறதுதான் எங்க ஃபியூச்சருக்கு நல்லதுன்னு நினைக்கறேன்," என்றான் இளந்திரையன்.

சற்று சிந்தனைக்குப் பிறகு அப்பா ஒத்துக் கொண்டார்.

தன்னுடைய திட்டத்தைச் சொன்னான். அப்பா ஏற்றுக் கொண்டார்.

"சரி... நாங்க இந்தச் சனி ஞாயிறு அங்க வர்றோம். அப்ப முடிவு செஞ்சுக்கலாம்," என்றார்.

அவன் மகிழ்ச்சியானான்.

★★★



"அருவி! இன்னைக்கு அம்மாவும், அப்பாவும் இங்க வர்றாங்க..." என்றான் சனிக்கிழமை காலையில்.

தேனருவி, "அப்படியா?" என்று உற்சாகமானாள். பரபரப்பாகவும், தடபுடலாகவும் ஏற்பாடுகள் செய்தாள். அவர்களுக்கென்று ஒரு அறையைத் தயார் செய்தாள். அந்த அறையில் ஜன்னல் திரைகளை அவள் மாட்டிக் கொண்டிருக்கையில் அவனும் உதவிக்குப் போனான்.

"காலைல நேரத்துலயே இந்த ஏற்பாடுகளையெல்லாம் முடிச்சுட்டோம்னா, சமையலுக்குப் போயிரலாம். நீங்க லீவா...?" என்றாள் ஆர்வமாக.

"ஆமாம்...! அம்மாவும், அப்பாவும் நம்ம கல்யாணத்துக்கப்புறம் முதன் முதலாக நம்ம வீட்ல தங்கறதுக்கு வர்றாங்க இல்லே?" என்றான் புன்னகையுடன்.

"ஆமா... இல்லே...?" என்று அவள் காலைச் சமையலில் இறங்கினாள்.

எட்டு மணி வாக்கில் காரில் வந்து இறங்கினார்கள்.

உற்சாகமாக மாமியாரையும், மாமனாரையும் வரவேற்றாள் தேனருவி.

வீட்டில் அவள் செய்திருந்த மாற்றங்களைப் பார்த்துப் பாராட்டினார்கள். வெகுவாக அழகு படுத்தியிருந்தாள்.

சின்னதாக ஒரு ஃபிளவர் வாஸ், ஆங்காங்கே அழகிய ஓவியங்கள் என்று ரசனை மிக்கவளாய் அவள் செய்திருந்த அலங்காரத்தில் ஆடம்பரம் இல்லை. ஆனால் ஒரு அழகு இருந்தது என்று செல்லம்மா பாராட்டினார்.

காலை உணவுக்குப் பிறகு எல்லாரும் சற்று அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு தேனருவி,

"அத்தை! நான் சமையல் ஆரம்பிக்கிறேன்," என்று எழுந்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''நானும் உதவிக்கு வரேன்,'' என்று எழுந்த மாமியாரை, ''ம்ஹூம்! உங்களுக்கு இன்னைக்கும் நாளைக்கும் கம்ப்ளீட் ரெஸ்ட்...'' என்று தோளைப் பிடித்து அமர்த்தியதை அப்பாவும், மகனும் ஒரு மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் செல்லம்மாள் கொஞ்ச நேரம் கழிந்ததும்,

''நீங்க பேசிக்கிட்டிருங்க...'' என்று கணவனிடம் சொல்லி விட்டுச் சமையலறைக்குப் போய் விட்டார். அங்கே ஒரு சேர் போட்டு அமர்ந்து கொண்டு அவளிடம் பேசிக் கொண்டிருந்தார்.

வேலைக்காரத் தங்கம்மாளிடம் காய்கறி அரிந்து கொடுக்கச் சொல்லிவிட்டு அவள் மைசூர்பாகு கிண்டினாள். சூடாக - சுவையாகத் துண்டுகள் போட்டு உடனே மாமியாருக்கும் கணவனுக்கும், மாமனாருக்கும் கொண்டு போய்க் கொடுத்தாள்.

பிறகு குழம்பு ரசம் என்று தயாரித்துக் கொண்டிருக்கையில் செல்லம்மா மெதுவாக,

''ஏம்மா, வேலைக்குப் போகணும்னு எண்ணம் இருக்காமே?'' என்றார்.

அவள் திரும்பி அவரைப் புன்னகையுடன் பார்த்தாள்.

''ஆமாங்க அத்தை... இங்க எல்லாத்துக்கும் ஆட்கள் துணையிருக்கு. வேலைகளைச் சீக்கிரம் முடிச்சுட்டா... பெரும்பாலான நேரம் சும்மாதான் இருக்கணும்..!'' என்றாள்.

''ஆனா, நம்ம வசதிக்கு நீ வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கணும்ங்கற அவசியம் ஒண்ணும் இல்லையே!'' என்றார்.

அவள் மௌனமாகி விட்டாள். செல்லம்மாவே தொடர்ந்து, ''மனசுல என்ன இருக்குன்னு தைரியமா சொல்லுமா. நான் தப்பா எடுத்துக்க மாட்டேன்,'' என்றார்.



அவள் சமையல் மேடையில் மும்முரமாக வேலை செய்பவள் போன்ற பாவத்துடன், ''அத்தே... தப்பா நினைக்கக் கூடாது. ஆணானாலும், பெண்ணானாலும் எல்லாரும் ஒரு அளவுக்குத் தனி மனிதர்களும் கூடத்தான். எனக்குன்னு சில கமிட்மென்ட்ஸ் இருக்கு... அப்புறம்...'' என்று நிறுத்தினாள்.

''ம்... சொல்லும்மா...'' என்றார் செல்லம்மா, ஆழ்ந்த பார்வையுடன்.

''சொத்து சம்பாதித்து வச்சது நீங்க. அதுக்காக நாங்க... இந்தத் தலைமுறை சோம்பேறியா இருந்து அதை அனுபவிக்கணுமா.. என்ன? எல்லாருக்கும் கடமைகள் இருக்கு. அத்தை, சொல்றேன்னு... தப்பா... நினைக்காதீங்க... உழைப்பில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையே இல்லைன்னு நினைக்கிறேன்...'' என்றாள். பிறகு அதிகம் பேசி விட்டோமோ என்பது போல் நிறுத்தி விட்டாள்.

தயக்கத்துடன் திரும்பி அத்தையைப் பார்த்தாள். அத்தை ஒரு ஆழ்ந்த பார்வையுடன் பார்க்கவும் பயந்து விட்டாள். சட்டென்று அத்தை சிரித்து விட்டார்.

எழுந்து அவளைக் கட்டிக் கொண்டார். ''நம்பியும் இதே மாதிரித்தான் பேசுவான்!'' என்று சிரித்தார்.

''சரி. உனக்கென்ன, இப்ப உழைக்கணும்... உனக்குன்னு ஒரு சம்பாத்தியம் இருக்கணும்... அவ்வளவுதானே... வழி செய்வோம்...'' என்றார்.

அன்று பிற்பகலில் தங்கள் அறையில் வைத்து மகனிடம் செல்லம்மா இதைச் சொன்னபோது இளந்திரையன் பெருமிதமாக உணர்ந்தான்.

''ஆமாம்மா... இதெல்லாம்தான் அவகிட்டே எனக்குப் பிடிச்சதே. சாதாரணப் பெண்கள் மாதிரி நகை, புடவை இதெல்லாம் பாத்து வாயைப் பிளக்கறதில்லே. அலட்சியமாப்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பாக்கறா..." என்று கபகபவென்று சிரித்தான். "ஆனா..." என்று சற்று முகம் வாடினான்.

"என்னப்பா...?" என்றார் செல்லம்மா.

"இல்லே... உன்கிட்டே இவ்வளவு பழகறா. பேசறா. என்கிட்டே பேசவே மாட்டேங்கறா..." என்றான் ஆற்றாமையுடன்.

செல்லம்மா புன்னகைத்தார். "கொஞ்சம் டைம் குடுப்பா. நம்ம ஸ்டேட்டஸ் வேற... அவங்க ஸ்டேட்டஸ் வேற. அதனால் கொஞ்சம் பயப்படறா. எங்கே பணத்துக்குப் பணிஞ்சிட்டான்னு நாம நெனச்சுடுவமோன்னு... ரொம்பத் தயங்கறா... விட்டுப் பிடிப்பா..." என்றார்.

"அப்படித்தாம்மா... நானும் முடிவு செஞ்சிருக்கேன்," என்றான். மகனும், பெற்றோரும் சற்று நேரம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

★ ★ ★

**மா**லை ஐந்து மணி!

"தேனு...!" என்று செல்லம்மா அழைக்கவும் அவசரமாகப் போனாள்.

ரொம்ப நாள் கழிச்சு டைம் கிடைச்சிருக்கு என்று இளந்திரையன் ஒரு தூக்கம் போட்டுக் கொண்டிருந்தான்.

"தேனு...! புறப்படு. ஐந்தரை மணிக்கு நாம ஒரு இடத்துக்குப் போறோம்..." என்றார்.

"அவரு... தூங்கறாரே...!" என்றாள்.

"அவன்தானே... அவன் அஞ்சரை மணிக்கு ரெடியாய் நிப்பான் பாரு..." என்றார் செல்லம்மா. அவர் சொன்னது போலவே அவள் திரும்பி வந்து பார்ப்பதற்குள்ளாக அவன் விழித்திருந்தான்.



"என்ன பாக்கறே! எல்லாம் பிராக்டீஸ்தான். எத்தனை மணிக்கு முழிக்கணும்னு நெனச்சுட்டுப் படுக்கறனோ... அத்தனை மணிக்கு முழிப்பேன்!" என்றான்.

அவள் அழுத்தமாகத் தலையாட்டிக் கொண்டாள்.

அவர்கள் பங்களாவிற்குப் பக்கத்து சைட்டிற்கு அழைத்துப் போனார்கள். அந்த சைட்டில் முன் பகுதியில் ஒரு அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது. பின் பகுதி காலியாக இருந்தது.

அந்த இடமும் விற்பனைக்குக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

அலுவலகம் பார்த்தார்கள். பழைய பாணியில் இருந்தது. ஆனால் கட்டடம் உறுதியாய் இருந்தது. என்ன ஐடியாவில் இருக்கிறார்கள் என்று புரியாமல் தேனருவி பார்க்கவும்,

"இடம் நல்லாயிருக்கா... பாரும்மா..." என்றார்கள்.

"நல்லாயிருக்கு..." என்றாள் தயக்கத்துடன். பிறகுதான் விஷயத்தைச் சொன்னார் விவேகானந்தன்.

"இல்லம்மா. உனக்கும் வேலைக்குப் போகணும்னு எண்ணம் இருக்காம். நம்ம வீட்டுப் பொண்ணு எதுக்கு வெளியில வேலைக்குப் போகணும். நமக்கே நம்பிக்கையான ஆள் தேவையிருக்கு. அதான் அவிநாசிகிட்டே இருக்கற ஆபீசை... இங்க கொண்டு வந்துட்டா, நீ ஆபீஸ் வொர்க் பாத்தேன்னா... அவன் பேப்பர் மில்லுல இன்னும் கொஞ்சம் கான்ஸன்ட்ரேட் செய்யலாமே!" என்றார்.

"ஓ...!" என்றாள் ஒரு கணம் திகைப்புடன். பிறகு மகிழ்ச்சியானாள்.

திட்டமிடுவதில் ஆர்வமாகப் பங்கேற்றாள்.

ஒரே வாரத்தில்...!

அந்த அலுவலகம் அவர்கள் கைக்கு வந்து சேர்ந்தபோது அதைச் சீரமைப்பதில் அழகு படுத்துவதில் வெகுவாகப்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பங்கேற்றாள். உள்ளே புதிதாகப் பெயின்ட் அடித்தார்கள். காபின்கள் அமைத்தார்கள்.

இளந்திரையனுக்கு ஒரு பெரிய காபினும் அதைத் தொட்டாற் போல் ஓரளவு பெரியதாக அவளுக்கு ஒரு காபினும் ஒதுக்கினார்கள். அவளுக்கு ஜி.எம். என்று ஒரு பொறுப்புக் கொடுத்தார்கள்.

ஒரு மாதம் அவனே பயிற்சி கொடுப்பதாக ஏற்பாடு.

அதற்குப் பிறகு அவர்களுக்கு வாழ்க்கை வேகம் பிடித்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

அதிகாலை வழக்கம் போல் எழுந்து சமையல் வேலைகளை மேற்பார்வை செய்து முடிப்பாள். இளந்திரையன் ஒன்பதரை மணிக்கே அலுவலகம் போய் விடுவான். அவள் சற்றுப் பின்னதாகப் பத்து மணிக்கு அலுவலகம் செல்வாள்.

அவள் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி அவளுக்குச் சொல்லி விட்டு அவன் வாரத்தில் மூன்று நாட்கள் மில்லைப் பார்க்கச் சென்று விடுவான். மற்ற மூன்று நாட்கள் அப்பா மில்லுக்கு வந்து விடுவார்.

ஞாயிற்றுக் கிழமை விடுமுறை. பெரும்பாலும் சனிக் கிழமைகளில் அப்பாவே மில்லைப் பார்த்துக் கொள்வார். சனிக்கிழமை பிற்பகலிலும் இளந்திரையனும், தேனருவியும் வீட்டுக்கு வந்து விடுவார்கள்.

மாதத்தில் இரண்டு சனிக் கிழமைகள் தேனருவியின் வீட்டுக்குச் செல்வார்கள். ஒரு வாரம் அவன் கிராமத்துக்குச் செல்வார்கள். ஒரு வாரம் தங்கள் வீட்டிலேயே செலவழிப் பார்கள்.

அலுவலகத்தில் மற்றவர்களிடம் குறிப்பிடும் போது பாஸ் என்று குறிப்பிடுவாள். தங்கள் தனிமையான நேரத்தில் இருப்பதை விட அலுவலக நேரத்தில் அவள் இயல்பாக



இருப்பதை உணர்ந்ததாலோ என்னவோ, அவனும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவளுடன் அலுவலகத்தில் இருப்பதை விரும்பினான்.

காகித ஆலையில் பெரிய ஒரு அலுவலகம் இயங்கி வந்தது. அங்கே அனுபவமும், திறமையும் மிக்க ஒருவரை ஜி.எம்மாகப் போட்டிருந்தார்கள். ஏதாவது சந்தேகங்கள் கேட்பதென்றால் அவரிடம் கூடக் கேட்டுக் கொள்வாள் தேனருவி.

ஒரு மாதம் வேகமாக ஓடியது. அன்றைக்கு அலுவலகத்தில் எல்லாருக்கும் சம்பளம் கொடுத்தார்கள். இந்த அலுவலகத்தில் பத்துப் பேர் வேலை செய்தார்கள். சிட்டி ஆபீஸ் என்று அதை அழைத்தார்கள்.

காபினில் கம்ப்யூட்டரில் ஏதோ ஒரு முக்கியமான கணக்கு வழக்கில் அவள் ஆழ்ந்திருந்தபோது இன்டர்காமில் இளந்திரையன் அழைத்தான். அவள் பரபரப்பாக எழுந்து போனாள்.

அவன் எழுந்து நின்று அவளது சம்பள செக்கை நீட்டினான்.

''நம்ம ஆபீஸ்ல உங்க முதல் சம்பளம், மேடம்!'' என்று நீட்டினான்.

அவள் புன்னகையுடன் வாங்கிக் கொண்டாள். தாங்க்ஸ் பாஸ் என்றாள்.

★ ★ ★

நிலவொளி பனிபோலப் படர்ந்திருக்க, தோட்டம் பார்க்க அழகாக இருந்தது.

ஆட்களிடம் வேலை வாங்குவதில் தேனருவிக்கு ஒரு தனித் திறமை இருந்ததை அவன் கண்டு கொண்டிருந்தான்.

''இதைக் கொஞ்சம் முடிச்சர்றீங்களா! ரெண்டு மணி நேரத்திலே முடிச்சிட்டீங்கன்னா... நல்லா இருக்கும்...'' என்று

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இதமாக வேலை வாங்கி விடுகிறாள் என்று நினைத்ததும் அவன் மனதில் புன்னகை பொங்கியது.

இரவு உணவு முடித்ததும் அவன் மேலே வந்து விட்டான். இன்னமும் அவள் மேலே வரவில்லை.

அடுத்த நாளைக்கான மெனுவைச் சொல்லிவிட்டு என் னென்ன தயாராய் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு வருவாள்.

ஒரு தலைமைச் சமையற்காரரைப் போல அவள் களத்தில் புகுந்தால் முக்கால் மணி நேரத்தில் சமையல் முடித்து வெளியே வருவாள். பகலுணவு நேரங்களில் அவனுக்கு முன்னதாக வீட்டுக்கு வந்து விடுவாள். அவன் வருவதற்குள் சூடாக உணவு தயாராக இருக்கும்.

அவன் வந்து உணவருந்திவிட்டுச் சற்று ஓய்வெடுப்பான். உடனடியாகப் படுக்கக் கூடாது என்பாள். அதனால் சற்று ஏதாவது செய்திகள் பார்ப்பான். பிறகு அரை மணி நேரம் உறங்குவான். அதற்குள் அவள் அலுவலகம் போய் விடுவாள். மாலையில் இருவரும் சேர்ந்து வருவார்கள்.

சில நாட்களில் அவன் மில்லிலிருந்து வருவதற்கு நேரமாகும். அந்த நேரங்களில் அவள் அலுவலகத்தினரை அனுப்பி விட்டுக் காத்திருப்பாள். அந்த நேரத்தையும் கூட ஏதாவது படிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்வாள்.

புதிதாக மேலாண்மை தொடர்பான புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்திருந்தாள். அவனிடமும் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொள்வாள்.

இதெல்லாம் மனதில் தோன்ற, அவன் மனைவிக்காகக் காத்திருந்தான். அவளும் மேலே வந்தாள்.

அறை வாசலில் தயங்கி நின்றாள்.

''நம்பி!'' என்றாள். அவன் திரும்பினான். ''வா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன்,'' என்றான்.



''அவன் சோபாவை நோக்கி வந்தான். அதற்குள்ளாகவே அவள் கவரை அவனிடம் நீட்டினாள்.

இருவரும் சிரித்து விட்டார்கள். அவன், ''நீ... முதல்ல... வாங்கு...'' என்று கொடுத்தான். வாங்கிக் கொண்டாள். பின் தன்னுடைய சம்பளத்தை நீட்டினாள். அவனும் வாங்கிக் கொண்டான்.

''சாமிகிட்ட...'' என்று இழுத்தாள்.

''ஓ...! அது வேறயா...?'' என்று எழுந்து உடன் வந்தான்.

இரண்டு கவரையும் வைத்தார்கள். பிறகு அவளே எடுத்து அவன் கையில் வைக்க, அறைக்கு வந்தார்கள்.

''வீட்டுப் பராமரிப்புச் செலவெல்லாம் ஊர்ல இருந்து வந்துடும். பெரும்பாலான வீட்டுச் சாமான்கள் ஊரில் இருந்து வந்துடும். இங்க நம்ம செலவு, வேலையாட்கள் செலவு இதெல்லாம்தான்,'' என்று விளக்கினான்.

எப்படிக் கணக்கு வழக்கு வைப்பது என்றும் சொன்னான்.

அவள் சம்பளக் கவரைப் பிரித்தார்கள். இருபதாயிரம் ரூபாய் இருந்தது.

திகைத்துப் போனாள்.

''இவ்வளவா...?'' என்றாள்.

''ஆமாம். நம்ம மில்லுல இருக்கற ஆபீஸ் ஜி.எம்முக்குச் சம்பளம்... முப்பத்தைந்தாயிரம். நீ ஜூனியர். அதனால உனக்கு கம்மி...'' என்றான்.

''சரி...! என்ன பிளான்?'' என்றான். அவள் சட்டென்று பத்தாயிரத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். மறுபடியும் ஒரு எட்டாயிரம்...'' இது கடனுக்குத் திருப்பித் தரும் தொகை!'' என்றாள்.

''அது என்ன எட்டாயிரம்?'' என்றான். ''ஆமா... பன்னிரண்டு மாசத்துல தொண்ணூற்று ஆறாயிரம் ஆயிடும்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அப்புறம் ஒரு நாலாயிரம் கட்டினா... ரெண்டு வருஷத்துல கடன் அடைஞ்சிடும்..." என்றாள்.

"அட்ரா... சக்கை!" என்று சிரித்தான். "அந்தப் பத்தாயிரம்?" என்றான்.

"அது வீட்டுப் பொதுவான செலவுக்கு..." என்றாள். பிறகு இரண்டாயிரத்தையும் நீட்டினாள்.

"இது...?" என்றான்.

"இது உங்களுக்கு..." என்றாள். அவன் கலகலவென்று சிரித்தான். ஆனால் மறுக்கவில்லை. தாங்க்ஸ் என்றான். அவன் அதை ஒரு கவரில் பத்திரப்படுத்துவதை அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதற்குப் பிறகு அவன் சம்பளத்தைப் பிரித்தார்கள். நாற்பதாயிரம் இருந்தது. அதில் இருபதாயிரத்தை எடுத்து வீட்டுப் பொதுச் செலவுக்கு என்றான்.

"பத்தாயிரத்தை எடுத்து உங்க வீட்டுக்கும், எங்க வீட்டுக்கும் ஏதாவது செய்ய!" என்றான். மீதி இருந்த பத்தாயிரத்தில் ஐந்தாயிரத்தைக் கையில் கொடுத்தான்.

"இது உனக்கு... இதுக்கு நான் கணக்குக் கேட்க மாட்டேன்... அதே போல.. இந்த ஐந்தாயிரத்துக்கும்... நீ கணக்குக் கேட்கக் கூடாது..." என்றான்.

"சரி...!" என்றாள். ஆனால் தொடர்ந்து கேள்விக் குறியாய்ப் பார்க்க.

"கவலைப்படாதே, கண்மணி! எந்த பேட் ஹாபிட்ஸும் என்கிட்டே கிடையாது..." என்று இரண்டு கைகளையும் அகல விரித்துச் சிரித்தான்.

"அப்புறம்... இந்தப் பொதுக் கணக்கு முப்பதாயிரத்துக்கும் கணக்கு வைக்கணும், சரியா?" என்றான்.



காருக்குப் பெட்ரோல், டிரைவர் செலவு கம்பெனிக் கணக்கில் போய்விடும் என்றான். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்ததற்குப் பிறகு அவள் பணக்காரங்களா இருக்கறதும் கஷ்டம்தான் போல இருக்கு... என்று முணுமுணுக்கவும் மறுபடியும் சிரித்தான்.

"ரொம்பக் கஷ்டம்... தெரியுமா? போகப் போகப் புரிஞ்சுக்குவே. ஆனா, எல்லாரும் கடமையைக் கரெக்டா செஞ்சா.. மேனேஜ் பண்ணிரலாம். பணம் பொறுப்பைக் குடுத்தா நல்லது. பொறுப்பின்மையைக் குடுத்தா... கஷ்டம்தான்!" என்றான்.

அவள் தன் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்று சுட்டிக் காட்டுகிறானோ என்று தோன்றியது.

"சரி... தூங்கலாமா?" என்று எழுந்தபோது அவள் தயங்கி நின்றாள்.

அவன் 'என்ன?' என்பது போல் பார்க்க.. "இல்லே! எல்லாரும் கடமையைக் கரெக்டா செய்யணும்னு சொன்னீங்களே...?" என்று முணுமுணுத்தாள்.

அவன் கண்கள் ஒரு கணம் சுருங்கின. பின் அந்தக் கண்களிலே ஒரு சிரிப்பு மலர்ந்தது, ஆழமான பார்வையுடன்.

"கடமையைச் செய்யணும்னு சொன்னேன். கடமைக்காக எதுவும் செய்யணும்னு சொல்லலையே, கண்மணி!" என்று அவள் கன்னத்தைத் தன் ஒற்றை விரலால் ஒருமுறை தட்டி விட்டுப் புன்சிரிப்புடன் அறைக்குப் போய் விட்டான்.

அவளும் ஒரு விதமான திகைப்புடன் தன் அறைக்குப் போனாள்.

★ ★ ★

அரை மணி நேரம் போயிருக்கும்!

இளந்திரையன் கலகலவென்று சிரிக்கிற ஓசை கேட்டு வியப்புடன் தன் அறையிலிருந்து எழுந்து வந்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

எட்டிப் பார்த்தாள்.

"அம்மா... என் வைஃப் எனக்கு ரெண்டாயிரம் ரூபா குடுத்திருக்காம்மா... அப்புறம்... சந்தோஷமா சிரிக்காம என்ன செய்வேனாம்?" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

இடக் காதில் செல்போனை வைத்தபடி, வலக்கரத்தில் அவள் கொடுத்த கவரை வைத்துக் கொண்டிருந்தான்.

அவள் நகர்ந்தால் தெரிந்து விடும் என்ற நிலையில் மாட்டிக் கொண்டதால் அசையாமல் நின்றாள். அவன் மெதுவாக நடந்து கொண்டே பேசினான்.

"அம்மா... என்னம்மா... என் பொண்டாட்டி நம்ம ஆபீஸ்ல வேலை செஞ்சு சம்பளம் வாங்கி எனக்கே குடுக்கறது எவ்வளவு சந்தோஷம்மா... எவ்வளவு... சுகம் தெரியுமா?" என்று சிரித்தான்.

தேனருவியின் முகம் சிவந்தது. அம்மா அந்தப் பக்கம் என்ன சொன்னாரோ, மீண்டும் சிரித்தான். செல்லை ஆஃப் செய்து விட்டு அந்தக் கவர் மீது தன் இதழ்களைப் பதித்தான்.

விசிலடித்துக் கொண்டே அவன் அந்தப்புறம் நகர்ந்ததைப் புரிந்தும் புரியாமலும் பார்த்துக் கொண்டிருந்தாள் தேனருவி.

9

"ஹேய்! தேனருவி... உனக்குப் பிடிச்சதா ஒரு விஷயம் சொல்லட்டுமா..." என்று உற்சாகமாய் வந்தான் இளந்திரையன்.

அவள் மௌனமாய் நின்றாள்.

"இன்னும் பத்து நாள்லே நம்ம ஊருல இலக்கிய விழா ஒண்ணு நடக்குது. ஸ்பான்ஸர்ஸ் யாரு தெரியுமா? நாமதான்.. ரொம்பக் காலமா நடக்குது. போறோம். சரியா?" என்றான்.

"ம்...!" என்றாள் உற்சாகமாக.



ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விஷயத்தின் போதும் அவள் உற்சாகமாக ஆரம்பிப்பதும் சற்றே நெருங்கி வருவது போல் தோன்றுவதும் பிறகு மீண்டும் கூட்டுக்குள் அடங்கி விடுவதுமாக இருக்கிறாளே, ஏன் என்ற சிந்தனை அவனுக்குள் ஓடிக் கொண்டிருந்ததை அவள் அறியவில்லை.

சென்ற முறை ஆர்வமாக அவனுக்குப் பரிசு கொடுத்தாள். அடுத்த நாள் மாலை வந்து,

"என்னங்க..." என்று நின்றாள்.

"என்னங்க...?" என்றான் அவனும் குறும்பாக. "இல்லே! கொஞ்சம் ஷாப்பிங் போகணும்..." என்றாள்.

"என்னடா... ஆச்சரியம்... தேனருவி தேவியார்... ஷாப்பிங்... போறாங்களாம். புடவை வாங்கமாட்டே. நகை வாங்க மாட்டே. அப்புறம் என்ன பாசி மணி ஊசியா வாங்கப் போறே!" என்றான் சிரித்தபடி.

அவள் அதைக் கண்டு கொள்ளாதவள் போல், "உங்க பேரண்ட்ஸுக்கும் எங்க பேரண்ட்ஸுக்கும் நம்ம கம்பெனியிலேயிருந்து கிடைச்ச... என்னோட சம்பளத்திலே இருந்து டிரஸ் எடுத்துக் கொடுக்கணும்..." என்றாள்.

அதைக் கேட்டதும் அவன் ஒரு நிமிடம் நெகிழ்ந்து விட்டான் போலும் கிண்டலை நிறுத்தி விட்டான். உடன் வந்தான். துணிமணிகள் தேர்ந்தெடுத்துக் கொடுத்தான். அவளுடைய ஐந்தாயிரத்தில் மூன்றாயிரம் ரூபாயை இதற்கே செலவழித்து விட்டாள். மீதி இரண்டாயிரம்தான் இருந்தது.

"போதுமா? இந்த அமௌண்ட்?" என்றான் இளந்திரையன். "போதுமாவா? ரொம்ப அதிகம். எனக்குன்னு என்ன தனியா தேவை இருக்கு. அது மட்டுமில்லே... அப்பாவுக்கு உடம்பு சரியில்லாமப் போனதிலேயிருந்து இந்த இரண்டாயிரம் ரூபாக்குள்ளே வீட்டு மளிகையே முடிச்சுடுவேன் தெரியுமா?" என்று அவள் யதார்த்தமாகச்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சொன்ன போது அவன் மீண்டும் அமைதியில் ஆழ்ந்து விட்டான். உள்ளம் நெக்குருகி விட்டான். இந்தப் பெண் நிறையப் பணத்துக்காகக் கஷ்டப்பட்டிருக்கிறாள், அதனால் தான் தன் பணத்தைக் கண்டு பயப்படுகிறாள் என்று எண்ணிக் கொண்டான்.

அன்றைக்கு வெளியே சாப்பிட்டு விட்டு வந்தார்கள். வீட்டுக்கு வந்து குட்நைட் சொல்லி அவரவர் அறைக்குப் போகுமுன் முதல் முறையாக அவள் கையைப் பிடித்து நிறுத்தினான்.

"ஹேய், தேனருவி! பணத்துக்காகக் கஷ்டப்பட்ட காலமெல்லாம் முடிஞ்சு போச்சு. புரியுதா? இனிமே யு ஷுட் ஃபீல் ஹாப்பி. அது மட்டுமில்லே... எது வேண்ணாலும் நீ இனிமே என்கிட்டே கேக்கணும், தெரியுதா? நீ என்கிட்டே கேக்கறதுக்கும் நான் வாங்கிக் குடுக்கறதுக்கும் உண்டான உரிமையை இது குடுத்திருக்கு... யு அன்டர்ஸ்டாண்ட்!" என்று அவள் கழுத்தில் இருந்த தாலியை எடுத்துக் காட்டினான்.

அவள் விக்கித்துப் போய் நின்றாள்.

அவன் குறும்பாகக் கண் சிமிட்டியபடி, "இன்னும்... என்னென்னவோ.. உரிமையும் கூடத்தான்... இருக்கு... ஆனா, அதெல்லாம் நீயாப் புரிஞ்சுக்கறவரைக்கும்... தொல்லை பண்ண மாட்டேன். உன் மனசுல ஏதோ குழப்பம் இருக்கு. சீக்கிரம் வெளியே வா. என்ன?" என்று ஒரு முறை அவளது மணிக்கட்டை அழுத்திக் கொடுத்து விட்டுப் போனான்.

தேனருவி செய்வதறியாமல் யோசிக்கவும் பயந்தவள் போல் தன்னறைக்குப் போய்க் கட்டிலில் வெகு நேரம் அமர்ந்து விட்டாள்.

மறுநாள்...!

அண்ணியிடம் அவன் சொன்னதையெல்லாம் பகிர்ந்து கொண்டாள்.



அந்தப்புறம் அண்ணி எல்லாவற்றையும் துளைத்துத் துளைத்துக் கேட்டு விட்டு,

"அடி போடி! இப்படித்தான் ஆரம்பித்துக் குழையடிப்பானுக! அப்புறம் நாம அவங்களைக் கெஞ்சிட்டு நிக்கணும். எப்படியும் ஒரு நாளைக்குப் பணிஞ்சுதான் ஆகணும்... முடிஞ்ச வரைக்கும் நிமிர்ந்து நில்லு...! எல்லா ஆம்பளைகளும்... வேஷக்காரங்கதான்... நாமதான் கிரிப்ல இருக்கணும்!" என்றாள்.

இதுவரையில் இளந்திரையன்பால் சற்றே ஏற்பட்ட பரிவுணர்ச்சி கூட அவளுக்கு மாறிப் போனது. மனதைக் கல்லாக்கிக் கொண்டாள்.

இதையெல்லாம் அவன் சற்றும் புரிந்து கொள்ளவில்லை.

தொடர்ந்து வரப்போகிற இலக்கிய விழாவைப் பற்றி விரிவாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

★ ★ ★

அந்த நாளும் வந்தது.

வெள்ளிக் கிழமையன்று மாலை ஒரு கவியரங்கம். சனிக்கிழமை காலை ஒரு கருத்தரங்கம். சனிக்கிழமை மாலை ஒரு பட்டிமன்றம் என்று திட்டமிட்டிருந்தார்கள்.

தேனருவியும், இளந்திரையனும் வெள்ளிக் கிழமை காலையே போய் விட்டார்கள். விழா ஏற்பாடு, மேடை அலங்காரம் என்று எல்லாவற்றிலுமே அவள் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்டாள்.

மெதுவாகவும், தயக்கமாகவும், "ஏங்க மாமா, இதை இப்படிச் செஞ்சா நல்லாருக்குமில்ல... ஏங்கத்தை... இதை இப்படி அரேன்ஜ் செய்யலாமா?" என்று அவள் சொன்ன யோசனைகளுக்கெல்லாம் கிடைத்த மரியாதை பார்த்து அவளுக்கே திகிலாகிப் போய்விட்டது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அந்தக் கிராமத்தில் மில்லுக்காரர் வீட்டுச் சின்னம்மா என்று அவளுக்குப் பெருத்த மரியாதை கொடுத்தார்கள்.

உறவுக்காரப் பெண்களில் வயதான ஒரு பெண்மணி, "ஏன்டா.. நம்பி.. நம்ம ஊர்ல இல்லாத பொண்ணுன்னு எங்க போய் இப்படி ஒரு பொண்ணைப் புடிச்சுப் போட்டான்னு நான்கூட நெனச்சன்டா. பரவால்லைடா உன்ற ஆளு!" என்று அவன் வாயைக் கிளற,

"ஆத்தோவ்! என்னொ புடிச்சுப் போட்டேன், ஆளு கீளுன்னெல்லாம் பேசறே... என்ற மனைவி, வைஃப்... ஊரறியக் கல்யாணம் பண்ணிட்டு வந்திருக்கிற... மில்லுக்காரர் வீட்டு மருமக... தெரிஞ்சுக்க..." என்று பாதி விளையாட்டாகவும் பாதி உண்மையாகவும் பதில் கொடுத்தான் இளந்திரையன்.

"அப்படியே மில்லுக்கார மாமனோட கட் அண்ட் ரைட்டு பேச்சு!" என்று சிரித்து விட்டுப் போனார் அந்தப் பெண்மணி.

அவர்கள் பேசிக் கொள்கிற அந்தக் கொங்கு நாட்டு வட்டார மொழி அவளுக்கும் கூட ஆர்வத்தை ஏற்படுத்தியது.

மாலைக் கவியரங்கத்தை வெகு ஆர்வமாகக் கவனித்தாள். அன்றிரவு இலக்கியவாதிகளுக்கு மாமனார் ஒரு விருந்து அளித்தார். அனைவரையும் நின்று உபசரித்தார்கள்.

வந்திருந்தவர்களில் நடுவராக இருந்த பெண்மணி அவர்களுக்கு வெகுநாள் பழக்கமாம். அன்றிரவு அவர்கள் வீட்டிலேயே தங்கினார்கள்.

ஒவ்வொரு ஊரிலும் அவர்களுக்கு நேர்ந்த அனுபவங்கள் பற்றியெல்லாம் சுவாரசியமாகச் சொன்னார்கள். தேனருவி வெகு இயல்பாக விமர்சனம் செய்வதையும், இலக்கியம் பேசுவதையும் மாமனாரிடம் வரலாற்றுச் செய்திகளைக் கேட்டு அறிந்து கொள்வதையும் அவளறியாத வண்ணம் அவன் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.



மறுநாள் நடைபெற இருந்த பட்டிமன்றத்துக்கு அந்தப் பெண்மணியே தலைமை தாங்குவதாக இருந்தது. பெண்களுக்குப் பிறந்த வீட்டுப் பாசம் அதிகமா, புகுந்த வீட்டுப் பாசம் அதிகமா என்பதை இலக்கிய ரீதியாக ஆராய்கிற மாதிரி ஒரு தலைப்புக் கொடுத்திருந்தார்கள்.

அந்தப் பெண்மணியிடம் வேடிக்கையாகச் சற்று நேரம் வாதம் செய்து கொண்டிருந்தாள் தேனருவி. அப்போது சொன்னாள்: "அம்மா... இப்பக் கம்பராமாயணத்தையே எடுத்துக்கங்களேன். இராமனுக்குப் பட்டாபிஷேகம்னு சொன்னவுடனே கைகேயி கூனிக்குப் பரிசு கொடுக்கறா... ஆனா, கொஞ்ச நேரத்துல ஆளே மாறிப் போறா... ஏன்னு சொல்லுங்க..." என்றாள் புன்சிரிப்புடன்.

"நீயே சொல்லும்மா..." என்றார் அவரும் அதே புன் சிரிப்புடன்.

"ஏன்னா, இராமன் அரசனாயிட்டா... நீயும் உன் மகன் பரதனும் நாளைக்கு எதுக்குமே கௌசலைகிட்டே கையேந்தணும். அது மட்டுமில்லே. உன் பிறந்த வீட்டுக்கு எந்த மரியாதையும் இருக்காதுன்னு சொல்றா. அந்தப் பாயிண்ட்லதான் கைகேயி அடியோட மாறிப் போறா..." என்றாள்.

"வெரிகுட்... வெரிகுட்..." என்று பாராட்டினார் அவர். "உன்கிட்டே நிறைய விஷயம் இருக்குது போல இருக்கு..." என்றார்.

"என்கிட்டே இல்லைங்கம்மா. நம்ம லிட்ரேச்சர்ல நிறைய இருக்கு..." என்றாள். தொடர்ந்து, "ஆனா, தசரதன் செஞ்சது துரோகம்தான். கைகேயியைக் கல்யாணம் செய்யும் போதே பட்டம் அவள் மகனுக்குத்தான்னு வாக்குறுதி கொடுத்திருக்காரு... தெரியுமா?" என்று வெகு ஆர்வமாக இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

மிகவும் மகிழ்ச்சியாகத் தேனருவியின் மாமனாரிடம் அவர் பாராட்ட, அவரும் சிரித்துக் கொண்டே, "தேனருவிக்கு... இவ்வளவு இலக்கிய ஆர்வம் இருக்குங்கறதே... இன்றைக்குத்தான் எங்களுக்கே தெரியும்!" என்றார் பெருமையாக. அப்போது, "மாமா! நம்ம தமிழ்ல சொல்லப்படாத விஷயங்களே... இல்லை. இவ்வளவு ஒரு மெச்சூரிட்டியை நாம வேற எங்கயும் பார்க்க முடியாது. ஆனா, தமிழ் ஆர்வலர்கள் கிட்டேதான் போட்டி மனப்பான்மை இருக்கு. அதனால, தமிழ்லே வெளிவர வேண்டிய விஷயங்கள் எல்லாம் இன்னும் வெளிய வராம இருக்கு..." என்றாள்.

"உதாரணமா?" என்றார் ரங்கநாயகி.

"இல்லைங்கம்மா... பாருங்க... ஒரே ஒரு திருக்குறள்.

வெள்ளத் தனையது மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

இதுக்கு மேலே அழகா பாஸிடிவ் திங்கிங் பத்தி எப்படிச் சொல்ல முடியும்? எத்தனை செல்ஃபீப் இம்ப்ரூவ்மென்ட் புத்தகங்கள் வந்தாலும் அதெல்லாம் இதுக்குள்ளே அடக்கம்..." என்றாள்.

ரங்கநாயகி கைகொட்டி ரசித்துச் சிரித்தார். "நல்ல பொண்ணும்மா... நீ!" என்றார். வெகு நேரம் பேசி மனசில்லாமல் உறங்கப் போனார்கள்.

★ ★ ★

பட்டுப் புடவை போல் தோற்றமளிக்கிற ஆனால் கைத்தறிப் புடவை அணிந்து கொண்டு அவள் நடமாடியதும், பின்னணியில் இருந்து விழா நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தியதும் ஆக, இளந்திரையனின் பங்காளிக் குடும்பத்தினருக்கு அவள் மேல் மரியாதையை ஏற்படுத்தியது.

தேனருவியின் குடும்பத்தினரும் எல்லாரும் கோவையில் இருந்து வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாரும் சனிக்கிழமை



இரவே புறப்பட்டார்கள். தேனருவியும் இளந்திரையனும் மட்டும் மறுநாள் மாலை புறப்பட்டார்கள்.

சனிக்கிழமை இரவு அனைவரையும் வழியனுப்பி வீடு வந்து சேரப் பதினோரு மணியாகி விட்டது. தனிமை கிடைத்தவுடன் என்றைக்கும் இல்லாத வழக்கமாக இன்று இளந்திரையனின் பார்வை அவளைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

வேறு வழியில்லாமல் ஒரே அறையில் வேறு தங்க வேண்டியிருந்தது.

"ஹேய்! என்ன இந்தப் போடு போடறே! ரங்கநாயகிம்மா அப்பாகிட்டே உன்னை அப்படிப் புகழ்ந்துட்டுப் போறாங்க..." என்றான் கண்கள் மின்ன.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாள். "அப்பாவுக்கு இலக்கியத்திலே ரொம்ப ஆர்வம். அடிக்கடி நானும் அவரும் டிஸ்கஸ் செய்வோம்," என்றாள்.

"ஓ...!" என்றான். வெடிச் சிரிப்பு சிரித்தான். "உங்க தமிழ் இலக்கியத்துலதான் காதலுக்கு ரொம்ப முக்கியத்துவம் உண்டாமே?"

"எங்க தமிழ் இலக்கியம்... இல்லே. நம்ம தமிழ் இலக்கியத்துல..." என்றாள்.

"பாயின்ட் அதில்லை. நான் கேட்ட விஷயம்... வேற. இவ்வளவு புரிஞ்ச உனக்கு... அது புரியலையாக்கும்!" என்று கிறக்கமாகப் பேசியபடி நெருங்கி நின்றான்.

இடக்கையால் வளைத்துத் தன்னருகில் கொண்டு வந்தான். கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டாள் தேனருவி. அவளுக்குள் அந்தக் குரல் பெரியதாக ஒலிப்பது போல் தோன்றியது. முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பின. உடல் நடுக்கம் தோன்றியது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

லேசான எதிர்ப்புணர்வை உணர்ந்த இளந்திரையன் வெகுவாகத் திகைத்துப் போனான். மெதுவாக விடுவித்தான்.

''ஹேய்! ரெண்டு நாளா செம அலைச்சல். டயர்டா இருக்கே. தூங்கு!'' என்றான் மென்மையான குரலில்.

அவள் விட்டால் போதும் என்பது போல் விலகிக் கொண்டாள். அவன் சட்டென்று அறையை விட்டு வெளியே போய் விட்டான்.

வெகு நேரம் அம்மா அப்பாவுடன் அளவளாவி விட்டு வந்தபோது அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சற்று நேரம் நின்று கவனித்தான். அப்போதுதான் அவனுக்கு அந்தச் சந்தேகம் எழுந்தது.

## 10

அலுவலக நேரங்களில் இயல்பாய் இருக்கிறாள். வீட்டைப் பராமரித்தல், அழகு படுத்துதல், சமையல் நிர்வாகம் என்று எல்லாவற்றிலும் ஆர்வமாக ஈடுபடுகிறாள். குடும்பச் சூழல் பிடிக்கவில்லை என்றும் சொல்ல முடியாது. ஆனால் தன்னிடம் மட்டும் நெருங்க மறுக்கிறாள். பலவும் எண்ணிக் குழம்பிப் போனான் இளந்திரையன்.

திடீரென்று தான் அவள் வாழ்க்கையில் நுழைந்து விட்டோமா? வேறு ஏதாவது வாழ்க்கை பற்றிய குறிக் கோள்கள் வைத்திருந்திருப்பாளோ? வேறு யாரையாவது... என்று புதிதாகச் சந்தேகம் முளைத்தது.

அருணாசலம் சாரிடம் விவரமாக எல்லாம் சொன்னோமே! எந்தக் கட்டாயமும் இல்லை என்று. இப்போது போய் எப்படி அவரிடம் கேட்பது. கேட்டால் தங்கள் குடும்ப வாழ்க்கையில் என்ன பிரச்னையோ என்ற சந்தேகம் அவருக்குத் தோன்றி... அதை அவர்கள்



குடும்பத்தில் சொல்லி... அப்படியே அது தன் குடும்பத்துக்கும் பரவினால்... வேண்டாம்... இதை வேறு விதமாகத்தான் அணுக வேண்டும்.

யோசித்தான்.

இரண்டு வித வியூகங்கள் முடிவு செய்து கொண்டான். அடுத்த வாரத்திலேயே செயல்படுத்த ஆரம்பித்தான்.

★ ★ ★

''ஹேய்! அருவி... இந்த வாரம் நாம உங்க வீட்டுக்குப் போறோம்...!'' என்று அவர்கள் வீட்டுக்குப் போனார்கள்.

''டேய்... கிள்ளி... உன்னோட காலேஜ் அனுபவம் எல்லாம் சொல்லு...'' என்று அவனிடம் நெருங்கினான். வீட்டுக்கு முன்னால் இருந்த இடத்தில் இருவரும் சேர் போட்டு அமர்ந்தார்கள்.

''டேய்... கிள்ளி...! ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லீர்றா... விவகாரம் இல்லாமே நானே பாத்து முடிச்சு வைக்கிறேன்!'' என்று கண் சிமிட்டிச் சிரித்தான்.

கிள்ளியும் சிரித்தான்... ''அதெல்லாம்... நம்ம பர்சனாலிட்டிக்கு நிறையப் பச்சைக் கிளிகள் பறந்து தாக்கறாங்கதான் மாமா... ஆனா, நாம சிக்கிக்கறதா இல்லே!'' என்றான், காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு.

''நேரம்தான்டா...!'' என்று சிரித்தான் இளந்திரையன்.

கிள்ளி சட்டென்று சீரியஸானான். ''உண்மைதான் மாமா. அப்பா எங்களையெல்லாம் ஒரு குறையும் தெரியாமத்தான் வளர்த்தார். ஆனா, அவருக்கு உடம்பு சரியில்லாமப் போன ரெண்டு வருஷத்துல ரொம்பக் கஷ்டப்பட்டுட்டோம். பணம்னா என்ன? வாழ்க்கைன்னா என்ன? பொறுப்புன்னா என்னன்னு நிறையப் புரிஞ்சுகிட்டோம். அக்கா.. பாவம்.. மாமா... நிறையச் சுமந்தா. அவ வயசுப் பொண்ணுங்கள்ளாம்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

வாழ்க்கையை அனுபவிச்சுகிட்டிருந்தப்போ, அவ மானத்தை விலை பேசாம... எப்படிப் பணம் சரிபண்றதுன்னு எவ்வளவு அலைஞ்சா, தெரியுங்களா?'' என்றான். குலுங்கி அழுது விட்டான்.

இளந்திரையனின் கண்களும் கூடக் கலங்கி விட்டன. சட்டென்று தோளில் சாய்த்துக் கொண்டான்.

''ஏன்? வேள்பாரி பொறுப்பெடுத்துக்கலையா?'' என்றான்.

''அவனும் செஞ்சான்... ஆனா, அவனுக்குச் சம்பளம் குறைவு... குடும்பம் வேற... எவ்வளவு சிக்கனமா இருக்க முடியுமோ... இருந்து... அனுப்பி வைப்பான்... ஆனா... வாரத்துக்கு ரெண்டு மூன்று டயாலிசிஸ்... நெனச்சுப் பாருங்க... எங்க படிப்புச் செலவு... எப்படியோ யார் யாரையோ பிடிச்சு... எல்லாம்.. நடத்தினோம்... இதுல... எங்க போய்க் காதல்... கத்தரிக்காய் வர்றது?'' என்றான்.

''அக்காவுக்கு... அக்காவுக்கு... யாரும் ஆண் நண்பர்கள் இல்லையா?''

அவன் சிரித்தான்... ''அக்காவுக்கு... நண்பர்களா? கிள்ளி... நான் வீட்டுக்குப் பெரியவடா. நான் நடந்துக்கற விதம் பாத்துத்தான் நீங்க நடந்துக்குவீங்க... நாளைக்குக் கயல் விழிக்கு நல்ல இடம் வரும். நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லடாம்பா... நல்ல வேளை, நீங்க வந்தீங்க...'' என்றான்.

''ஓ...!'' என்று விஷயங்களை உள் வாங்கிக் கொண்ட இளந்திரையன் பரிவும், பாசமுமாகச் சொன்னான்.

''கிள்ளி! இனிமே படிப்பைப் பத்தியே கவலைப் படாதீங்க... நீ... கயலு... சோழன்.. எல்லாம் எவ்வளவு வேண்ணா படிங்க. நான் இருக்கேன்!'' என்றான்.

''போங்க... மாமா..! நீங்க இப்படிச் சொல்றீங்க...! ஆனா, போன தடவை உங்ககிட்டே ஃபீஸ்க்கு பணம்



வாங்கியதுக்கே... அக்காகிட்டே செம டோஸ். பொண்ணு குடுத்த இடத்துல எல்லாம் குடுக்கல் வாங்கல் வச்சுக்கலாமா... உனக்கு மானம் ரோஷம் இல்லையா? அப்படீங்கறா...'' என்றான்.

இளந்திரையன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். ''ஆமாடா.. ரொம்ப ரோஷக்காரியா இருக்கறா. அவ மனசு உறுத்தல் தீரட்டுமேன்னுதான் வேலையே போட்டுக் குடுத்திருக்கேன். எனக்கும் ஒரு நம்பிக்கையான ஆள் தேவையிருக்குன்னு வச்சுக்க. ஆபரேஷனுக்கு நான் செலவு செய்த பணத்தையெல்லாம் திருப்பிக் கொடுக்கறாளாம். நானும் சரின்னுட்டேன். எப்படியோ அவ சந்தோஷமானாச் சரிடா!'' என்றான்.

வலக்காலை மடக்கி இடக்காலின் மேல் வைத்தபடி, தன் வலத்தொடையை நீவிக் கொண்டே சேரில் அமர்ந்தபடி பேசுகிற தன் மச்சானைக் கிள்ளி அன்புடன் பார்த்தான்.

''மாமா... நீங்க ரொம்ப... கிரேட் மாமா..!'' என்றான்.

அவன் அழகாகச் சிரித்தான்.

''சரிடா... உங்கக்காவுக்கும் உறுத்தல் இல்லாம... உங்க ஃபாமிலியையும் தூக்கி விடறதுக்குப் பாக்கறேன்.''

''சரி மாமா. அவளுக்குன்னு சில பாலிஸியெல்லாம் வச்சிருக்கா. யாருகிட்டேயும் சும்மா பணம் வாங்கக் கூடாதும்பா. உழைப்பைக் குடுத்து வாங்கலாமாம். என்னென்னவோ சொல்வா...'' என்றான் கிள்ளி.

''ம்...!'' என்று சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்த இளந்திரையன் அதற்குப் பிறகு ஆளே மாறிப் போனான்.

தரையில் பாயை விரித்துக் கயல்விழி, கிள்ளி வளவன், சோழன், தேனருவி எல்லாருடனும் அமர்ந்து சீட்டு விளையாடினான். கேரம் விளையாடினான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சோழனுடன் பொய்யாகக் குத்துச் சண்டை போட்டான். அவளைத் தட்டாமாலை சுற்றி இறக்கினான்.

தேனருவி கூடச் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

எவ்வளவு வசதியானவர்! இங்கே வந்து தன் மனிதர்களிடம் இயல்பாகப் பழகுகிறார் என்று எண்ணிக் கொண்டாள்.

லேசாகக் குற்ற மனப்பான்மை கூட ஏற்பட்டது.

அன்றிரவு!

அவர்களுக்குத் தனிமை கிடைத்தபோது அவன் முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு ஒரு கணம் குறும்பாகப் பார்த்தவன் பின்னர் புன்னகையுடன்,

"என்ன விஷயம் மேடம்? ஏதோ சொல்லணும்னு நினைக்கறாப்பல.. இருக்கு?"

"ம்...!" என்றாள் தயக்கமாய்.

அவன் காத்திருப்பவன் போல் நின்றான். அவள் தயங்குவதைப் பார்த்துக் கட்டிலில் அமர்ந்தான். உட்கார் என்று படுக்கையைத் தன் இடக் கையால் தட்டிக் காண்பிக்க, அமர்ந்தாள்.

"நான்... எனக்கு..." என்று குழறினாள்.

"ம்...?"

"இல்லே... எல்லாத்துக்கும்... எனக்குக் கொஞ்சம்... டைம்... வேணும்..." என்றாள்.

அவன் குரல் எழாதவனாய்ச் சிரித்தான். "நோ... பிராப்ளம்! டேக் யுவர் ஓன் டைம்... ஆனா... அதுக்காக இப்படிப் பயந்து ஒதுங்க வேண்டியதில்லை. சாதாரணமா இருக்கலாம். இருக்கிற வாக்கில்... குறை... நிறைகளோட... அப்புறம்... மெதுவா... முடிவெடுக்கலாமே!" என்றான்.



அவள் சற்று நேரம் மௌனத்தில் ஆழ்ந்தாள். பிறகு இது கூடச் சரிதான் என்பதுபோல் தலையாட்டிக் கொண்டாள்.

பிறகு அவன் முகம் பார்த்து நிமிர்ந்தாள்.

"இங்க... எல்லாருக்கும்... உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்றாள்.

"தாங்க்ஸ்..." என்றான். "உனக்கு..." என்ற கேட்க நினைத்தவன் மாற்றிக் கொண்டான்.

அவன் படுக்கையில் படுத்துக் கொண்டான். அவள் கீழே பாயில் படுத்துக் கொண்டாள்.

"அருவி! நமக்கு எங்கெங்கே சொத்துக்கள் இருக்குன்னு தெரியுமா?" என்றான்.

"ம்ஹூம்..." என்றாள்.

"அருணாசலம் சார் கடையிருக்கில்ல. அந்தக் காம்ப்ளெக்ஸ் மாதிரி மதுரையில ஒண்ணு இருக்கு. சென்னையில ஒண்ணு இருக்கு..." என்றான்.

"ஓ...!" என்றாள்.

"இப்ப எதுக்கு இந்தப் பேச்சு வருதுங்கறியா! நம்ம கோயமுத்தூர் மானேஜர் சென்னைக்குப் போறேங்கறார். அவரு பசங்க... அண்ணா யுனிவர்சிட்டியில படிக்கறாங்களாம். போன வருஷத்திலே இருந்தே சொல்லிகிட்டிருக்காரு... அப்ப இங்க யாரைப் போடறதுன்னு புரியலை..!" என்றான்.

"ஏன்... சென்னைக்காரரை இங்க வரச் சொல்லீரலாமே...?" என்றாள்.

"சென்னையில் ஒரு அபார்ட்மெண்ட் இருக்கு. ஆனா இதுவரைக்கும் அப்பாவுக்கு வேண்டிய ஒரு பையன் அங்க தங்கிகிட்டு நம்ம காம்ப்ளெக்ஸையும் பாத்துகிட்டிருந்தான். அவன் ஃபாரின் போறானாம்!" என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''நம்ம ஊர்ல இருந்து யாரையாவது?'' என்றாள்.

''அது சரி வராது... அருவி... அப்பாவுக்கு அந்த யோசனை பிடிக்கலை...'' என்றான்.

''அப்ப என்ன முடிவெடுத்திருக்கிறீங்க?''

''இல்லே. கோயமுத்தூர் மேனேஜரைச் சென்னைக்கு அனுப்பீரலாம். இங்க நம்பிக்கையானவர்களா... யாராவது வேணும்...!'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டவன்,

''சரி... அதை அப்புறம் யோசிக்கலாம்..: நீ... தூங்கு...'' என்றான். விளக்கை அணைத்தான். குட் நைட் என்றான்.

★ ★ ★

மறுநாள்!

'கீழேயே உட்கார்ந்துக்கலாம். பந்தியா, வசதியா இருக்கும்!'' என்று பந்தியில் அமர்ந்து காலை உணவை உண்டார்கள். அப்பா மட்டும் அப்புறம் சாப்பிடுகிறேன் என்றார். எனினும், ஒரு சேரில் அமர்ந்து கொண்டு அதையெல்லாம் ஒரு நிறைவோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

''மாப்பிளே! எனக்குத் தெரிஞ்சு மனசாலே கூட நான் யாருக்கும் துரோகம் செய்ததில்லே. அப்படியிருக்கையில கடவுள் ஏன் எனக்கு ஒரு நோயைக் குடுக்கணும், குடும்பத்தை இவ்வளவு கஷ்டப்படுத்தணும்னெல்லாம் அப்ப நினைப்பேன். ஆனா, இந்தப் பிரச்னையிலதான் உங்களைச் சந்திக்க முடிஞ்சுது. நீங்க எங்களுக்குக் கிடைச்சீங்க...'' என்றார்.

இளந்திரையன் அழகாக அவரைப் பார்த்துச் சிரித்தான். ஒரு நிமிடம் தேனருவிக்கே அவன் சிரிப்பைப் பார்த்து ஒரு வித மலைப்பு ஏற்பட்டது. மாமா முகம் பார்த்துச் சிரித்து விட்டுத் திரும்பிய இளந்திரையன் அவள் பார்வையைப் பார்த்து விட்டு அவளுக்கு மட்டுமே தெரிகிற மாதிரிக் கண் சிமிட்டிப் புன்னகைத்தான்.



அவள் அவசரமாகக் குனிந்து பொரியலை எடுத்து அவன் இலையில் பரிமாறினாள். இளந்திரையின் அதற்குள்,

''எங்க வீட்லயும் அம்மா, அப்பாவுக்கு அருவியை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. எந்த வித்தியாசமும் இல்லாமல் பாசமாகப் பழகறாளா? மக இல்லேங்கற குறை தீர்ந்து போச்சுங்கறாங்க!'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம் மாப்பிளே. தேனருவி உண்மையாவே நல்ல பொண்ணு. பொறுப்பான பொண்ணு. ஆனா என்ன, ரொம்ப யதார்த்தம். மனுஷங்க நடிச்சாக் கூட நம்பிடுவா. அது ஒண்ணைத்தான் மாத்திக்கணும்!'' என்றார்.

மறுபடியும் மனைவியைப் பார்த்து வாஞ்சையாய்ப் புன்னகைத்த இளந்திரையன். ''எண்ணங்கள் நல்லதா இருக்கிறதில் ஒண்ணும் தப்பில்லை... மாமா..'' என்றவன், தொடர்ந்து, ''மாமா! உங்ககிட்டே எனக்கு ஒரு உதவி வேணுமே...!'' என்றான்.

''சொல்லுங்க... மாப்பிளே! என் சக்திக்கு உட்பட்டது என்ன வேண்ணாலும் செய்யறேன்!'' என்றார்.

''எல்லாம் உங்க சக்திக்கு உட்பட்டதுதான். எங்க காம்ப்ளெக்ஸ் பெரிய காம்ப்ளெக்ஸ். முப்பது கடை இருக்கு. கீழே இரண்டு அபார்ட்மெண்டும் இருக்கு. ஒண்ணு கெஸ்ட் ஹவுஸ். இன்னொண்ணு காம்ப்ளெக்ஸ் மானேஜருக்கு. என்னன்னா... கோயமுத்தூர் மானேஜர் சென்னைக்கு அந்தக் காம்ப்ளெக்ஸ்க்குப் போறேங்கறாரு. நீங்க உங்க ஃபாமிலியோட அந்தக் காம்ப்ளெக்ஸுக்குக் குடி வந்துட்டீங்கன்னா, மெயின்டனென்ஸ் ஈசியாயிருக்கும். அவருக்கு என்ன சம்பளம் குடுத்தமோ அதை நீங்க எடுத்துக்கலாம். உங்களுக்கும் டைம் போகும். எனக்கும் பெரிய நிம்மதி..!'' என்றான்.

அப்பா திகைத்துப் போனார். சம்பளம் மெயின்டனென்ஸ், நிர்வாகம் என்றெல்லாம் இளந்திரையன் வார்த்தைகளைப் போட்டதனால் யாருக்கும் மறுக்கவும் முடியவில்லை.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''என்னென்ன வேலையிருக்கும், மாப்பிளே?'' என்றார் தியாகராஜன்.

''காம்ப்ளெக்ஸ் வாடகை வசூல் தினம் ஒரு ரவுண்டு பாக்கணும். திடீர் திடீர்ன்னு ஏதாவது செலவு வரும். பாக்கணும். நீங்க வீட்லயே ஆபீஸ் போட்டுக்கலாம். கம்ப்யூட்டர் குடுத்தர்றேன். இந்தக் கிள்ளியை அசிஸ் டென்ஸுக்கு வச்சுக்குங்க... பார்ட் டைமாப் பாக்கட்டும்,'' என்றான்.

தியாகராஜன் சற்றும் தயங்கவில்லை. ''தாராளமா மாப்பிளே! சும்மா வெட்டியாப் பொழுது போக்கறேன். இப்படி வாய்ப்புக் கிடைச்சா செய்யறதுக்கென்ன...?'' என்றார் உற்சாகமாக.

''அடுத்த வாரமே நீங்க ஷிப்ட் செஞ்சுக்கலாம். அப்புறம்... மாமா... உறவு வேற... இந்த மாதிரி வொர்க் ரிலேஷன்ஸ் வேற... கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டாத்தான் இருப்பேன்!'' என்றான் புன்சிரிப்புடன்.

''அப்படித்தான் இருக்கணும்... அதான் நல்லது!'' என்றார் தியாகராஜன்.

அன்று மாலை புறப்படுவதற்கு முன் கிள்ளியிடம், ''டேய்! என்னோட பழைய பைக் ஊர்ல சும்மாதான் இருக்கு. சர்வீஸ் பண்ணிக் கொண்டு வரச் சொல்லியிருக்கேன். கயல் விழியைக் கொண்டு போய் காலேஜ்ல தினம் டிராப் பண்ணிடு... அப்புறம் உனக்கு ஒரு கம்ப்யூட்டர் அனுப்பறேன். என்ன?'' என்றான்.

''தாங்க்ஸ்... மாமா...'' என்று கிள்ளி கண் கலங்கினான். ''இதுக்கெல்லாம்... எப்படிக் கைம்மாறு செய்யப் போறோமோ...'' என்றான்.

''நேரம் வரும்போது வாங்கற இடத்துல வாங்கிக் கறன்டா...'' என்று சிரித்துப் புறப்பட்டான்.



## 11

தேனருவி மனத்திலே மெது மெதுவாக மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருப்பது போல் உணர்ந்தாள். இந்த மூன்று மாதங்களில் பார்த்தவரை நம்பி ஒன்றும் நாகரீகமற்ற வராகத் தெரியவில்லை. அப்படியிருக்கும் போது அன்றைக்குத் தான் கண்காட்சியில் கேட்டது பொய்யா என்ன? ஒரு வேளை தான் நினைத்ததைச் சாதிப்பதற்காக மெது மெதுவாகவும், திறமையாகவும் காய் நகர்த்துகிறானோ என்ற சந்தேகமும் தோன்றியது. ஆனால், எந்த முடிவுக்கும் வருவதற்கு மூன்று மாதம் என்பது போதுமான காலம் அல்ல என்று எண்ணிக் கொண்டாள்.

இரண்டு நாள் கழித்து அண்ணி பாமாவிடம் பேசினாள்.

''அண்ணி! ரொம்ப நல்லவராத்தான் தெரியறாரு!'' என்றாள்.

அண்ணி அந்தப் பக்கம் சிரித்தாள். ''தேனு! எனக்கு என்ன தோணுதுன்னா உன்னைப் பணத்தால அடிக்க முடியாதுன்னு தெரிஞ்சு வேற விதமா கவர் பண்ணலாம்னு பாக்கறாருன்னு தான் தோணுது. இதுவும் ஒரு வகையா பணத்தால அடிக்கறது தான். வேலை குடுக்கறேன்னு பாவ்லா பண்ணிகிட்டு பணத்தை வீசறதுதான்!'' என்றாள்.

''அண்ணி, எனக்கென்னவோ அப்படித் தோணலை!'' என்றாள், மீண்டும்.

''அடப்போ! இப்ப உங்க அண்ணனையே நீ என்ன நினைக்கிறே? உங்கிட்ட வந்து பாமா வரமாட்டேங்கறா... செய்ய மாட்டேங்கறா அப்படீம்பாரு. ஆனா, எங்கிட்டே வந்து சும்மாயிரு... பாமா... அப்படித்தான் சொல்லணும். எங்கப்பன் பாட்டுக்கு நாலைஞ்சு பேரைப் பெத்துத் தள்ளிட்டாரு. அத்தனை பேர் சுமையையும் நாம ஏத்துக்க முடியுமாம்பாரு. எல்லாரும் ரெட்டை வேஷக்காரங்கதான். லேடீஸ்கிட்டே எப்படிப் பழகறாருன்னு கவனிச்சுப் பாரு. அப்புறம் ஒரு

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

முடிவுக்கு வரலாம்,'' என்று வேறு விதமாகவும் திரி வைத்து விட்டாள்.

தேனருவி மேலும் குழம்பி விட்டாள். அதற்குத் தகுந்தாற் போல் அடுத்து வந்த இரு வாரங்களிலும் நிகழ்ச்சிகள் நடந்தன.

★ ★ ★

''ஹேய்! அருவி! என் ஃப்ரண்ட் ஒருத்தர் வர்றாப்பல. காலேஜ்மேட். அனிதா ராய்!'' என்று முகமெல்லாம் சிரிப்பாக வந்தான் இளந்திரையன்.

அவன் சொல்வதை மௌனமாகவும், அழுத்தமாகவும் வாங்கிக் கொண்டாள் தேனருவி.

''நாங்க க்ளோஸ் ஃப்ரண்ட்ஸ் அஞ்சு பேர். அதில அவளும் ஒருத்தி. முதல்ல அனிதா ராய். இப்ப அனிதா சந்திரமோகன். சந்திரமோகனும் நம்ம ஃப்ரண்ட்தான். இரண்டு நாளைக்கு நம்ம வீட்ல தங்கறா...'' என்றான் உற்சாகமாய்.

''அவரு வர்லையா?'' என்றாள்.

''இல்லே! ரெண்டு பேரும் இப்ப லண்டன்ல இருக்கறாங்க. முதல்ல அவ வர்றா போலிருக்கு. அப்பறம் மோகன் அடுத்த நாள் வர்றான் போல இருக்கு,'' என்றான்.

''ஓஹோ...'' என்றாள்.

அனிதா வந்தாள். வரும்போதே, 'ஹாய்! நம்பி...' என்று அவன் கையைப் பிடித்துக் குலுக்கினாள்.

'ஹலோ! பியூட்டி...' என்று தேனருவியைக் கட்டித் தழுவிக் கொண்டாள். தேனருவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு விதமாகச் சிரித்துச் சமாளித்தாள். ஆனால், நன்கு உபசரித்தாள்.

''ஹாய், திரையன்! என்னா, ஆளு மினுமினுப்பா இருக்கறே!'' என்று அவனருகில் சோபாவில் அமர்ந்தாள்.



இளந்திரையன் அவளைப் பார்த்துக் கலகலவெனச் சிரித்தான். ''அனிதா! இன்னமும் அதே மாதிரி வாயடிச்சு கிட்டுத்தான் இருக்கியா? பாவம், சந்திரமோகன்!'' என்றான்.

''சும்மா இரு... மேன்... நாந்தான்... பாவம். அவன் என்னமோ... ரொம்ப அமைதி... கிமைதின்னு சொல்வீங்களே! இப்ப வந்து பாரு, என்னா மிரட்டு மிரட்டறான் தெரியுமா! அதுக்குத்தான்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலாம்னு பார்த்தேன்... நீ மாட்டேன்னுட்டே...'' என்று சிரிக்கவும், இளந்திரையன் மறுபடியும் சிரித்தான்.

தேனருவி அதிர்ந்து போய்ப் பார்க்கவும்... இயல்பாக எழுந்து வருகிறவன் போல் வந்து அவள் கையைப் பிடித்துச் சமையலறைக்குள் அழைத்துப் போனான். மெல்லிய குரலில்,

''ஹேய்! அப்படி முறைச்சுப் பார்க்காதே! பம்பாய்ல வளர்ந்தவ. கொஞ்சம் ஃப்ரீயா இருப்பா... சும்மா கலாட்டா செய்வா. மோகனும் அவளும் லவ் மேரேஜ் பண்ணிக் கிட்டவங்க...'' என்று விளக்கம் சொன்னான்.

தேனருவி ஒன்றும் சொல்லவில்லை. சரி என்பது போல் தலையாட்டிக் கொண்டாள். ஆனால், மனதுக்குள் மட்டும் என்ன ஃப்ரீ என்றாலும் இப்படி இடிச்சுகிட்டே உட்காரணுமா, என்ன என்று எண்ணிக் கொண்டாள்.

இளந்திரையன் வெளியே போகும்போது ஃப்ரிட்ஜைத் திறந்து ஒரு கூல்ட்ரிங்க் பாட்டிலை எடுத்துக் கொண்டு போனான்.

கூல்ட்ரிங்கை ஊற்ற இரண்டு தம்ளர்களை ஒரு தட்டில் வைத்துத் தேனருவி கொண்டு வந்து வைத்தாள். எதிரில் அமர்ந்தாள்.

''டிபிகல் டமில் வுமன். உக்காருங்க... தேனு. டோன்ட் ஃபீல் ஸோ.. ஷை..!'' என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"நோ... நோ அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே," என்றாள் தேனருவி.

"நம்பி... என்னமோ ஆபீஸ் டைம்ல கூட இவங்களைக் கூட்டிக்கிட்டுப் போயிர்றயாமா?" என்றாள் குறும்புப் பார்வையுடன்.

"ஆமா. அம்மிணியை விட்டுட்டு நம்மளாலே இருக்க முடியறதில்லே...ன்னு வச்சுக்கயேன்!" என்றான் சளைக்காமல்.

"கொஞ்சமாவது வெட்கப்படறானான்னு பாருங்க..." என்று தேனருவியிடம் அவள் வேடிக்கையாகப் புகார் சொல்ல, அவன் அலட்டிக் கொள்ளாமல்,

"அனிதா மேடம்! அவங்க என் வைஃப்... என் இஷ்டம்... எங்க வேண்ணா... எப்ப வேண்ணா... எப்படி வேண்ணா என் கூட இருக்கற மாதிரிப் பாத்துக்குவேன். ஐ'ம் கேபபிள் ஆஃப் தட்!" என்று சிரிக்க, தேனருவியின் முகம் சிவந்தது.

"சும்மா.. யிருங்க. விவஸ்தையில்லாமல் பேசிகிட்டு..." என்று தன்னையும் மீறி அவன் தோளில் ஒரு தட்டுத் தட்டி விட்டு, அவள் எழுந்து போகவும் அவன் மீண்டும் கலகலவெனச் சிரித்தான். அவன் கண்களின் ஆழமான பார்வை அவளைத் தொடர்ந்தது.

சமையலறைக்குப் போன தேனருவி சற்று நேரம் திணறிப் போனாள். தன் செய்கை குறித்துத் தானே ஆச்சரியப்படவும் செய்தாள். ஆனால், அந்த உணர்வு கொஞ்ச நேரம்தான்.

அந்த அனிதா அங்கே தங்கியிருந்த இரண்டு நாட்களும் இளந்திரையனைத் தொட்டுப் பேசுவதும், அருகில் நிற்பதுமாகப் பழகியது அவளுக்குக் கொஞ்சம் உறுத்தலாகவே இருந்தது. எதையும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் உள்ளே கனன்று கொண்டுதான் இருந்தது.

அடுத்த நாள் பிற்பகல் சந்திரமோகன் வந்து சேர்ந்தான். அனிதாவுக்கு நேர்மாறாக அமைதியாக இருந்தான். ஆனால், மனைவியின் குறும்புப் பேச்சை இரசித்தான்.



'தேனருவி!' என்று முழுப்பெயர் சொல்லி அழைத்து அவனும் இயல்பாகப் பழகினான். மனைவி இளந்திரையன் அருகில் அமர்வதையும் தொட்டுப் பேசுவதையும் இயல்பாய் எடுத்துக் கொண்டான்.

தேனருவியின் சமையல் அவனுக்குப் பிடித்தது. "கோபி மஞ்சூரியன், ஆலு பராட்டான்னு கொல்றாடா...' இவ. எவ்வளவு நாளாச்சு இப்படி டேஸ்டா சாம்பார் சாப்பிட்டு? ஏய்... அனிதா... இதெல்லாம் தேனருவிகிட்டே கத்துக்க, ரெசிபி வாங்கிக்க!" என்று சொல்ல...

"நான் எதுக்குக் கத்துக்கணும். நான் எங்க ஊர்... சமையல் உனக்குச் செஞ்சு போடறேன்... இல்லே...? நீ உங்க ஊர் சமையல் எனக்குச் செஞ்சு போடு..." என்றாள்.

"இவன்தானே... நல்லாப் போடுவான். நாலு கட்டை யாலே..." என்று கிண்டல் செய்தான் இளந்திரையன்.

"இவரு நல்லா ஹெல்ப் செய்வாரு!" என்றாள் தேனருவி.

"அதான்... மேன்... சைக்கிள் கேப்ல நான் மிஸ் பண்ணிட்டேன்..." என்று மறுபடியும் பெருமூச்சு விட்டாள் அனிதா.

சந்திரமோகனும்... இளந்திரையனும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

"ஏய்... நீ இப்படியே பேசிகிட்டிருக்காதே... சிஸ்டர் நெஜம்னு நினைச்சுக்கப் போறாங்க..." என்று சந்திரமோகன் சிரித்தான்.

"நெனைச்சுக்கட்டும். தேனு மாதிரி அமைதியா இருக்கறவங்களுக்குக் கோபம் வந்தா எப்படி இருக்கும்னு இவனுக்கும் தெரியட்டும்... காலேஜ்ல எத்தனை பொண்ணுங்களுக்கு நோ சொன்னான். இப்ப... இந்தத் தேனருவி பின்னாலேயே அலையறான். கொஞ்சம் சண்டை வரட்டும். அப்பத்தான் திருஷ்டி கழியும்..." என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அடேங்கப்பா! என்னா உயர்ந்த திங்க்கிங்..." என்று அவளைப் போலவே உடைந்த தமிழில் பேசித் சந்திர மோகன் கலாட்டா செய்ய...

"கலாட்டா செய்யாதே மேன்...! உதைப்பேன்...!" என்றாள் அனிதா.

"ஹலோ! அந்த ரூம்ல போய்... உதைப்பீங்களோ, அடிப்பீங்களோ... நடத்துங்க... நான் தூங்கப் போறேன். நீ வா தங்கம்ஸ்..." என்று இயல்பாய்த் தேனருவியின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு மாடியேறினான் இளந்திரையன்.

தங்கள் அறைக்குப் போன பின்பு, "அடடா! இன்னைக்கு உலக மகா அதிசயம் நடந்தது தெரியுமா?" என்றான்.

"என்ன?" என்பது போல் அவள் பார்க்க, "என் வைஃப் ரொம்ப வெட்கப்பட்டாங்க... தானா என்னைத் தொட்டுப் பேசினாங்க..." என்று கேலி பேசினான்.

"பின்னே... நீங்க... அவங்க முன்னால அப்படி...?"

"ஹேய்! அனி ஃபாரின்ல படிச்ச பொண்ணு, அவ ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டா..." என்றான்.

"என்ன இருந்தாலும் ஜென்ட்ஸ்கிட்டே பழகறதுக்கு ஒரு எல்லை இருக்கில்ல!" என்றாள்.

அவன் புன்னகைத்தான். பிறகு, "ஹேய்! அருவி, நம்ம நாட்டுலதான் ஆண் பெண் உறவு ஒரு இறுக்கமான சூழ்நிலையில இருக்கு. ஏன்... நம்ம ஊரைத் தாண்டிக் கல்கத்தா, மும்பைன்னு போனாலே பஸ்ல எல்லாரும் சமமாதான் உட்காருவாங்க... இயல்பாய்ப் பழகுவாங்க... வெளிநாட்டுல இன்னும் ஃப்ரீதான்... ஆனா, நம்ப நாட்டுக் குடும்ப அமைப்புங்கறது ஒரு அற்புதமான விஷயம்தான்..." என்றான்.

என்ன சொல்கிறார்? திருமணத்துக்கு முன்னால எப்படி இருந்தா என்ன? கல்யாணத்துக்கு அப்புறம் ஒழுக்கமா



இருந்தாப் போதும்னு சொல்றாரோ என்று எண்ணிக் கொண்டாள் தேனருவி. பேச்சை மாற்றுவதே நல்லது என்றெண்ணி அடுத்த நாள் அவர்கள் பயணத்திட்டம் என்ன என்று கேட்டுக் கொண்டாள்.

மறுநாள் பகலுணவுக்குப் பின் இருவரும் கிளம்புகிறார்கள். அதனால் பிற்பகலில் அலுவலகம் போனால் போதும் என்றான் அவன்.

மறுநாள் அனிதா அவளிடம் பேசிக் கொண்டே உதவி செய்தாள்.

"தேனு! உனக்கு இலக்கியத்துல ரொம்ப இன்ட்ரஸ்ட் டாமே? அதனால மோகன் கிட்டே சொல்லி செலக்டெட் போயம்ஸ்ன்னு ஒரு கலெக்‌ஷனே கொண்டு வந்திருக்கான்!" என்றாள்.

தேனருவியின் முகம் மலர்வதைப் பார்த்து அவள் சிரித்தாள். "நம்பி சொன்னது சரிதான்..." என்றாள்.

"என்ன சொன்னாரு?" என்றாள் தேனருவி, இயல்பாய் எழுந்த குறுகுறுப்புடன்.

"வைர நெக்லஸே குடுத்தாக்கூட என் வைஃப் அசர மாட்டா. ஆனா, நல்ல புத்தகம் குடுத்தின்னா ஃபிரண்டா யிடலாம்னு சொன்னாரு!" என்றாள்.

தேனருவிக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. தன் கணவன் எல்லாரிடமும் தன்னைப் பற்றி உயர்வாய்த்தான் சொல்கிறான். தான்தான் இன்னும் அந்தப் பக்குவத்தை அடையவில்லை என்று.

அனிதா புறப்படும்போது ஈரோட்டிலிருந்து வரவழைத்த நல்ல கைத்தறிப் புடவைகள் பவானி ஜமுக்காளம் என்று ஒரு பெரிய மூட்டையே பரிசாகக் கொடுத்தான் இளந்திரையன். அதையும் தன் மனைவி கையாலேயே கொடுக்கச் செய்தான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

புறப்படுவதற்குச் சற்று நேரத்திற்கு முன் அனிதா தேனருவியிடம், ''தேனு! உன் ஹஸ்பெண்ட் ஒரு ஜெம். பணக்காரன்னு தெரிஞ்சு எத்தனை பேர் பழக முயற்சி செஞ்சாங்க தெரியுமா? கரெக்டா ஆட்களை ஜட்ஜ் பண்ணிருவான். செலக்ட் பண்ணிப் பழகுவான். நல்ல ஆளு...'' என்றாள்.

இன்னும் கொஞ்சம் பெண்கள் விஷயத்தில் எப்படி என்று கேட்கலாமா என்று ஒரு கணம் நினைத்தாள். ஆனால் மறுகணம் மாற்றிக் கொண்டாள்.

அனிதாவும், சந்திரமோகனும் சென்னை சென்று அங்கு சந்திரமோகனின் பெற்றோருடன் இருந்து விட்டு லண்டன் செல்வதாக ஏற்பாடு.

வழியனுப்பிவிட்டு வந்தார்கள். அன்று மாலை வீட்டுக்கு வந்தவுடன்,

''அருவி! அனி இருந்தது ஒரே கலகலப்பா இருந்தது, இல்லே. ரொம்ப போரடிக்குது. பேசாம சோழன், கயலு, கிள்ளியையெல்லாம் வரச் சொல்லு. நாலு நாள் இருக்கட்டும்!'' என்றான்.

வரவழைத்தார்கள். இரவு ஏழு மணிக்கு மேல் கிள்ளியுடன் பைக்கில் சுற்றிவிட்டு வந்தான்.

''ஊருக்குப் போனாத்தான் பைக் ஓட்டறதுடா. இங்கே காரு காருன்னு... என்னமோ மூடு பல்லக்குல போற மாதிரி இருக்குதுடா!'' என்று கிள்ளியிடம் இயல்பாய்ப் பழகினான்.

சோழனும் கயல்விழியும் நடுஹாலில் ஓடிப் பிடித்துச் சண்டை போடுவதைப் பார்த்துத் தேனருவிக்குக் கோபம் வந்தது.

''ஹேய்! விடு... சந்தோஷமா இருக்கட்டும். இப்பத்தான் வீடு கலகலப்பா இருக்கு!'' என்றான்.



அந்த வார இறுதியின் சனிக்கிழமை அன்று தலைப்பாகை கட்டிக்கொண்டு வேட்டியை வரிஞ்சு கட்டிக் கொண்டு அவன் அவர்களோடு ஒன்றாகத் தோட்ட வேலையில் இறங்கினான்.

தேனருவிகூட இயல்பாக அவர்களோடு ஒன்றிக் கொள்ளவும், கலகலப்பாகப் பேசவும் ஆரம்பித்தாள்.

''ஹேய்! இந்த மஞ்சள் ரோஜாப் பூவைப் பாரு...! என் அன்புக்குரிய பூவையே!'' என்று அவன் செய்த கலாட்டாவுக்கு அவள் கலகலவென்று சிரித்துக் கொண்டு திரும்ப, பாரியும், பாமாவும் நின்று கொண்டிருந்தார்கள்.

பாமாவின் கண்களில் மின்னி மறைந்த விஷத்தை அந்த நேரம் தேனருவி புரிந்துகொள்ளவில்லை.

## 12

''மச்சான், கல்யாணத்துக்கு அப்புறம் வரவே முடியலை. அதான் வந்தோம்; உங்களையும், தேனருவியையும் ஊருக்கு விருந்துக்கு அழைச்சுட்டுப் போலாம்னு வந்தோம்...'' என்றான் வேள்பாரி.

''குழந்தைகளைக் கூட்டிட்டு வர்லையா?'' என்றான் நம்பி.

''இல்லை மச்சான். அங்க அம்மாகிட்டே விட்டுட்டு வந்துட்டோம்,'' என்றான்.

''ஆமாங்கண்ணா, ஏற்கெனவே இங்கே ஒரு படையே இருக்கு! இதுல அவங்களையும் கூட்டிட்டு வந்தா வீடே ரெண்டு பட்டுடும்!'' என்றாள் பாமா யதார்த்தம் போல்.

வேள்பாரி முறைப்பதைக் கண்டு கொள்ளவில்லை. ''நீங்க... வேறே... நான் தனியாவே வளர்ந்த ஆளு... இப்பத்தான் வீடே நல்லாருக்கிற மாதிரி இருக்கு...'' என்றான் இளந்திரையன்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தேனருவி சோழன் கைகளைக் கழுவி விட்டுக் கொண்டிருந்தவள், அப்போதுதான் வந்தாள்.

"வாங்க அண்ணி! வா அண்ணா!" என்று வரவேற்றாள்.

வீட்டைப் பார்த்த பாமாவின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"எவ்வளவு பெரிய வீடு!" என்றாள்.

"ஆமா... ஊர்லருந்து யாராவது வந்தாலும், நம்ம வீட்லருந்து யாராவது வந்தாலும், தங்கறதுக்கு வேணும்னு இவ்வளவு ரூம்ஸ் இருக்கற மாதிரி பாத்திருக்காங்க..." என்றாள் தேனருவி பொதுப்படையாக.

"உங்க ரெண்டு பேரையும் விருந்துக்குக் கூப்பிடணும்னு கூட உங்கண்ணனுக்குத் தோணலே. நான்தான் பிடுங்கி யெடுத்துக் கூட்டிட்டு வந்தேன்.." என்று தேனருவியிடம் முணுமுணுத்தாள் பாமா.

"அண்ணன் குணம் தெரிஞ்சதுதானே! செலவுக்குக் கணக்குப் பாப்பாரு!" என்றாள் தேனருவி விட்டுக் கொடுக்காமல்.

வேள்பாரி முறையாகத் தட்டு வைத்து அழைத்தான். அதற்குப் பிறகு அவர்கள் சாப்பிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டான் இளந்திரையன்.

தேனருவி பரிமாறிக் கொண்டிருக்கும்போது, இளந் திரையன் வந்து, "அருவி! கயலைப் பரிமாறச் சொல்லிட்டு நீ கொஞ்சம் வா..." என்று அழைத்தான்.

அவள் என்னவோ ஏதோ என்று படபடப்பாக வந்தாள்.

"படபடப்பாகாதே! சாதாரண விஷயம்தான். இன்னைக்கு அவங்க உங்க அம்மா வீட்லதானே இருப்பாங்க?" என்றான்.

"ம்... நைட் கிளம்பறாங்களாம்!" என்றாள் தேனருவி.

அவன் உடனே ஊரில் அம்மாவிடம் பேசினான்.



"அம்மா! மச்சான் அழைக்கறதுக்கு வந்திருக்கிறாரு. அடுத்த வாரம் போலாமான்னு பாக்கறேன். அங்க ஏதாவது ப்ரொகிராம் இருக்கா?" என்றான்.

அம்மா அந்தப் பக்கம் சற்று மௌனமானார். 'என்னம்மா?' என்றான்.

"டேய் நம்பி, நீ இன்னும் ஊர்ப்பக்கம் யார் வீட்டுக்குமே விருந்துக்கு வர்லைன்னு எல்லாரும் கோபிச்சுக்கறாங்க. இனி அடுத்து வர்ற மூணு வாரமும் உனக்கு அழைப்பு இருக்கேடா!" என்றார்.

ஓ...! என்றான். அதற்குள் அம்மாவே, "ஒண்ணு செய், நம்பி... இன்னைக்கு நைட்டே கிளம்பி மதுரை போயிட்டு நாளைக்கோ நாளன்னைக்கோ வந்துடுங்களேன்.." என்றார்.

அவன் தேனருவியைப் பார்க்க, அவள் சரியென்பது போல் தலையாட்டினாள். பிறகு மெதுவாக அண்ணனிடம் போய் விஷயத்தைச் சொன்னாள்.

அவனும் ஏற்றுக் கொண்டான். அப்போது இளந்திரையன் தேனருவியிடம். 'ஏன், அருவி, போறதுதான் போறோம். இந்தப் பயலுகளையும் கூப்பிட்டுக்கலாமே!' என்றான்.

இரண்டு காரில் அன்று பிற்பகலிலேயே எல்லாரும் புறப்பட்டார்கள்.

★ ★ ★

**மா**ருதி காரைப் பாரியின் குடும்பத்துக்குக் கொடுத்து விட்டு டாடா சுமோ ஒன்றைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டான் இளந்திரையன். வேள்பாரியின் குழந்தைகளும் கூட வந்து விட்டார்கள்.

குழந்தைகளோடு குழந்தையாக அவன் சிரிப்பதையும் பாட்டுக்குப் பாட்டு பாடுவதையும், கடிஜோக் சொல்வதையும் அவள் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு வந்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சற்றுத் தனிமை கிடைத்த போது மட்டும், "ஏய், என்னமோ ஜுவுல எதையோ பாத்த மாதிரி... முறைச்சு முறைச்சுப் பார்க்கறே. நானும் மனுஷன்தான்!" என்று சிரித்தான்.

அவள் ஒன்றும் பேசாமல் தலை குனிந்து கொள்ளவும், சிரித்துக் கொண்டே நகர்ந்தான்.

பாதி தூரம் சென்றதும், "அருவி! நீ இவர்களோடு வா! கொஞ்ச நேரம் உங்க அண்ணன் அண்ணிகிட்டப் பேசிட்டு வர்றேன்..." என்று அந்தக் காருக்குப் போனான்.

முன் சீட்டில் அமர்ந்து கொண்டான். வேள்பாரியின் தொழில் பற்றியெல்லாம் விசாரித்துக் கொண்டு வந்தான்.

"ஏன்... அண்ணா? உங்களுக்கு மதுரையில கூட ஒரு காம்ப்ளெக்ஸ் இருக்காமே?" என்றாள் பாமா.

"ஆமாங்க... ஆனா, அது கோயமுத்தூர் அளவுக்குப் பெரிசு இல்லே. ஒரு பதினைஞ்சு கடை இருக்கும்..." என்றான்.

"அங்க யார் பாத்துக்கறா?" என்றாள்.

"அங்க எங்க ஒண்ணு விட்ட பெரியப்பா... ஒருத்தர்... தங்க வேலுன்னு... பேரு... அவரு பாத்துக்கறாரு..." என்றான்.

பாமாவுக்குப் பொசுக்கென்று போன மாதிரி ஒரு எண்ணம் தோன்றியது இளந்திரையனுக்கு.

"அங்க ஏதும் அபார்ட்மெண்ட் இல்லையோ?" என்றாள்.

"இருக்கு... இருக்கு... ஒண்ணு கெஸ்ட் ஹவுஸா இருக்கு... இன்னொண்ணுல பெரியப்பா ஒரு ரூம் மட்டும் யூஸ் பண்றாரு," என்றான்.

பிறகு சாமர்த்தியமாக வேறு பேச்சுக்குத் தாவினான்.

அன்று வழியில் ஒரு ஹோட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டு வந்து மற்றவர்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டு நின்றிருந்தான் இளந்திரையன்.



அவன் நிற்பதையறியாமல் சற்றுத் தள்ளிப் பாமா தன் கணவனிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

"நாந்தான்... பேச்சு எடுத்துக் கொடுக்கிறேன் இல்ல... அப்பாவுக்குக் கொடுத்த மாதிரி, எங்களுக்கு ஒரு அபார்ட்மெண்ட் கொடுங்கன்னு கேக்க வேண்டியதுதானே...?" என்றாள் பாமா.

"சும்மா யிரு பாமா... ஏற்கெனவே மச்சான் நிறையச் செஞ்சாச்சு. கொண்டான் குடுத்தான் இடத்துல எல்லாம் மரியாதையைக் காப்பாத்திக்கணும்!" என்றான் வேள்பாரி.

"காப்பாத்திக்குங்க... காப்பாத்திக்குங்க... இப்படியே காப்பாத்திகிட்டு நூலாயிரம் ரூபா வீட்டு வாடகை குடுங்க... அஞ்சாயிரம் ரூபா... ஊருக்கு அனுப்புங்க... அப்புறம்... என்னைக்கு... நான் உங்க தங்கச்சி மாதிரி நல்ல துணி மணி உடுத்தி நகை போடறதோ தெரியலை!" என்றாள்.

"அவ எதுக்குமே ஆசைப்படலை. அவளுக்கு எல்லாம் கிடைச்சுது!" என்ற பாரி, "சரி.. அவங்கள்ளாம் வர்றாங்க.. உன் புலம்பலை நிறுத்து..!" என்று நகர்ந்தான்.

இளந்திரையன் சிந்தனையிலாழ்ந்தான். செல்போனிலேயே ஊருக்குச் சற்று நேரம் பேசினான்.

★ ★ ★

தங்கவேல் பெரியப்பா ஓங்கு தாங்காக இருந்தார். சோழன் கயல்விழியிடம், 'தங்கவே....ல்... மாமா... இவரு!' என்று நீளமாக இழுத்தான்.

"சும்மாயிருடா குட்டிக் குரங்கே!" என்று ஒன்று வைத்தாள் கயல்விழி.

நேராக கெஸ்ட் ஹவுஸில் போய்த் தங்கினார்கள். மறுநாள் காலை பாரியின் இல்லத்துக்குப் போவதாக ஏற்பாடு. பாமாவும், பாரியும் அவர்களோடு வந்து சற்று நேரம் இருந்து விட்டுப் போனார்கள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பாமா கெஸ்ட் ஹவுஸையும் மற்ற ஒரு அபார்ட்மென்ட்டையும் அகல விரித்த விழிகளோடு அளவெடுத்தாள்.

''மூணு பெட்ரூம்... ஹால்... கிச்சன், நல்லாத்தான் இருக்கு...'' என்றாள்.

இளந்திரையன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். கயல்விழி தேனருவியைப் பார்த்துத் தலையிலடித்துக் கொண்டாள். அதையும் 'ஷ்!' என்று தேனருவி வாயில் விரல் வைத்துக் காட்டி அவளை அடக்குவதையும் கண்டும் காணாதது போல் கவனித்துக் கொண்டான்.

தங்கவேல் பெரியப்பா தன் வசதிக்கு ஒரு கார் வைத்திருந்தார். தாங்கள் வந்த காரில் பாமாவையும், வேள்பாரியையும் வீட்டில் விட்டு விட்டு வரும்படி ட்ரைவரிடம் சொன்னான். பாரியின் குழந்தைகள் தருணும், தாமரையும் போகமாட்டேன் என்று அடம் பிடிக்கவே, தங்க வைத்துக் கொண்டார்கள். தருணுக்கு மூன்று வயது. தாமரைக்கு ஐந்து வயது. தருணும் இளந்திரையனிடம் தொற்றிக் கொள்ள, அவனும் ஆசையாய் மடியில் அமர்த்திக் கொண்டான்.

''என்னப்பா... குடும்பஸ்தனாயிட்டே!'' என்று தங்கவேல் பெரியப்பா சிரித்தார். ''ஆனா, உன்னை இப்படிப் பாக்க நல்லாயிருக்குப்பா. கல்யாணத்துல இன்ட்ரஸ்ட்டே காட்ட மாட்டேங்கறேன்னு உங்கப்பன் ரெண்டு வருஷமா புலம்பிகிட்டிருந்தார்!'' என்றார்.

''போங்க பெரியப்பா! இருபத்தைஞ்சு வயசுலயே அவர் கல்யாணப் பாட்டுப் பாட ஆரம்பிச்சாச்சு. கல்யாணத்துல இன்ட்ரஸ்ட் வரணும்... மனசுக்குப் பிடிச்ச மாதிரி மனைவி அமையணும் இல்ல...''

''இப்ப எல்லாம் அமைஞ்சுருச்சுங்கறே... ரொம்ப... சரி... நீயாவது நம்ப பரம்பரை மாதிரி ஒண்ணு ரெண்டோட நிறுத்திக்காம ஒரு நாலைந்து குழந்தைகள் இருக்கற மாதிரி பார்த்துக்கோ...'' எனவும் கயல்விழி களுக்கென்று சிரித்தாள்.



''அதுக்குத்தான்... இப்ப... மாமா... டிரெய்னிங் எடுத்துக்கறாரு...'' என்றான் கிள்ளிவளவன். தேனருவி சட்டென்று ஏதோ வேலையிருப்பவள் போல் நகர்ந்தாள்.

எல்லாரும் உறங்கிய பிறகு இளந்திரையன் பெரியப்பாவிடம் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

''நீ சொல்றது புரியுது நம்பி. ஆனா, அந்தப் பொண்ணு மேலே எனக்கு நல்ல அபிப்பிராயமே வர்லையே நம்பி!'' என்றார்.

''எனக்கும்தான்... ஆனா.. என்ன செய்ய? செஞ்சுதான் ஆகணும்...'' என்றான்.

''சரி.. உன்னிஷ்டம்... எனக்கொண்ணும் பிரச்னையில்லை..!'' என்றார்.

★ ★ ★

**பா**ரியும், பாமாவும் வீட்டுக்குள் நுழைந்ததுமே, பாமா,

''என்னடா, ஒரு படையே சாப்பாட்டுக்கு வருதேன்னு பார்த்தேன். நல்லவேளை நம்பியண்ணன் கார்ல கூட்டிட்டு வந்ததாலே பஸ் செலவு மிச்சமாச்சு. அதைச் சாப்பாட்டுக்குச் செலவு செஞ்சுர்லாம்!'' என்றாள்.

பாரி சற்றே வேதனையுடன் அவளைப் பார்த்தான். எப்போதுதான் இவள் தன் குடும்பத்தைப் புரிந்து கொள்ளப் போகிறாள் என்ற ஏக்கம் அதில் தெரிந்தது.

''பாமா... காசு மட்டுமே பிரதானம்னு நெனைக்காதே. அப்புறம்... நிறைய... இழந்துடுவே,'' என்றான்.

''அதை இழக்கற அன்னைக்குப் பார்த்துக்கலாம்!'' என்றாள்.

★ ★ ★

**வி**ருந்து தடபுடலாய் ஏற்பாடு செய்திருந்தாள். கயல்விழியும் கூடமாட நன்றாகவே உதவி செய்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"ஏண்ணி! எங்களுக்கு ஒரு நாளைக்காவது இப்படி விருந்து பண்ணிப் போட்டிருக்கீங்களா..." என்று விளையாட்டுப் போல் கிள்ளி வளவன் கேட்கப் பாமாவுக்கு எரிச்சலாய் வந்தாலும், வாஞ்சையாய்ப் புன்னகைத்துக் கொண்டு,

"நீயும் கல்யாண மாப்பிள்ளையாய் ஆயிருந்தா விருந்து பண்ணிப் போட்டிருப்பேன்!" என்றாள்.

"ஆமாங்கண்ணி, உங்க ஒரு நாள் விருந்துக்காக நான் ஒரு பெரிய விலங்கை மாட்டிக்கணுமா..." என்றான்.

யாரும் எதிர்பாராத விதமாக இளந்திரையன் இடையில் புகுந்து..

"பயலே! அதெல்லாம் உனக்குப் புரியாதுடா... அது ஒரு சுகமான விலங்கு... உங்கண்ணனைக் கேளு... புரியும்!" எனவும், எல்லாரும் சிரித்தார்கள்.

தேனருவியின் முகம் சிவந்தது. ஆனால் எதற்கும் வாயைத் திறக்காமல் அமைதி காத்தாள். அதற்குக் கயல்விழி,

"ஏம்மாமா..! நீங்க என்ன பேசினாலும்... அக்கா... வாயைத் திறக்க மாட்டேங்கறா?" என்றாள்.

"அதையெல்லாம் நம்பிடாதீங்க... மச்சான். அப்புறம் பேச ஆரம்பிச்சாங்கன்னா.. நிறுத்தவே மாட்டாங்க..." என்றான் பாரி.

"பாருடா... கிள்ளி! அனுபவம் பேசுது..." எனவும் எல்லாரும் மறுபடியும் சிரித்தார்கள்.

பொழுது சுகமாகக் கழிந்தது. கடைசியில் புறப்படும் பொழுது பாமா வெகுவாக எதிர்பார்த்த விஷயத்தையும் முடித்துக் கொடுத்தான்.

"பாரி... மச்சான்..! இந்த வீட்டுக்கு நாலாயிரம் வாடகையா? ஊருக்கு வேற பணம் அனுப்பணும் இல்லே! பேசாம நம்ம காம்ப்ளெக்ஸ் அபார்ட்மென்டுக்கு வந்துடுங்க..." என்றான்.



"அப்ப பெரியவர்?" என்றான் பாரி.

"நிர்வாகம் எல்லாம் அவரே பார்த்துக்கட்டும். அவரு அந்தப் பக்கம் கெஸ்ட் ஹவுஸ்ல இருந்துப்பாரு. இல்லே, ரெண்டு ரூம் பிரிச்சுக் குடுத்தர்றேன். நீங்க கணக்கு வழக்குகள் மட்டும் பாத்துக் குடுத்தீங்கன்னா... போதும்..!" என்றான்.

பாமாவின் முகம் மலர்ந்தது. அதற்குப் பிறகு இளந்திரையனிடம் விழுந்து விழுந்து பேசினாள். அதைத் தேனருவி ஒரு வெறுமையான பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் வழியனுப்ப வெளியில் வந்த பாரியிடம் தனியாகச் சொன்னான்.

"மச்சான்... பெரியப்பாவும் வசதியானவர்தான். மகனோட இருக்கப் பிடிக்காம இங்க வந்து நிர்வாகம் பாக்கறாரு. அவருடைய நிர்வாகத்துல நீங்க எக்காரணத்தைக் கொண்டும் தலையிடக் கூடாது. அதை எங்கப்பாவும் சரி, பெரியப்பாவும் சரி, லைக் பண்ண மாட்டாங்க. பெரியப்பா குடுக்கற கணக்குகளை மட்டும் கம்ப்யூட்டர்ல ஃபீட் பண்ணிக்குங்க. ஓ.கே.வா?"

பாரி புரிந்து கொண்டவனாகத் தலையசைத்தான்.

## 13

இரவு உறக்கமே பிடிக்கவில்லை தேனருவிக்கு. பாமா அண்ணி தன்னிடம் பேசும்போது ஒரு மாதிரிப் பேசுகிறாள். ஆனால், தன் கணவனால் கிடைக்கக் கூடிய அத்தனை பலன்களையும் பெற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருக்கிறாள். இதில் எது சரி, எது உண்மை என்ற குழப்பம் மேலிட்டது.

ஊருக்கு வந்த மறுநாளே பிற்பகலில் அவள் மட்டும் தனியாய் இருக்கிற நேரமாய் அழைத்தாள் பாமா.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"என்ன தேனு! அண்ணி ஹெல்ப் மட்டும் வாங்கிக் கறாளேன்னு நினைக்கறியா? என்ன செய்ய? உன்னை மாதிரி வேலைக்குப் போகிற மாதிரி குவாலிஃபிகேஷன் இல்லையே? அதுதான்... வேற வழியில்லாமத்தான் உங்க வீட்டுக்காரர் கிட்டே ஹெல்ப் வாங்கறோம்..!" என்றாள்.

"பரவாயில்லை அண்ணி!" என்றாள் உணர்ச்சியற்ற குரலில்.

"ஆனா... நீ மட்டும் க்ரிப்பை விட்டுக் கொடுத்திராதே.. கொஞ்சம் பணிஞ்சமா... அவ்வளவுதான்... வேல்யூவே... போயிடும்..!" என்றாள் பாமா தொடர்ந்து.

"சரிங்கண்ணி... நம்ம தருண் குட்டியை இவருக்கு ரொம்பப் பிடிச்சிருச்சு..." என்று பேச்சை மாற்றி இரண்டு நிமிஷம் பேசி வைத்தாள்.

குழப்ப மனநிலையோடே இருந்தாள்.

"ஹாய்! ஹனி! என்ன என்னை மறந்தே போயிட்டியா?" என்று ஆர்ப்பாட்டம் செய்தபடி சங்கீதா அன்று மாலை நுழையவும் உற்சாகமானாள்.

★ ★ ★

"என்ன சொல்றா எங்க தேனருவி..." என்றாள் இளந்திரையனிடம்.

"ரொம்ப அழுத்தமா இருக்கா... எதுவுமே சொல்ல மாட்டேங்கறா... அதுதான்... பிரச்னை!" என்றான் இளந்திரையன்.

தேனருவி திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்க்க, அவன் சிரித்துக் கொண்டிருந்தான்.

"சும்மா... தமாஷ் பண்ணினேன், கண்மணி... டோன்ட் வொர்ரி..." என்றான். சங்கீதா கலகலவென்று சிரித்தாள்.



"எப்படி நாங்க ஃப்ரீயா இருக்கற நேரம் தெரிஞ்சுது?" என்று கேட்டாள் தேனருவி.

"பட்சி சொல்லிச்சு... சனிக்கிழமை நாள் பிற்பகலில் மட்டும்தான் நீங்கள் ஃப்ரீயாய் இருப்பீங்கன்னு ஒருத்தர் சொன்னாரு," என்றாள்.

"யாரு...?" என்றாள் வியப்பாக.

"நான்தான்... நேத்துப் பேசினாங்க... அப்ப சொன்னேன்..." என்றான்.

என்கிட்டே சொல்லவேயில்லை என்று கேட்க நினைத் தவள் அடக்கிக் கொண்டாள். தினம் தன்னிடம் எல்லா வற்றையும் சொல்லிக் கொண்டா இருக்கிறான். இல்லை, சொல்லும் விதமாகத்தான் பழகிக் கொண்டிருக்கிறோமா என்று எண்ணிக் கொண்டாள்.

இரண்டே மணி நேரத்திற்குள் இளந்திரையனுக்கும், சங்கீதாவுக்குமிடையே ஒரு நட்பு உருவாகி விட்டதை ஆச்சரியமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"பரவாயில்லையே... நிறைய விஷயங்கள்... தெரிஞ்சு வச்சிருக்கீங்க... சங்கீதா..." என்று பாராட்டினான் இளந்திரையன்.

"நம்பி... சார்! என்னைவிடத் தேனருவிதான் ரொம்ப நாலெட்ஜபிள்... அவகிட்டேதான்... பொது அறிவை வளர்த்துக்கறதெப்படி? புதுசு புதுசா விஷயங்களைத் தெரிஞ்சுக்கறது எப்படின்னெல்லாம் கத்துக்கிட்டேன்," என்றாள்.

"அப்படியா... என்ன?" என்று இளந்திரையன் வியப்பிற்குள்ளானான்.

"லிட்ரேச்சர்ல கொஞ்சம் இன்ட்ரஸ்ட் இருக்குன்னு தெரியும்..." என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"எல்லா ஃபீல்டுலயும் இன்ட்ரஸ்ட் இருக்கு, தெரியுமா! ஆனா, பழகறதுக்குக் கொஞ்சம் டைம் எடுத்துக்குவா. பழகிட்டான்னா... அவளோட ஃப்ரண்ட்ஷிப் ரொம்ப அற்புதமா இருக்கும்!" என்றாள் சங்கீதா - தோழியைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டு.

தேனருவி வழக்கம் போல் அழுத்தமாகப் புன்னகைத்தபடி, "போதும்... சங்கீதா... கேலி செய்யாதே..." என்றாள்.

"சரி... ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேருக்கும் பேசறதுக்கு நிறைய இருக்கும்... எனக்குக் கொஞ்சம் வொர்க் இருக்கு..." என்று அவர்களுக்குத் தனிமை கொடுத்து விலகினான்.

"என்னடி... எப்படி இருக்கு... மேரீட் லைஃப்?" என்றாள் சங்கீதா ஆர்வமாக.

"இருக்கு...!" என்றாள் தேனருவி அசுவாரசியமாக.

"என்னடி இப்படிச் சொல்றே? பணம், பர்ஸனாலிட்டி, அறிவு, இங்கிதம் இத்தனையோட ஒரு ஹஸ்பெண்ட் உனக்குக் கிடைச்சிருக்கிறாரு... பத்தலையோ?" என்றாள்.

"வெளித் தோற்றத்தில் பாக்கறதெல்லாம் நிஜம்ன்னு நாம எப்படிடீ நம்பறது?" என்றாள் தேனருவி.

சங்கீதா திகைத்துப் போனாள். "ஹேய்! சம்திங் இஸ் ராங் வித் யூ!" என்றாள்.

"எக்ஸிபிஷன் போனமே... அப்ப ஒரு ஆள் கூரை மேல் சோத்தைப் போட்டா ஆயிரம் காக்கா பறந்து வரும்னு சொன்னாரே, ஞாபகமிருக்கா!" என்றாள்.

"ஆமா... அதுக்கென்ன! எவனோ ஆகாவழி அப்படிச் சொன்னா... உனக்கென்ன? அதுக்கும் உன்னோட மேரீட் லைஃப்க்கும் என்ன சம்பந்தம் இருக்கு...?" என்றாள்.

அந்தக் கணத்தில் ஹோட்டலில் கணவனை அவள் பார்த்திருக்கவில்லை என்பது புரிந்தது. உடனே இன்னொரு மனம் தவறோ சரியோ தன் தோழி தன் கணவன் மேல் நல்ல



அபிப்பிராயம் வைத்திருக்கிறாள். அதை ஏன் கெடுப்பானேன் என்றும் கூறவே ஏற்றுக் கொண்டாள்.

"இல்லே.. எல்லா ஆம்பளைங்களும் நம்மளை அப்படித்தான் நினைக்கறாங்களோன்னு எனக்கு ஒரு எண்ணம்!" என்றாள்.

சங்கீதா திடுக்கிட்டுப் போனாள். "தேனு... ஏன் இப்படி ஆயிட்டே? நீதானே சொல்வே... யாரைப் பத்தியும் முன்கூட்டியே ஒரு கருத்து வச்சுக்கக் கூடாது. பழகிப் பார்த்துத்தான் புரிஞ்சுக்கணும்னு... நீயே இப்படிப் பேசறே... ஏய், இது உன் லைஃப் விஷயம். ரொம்ப ரோஷக்காரின்னு நெனைச்சுகிட்டு எடுத்தேன் கவிழ்த்தேன்னு எதுவும் பண்ணிடாதே..." என்றாள் கவலையுடன்.

தேனருவிக்கு அவள் சொல்லுவது நியாயமாகவே இருந்தது. "இல்லே. எனக்கு இன்னும் அந்த உறவை யெல்லாம் இயற்கையா ஏத்துக்க முடியலே..." என்றாள்.

"அவரு புரிஞ்சுக்கறாரா?" என்றாள் சங்கீதா கவலையுடன்.

"ம்...!" என்றாள் தேனருவி சிவந்த முகத்துடன்.

"அப்பாடா!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட சங்கீதா, "ஆனா... கஷ்டம்தான்..." என்றாள்.

"எது?" என்றாள் தேனருவி புரியாதவளாய்.

"நீ இப்படி முகம் சிவந்து போய் நிக்கறப்ப, ரெஸிஸ்ட் செய்யறது. பாவம்தான் அவரு..." என்று கலகலவெனச் சிரிக்க.

"ஏய்... வா... அந்த ஹாலுக்குப் போயிரலாம்," என்று அழைத்துக் கொண்டு போனாள்.

எதையோ எடுக்கத் தன் அறையின் கதவருகில் வந்த இளந்திரையனின் காதில் சங்கீதாவின் அந்த வார்த்தைகள் விழச் சிரித்துக் கொண்டான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

புத்தகம் ஒன்றை எடுத்துப் படிப்பவன் போல் கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

அடுத்த அறையில் தன் வீட்டுக்கு வந்த பிறகு முதல் முறையாக அவள் கலகலவெனச் சிரிப்பதையும், முகத்திலும் கண்களிலும் உணர்ச்சிகள் தோன்றப் பேசுவதையும், தான் அவர்கள் கண்களில் படாமல், ஆனால் அவர்கள் தன் கண்ணில் படுகிற இடமாக அமர்ந்து ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டான்.

அந்தக் கணத்தில் அவனுக்கு ஒன்று புரிந்தது. தன் மனைவி இன்னும் தன்னைப் பொறுத்தவரை தன் மனக்கதவைத் திறக்கவேயில்லை என்ற விஷயம்தான் அது.

சிந்தனையிலாழ்ந்தான். ஒரு மணி நேரத்திற்கு மேல் தோழிகள் அளவளாவிய பின்னர் வழக்கமாக எட்டரை மணிக்கு அவன் டிபன் சாப்பிடுகிற நேரம் என்பதால் தேனருவி எழுந்தாள்.

"சாப்பிடலாம்... அவரு சாப்பிடற நேரமாச்சு..." என்றாள்.

டைனிங் டேபிளிலும் அவன் மௌனமாக அமர்ந்தபடி அவர்களைப் பேசவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்லூரிக் கலாட்டாக்களையெல்லாம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

"நம்பி சார், தேனு நிறையப் பரிசுகள் வாங்கியிருக்கா. என்.சி.சி.யில துப்பாக்கி சுடற போட்டியில் மாவட்ட அளவில், மாநில அளவில் பரிசுகள் வாங்கியிருக்கா..." என்றாள்.

"என்ன சங்கீதா...? என்னை இப்படிப் பயமுறுத்துறீங்க? துப்பாக்கின்னவுடனே ஒரு மாதிரிப் படபடப்பாயிருச்சு... பாருங்க!" என்று அவன் சோகமானாற் போல் நடிக்கவும் இருவரும் சிரித்தார்கள்.



"சார்... உங்க வைஃப் பயங்கரமான ஆளு. காலேஜ் டேஸ்லயெல்லாம் புரொஃபசர்ஸ்கிட்டே எனக்கு நிறையத் திட்டு வாங்கித் தந்திருக்கா..." என்றாள்.

"நம்ப முடியலியே..!" என்று அவன் வாயைக் கிளறுவதை உணராமல், அவள் விவரிக்க ஆரம்பித்தாள்.

"ஆமாம்... சார்...! அவங்க பாட்டுக்கு மும்முரமாப் பாடம் நடத்தறப்ப இவ பாட்டுக்கு எதையாவது ஜோக்கா சொல்லிட்டு உட்கார்ந்துருவா. நான் குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சு மாட்டிக்குவேன். இவ கமுக்கமா உட்கார்ந்திருப்பா..." எனவும் தேனருவி களுக்கென்று சிரித்தாள்.

"ஒரு நாள் ஹிஸ்டரி புரொஃபசர் ஏதோ ஒரு வருஷத்துல நடந்த போரழிவைப் பற்றிக் கேள்வி கேட்டுகிட்டிருந்தாங்க. ஒருத்தி பதில் சொல்லத் தெரியாம முழிச்சிகிட்டு நின்னுகிட்டிருந்தா. பேராசிரியருக்குக் கோபம் வந்துடுச்சு.

"என்ன... ஜனங்க எல்லாம் பிக்னிக்கா போனாங்க?"ன்னு காட்டமாக் கேட்கறாங்க. இவ மெதுவா என்கிட்டே, ஆமா, யமலோகத்துக்கு, அப்படீன்னா...!' நான் சிரிச்சுட்டேன்.

"அப்புறம் அவங்ககிட்டே சொன்னா அவங்களே ரசிச்சுச் சிரிச்சாங்க..." என்றாள்.

இளந்திரையன் மனைவியைப் பெருமையாகப் பார்க்க, அவள், "ஏய்! சும்மாயிரேன்டி!" என்று முணுமுணுத்தாள்.

சங்கீதா நிறுத்துவதாயில்லை. "அப்புறம் மறக்கவே முடியாத இன்னொரு ஜோக் நடந்தது... சார்."

'ம்...!" என்று சுவாரசியமானான் - சப்பாத்தியை வாயில் வைத்தபடி.

"எங்க கிளாஸ் தேர்ட் இயர்ல ஒரு பொண்ணு வந்து சேர்ந்தா... அவளுக்குத்தான் ரொம்பப் பெரிய சிந்தனையாளர்னு நினைப்பு. தத்துவம்னு நினைச்சு எதையாவது அபத்தமா

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

உளறுவா. இதுக்கு ஏதாவது பண்ணனும்டீன்னு தேனருவி கிட்டே சொல்லிகிட்டேயிருந்தேன்...'' என்று நிறுத்தித் தேனருவியைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஏய்... வேண்டாம்!'' என்று கெஞ்சுகிற அவள் பார்வையை உதறித் தள்ளி விட்டுத் தொடர்ந்தாள்.

''ம்... சொல்லுங்க... சொல்லுங்க!'' என்றான் இளந்திரையன் ஆர்வத்துடன்.

''ம்... ஒரு நாள் அவள் ஒரு பெரிய ஃபோட்டோ ஆல்பம் கொண்டு வந்திருந்தா. தேனு என்ன செஞ்சா, தெரியுமா? அவளோட சின்ன வயசுப் போட்டோ ஒண்ணையும், ரீசன்டான ஃபோட்டோ ஒண்ணையும் ரெண்டு கைலயும் வச்சுக்கிட்டு... ஏய்! பிரதிபா... இதுல எது நீ!'' என்றாள்.

''இது என்ன கேள்வி என்பது போல் பார்த்த பிரதிபா, 'ஏன்? ரெண்டுமே நான்தான்!' என்றாள்.

''அதெப்படி? ரெண்டுலயும் நீ ஒரே மாதிரி இல்லையே?' என்றாள்.

''பிரதிபா முழிக்கறா. உடனே தேனருவி அவளோட சின்ன வயசுப் போட்டோ காட்டி, 'இதுல இருக்கற மாதிரி இப்ப நீயில்லே. இப்ப இருக்கறதுதான் நீன்னா அந்தப் போட்டோவில் நீயில்லே, அப்படீன்னா. நாங்க எல்லாரும் சிரிக்க ஆரம்பிச்சோம். பிரதிபாவுக்குக் கோபம் வந்துடுச்சு. 'என்னடி விளையாடறியா? தோற்றம் மாறத்தானே செய்யும். உள்ளே இருக்கற ஆளு தானே நாம, அப்படீன்னா?'

''உடனே தேனு, சரி அப்படியே வச்சுக்க. உள்ளே இருக்கிற நீங்கறது யாரு? மனசா.. மூளையா.. அறிவா? அதெல்லாம் தான் நீன்னா அதெல்லாம் எங்கே ஃபோட்டோவில் காணமேன்னு சரமாரியாப் போட்ட கேள்வியிலே பிரதிபா துண்டைக் காணோம் துணியைக் காணோம்னு கதறிகிட்டு ஓடிட்டா...''



அதற்குள் சாப்பிட்டு முடித்த இளந்திரையன் வாஷ் பேசினில் கை கழுவிவிட்டு வந்து மனைவியின் அருகில் நெருங்கி நின்றான்.

''அப்புறம் என்ன ஆச்சு?'' என்றான். ''என்ன ஆச்சா? அன்னியோட பிரதிபா தத்துவம் பேசறதை விட்டுட்டா..!'' என்றாள். குலுங்கிச் சிரித்தான்.

தேனருவி சட்டென்று வெட்கம் தாளாதவளாய் இளந் திரையனின் தோளில் முகம் பதித்தாள்.

''ஆமா. அவ எப்பப் பாரு உளறிக் கொட்டி.. கிளறி மூடி... அலம்பல் பண்ணிகிட்டிருந்தா. அதான்... அப்படிச் செஞ்சேன்..!'' என்று முணுமுணுத்தாள்.

இளந்திரையன் மனைவியின் முகத்தை ஆழ்ந்து விழுங்குகிற பார்வையுடன் பார்க்க, சங்கீதா இங்கிதமறிந்து கைகழுவுபவளைப் போல் அந்தப் பக்கம் போனாள்.

அவன் மௌனமாக நிற்க, அவள் நிமிர்ந்து பார்த்தாள். இதுவரை தான் கண்டிராத அந்தப் பார்வையைக் கண்டு திகைத்தாள்.

''இவ்வளவெல்லாம் யோசிக்கறவளா நீ?'' என்று அவன் அடிக் குரலில் முணுமுணுக்க... அவள் விக்கித்துப் போய் நின்றாள்.

சங்கீதா வரவும் பாத்திரங்களை வைப்பது போல் சமையலறைக்குள் போய் விட்டாள்.

ஓரிரு நிமிடம் கழித்துத் திரும்ப வருகையில் சங்கீதாவிடம், ''உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... சங்கீதா. நீங்க அடிக்கடி வாங்க!'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அடுத்த கணம் தேனருவியின் மனம் கூம்பி விட்டது. ஆனால், அவள் வருவதற்கு முன்பாக அவன்,

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"இந்த வீட்டுக்கு வந்ததிலேயிருந்து இன்னைக்குத்தான் அருவி இவ்வளவு கலகலப்பா இருந்து பாத்திருக்கேன்!" என்று சொன்னதையும்,

"ஆமா... சார்! இடையிலே ரொம்பக் கஷ்டப்பட்டுட்டா..." என்று தோழிக்காகச் சங்கீதா பரிவுடன் பேசியதையும் தேனருவி அறிந்திருக்கவில்லை.

அறிந்திருந்தால் அடுத்து வந்த எத்தனையோ பிரச்சினைகளை அவள் தவிர்த்திருப்பாள். "அப்படியென்ன எல்லாப் பெண்களிடமும் வழிசல் வேண்டியிருக்கு!" என்ற எண்ணம் தோன்றியவுடன் மீண்டும் நத்தை போலச் சுருங்கி விட்டாள்.

வழக்கம் போல் தன்னறைக்குள் போய் விட்டாள்.

"ஹேய்...! அருவி...! உன்கிட்டே கொஞ்ச நேரம் பேசலாம்னு நெனச்சேன்..." என்று முதல் முறையாக அவளது படுக்கையறைக்குள் அவன் நுழைவது தெரிந்ததும் ஆழ்ந்து உறங்குபவள் போன்ற பாவனையுடன் கண்ணை மூடிக் கொண்டாள்.

சற்று நேரம் நின்று அவள் முகத்தைத் தாபத்துடன் பார்த்த இளந்திரையன் லேசான ஒரு பெருமூச்சுடன் திரும்பிச் செல்வதை அறிந்தும் அப்படியே கிடந்தாள்.

## 14

கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓடியதே தெரியவில்லை தேனருவியும், இளந்திரையனும் அவ்வளவு பிஸியாய் இருந்தார்கள்.

வார நாட்களில் அலுவலக வேலை. சனி, ஞாயிறுகளில் ஊர்ப் பக்கம் இருந்த உறவினர்களின் வீடுகளில் விருந்து, இடையிலே உள்ளூரில் மற்ற சொத்துக்கள் தொடர்பான வேலை என்று இருவரும் நேரம் இல்லாமல் அலைந்தார்கள். களைத்து உறங்கினார்கள்.



என்றாலும் வாழ்க்கை சுவாரசியமாகவே இருந்தது.

தேனருவிக்கு இது மிகவும் பிடித்திருந்தது. ஆனால், மூன்று வாரங்களுக்குப் பிறகு நான்காவது வாரமும் இதே கதை தொடரவும் செல்லம்மா கடுப்பானார்.

"டேய்! நம்பி.. என்னதான் நினைச்சுகிட்டிருக்கீங்க.. கொஞ்சம் அம்மா, அப்பாவுக்கும் நேரம் ஒதுக்குங்க..." என்றார்.

இளந்திரையன் குழந்தையைப் போல் சிரித்து அம்மாவின் கோபத்தைச் சமாளித்தான்.

"என்னம்மா... நீ..? நீதானே போன மாசம் உறவுக்காரங்கள்ளாம் கோபிச்சுக்கறாங்க அப்படீன்னே? இப்பக் கதையையே மாத்தறியே!" என்றான்.

செல்லம்மா சற்றே தணிந்தார்.

"பின்னே என்னடா? உங்க கூட இருக்கவே முடியலை. எங்களுக்கும் ஏக்கம் வராதா?" என்றார்.

இளந்திரையன் சற்றும் தயங்காமல் அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். கன்னத்தில் முத்தம் வைத்தான்.

"சரி... சரி.. நாளைக்கும் நாளன்னைக்கும் தொடர்ந்து இங்கயே இருக்கோம். திங்கள் செவ்வாய் மில் பாத்த மாதிரியும் ஆச்சு. உங்ககூட இருந்த மாதிரியும் ஆச்சு. கோபிச்சுக்காதே செல்லம்மா.. என் செல்ல அம்மா!" என்று தாடையைப் பிடித்துக் கொஞ்சவும் அம்மா சிரித்து விட்டார்.

தேனருவி கூட இதைப் பார்த்துப் பேச்சற்றுப் போனாள். மலைத்துப் போய்ப் பார்த்தாள்.

"ஏய்! என்ன எங்கம்மாவைக் கொஞ்சறதைப் பார்த்து நீ எதுக்குக் கண்ணு போடறே?" என்று செல்லமாக அவள் தோளில் ஒரு தட்டுத் தட்டவும் அவள் பார்வை தாழ்ந்தது. முகம் சிவந்து விட்டது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் பார்வை அவள் மேல் படிந்து மீண்டது. அம்மா மீண்டும்,

"போடா, நீ வேண்ணா மில்லுக்குப் போ. புள்ளைய ரெண்டு நாள் எங்களோட இருக்க விடு!" என்றவுடன் அவன் சோகப் பெருமூச்சு விட்டான்.

"இத பார்றா... எப்பவும் இருக்கற மகன் வெளிய போனாலும் பரவாயில்லையாம். இப்ப வந்த மருமக கூட இருக்கணுமாம். எந்த ஊர் நியாயம் இது? அப்பா! நீங்களாவது நீதி சொல்லுங்கப்பா..!" என்று அப்பாவை அழைக்கவும் அவர் சிரித்தார்.

"ஆமடா... உங்கம்மா சொல்றது நியாயம்தானடா. அவளையாவது இருக்க விடு... ரெண்டு நாளைக்காவது நானும் நல்ல சாப்பாடு சாப்பிடறேன்..." என்று பெரிதாகச் சிரிக்கவும் செல்லம்மா முறைத்தார்.

"ஹேய்! அருவி... ரொமான்டிக் சீன் ஆரம்பிச்சாச்சு... நாம அந்தப் பக்கம் போலாம்... வா..." என்று அப்பாவை மகன் இயல்பாகக் கிண்டல் செய்வதையும்...

"புரிஞ்சாச் சரி...!" என்று அவர் மேலும் சிரிப்பதையும் பார்த்த தேனருவிக்கு ஒரே ஆச்சரியம். அவனோடு கூட நகர்ந்தாள்.

"அப்பா... ரொம்ப ஜாலி... டைப்..." என்று அவன் கன காரியமாக அவளிடம் கிசுகிசுக்க,

"ஓ!" என்று அவளும் சீரியஸாய்க் கேட்டுக் கொண்டாள். ஆனால், அடுத்த நாள் திங்கட்கிழமை போட்ட திட்ட மெல்லாம் மாறிப் போய் விட்டது.

★ ★ ★

பெரிய மில்...!

அவள் உண்மையாகவே திகைத்துப் போனாள். இவ்வளவு பெரிய மில்லை அவள் கற்பனை செய்து பார்க்கவில்லை.



சுற்றிக் காட்டினான். அக்கம் பக்கத்தில் கிராமங்களில் இருந்து நிறையப் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத் திருந்தார்கள். இன்னொன்றும் அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

இளந்திரையன் அதிகமாக அங்கே பேசுவதில்லை. அளவான வார்த்தைகள் மெதுவான குரலில். ஆனால் அவன் கண்ணசைவில் அங்கே காரியங்கள் நடந்தன.

அனுபவம் வாய்ந்த ஜி.எம். அங்கே பணிவாக நிற்பதையும், பேசுவதையும் அவளுக்கும் மரியாதை கொடுப்பதையும் பார்த்து அவளுக்கு நெஞ்சு கொள்ளா மலைப்பு. வாயடைத்துப் போய் வந்தாள்.

அலுவலகத்திற்கு வந்தவுடன், "என்ன... அருவி... எப்படி நம்ம மில்லு...?" என்றான்.

அவள் பேசவே திணறினாள். "நான்.. நான்.. இவ்வளவு எதிர்பார்க்கலை?" என்றாள் மெல்லிய குரலில்.

"அப்பா... உருவாக்கினது. நான் அதை அப்படியே காப்பாத்திக் கொண்டு போயிட்டிருக்கேன்..." என்றான்.

அந்த நேரத்தில்

'ஆ...!' என்ற அலறல் கேட்டது.

மனிதர்கள் பலரும் அங்கும் இங்குமாகப் படபடப்பாக ஓடும் ஓசையும் கேட்டது.

அவள் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன், "இரு... அருவி...! பாத்துட்டு வந்துடறேன்..!" என்று போனான். அவளும் அலுவலக அறையை விட்டு வெளியே வந்தாள்.

இளைஞன் ஒருவனுக்கு எக்குத் தப்பாய் மெஷினில் அடிபட்டிருந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

வலது கால் முழங்காலுக்குக் கீழ் பெரிய எலும்பு முறிவு. வலியில் துடித்தான்.

இளந்திரையன் சற்றும் தயங்காமல் அவனைத் தூக்கித் தோளில் போட்டுக் கொள்வதையும் ஆம்புலன்ஸை எடுக்கச் சொல்லு என்று குரல் கொடுப்பதையும் அவன் வேகத்தைப் பார்த்தவுடன் மின்னல் வேகத்தில் எல்லாரும் செயல் படுவதையும் பார்த்தாள்.

ஆம்புலன்ஸ் புறப்பட்டவுடன், ''அருவி! வா!'' என்று குரல் கொடுத்தபடி காரை எடுத்தான். அவளும் ஓடிப்போய் ஏறிக் கொண்டாள். கால் மணி நேரப் பயணத்தில் பக்கத்து டவுனில் இருந்த ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு டாக்டரிடம் பேசினான்.

''நல்ல வேளை சார், உடனே வந்தீங்க!'' என்ற டாக்டர் ஆபரேஷனுக்கு விரைந்தார்.

ஜி.எம்மிடம், ''சார், ஆபரேஷன் முடிந்தவுடன் தகவல் சொல்லுங்க.. என்ன தேவையோ செஞ்சு குடுங்க...'' என்று கிளம்பினான்.

மௌனமாகவே வந்தான். அவளும் அமைதி காத்து உடன் வந்தாள்.

வீட்டில் இறங்கும்போது மட்டும், ''அம்மாகிட்டே இப்ப சொல்ல வேண்டாம்... அருவி. ரொம்பக் கவலைப்படுவாங்க!'' என்றான்.

அவள் சரியென்று தலையாட்டினாள்.

அப்பாவிடம் மட்டும் விவரம் சொன்னான் போலும். அவனும் அப்பாவும் ஹாலில் அமர்ந்து கொண்டார்கள்.

அம்மா வந்து, ''சாப்பிடலையாப்பா...!'' என்று கேட்கவும், ''அம்மா.. நானும் அப்பாவும் ஒரு முக்கியமான ஃபோன் காலை எதிர்பார்க்கறோம்!'' என்றான்.



அம்மா, ''ஓ... சரி!''யென்று போய் விட்டார்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு ஆபரேஷன் சக்ஸஸ். ஒன்றும் பிரச்னையில்லை. ஆனால், நன்றாக நடப்பதற்கு மூன்று மாதங்கள் ஆகும்... என்றார்கள்.

அதற்குப் பிறகுதான் அவன் முகம் தெளிவடைந்தது. உணவருந்த வந்தார்கள். பிறகுதான் அம்மாவிடமும் விஷயம் சொன்னார்கள். .

''அம்மா... சின்ன வயசு... கால் வராமப் போனா நிலைமை என்ன ஆகறது..!'' என்று அவன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டான். அதற்குப் பிறகு அப்பாவும், மகனும் மேற்கொண்டு என்ன செய்வது என்று பேசிக் கொண்டு அந்தப்புறம் போனார்கள்.

அம்மா.. அவளிடம் சொன்னார். ''பாத்தா.. ரொம்ப கெடுபிடியானவன் மாதிரி தெரியும். ஆனா.. ரொம்ப இரக்க சுபாவம் உள்ளவன்!'' என்றார் பெருமையாக. அவளும், ''அத்தே! அந்தப் பையனை அப்படியே தூக்கித் தோள்ல போட்டு ஆம்புலன்ஸுக்குக் கொண்டு போனாரு..!'' என்றாள்.

''ஆமா ஒருத்தருக்குக் கஷ்டம் நேரும்போது நாம அந்தஸ்து பாத்துகிட்டுத் தள்ளி நிக்கக்கூடாது. எல்லாத்தைக் காட்டிலும் உயிர் விலை மதிப்பில்லாதது. அப்படீம்பான்...'' என்றார்.

அவளும் சற்று நெகிழ்ந்து போனாள். அவன் பிற்பகலில் மில்லுக்குப் போய் விட்டான். மாலையும் கூட வருவதற்கு நேரமாகும் என்று சொல்லிவிட்டுப் போனான்.

அப்பொழுது அவளுக்குத் தோன்றியது. ஒருவேளை அளவு கடந்த இரக்கத்தினால்தானோ தன்னைக் கல்யாணம் செய்து கொண்டது என்று.

அடிக்கடி, ''எந்த நிபந்தனைக்கும் ஒத்துக்குவீங்களா?'' என்று கேட்டபோது, ''யாருடைய கௌரவமும் குறையாத அளவுக்கு

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

எதுவானாலும் சரிங்க சார்!'' என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

எல்லாப் பெண்களையும் போல எளிதாக ஒத்துக் கொள்ள மாட்டாள் என்று இந்த ஏற்பாட்டைச் செய்தாரோ? இல்லாவிட்டால்... கூரை மேல் சோறு என்ற வார்த்தைப் பிரயோகம் செய்கிறவர் தன் தகுதிக்குக் குறைவான இடத்தில் கல்யாணம் செய்து கொள்வாரோ?

அவனது உறவினர் மட்டத்தில் அவன் இப்படி ஒரு சாதாரணக் குடும்பத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டது குறித்த குறுகுறுப்பு இருந்தது. ஆனால், எதையும் காட்டிக் கொள்ளாமல் பழகினார்கள்.

இதுவரையிலும் இருந்ததை விட இன்றைக்கு அவர்களது அந்தஸ்துக்கும், தங்களுடைய அந்தஸ்துக்கும் இடையே இருந்த வித்தியாசம் மலைக்கும், மடுவுக்கும் உள்ளது என்பது புரிந்தது.

இன்னமும் கூடத் தன் திருமணம் ஒரு கனவாகவே அவளுக்குத் தோன்றியது.

அடிபட்ட இளைஞனைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு சுமந்ததைப் போலவே, இரக்கத்தால் தன் பாரத்தையும் தூக்கிப் போட்டுக் கொண்டானோ? ஆனால், எதற்காக?

பெண்களைப் பணத்துக்குப் பணிகிறவர்கள் என்று நினைக்கிறவன் தன்னை எதற்குக் கல்யாணம் செய்து கொள்கிறான்?

அவளுக்கே ஒன்றும் புரியவில்லை.

அன்றிரவு!

தனிமை கிடைத்த போது அவன் வழக்கம் போல் விரைவில் உறங்கி விடவில்லை.

மாறாகக் கட்டிலில் அந்தப் பக்கம் தலைக்கு அணையாகக் கைகளைக் கோர்த்துக் கொண்டு விட்டம் பார்த்தபடி,



''அருவி! இன்னைக்கு நிஜம்மாவே பதைச்சுப் போயிட்டேன். இருபது வயசு கூட முடியலியாம், அந்தப் பழனியப்பனுக்கு.. நல்லவேளை. இங்க டவுன்ல ஒரு நல்ல டாக்டர் இருக்கறாரு. ஒண்ணு தெரியுமா? எலும்பு முறிவுக்கெல்லாம் அடிபட்டவுடனே கொண்டு போயிடணும்!'' என்றான்.

''ஆமா... கோல்டன் அவர்ன்னு சொல்லுவாங்க. எனக்குத் தெரிஞ்சு ஒரு ஹாஸ்பிடல்லே உடனே கொண்டு வந்ததனாலே துண்டாகிப் போன கையையே சேர்த்து ஆபரேட் பண்ணிட்டாங்க...'' என்றாள் தேனருவி.

''ஆமா...! கோல்டன் ஹவர்தான். அதுதான் பதைச்சுப் போய் ஓடினேன்.''

தேனருவி ஆழமான குரலில், ''அத்தை சொன்னது சரிதான்...'' என்றாள்.

அவன் வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

''என்ன சொன்னாங்க...?'' என்றான்.

''உங்களுக்கு ரொம்ப இரக்க சுபாவமாம்!'' என்றாள்.

''ஓ...!'' என்றான். லேசாகப் புன்னகைத்தான்.

அவள் கட்டிலில் அமர்ந்தபடி தன் வலக் கரத்தால் படுக்கையை நீவிக் கொண்டு,

''ஒருவேளை... ஒருவேளை...'' என்று இழுத்தாள்.

அவன் விசித்திரமாய்ப் பார்த்தான்.

''அவுட் வித் இட்... டார்லிங்...'' என்றான் குறும்பாய்ச் சிரித்தபடி.

''ஒருவேளை... இரக்க சுபாவத்தால்தான்... என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டீங்களோ...?'' என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

ஒரு கணம் அவன் கண்கள் சுருங்கின. சட்டென்று சிரித்து விட்டான்.

''அட... ஆண்டவா!'' என்று சோகமானான். எழுந்து அமர்ந்தான். கிறக்கக் குரலில்,

''இல்லே! இப்படி அற்புதமான ஐடியாவெல்லாம் உனக்கு எங்கேயிருந்து கிடைக்குது?'' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ''பின்னே? உங்க வசதிக்கும்... எங்க வசதிக்கும்... ஏணி வச்சாக் கூட எட்டாது!'' என்றாள் முணுமுணுப்பாக.

''ஹேய்!'' என்று சிரித்தான். ''இப்ப எதுக்குக் கஷ்டப்பட்டு ஏணி வைக்கணும்?'' என்றான். மீண்டும் சிரித்தான்.

''இல்லே! பொதுவாகப் பணக்காரங்களுக்கு எல்லாமே... எளிசாக் கிடைச்சிருமாமே..!'' என்றாள் ஆழமான குரலில்.

அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவன் எழுந்து சுற்றி வந்து அவளருகில் நெருங்கி நின்றான்.

''அப்படியா என்ன? உன்னை மாதிரிப் பெண்கள் கூட அப்படியெல்லாம் எல்லாத்தையும் தூக்கிக் குடுத்திருவீங்களா, என்ன?'' என்றான்.

அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி முகம் நோக்கிக் குனிந்தான். அவளும் தன்னை மறந்து இழைந்து கொடுத்தாள்.

உணர்வின் ஆழத்துக்குப் போகையிலேயே சட்டென்று அவளுக்குப் புரிந்து போனது.

அப்படிச் சட்டென்று வளைந்து கொடுக்க மாட்டோம் என்று தெரிந்தவுடன்தான் கல்யாணம் போலும் என்று.

இறுகிப் போன அவள் முகத்தைப் பார்த்து, ''போச்சுரா... ஆரம்பிச்சுட்டா...!'' என்று முனகியபடி விடுவித்தான்.

''ஹேய்! வாட்ஸ் யுவர் பிராப்ளம்..?'' என்றான்.



''தெரியலே...'' என்று முணுமுணுத்தாள்.

''நான் சொல்றேன்... ஓவர் அனாலிசிஸ். எல்லாத்துக்கும் காரண காரியம் பார்க்கறது...'' என்று பகபகவென்று சிரித்தான். பிறகு திகைப்பும் நடுக்கமுமாய் அவள் மறுப்புணர்வைக் காட்டிய போதும் கைப்பிடிக்குள் கொண்டு வந்தான்.

''இரக்கத்துக்காகவெல்லாம்... ஒருத்தன் வாழ்க்கையை விலை பேச முடியா? இந்த உணர்வு வேற... இதுக்கு விலை வேற...'' என்று சிரித்தபடி அவளைத் தன்னருகில் இழுத்தான்.

விலை என்ற வார்த்தை அவளை வெகுவாகத் தாக்கியது என்பதை அவன் உணரவில்லை. மேற்கொண்டு சிந்திக்கவும் அவனை அவள் அனுமதிக்கவில்லை.

''உரிமைக்காரன் நான்... எத்தனை நாளைக்குத் தப்பிப்பே? நானும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமைசாலி மாதிரி வேஷம் போடறது...?'' என்று இயல்பாய் அவன் பேசிய வார்த்தைகள் எல்லாம் அவளுக்கு வேறு விதமாகவே ஒலித்தன. எனினும்... அவளால் தடுக்க முடியவில்லை.

பின்னிரவு நேரத்தில்...!

அவன் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்க, அவள் தூங்காமல் ஆனால் அசையவும் விரும்பாமல் படுத்திருந்தாள்.

அவளுக்குத் தன் மீதே முதன் முதலாகக் கோபம் வந்தது. அப்படியொன்றும் அவன் பரிச்சயமும், உறவும் தனக்குப் பிடிக்காதவையாய்ப் போய்விடவில்லை என்ற உண்மையால் எழுந்த கோபம்தான், அது.

## 15

மறுநாளில் எல்லாம் இளந்திரையன் உற்சாக வெள்ளத்தில் மிதந்தான். நேர்மாறாகத் தேனருவி குழப்பத்தில் ஆழ்ந்தாள். மனது இரு விதமாகவும் வேலை செய்தது.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தான் என்ன பெரிய ரதியா? இல்லை... கிடைக்க வொண்ணாத மாணிக்கமா.. ஆனாலும்.. இளந்திரையன் தன்னைத் திருமணம் செய்து கொண்டானே! கௌரவமாக நடத்துகிறார்கள். எல்லா உரிமையும் தந்திருக்கிறார்கள். இன்னும் என்ன வேண்டுமாம் என்று ஒரு மனது கேள்வி கேட்டது.

இன்னொரு மனதோ, யாருக்குத் தெரியும்? இந்தப் பணக்காரர்கள் எல்லாம் படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில் என்கிற மாதிரி ரகமானவர்கள்தான். வெற்றி என்பதுதான் இலக்கு. நினைத்ததை அடைய வேண்டும் என்பதுதான் அவர்களைப் பொறுத்தவரை வெற்றி என்று மற்றவர்கள் பேசக் கேட்டிருக்கிறாள். ஏன்.. அப்பாவே மானேஜராக இருக்கும்போது தன்னுடைய அலுவலகக் கவலைகளை அவளிடம் பகிர்ந்து கொண்டது உண்டு.

''அம்மா, இந்த முதலாளிகளிடம் எல்லாம் பார்த்துப் பழக வேண்டும். அவர்கள் சிரிக்கிறார்களே என்று நாம் நெருங்கி விடவும் முடியாது. நெருப்பில் குளிர் காய்கிறாற் போலன்னு வள்ளுவர் சொல்றாரே. அது மாதிரி இருந்துக்கணும். நெருங்கினால் சுடும். விலகினால் பலன் இல்லை. விலகவும் முடியாது. என்ன செய்யறது?'' என்பார்.

உரிமைக்காரன் நான் என்று அவன் தன் உரிமையை நிலை நாட்டும்போது தான் எந்த விதத்தில் மறுக்க முடியும்? ஆனால், இன்னொரு கோணத்தில் பார்த்தால், அப்படியொன்றும் கெட்டவனாகவும் இல்லையே என்று பலதும் எண்ணிக் குழம்பிப் போனாள்.

அவள் மௌனத்தை அவன் வெட்கம் என்று எடுத்துக் கொண்டதும் அவளுக்கு வசதியாகப் போயிற்று. வழக்கம் போல் அவள் அம்மாவிடம் கூட வாயடிக்காமல் இருக்கவும். பிற்பகல் உணவுக்கு வந்த அவனிடம்,



''என்னடா.. ஆச்சு இவளுக்கு? என்னமோ திடீர்னு சைலன்ட் ஆயிட்டா?'' என்று செல்லம்மா கேட்கவும், அவன் தேனருவியைக் குறும்பாகப் பார்த்தபடி சிரித்தான்.

''அது.. அவ.. என்று சிரித்தவன், ''என்னம்மா.. நீ, எல்லாத்தையும் கேட்டுகிட்டு...'' என்று மழுப்பவும் அவரும் சட்டென்று புரிந்து கொண்டார் போலும்.

''சரி.. சரி.. உங்க பிரச்னையாச்சு. நீங்களாச்சு..!'' என்று விலகிக் கொண்டார்.

தங்கள் அறைக்கு ஓய்வுக்கு வந்ததும், ''ஹேய்! என்ன ஆயிடுச்சு..? இப்ப இப்படி சைலன்டா ஆயிட்டே!'' என்றான் இதமான குரலில். நெருங்கி நின்றான்.

அவள் அவன் முகம் பார்க்காமல் கீழே பார்த்தபடி நின்றாள்.

''அட... ஆண்டவா! எப்படித்தான் உன்னைச் சரி செய்யப் போறேனோ.. தெரியலை..!'' என்று கிண்டல் செய்து சிரித்தான். பிறகு அந்தக் கிண்டலை அவள் ரசிக்கவில்லை என்பதை உணர்ந்து பொதுவாகப் பேசி இயல்புக்குக் கொண்டு வந்தான்.

''அந்தப் பழனியப்பன் எப்படி இருக்காரு?'' என்றாள்.

''ஆபரேஷன் நல்லபடியாய் முடிஞ்சுதில்லே? இனி கொஞ்ச நாளைக்கு லீவ்தான். அவர்களுக்கெல்லாம் மெடிக்கல் இன்ஷுரன்ஸ் இருக்கு. சம்பளத்தோட லீவு குடுக்கற மாதிரி ஏற்பாடு செஞ்சிருக்கு...'' என்றான்.

அவள் முகத்தில் நிம்மதியுணர்வு தெரியவும், ஆழ்ந்து பார்த்தான். பிறகு நீண்ட பெருமூச்சு விட்டவனாக,

''ம்... யார் யாருக்கோ கை, கால் ஒடிஞ்சா கவலைப்படறே! இந்தக் காதல் கணவனின் மனசு ஒடிஞ்சு போகக் கூடாதேன்னு கொஞ்சமாவது யோசிக்கறியா?'' என்று இழைந்தான்.

''என்ன இது.. பகல் நேரத்துல?'' என்று விலகினாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''அப்ப சரி...'' என்று அவன் கூறவும், அவள் கேள்விக் குறியாய்ப் பார்க்க...

''பகல்ல வேண்டாம்னா நைட்ல பர்மிஷன் உண்டுன்னு தானே அர்த்தம்?'' என்று சிரித்தபடி ஓய்வுக்காகச் சாய்ந்தான்.

அவளும் அவசரமாக ஏதோ வேலையிருப்பவள் போல் நகர்ந்து விட்டாள்.

கணவன் அலுவலகம் போனவுடன் அவளும் சற்று நேரம் ஓய்வெடுத்தாள். ஊருக்கு அலுவலகத்துக்கு ஃபோன் செய்து இருக்குமிடம் எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருக்கிறதா என்று விசாரித்தாள். வீட்டுக்கு ஃபோன் செய்து வேலைக் காரர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்தாள். ஃபோனை வைக்கிற நேரம்,

''வேலம்மா! மறக்காம செடிகளுக்கெல்லாம் தண்ணி விடணும். அந்தப் புதுச் செடி.. அதான் வெள்ளை ரோஜா.. மொக்கு விட்டிருந்துச்சே. பூத்திருச்சா?'' என்று ஆர்வமாக விசாரித்தாள். அம்மா வீட்டுக்கு ஃபோன் செய்தாள். அப்பாவின் உடல்நலம், ஒழுங்காக மருந்து சாப்பிட்டாரா என்றெல்லாம் விசாரித்து வைத்தாள்.

பகலில் தூங்கும் வழக்கமில்லை யாதலால் அந்த நேரத்தில் துறுதுறுவென்று ஏதாவது செய்து கொண்டிருந்தாள்.

மாமனாரும், மாமியாரும் ஓய்வெடுத்து வருவதற்குள்ளாக ஏதாவது டிபன் செய்து வைக்க வேண்டும் என்று பரபரத்தபடி தயாரித்தாள்.

பணியாரம் செய்தாள். தொட்டுக் கொள்ளத் தக்காளிச் சட்னி செய்தாள்.

நாலு மணி வாக்கில் எழுந்து வந்தவர்களுக்கு அவள் சூடாக டிபனும், தேநீரும் கொடுக்கவும் நெகிழ்ந்து போனார்கள்.

''ஏம்மா சிரமப்படுத்திக்கறே!'' என்றார் மாமனார்.



''என்ன சிரமம், மாமா... எனக்கும் இதெல்லாம் பிடிச்சுதான் இருக்கு. அம்மா வீட்டில் ஏழெட்டுப் பேருக்குச் சமைச்சுப் பழகினவளுக்கு இதெல்லாம் சிரமமே இல்லை மாமா...'' என்றாள்.

அந்த நேரம் இளந்திரையனும் வந்தான்.

''அம்மா... சீக்கிரமே.. வந்துட்டேன். கோயிலுக்குப் போலாம்மா!'' என்றான்.

பணியாரம் பார்த்து, ''ஹை! சூடான பணியாரம்!'' என்று ஆசையாய்ச் சாப்பிட்டான்.

''அம்மா, உன் மருமகளோட ஒரே தொல்லைம்மா. ஒரு இட்லி வேஸ்ட்டாக விடமாட்டா. இத பாருங்க. வேஸ்ட் பண்ணாதீங்க. இந்த ஒரு இட்லிக்குப் பின்னால எவ்வளவு உழைப்பு இருக்கு தெரியுமா? ஆறு மாசம் நெல்லா விளைஞ்சு அரிசியா ஆகி வீட்டுல ஆறு மணி நேரம் ஊற வச்சு... கிரைண்டர்ல அரைச்சு... ஆவியில வேக வச்சுன்னு எத்தனை உழைப்பு! வேஸ்ட் பண்றிங்களே, அப்படீம்பா!'' என்றான்.

மாமனாரும், மாமியாரும் சிரித்தார்கள். ஆனால், மரு மகளின் கருத்துக்கு அழுத்தமாக ஆதரவும் தெரிவித்தார்கள்.

''அவ சொல்றதுதான்டா கரெக்ட்!'' என்றார்கள் கோரஸாக.

''போச்சு. எல்லாரும் ஒண்ணு சேர்ந்துட்டீங்க. நமக்கு மதிப்பே இல்லாமப் போச்சு. டெபாசிட் இல்லாத நிலைமையா ஆயிடுச்சு...'' என்று அவன் பொய்யாய்ப் புலம்ப, மீண்டும் சிரித்தார்கள்.

கோவிலுக்குப் போய் வந்தபின் இரவு உணவு தயாரிக்க ஆரம்பித்தாள்.

''சப்பாத்தி போடட்டுமா?'' என்று அவன் உதவிக்கு வந்து நிற்கவும் அவளுக்கு ஆச்சரியமாகப் போனது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''இதெல்லாம் தெரியுமா?' என்றாள். அப்போது அம்மாதான் சொன்னார்.

''சின்னதிலேருந்தே எனக்கு ஹெல்ப் பண்ணுவான். அம்மா..! உனக்கு மக இல்லையேங்கற குறையே தெரியக்கூடாதும்மா என்று எல்லாம் செய்வான்!'' என்றார். ஆனால், அதை வைக்கிறேன்.. இதை எடுக்கிறேன் என்றபடி ரகசியமாக அவளிடம் வம்பு செய்து கொண்டிருந்தான்.

''ப்ளீஸ்.. நம்பி!'' என்று அவள் கெஞ்சவும்தான் வழிக்கு வந்தான்.

இரவு நெருங்க அவன் முகம் மலர்ந்து கொண்டே போனது. அவள் மனத்திலோ திகில் கூடிக் கொண்டே வந்தது.

மெல்லத் தயங்கியபடி மேலே வந்தாள். ஆனால் இன்று அவன் அவளைப் புரிந்து கொண்டவனாகவோ என்னவோ இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தான்.

மெது மெதுவாக அவள் மறுக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி அவளையும் அவளுக்கே புரிய வைக்கிறவன் போல் தன் காரியத்தையும் சாதித்துக் கொண்டான்.

★ ★ ★

பன்னிரண்டு மணியிருக்கும்!

இளந்திரையன் திரும்பிப் படுத்தவன் அருகில் மனைவியைக் காணாமல் திகைத்தான்.

எழுந்து தங்கள் அறையின் முன்னாலிருந்த அறைக்கு வந்தான்.

அவள் சோஃபாவின் மேலே திகைத்துப் போய் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். பார்வை எதையோ வெறித்தபடி இருந்தது. இயல்பாய் அருகில் வந்து, ''என்ன... அருவி?'' என்றான்.



அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். ஒன்றும் பேசவில்லை.

''வா...!'' என்று கைப்பிடியில் தங்கள் அறைக்கு அழைத்துப் போனான்.

'என்னம்மா...?' என்றான், இதயத்தின் அன்பையெல்லாம் குரலில் தேக்கி.

அவன் கண்களில் தெரிந்த அன்பையும் வாஞ்சையையும் பார்த்த அடுத்த கணம் உடைந்தாள். அவன் மார்பில் புரண்டு அழுதாள்.

அவன் வெகுவாகத் திகைத்துப் போனான். நெஞ்சம் உடைந்தாற் போல் உணர்ந்தான்.

''ஹேய்.. என்ன.. என்ன ஆச்சு? மனசுக்குள்ளே என்னதான் இருக்கு? சொல்லு,'' என்றான்.

அவள் அழுகையை நிறுத்தவில்லை. வெடித்து அழுதாள். அவன் சற்று நேரம் அவள் முதுகை ஆதரவாய்த் தடவிக் கொடுத்தபடி சிந்தனையில் ஆழ்ந்தான்.

அவள் விம்மலும் மெதுவாக அடங்கிற்று. ஆனால், அவன் மௌனம் பார்த்து அச்சத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் ஆழமான குரலில், ''அருவி..! உண்மையைச் சொல்லு. நம்ம கல்யாணத்துக்காக யாரும் உன்னைக் கட்டாயப்படுத்தலியே...'' என்றான்.

அவள் உடனே அவசரமாக மறுத்தாள். ''நான்... நானாத்தான் சம்மதம் சொன்னேன்!'' என்றாள், குரலே எழும்பாத ஒரு குரலில்.

''அப்ப சரி..!'' என்று அவன் நிம்மதியானான். ஆனால் அதோடு நிறுத்தவில்லை.

''என்னை உனக்குப் பிடிக்கலையோ?'' என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"ம்...!" என்று இழுத்தாள். பிறகு.

"இந்த விஷயம் பிடிக்கலையோ?" என்றான் கேள்விக் குறியான பார்வையுடன்.

"தெரியலே...!" என்றாள்.

அவன் புன்னகைத்தான். "ஹேய்.. எல்லாக் கணவன், மனைவிக்குள்ளும் நடக்கறதுதானே!" என்றவன், குறும்புப் பார்வையுடன். "அப்படியொன்றும் பிடிக்காத மாதிரியும் தெரியலையே?" என்றான்.

அவளுக்கு அவமானமாக இருந்தது.

"அதுதான் எனக்கே புரியலை. என்னால.. என்னால.." என்று இழுக்க.

"டைஜஸ்ட். பண்ண முடியலயாக்கும்!" என்று அவனே முடித்தான் பிறகு மனைவியை ஆதரவாய்த் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

"நோ... பிராப்ளம். அருவி, நீயெங்கே போயிடப் போறே? நான் எங்கே போயிடப் போறேன்? வாழ்க்கை முழுக்க இருக்கு. நீயா... நீயா மனசு தெளியற வரைக்கும் இனிமே உனக்குத் தொல்லை கிடையாது. ஓ.கே.வா.. ஹேப்பியாய் இரு!" என்றான்.

கைப்பிடியில் இருந்து விலக்கவில்லை. "தூங்கு..!" என்றான். மெதுவாகத் தட்டிக் கொடுத்தான், உறங்கச் சொன்னான்.

அவன் பதில் அவளுக்கு நெற்றிப் பொட்டில் அறைந்தாற் போலிருக்க, அவளுக்குப் பெரிய குழப்பம் ஏற்பட்டது.

மீண்டும் நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கொண்ணும் கோபம் இல்லே. நீ என்னுடைய மனைவி. லைஃப் பார்ட்னர். உனக்குப் பிடிக்காததை



மறுக்கறதுக்கும் உனக்கு உரிமை உண்டு. யு அன்டர் ஸ்டாண்ட்?" என்றான் இளந்திரையன்.

அவள் நிஜமாகவே ஆச்சரியத்தின் எல்லைக்குப் போனாள். மனத்திலிருந்த பாரமெல்லாம் இறங்கியவளாய் வெகு சீக்கிரம் உறங்கிப் போனாள்.

முதல் முறையாக இளந்திரையனுக்கு மனைவி தன்னிடம் ஏதோ மறைக்கிறாள் என்ற சந்தேகம் தோன்றியது. ஒரு நல்ல மனைவியாக அவள் எதையும் மறுக்கவில்லை என்ற போதும் தன்னைப் பற்றி அவளுக்கு வேறு ஏதோ கருத்து இருக்கிறது என்ற எண்ணமும் தோன்றியது.

ஒரு வேளை... தான் பணக்காரன் என்பதால் தன் மீது முழு நம்பிக்கை வரவில்லை போலும் என்றெண்ணிக் கொண்டவன் சற்று நேரம் நடந்தான். பிறகு இந்த விஷயங்களுக்கெல்லாம் ஒரு முடிவு தெரிகிற வரைக்கும் அவளை நெருங்கக் கூடாது என்று உறுதி செய்து கொண்டான்.

முடிவு அடுத்து வந்த சில நாட்களிலேயே தெரியப் போகிறது, அது அவள் மனதை வாள் கொண்டு அறுத்தாற்போல் நோகடிக்கப் போகிறது என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

## 16

"இந்த வாரம் உங்க அம்மா வீட்டுக்குப் போறோம்!" என்றான் இளந்திரையன்.

வழக்கம்போல் சனிக்கிழமை பிற்பகல் போனார்கள். அப்பா அன்று செக் அப்புக்குப் போக வேண்டும் என்றவுடனே தேனருவியே காரில் அழைத்துப் போனாள்.

போகும் வழியில் அப்பாவிடம் வெகு நாட்களுக்குப் பிறகு ஃப்ரீயாகப் பேசிக் கொண்டு போனாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அப்பா, "மருந்து மாத்திரைகள் எல்லாவற்றிற்கும் நிறைய செலவாகிறது என்றாலும் மாப்பிள்ளை மொத்தமாக ஒரு தொகை ஏற்கெனவே கொடுத்து விட்டதால் சிரமம் இல்லாமல் இருக்கிறது!" என்றார்.

"அது மட்டுமில்லை, தேனு! அவங்க கம்பெனி சம்பளப் பட்டியல்ல ஆலோசகர்ங்கற மாதிரி ஒரு போஸ்ட் குடுத்து மெடிகல் இன்ஷூரன்ஸ் கூடக் கொண்டு வந்துட்டாரும்மா. அபார்ட்மென்ட்ல இருக்கறதால வீட்டு வாடகையை வாங்கி வீட்டுக் கடன் அடைச்சிடறோம். அபார்ட்மென்ட் எலெக்ட்ரிக் பில் ஃபோன் பில் எல்லாமே காம்ப்ளெக்ஸ் கணக்கில் கட்டிடறாங்க!" என்றார்.

"ஓ..!" என்று தேனருவி அமைதியாகி விட்டாள்.

"ரொம்பக் கஷ்டத்துக்கப்புறம் ரொம்ப நல்லவங்களா மனுஷங்களைப் பார்த்தா நம்பிக்கையே வரமாட்டேங்குது. இல்லப்பா..." என்றாள் ஆழ்ந்த குரலில். அப்பா விசித்திரமாய் அவளைப் பார்த்தார்.

"அது அப்படித்தாம்மா. அந்த அளவுக்கு வாழ்க்கையில நாம அடிபட்டுட்டோம்மா. ஆனா.. நெகடிவ் மனப்பான்மையை வளர்த்துக்கக் கூடாதும்மா..!" என்றவர், சிந்தனையுடன் அவளைப் பார்த்தார்.

அம்மா சங்கரியும் உடன் வந்த போதும் மௌனமாகவே வந்தாரே தவிர, எதுவும் பேசவில்லை. ஆனால், வீட்டுக்கு வந்தவுடன், தனிமை கிடைத்தவுடன்,

"ஏய்! தேனருவி, உன் மனசுல ஏதோ நெருடல் இருக்கு. என்னன்னு சொல்லு," என்று கேட்டார்.

தேனருவி அம்மாவை நேரடியாகப் பார்க்கவில்லை. "என்னை ரொம்ப நல்லா வச்சுக்கறாங்கம்மா. அதிலெல்லாம் குறையில்லை. ஆனா, லேடீஸ்னா எளிசாக் கிடைக்கக்



கூடியவங்கன்னு ஒரு மனப்பான்மை இருக்கும் போலிருக்கு!" என்றாள்.

சங்கரி சிந்தனையில் ஆழ்ந்தார்.

"உன்னை அந்த மாதிரி சீப்பா நடத்தறாரா?" என்றார், கவலையுடன்.

"இல்லைம்மா. ஆனா, யார் கிட்டயோ அந்த மாதிரிப் பேசறதைக் காதில் கேட்டேன்..!" என்றாள்.

அம்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு, "தேனு! சமுதாயம் இன்னமும் ஆம்பளைகளோட ஆதிக்கத்துலதான் இருக்கு. பல விதமான கருத்துள்ளவங்க இருக்கத்தான் செய்வாங்க... பெண்கள்லயும் பணத்தைக் கண்டா மேல விழறவங்களும் இருக்காங்க. அதனால அவருக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கலாம். ஆனா, நம்ம குடும்பத்தை உயர்வாத்தான் நெனைக்கறாரு!" என்றார்.

தேனருவி ஆமோதிக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

எல்லாக் குழப்பங்களும் சேர்ந்து அன்றைக்கே ஒரு எதிர்பாராத சம்பவமும் நடந்தது.

★ ★ ★

"**மா**மா... மாமா..!" என்று கோப்பெருஞ் சோழன், கயல்விழி, கிள்ளிவளவன் மூவரும் அவனிடம் ஒட்டிக் கொண்டார்கள்.

அவனும் அவர்களோடு நேரம் செலவு செய்வதை விரும்பினான் போலும்.

இன்றைக்கு ஒரே கலாட்டாவாக இருந்தது. பிற்பகல் நம்பி ஒரு அறையில் ஓய்வெடுக்க, கோப்பெருஞ்சோழன் நானும் உங்க பக்கத்தில் படுத்துக்குவேன் என்று அவன் மேல் காலைப் போட்டுக் கொண்டு உறங்கப் போனான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தேனருவி பதறிப் போய்த் தடுக்க வந்தாள். "விடு.. எனக்குந்தான் இப்படியெல்லாம் உரிமை கொண்டாட யார் இருக்கா?" என்று சிரித்துக் கொண்டே தடுத்து விட்டான். ஓய்வுக்குப் பிறகு மாமனாரிடம் சற்று நேரம் காம்ப்ளெக்ஸ் தொடர்பான விவகாரங்கள் பேசினான். கிள்ளிவளவனிடம் அமர்ந்து கணக்கு வழக்குகள் பார்த்தான். பழுது பார்க்க வேண்டிய விஷயங்கள் ஏதாவது உள்ளதா என்று கேட்டுத் தெரிந்து கொண்டான். ஆலோசனைகள் சொன்னான்.

மாலையானதும், "மாமா ஷட்டில்காக் விளையாடலாம்!" என்று நச்சரித்தான் கிள்ளிவளவன். சற்று நேரம் விளையாடினார்கள்.

தேனருவியும் அவனும் ஒரு பக்கம். கயல்விழியும் கிள்ளியும் ஒரு பக்கம் விளையாடினார்கள். அவன் குழந்தைகளுக்குச் சரியாகச் சண்டை போட்டதையும், விளையாடியதையும் பார்த்து அவளுக்கு ஒரே வியப்பு.

அவள் பார்வையைப் பார்த்து, "அட.. என்ன?" என்றான்.

"இல்லே..! மில்லுல பார்வையிலயே எல்லாத்தையும் மிரட்டிர்றீங்க. ஆனா இங்கே இந்தச் சோழனுக்குச் சரியா..." என்று இழுத்தாள்.

"ஹேய்! அது நிர்வாகம் செய்ய வேண்டிய இடம். இது குடும்பம்!" என்று புன்னகைத்தான்.

கோப்பெருஞ்சோழன், "மாமா, நீங்க என்னை ஒரே கையில தூக்குவீங்களா?" என்று வந்து நின்றான்.

அவன் சிரித்தான். ஒரு மர நாற்காலியின் மேல் ஏறி நின்று தன் வலது கையை மட்டும் நீட்ட கோப்பெருஞ்சோழன் அந்தக் கையைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். அவன் இறங்கிய பிறகு.

"மாமா... என்னை?" என்று கிள்ளிவளவன் வர, அவனையும் தாங்கி நின்றான்.



கயல்விழி, "மாமா" என்னை?" என்று வர, "நோ.. பிராப்ளம்!" என்று கையை நீட்டி அனுமதித்தான்.

எல்லாரும் கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கையில் தேனருவி கோபமாக வந்து நின்றாள்.

"இறங்குடி... கீழே!" என்றாள். எல்லாரும் திகைத்து விட்டார்கள்.

இறங்கி நின்ற கயல்விழியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டாள். கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அடுத்த அறைக்குப் போனாள்.

"அருவி! என்ன ஆச்சு உனக்கு!" என்று பதறியபடி வந்த இளந்திரையன் அவள் கோபக் குரல் கேட்டு நின்றான்.

"ஆம்பளைகளுக்கென்னடி! பொம்பளைங்க கிள்ளுக்கீரை தான். கூரை மேலே சோத்தைப் போட்டாப் பறந்து வர்ற காக்கைக் கூட்டம்தான். அறிவு உனக்கு வேண்டாம்?" என்று பேசிக் கொண்டே திரும்பியவள் கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ந்து நின்றாள்.

அப்படி ஒரு அறை விட்டான் இளந்திரையன்.

★ ★ ★

நெற்றியைத் தன் வலது கைவிரலால் நீவிக் கொண்டே, வழக்கம்போல் வலது காலை எடுத்து இடது முழங்காலின் மேல் வைத்தபடி அமர்ந்திருந்தான் இளந்திரையன்.

வீட்டில் கனத்த அமைதி நிலவியது.

கயல்விழி ஒரு அறையில் அழுது கொண்டு அமர்ந் திருந்தாள். தேனருவி ஒரு அறையில் மௌனக் கண்ணீர் விட்டபடி அமர்ந்திருந்தாள்.

எல்லாம் முடிந்து பத்து நிமிடங்கள்தான் ஆகியிருக்கும். ஆனால், ஏதோ பத்து யுகம் ஆகி விட்ட மாதிரி இருந்தது எல்லாருக்கும்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இளந்திரையனின் எதிரில் மௌனமாக அமர்ந்தார் மாமனார்.

''மாப்பிளே! அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். மறந்துடுங்க..!'' என்றார்.

அவன் வேதனையுடன் அவரைப் பார்த்தான்.

''ஐ'ம் சாரி... மாமா! நானும் அவளை அடிச்சிருக்கக் கூடாது!'' என்றான்.

மாமனார் மௌனம் சாதித்தார். அதைப் பார்த்து அவனுக்கே கலவரமாகி விட்டது போலும்.

''இனிமே நடக்காத மாதிரி பார்த்துக்கறேன், மாமா!'' என்றவன், மேலும் தயங்கி,

''மாமா.., நான் அவளை ரொம்ப நேசிக்கறேன்..!'' என்றான்.

''தெரியும் மாப்பிளே... தெரியும். ஆனா அவளுக்கு அது இன்னும் புரியலே. நீங்கதான் பொறுத்துப் போகனும்!'' என்றார்.

மேற்கொண்டு இருவருக்கும் என்ன பேசுவதென்று தெரியவில்லை.

''நான்.. நான்.. அருவிகிட்டே பேசறேன்!'' என்று எழுந்தான் இளந்திரையன்.

''வேண்டாம், மாப்பிளே. கொஞ்ச நேரம் விட்டுடுங்க!'' என்றார்.

''சரி. நான் அப்ப வெளியே போய்ட்டு அப்படியே வீட்டுக்குப் போய்க் கார் அனுப்பறேன். நீங்க அவளை அனுப்பி வைங்க!'' என்றான்.

''நீங்க புறப்படுங்க மாப்பிளே. நான் கொஞ்ச நேரம் கழித்து அனுப்பி வைக்கிறேன்,'' என்றார்.



அவன் புறப்படும்போது, அவர் கிள்ளிவளவனிடம் கண்ணைக் காட்ட, ''மாமா.. இந்த மூட்ல நீங்க கார் ஓட்ட வேண்டாம். நானும் வரேன்,'' என்று உடன் கிளம்பினான்.

அவன் அந்தப் பக்கம் போன பின்பு...

கயல்விழி வேகமாகத் தேனருவியை நோக்கிப் போனாள். அப்பாவும், அம்மாவும் அவசரமாகத் தொடர்ந்தார்கள்.

''அக்கா! நீ தாய் மாதிரி எங்களைப் பார்த்துக்கிட்டவ. கஷ்டங்களைச் சுமந்தவ. நீ என்னைத் தாராளமா அடிக்கலாம். ஆனா சரியான காரணம் புரிஞ்சுகிட்டு அடிக்கனும். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் நான் மாமா கிட்டே சொன்னேன். உங்க கையில ராக்கி கட்டப் போறேன். வாங்கி வச்சிருக் கேன்னு. நாங்கள்ளாம் மாமாவைச் சொந்தச் சகோதரனாதான் நினைக்கறோம். நீதான்... நீதான் புரிஞ்சுக்கலே..!'' என்று பொரிந்தாள்.

தேனருவி தங்கையை அணைத்துக் கொண்டு அழுதாள். ''சாரிடி.. கயல்விழி!'' என்று அதோடு முடித்துக் கொண்டாள்.

அவளிடம் அதற்கு மேல் எப்படி விளக்குவது என்பது புரியவில்லை. சற்றுத் தேறிக் கொண்டாள். வெளியே வந்து,

''அவரு எங்கே?'' என்றாள்.

''அவரு கிளம்பிப் போயிட்டாரு!'' என்றார் அப்பா.

தன்னை விட்டு விட்டுப் போய் விட்டானே என்று வருத்தத்தோடு பார்க்க, அப்பா...

''அவராய்ப் போகலம்மா. எங்கோ வெளியே போயிட்டு வர்றேன்னாரு. நான்தான்... கொஞ்ச நேரம் கழித்து உன்னை அனுப்பி வைக்கறேன்னு சொன்னேன்,'' என்றார்.

தேனருவியும் எதுவும் பேசத் தோன்றாதவளாய் அமர்ந்து கொண்டாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அப்பா தியாகராஜன் அவள் எதிரில் வந்து அமர்ந்தார்.

''அம்மா, நீ ஏதோ பெரிய தப்புப் பண்றேன்னு எனக்குத் தோணுது!'' என்றார்.

''அப்பா, உங்களுக்கு விஷயம் புரியலே!'' என்றாள்.

''அம்மா, நாங்க அனுபவங்கற பள்ளிக்கூடத்துல படிச்சவங்க. எனக்கு அஞ்சு குழந்தைங்கம்மா. எல்லா மனிதர்களுக்கும் ஏதோ ஒரு குறைபாடிருக்கும். ஆனா, என்னைப் பொறுத்தவரை, மாப்பிள்ளை ஒரு ஜெம். நீதான் புரிஞ்சுக்கலேன்னு தோணுது. சரி. குறையே இருந்ததுன்னு வச்சுக்க. அதைச் சரிக் கட்டிக் கொண்டு போறதுதான் பொம்பளைங்களோட சாமர்த்தியம். உனக்குத் தெரியாதும்மா. எங்க தாத்தா சொத்து எவ்வளவு இருந்தது தெரியுமா! எங்க அப்பன் அத்தனையும் அழிச்சாரு.. பெண்கள் விவகாரம். ஆனா எங்க அம்மா நளாயினியேதான். ஒரு வார்த்தை எங்க அப்பாவைக் காட்டிக் குடுக்கலே. படிப்புதான்டா சொத்துன்னு எங்களையெல்லாம் படிக்க வச்சா. பெரியக்கா மகளையே எனக்குக் கட்டி வச்சா. ஜெயிச்சுக் காமிச்சா. மாப்பிள்ளைக்கு இருக்கற வசதிக்கு எவ்வளவோ ஆட்டம் போடலாம். ஆனா பண்பாடோட இருக்கறாரு. இதுக்கு மேலே உனக்கு என்ன வேணும்! அப்படியே குறை இருந்தாலும் திருத்த வேண்டியது உன்னோட கடமை. திருத்தறதுல சாமர்த்தியம் இருக்கே தவிர, வார்த்தைகள்ல காயப்படுத்தறதிலே இல்லே!'' என்றார்.

தேனருவி திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள். அப்பா இவ்வளவு கடுமையாகப் பேசி அவள் பார்த்ததில்லை. அப்பா இன்னொன்றும் சொன்னார்.

''ஒரு டாக்ஸி பிடிச்சுப் புறப்படு. அம்மாவைத் துணைக்கு அனுப்பறேன். அந்த வீட்டை விட்டு வெளியே வர்ற நிலைமை ஏற்பட்டால் கூட நீ செத்து வேண்ணாலும் போகலாமே தவிர... இங்க வந்து நிக்கக் கூடாது!'' என்றார்.

சங்கரி விசும்பினாள். தியாகராஜன் அசைந்து கொடுக்கவில்லை.



தேனருவி சற்று நேரம் ஆழ்ந்த மௌனத்தில் அமர்ந்திருந்தாள். பிறகு முகத்தைத் துடைத்துக் கொண்டாள். உறுதியாக எழுந்து நின்றாள். டாக்ஸிக்கு ஃபோன் செய்தாள்.

''நானே போய்க்கறேம்ப்பா.. நீங்க சொன்னதை நான் புரிஞ்சுகிட்டேம்ப்பா!'' என்றாள்.

கிளம்பி விட்டாள்.

★ ★ ★

அந்த நேரம்!

கிள்ளி வளவனிடம் ஒரு ஹோட்டலைச் சொல்லி, அங்கே பாருக்குப் போக வேண்டும்"என்றான் இளந்திரையன்.

''மாமா... பழக்கமிருக்கா?'' என்றான் தயக்கத்துடன்.

''இதுவரைக்கும் அந்த எழவெல்லாம் கிடையாதுடா. இன்னைக்குக் கண்டிப்பா வேணும்டா..!'' என்றான் பிடிவாதமாக.

கிள்ளி வளவனுக்கும் வேறு வழியிருக்கவில்லை. அவர்கள் வீட்டுக்கு வந்தபோது லேசான தள்ளாட்டத்தில் வருகிற கணவனையும், கைப்பிடியில் கொண்டு வருகிற தம்பியையும் வெற்றுப் பார்வை பார்த்தபடி படுக்கையறை வாசலில் நின்றாள் தேனருவி.

''வந்துட்டியா?'' என்று குழறியபடி உள்ளே நுழைந்தான் கணவன்.

## 17

தேனருவியும், கிள்ளிவளவனும் அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு போய்ப் படுக்க வைக்க முயன்றார்கள். அவன் படுக்க மறுத்தான்.

தலையணைகள் இரண்டு மூன்றை அடுக்கி வைத்துச் சாய்ந்து அமர வைத்தார்கள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"டேய்! கிள்ளி! உங்கக்கா வந்துட்டாடா! எங்கே வரமாட்டோளோன்னு நெனச்சேன்டா..!" என்றான். பேச்சு குழறலாகவே வந்தது.

"டேய்! உங்கக்காவை இங்கே வச்சிருக்கன்டா!" என்று இடப்பக்கத்து மார்பைப் பொத்துப் பொத்தென்று தட்டிக் காட்டினான். தேனருவி அவன் கால் பூட்ஸ்களைக் கழற்றி விட்டாள். சட்டையைக் கழற்றினாள். அவன் தொடர்ந்து கிள்ளி வளவனிடம்,

"டேய்! இன்னைக்கு அவளைப் போய் அடிச்சுட்டன்டா. ஏன், அவ திருப்பி அடிக்க மாட்டாங்கற தைரியம்தானே? டேய்! ஒரு நல்ல ஆம்பளைங்கறவன் பொம்பளைங்களைக் கை தொடக் கூடாதுன்னு நெனைக்கறவன்டா நான். ஆனா... ஆனா... இன்னைக்கு..." என்று தழுதழுத்தான்.

"மாமா.. ப்ளீஸ். போனாப் போகுது. விடுங்க!" என்று ஆறுதல் படுத்த முயன்றான் கிள்ளி வளவன். தேனருவி அழுத்தமான மௌனம் சாதித்தபடியே காரியங்கள் செய்து கொண்டிருந்தாள்.

"உங்கக்காவை ரொம்பப் பிடிச்சுப் போய்க் கல்யாணம் செஞ்சுன்டா... அவ... அவ என்னைப் புரிஞ்சுக்க மாட்டேங் கறாடா. ராணி மாதிரி இருக்க வேண்டியவ, கஷ்டப் படறாளேன்னு நான் எத்தனை வேதனைப் பட்டேன் தெரிமா? உங்க குடும்பமே எனக்குப் பிடிச்சுதுடா. ஏன்னு கேளு. கேள்றா..." என்றான்.

கிள்ளிவளவன் மௌனம் சாதித்தான்.

"ஏன்னு கேளுங்கறேன் இல்லே?" என்றான் கோபமாக.

"சரி, ஏன்னு சொல்லுங்க..." என்றான்.

"நான் ஒத்தையா வளந்தவன்டா, எனக்கு அக்கா, தம்பி, தங்கச்சி யாரும் கிடையாதுடா. வெறும் பணம் பணம் மட்டும்



தான்டா. உங்கக்காவோட சேர்ந்து ஒரு குடும்பமே கிடைக்கும்னு நெனச்சேன். ஆனா இந்தக் கழுதை.. சே.. சே! இப்பதானே சொன்னேன். திட்டக் கூடாதுன்னு. இவ என்னைப் புரிஞ்சுக்கலைடா..!" என்று பொரிந்து தள்ளினான்.

கிள்ளி வளவனுக்குப் பாவமாக இருந்தது.

"மாமா.. போதும்... மாமா.. படுங்க எனக்காக!" என்றான்.

"சரி, உனக்காக!" என்று படுத்துக் கொள்ள முன் வந்தான். தலையணைகளைச் சரி செய்தார்கள்.

"அவ என்னடா நினைச்சா என்னை? லேடீஸ் பின்னாடி அலையறவன்னா? நிறையப் பேரு என் பின்னாடிதான்டா வந்தாங்க. இந்தக் கயலு... அந்தப் புள்ளைய நான் சிஸ்டர்... சிஸ்டரா நினைக்கறன்டா. என்னடா இவ!" என்று மேலும் புலம்பினான்.

"அவ கிடக்கிறா, மாமா. அவளுக்கு உங்க அருமை புரியலை. உங்களை இந்த நிலைமைக்குக் கொண்டாந் துட்டா..." என்றான் கிள்ளிவளவன் வருத்தத்துடன்.

"டேய்! திட்டாதடா. அவளை. அவகிட்டே சொல்லு. கோபிச்சுக்கிட்டுப் போயிடப் போறாடா. அவ இல்லாம என்னால இருக்க முடியாதுடா. முடியாது. முடியவே முடியாது!" என்று குரல் தேய்ந்து கொண்டே வர, மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தான்.

தேனருவி அதே இறுகிய முகத்துடன் சோபாவில் அமர்ந்தாள். கிள்ளிவளவன் எதிர் சோபாவில் அமர்ந்தான்.

"அக்கா..! மாமா உன் மேல உயிரையே வச்சிருக்கிறாரு. அவரு நினைச்சிருந்தா எப்படி வேண்ணாலும் இருந்திருக்கலாம். அப்படி வீட்லயாடா நான் வளர்ந்தேன்? யாரு கிட்டே பேசினாலும் சந்தேகப்படறா போலருக்குன்னு ரொம்ப வேதனைப் படறாரு. அக்கா..! உனக்கு எவ்வளவு பெரிய மாணிக்கம் கிடைச்சிருக்குன்னு புரியலே..." என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

மௌனக் கண்ணீர் வடித்தபடி அமர்ந்திருந்த தேனருவி உடனே,

"நான் அவரு நடத்தை மேல சந்தேகப் படலே. ஆனா அவரு பெண்களைப் பத்தி வச்சிருக்கிற கருத்து மேலதான் எனக்குக் கோபம்!" என்றாள்.

"புரியலக்கா!" என்றான் கிள்ளிவளவன்.

"உனக்குப் புரியாது. அவருக்கும் புரியாது!" என்றாள்.

"அக்கா! எது எப்படின்னாலும் சரி. அவரைச் சந்தோஷமா வச்சுக்க வேண்டியது உன் கடமை. உன்னோட வருத்தம் எதுன்னாலும் அதைக் கடவுள் பாதத்துல போடு. அப்பாவுக்கு உடம்பு சரியில்லாம இருந்தப்ப நீ சொல்லுவயே, நமக்கு மேல ஒரு சக்தி இருக்குடா. அதுகிட்ட நம்ம கவலையைப் போட்டு வைப்போம்னு. அதையே நான் உனக்குச் சொல்றேன்."

..........!

"அக்கா... எங்கேயோ ஒரு இடைவெளி தெரியுது. நீ ஏதோ ஒரு விதத்துல மாமாவை மிஸ்அன்டர்ஸ்டான்ட் பண்ணி யிருக்கறேன்னு எனக்குத் தோணுது!" என்றான்.

தொடர்ந்து, "அக்கா! ஒண்ணு மட்டும் நிச்சயம். மாமா எந்த விதத்திலும் சீப்பான ஆளில்லை. தப்பு இருந்தா அது உன் பக்கமாத்தான் இருக்கும். நீதான் திருத்திக்க வேண்டி யிருக்கும்!" என்றான்.

மௌனமாகத் தலையாட்டிக் கொண்டாள். பிறகு, "சாப்பிட்டுட்டுப் போடா!" என்றாள்.

"இல்லக்கா. நீ மாமாவைக் கவனி!" என்றான். புறப்பட்டு விட்டான்.

அருவி.. அருவி..! என்று உறக்கத்தில் உளறிய அவனைச் சற்று நேரம் நின்று பார்த்தாள். பிறகு அருகில் அமர்ந்து அவனை மார்பில் சாய்த்துக் கொண்டாள்.



அந்த ஸ்பரிசம் புரிந்ததோ என்னவோ, "தாங்க்ஸ். தாங்க்ஸ்..!" என்று குழறினான். பிறகு மெல்ல அடங்கினான். உறக்கத்தில் ஆழ்ந்தான். ஆனால் நள்ளிரவு வரையிலும் கூட அவள் விழித்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

★ ★ ★

கணவன் தன் மேல் எல்லையற்ற அன்பு வைத்திருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அந்த அன்பை அவனது மற்றக் குறை நிறைகளோடு விழுங்கிக் கொள்கிற பக்குவம் தனக்குத்தான் வர வேண்டும் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

இரவில் ஒரு இரண்டு மணி நேரந்தான் உறங்கியிருப்பாள்.

அதிகாலை ஐந்து மணிக்கே விழிப்பு வந்தது. சூடாகக் காபி தயாரித்துக் குடித்தாள். பிறகு குளித்து முடித்துச் சமையலில் ஆழ்ந்தாள்.

ஏழு மணி வாக்கில் அறைக்கு வந்தாள். இளந்திரையன் எழுந்து அமர்ந்திருந்தான். வழக்கமான கம்பீரம் வந்திருந்தது. ஆனால், நெற்றிப் பொட்டைத் தேய்த்தபடி அமர்ந்திருந்தான். நல்ல தலைவலி.

"குட்மார்னிங்!" என்று எதுவுமே நடக்காதது போல் வருகிற மனைவியைப் பார்த்தான். மலரத் தயங்கிய அவனது புன்னகை அவள் புன்னகையைப் பார்த்து மலர்ந்தது.

"தலையை வலிக்குது, அருவி. கொஞ்சம் காபி..." என்றான்.

"இதோ!" என்று அவள் கீழே போனாள். அதற்குள்ளாக நேற்றைய நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன.

"வேண்டாம் மாமா!" என்று கிள்ளி தடுக்கத் தடுக்கத் தான் விஸ்கியை மேலே மேலே விழுங்கி வைத்தது நினைவுக்கு வந்தது. தன் மேலேயே வருத்தம் வந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சூடான காபியைத் தேனருவி கொண்டு வந்து தர, அமைதியாகக் குடித்தான். சுகமாக இருந்தது.

அவள் தலையணையை எடுத்து அடுக்கியபடி, 'ஹாங் ஓவர்!' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

''குளிச்சுட்டு ரெஸ்ட் எடுங்க. நான் காலைல ஆபீஸ் போறேன். நீங்க கொஞ்சம் லேட்டா வாங்க,'' என்றாள்.

''ம்!'' என்றான்.

குளித்து விட்டு வந்தான். அவளும் அலுவலகத்திற்குப் புறப்பட்டாள். அறைக் கதவு வரை போனவளைப் படுக்கையில் சாய்ந்தபடி அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தவன்,

''தேனருவி!'' என்று அழைத்தான்.

நின்றாள்.

''ஐ'ம் சாரி!'' என்றான்.

''நாம அப்பறம் பேசலாம். இப்பப் பேசினா சரிவராது!'' என்றாள் தேனருவி.

அவன் ஒரு நீண்ட பெருமூச்சுடன் எழுந்து வந்தான். அலுவலகத்தில் செய்ய வேண்டிய விஷயங்களைச் சொன்னான். அவள் குறித்துக் கொண்டாள். பிறகு மெல்லிய குரலில்,

''மனசுல இருக்கறதைக் கேட்டுடேன்!'' என்றான்.

''என்ன கேக்கணும்?'' என்றாள் வியப்பாக.

''ஏன்டா! உங்களுக்குக் கோபம் வந்தா அடிப்பீங்க. தண்ணி போடுவீங்க. நாங்க திருப்பிச் செஞ்சா தாங்குவீங்களாடான்னு கேட்டுர வேண்டியதுதானே?'' என்றான்.

தேனருவி இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கணநேரம் திகைத்துப் போனவள், பின் சிரித்துச் சமாளித்தாள்.



''நான்... அப்படி எதுவும் நினைக்கலே!'' என்றாள். மேலும் தயங்கினாள். தவறு செய்த குழந்தை தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு ஐஸ் வைக்குமே, அதுபோல நிற்கிற கணவனைப் பார்த்து அவளுக்குள் புன்னகை மலர்ந்தது.

''அருவி! ஐ ஆம் நாட் எ பர்ஸன் ஆஃப் வீக்னெஸ்ஸஸ். பலவீனமானவன் இல்லே. என் ஃப்ரண்ட்ஸ் சுத்தியும் உட்கார்ந்து லிக்கர் கன்ஸ்யூம் பண்ணுவானுங்க. நான் எப்பவும் கேர் பண்ணினதில்லே. ஆனா.. நான் நினைக்கிறேன். யு ஆர் மை வீக்னெஸ். ஐ'ம் சாரி. உன்கிட்டே கை ஓங்கியிருக்கக் கூடாது. என்னாலயே என்னை மன்னிக்க முடியலை. வேதனை தாங்கலே. அதான். மன்னிச்சேன்னு சொல்லு!'' என்றான்.

அந்தக் கணத்தில் தன் கணவன் மேல் தன் நெஞ்சில் அன்பு பொங்கி நிறைவதை உணர்ந்தாள் தேனருவி. சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். வலக்கையால் அவன் மார்பை நீவிக் கொடுத்தபடி,

''பரவால்லே!'' என்றாள்.

அவளது அந்தச் செய்கையில் அவன் கிறங்கி நின்றான். அவள் முகம் நோக்கிக் குனிந்தான் அவள் தடுக்கவில்லை. மாறாக அவளும் நிமிர்ந்து அவன் கன்னத்தில் இதழ் பதித்து,

''மன்னிச்சுட்டேன். போதுமா?'' என்றாள். கலகலவெனச் சிரித்தபடி ஓடி விட்டாள்.

அந்த நேரம் எல்லாம் சரியாகி விடும் என்றுதான் நினைத்தான் இளந்திரையன். ஆனால் காலம் வேறு விதமான விளைவுகளை வைத்திருந்ததை அவன் அறியவில்லை.

★ ★ ★

பிற்பகல் உணவின் போது கூடக் கலகலப்பாக இருந்தார்கள். அதன் பிறகு அவன் என்ன நினைத்தானோ,

''அருவி! நீயும்தான் சரியாத் தூங்கல போலிருக்கு இப்ப நான் ஆபீஸ் போறேன். நீ ரெஸ்ட். எடு!'' என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"சரிங்க!" என்றாள்.

அன்றைக்கு அவன் அடித்த ஜோக்குக்கெல்லாம், "ஐயோ! சகிக்கலை!" என்று பழிப்புக் காட்டினாள். ஆனால் கலகலவென்று சிரித்தாள்.

'மாமா' என்று அவனை முதல் முறையாக அழைத்தாள். அவனும் கூடக் குளிர்ந்து போனான். அவர்கள் கிராமப்புறத்தில் கணவனை அப்படித்தான் அழைத்தார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

மகிழ்ச்சியோடு அலுவலகத்திற்குப் போனான். ஆனால் மீண்டும் மாலை வீட்டிற்கு வந்தபோது தேனருவி மீண்டும் கவசம் மாட்டிக் கொண்டு விட்டதை உணர்ந்தான்.

கண்களில் இருந்த சிரிப்பு மறைந்திருந்தது. மீண்டும் வெறுமை குடி கொண்டிருந்தது. ஏழு மணிவரை பொறுத்துப் பார்த்தவன் திடீரென்று,

"அருவி! நான் ஊருக்குப் போய்ட்டு வரேன்..!" என்று கிளம்பி விட்டான்.

கீழே வேலையாட்களிடம் அவளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

கதவுவரை வந்தவள், 'என்னங்க!' என்றாள். தயங்கினாள்.

"சொல்லு!" என்றான்.

"மாமா.. அத்தைகிட்டே இதையெல்லாம் சொல்லாதீங்க! கவலைப்பட்டுருவாங்க!" என்றாள்.

"ம்!" என்றான். போய் விட்டான்.

அவன் அந்த வாக்குறுதியைக் காப்பாற்றப் போவதில்லை என்பது அவளுக்கு அப்போது புரியவில்லை.

அங்கேயும் -

விவேகானந்தன் முதன் முறையாக இந்த நேரத்தில் தனியாக வந்து இறங்குகிற மகனைச் சற்றே கவலையுடன் பார்த்தார்.



## 18

**த**ன்னை நிமிர்ந்து பார்க்கவும் வெட்கப் பட்டுத் தவித்துப் போய்த் தலை குனிந்து அமர்ந்திருக்கிற மகனைப் பார்த்ததும் விவேகானந்தனின் நெஞ்சில் கருணையும், அன்பும் பொங்கி வழிந்தன.

இரண்டுங் கெட்டான் நேரத்தில் மகன் வந்து காரிலிருந்து இறங்கியபோதே, ஏதோ பிரச்னை என்று அவருக்குள் மனக்குறளி சொன்னது சரியாகத்தான் போய் விட்டது என்று எண்ணிக் கொண்டார்.

அவனை அந் நேரத்தில் பார்த்தவுடனே, செல்லம்மா, கவலையுடன், "என்னடா, இந்த நேரத்துல. அதுவும் அவளை வேற விட்டுட்டு வந்திருக்கறே?" என்றார்.

அவன் சிரித்தான். "அம்மா! உங்க ரெண்டு பேரையும் பாத்தே நாலைஞ்சு நாளாச்சுன்னு புலம்பிகிட்டே இருந்தேன். போய்ப் பார்த்துட்டாவது வாங்க. நான் இங்க கவனிச்சுக்கறேன்னு அனுப்பி வச்சா உங்க மருமக!" என்றான். ஒரேயடியாகச் சிரித்துச் சமாளித்தான்.

மகனின் சிரிப்பு கண்களுக்கு எட்டவில்லை என்பதை அப்பாவின் கூர்மையான பார்வை புரிந்து கொண்டது.

அம்மா பரிமாறச் சாப்பிட்டு விட்டு வந்து, "அம்மா... அப்பாகிட்டே மில்லு மேட்டர் கொஞ்சம் பேச வேண்டி யிருக்கு!" என்று தனிமை தேடிக் கொண்டான்.

"அப்பா! லைப்ல முதல் தடவையா லிக்கர் கன்ஸ்யூம் செய்தேன்!" என்று பாவ மன்னிப்புக் கேட்டான்.

அப்பா சற்று நேரம் முகவாயைத் தடவிக் கொண்டு வானம் பார்த்தார். பங்களாவின் முன்புறம் இருந்த போர்ட்டிகோவையும் தாண்டிச் செடிகளுக்கு நடுவே அமர்ந்திருந்தார்கள்.

விஸ்தாரமான புல்வெளி. சுற்றுச் சூழலில் குளுமை நிறைந்திருந்தது. வானத்து விண்மீன்கள் கண் சிமிட்டிக்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

கொண்டிருந்தன. சற்று நேரம் இயற்கையின் வசீகரிப்பில் தன்னை மறந்தவர் மீண்டும் நிலவுலகுக்கு வந்தார். அவரது அந்த மௌனம் பார்த்து மகன் தவித்துப் போனதைக் கண்டு கொண்டார்.

"போகட்டும். விடு. ஆனா முடிஞ்சவரைக்கும் இதுவே கடைசித் தடவையா வச்சுக்கப் பாரு!" என்றார்.

அவன் சரியென்று தலையாட்டினான். பிறகு அவரே, "அது சரி... உன்னை அந்த அளவுக்குத் தள்ளிய விஷயந்தான் எது?" என்று கேட்டார்.

அவன் விவரமாகச் சொன்னான். அவர் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டார். "சரி.. வா.. கொஞ்ச நேரம் நடக்கலாம்..!" என்று அழைத்துப் போனார்.

"அப்பா.. திடீர் திடீர்னு மாறிடறா. மனசுக்குள்ளே என்னன்னு தெரியலை. நீங்க வேண்ணாப் பேசறீங்களா? உங்க கிட்டேயும் அம்மாகிட்டேயும் நல்லாப் பழகறாளே!" என்றான் ஆவலாக.

அப்பா புன்னகைத்தார். "டேய்! கண்ணா! இன்னைக்கு நான் சொல்ற இந்த வார்த்தையை மனசுல வச்சுக்க. உங்களுடைய அந்தரங்கத்துல நாங்க தலையிடக் கூடாது. வெளியே இருந்து ஆலோசனைகள் சொல்லலாம். அவ நல்ல புள்ளை. அதனால பிரச்னைகள் பண்ணாம இருக்கலாம். ஆனால் தலையிடறது... அது நாகரீகமில்லே..!" என்றார்.

"ஓ!" என்றான்.

"இப்பக்கூட ஒரு நண்பனைப் போலத்தான் நான் பேசறேன்!" என்றார். "ஏம்பா, மற்றப்படி உறவுகளே..." என்று இழுத்து நிறுத்தினார்.

அவன் வேறு பக்கம் பார்த்தபடி, "அப்பா! அதுலயும் ஏதோ தயக்கம். சொல்லப் போனா போன தடவை இங்க வந்தப்பத்தான் முத முதலா..." என்று அவனும் இழுத்து நிறுத்தினான்.



"ம்..." என்று உள்வாங்கிக் கொண்டார்.

"ஏப்பா, எல்லாச் சமயத்துலயும் இறுக்கமா இருக்காளா?" என்றார்.

"சில நேரங்கள்ல ரொம்ப நெருங்கி வர்ற மாதிரித் தெரியுது. திடீர்னு... அப்புறம் மாறிடறா. இன்னைக்குக் கூட மத்தியானம் வரை ரொம்பக் கலகலப்பா இருந்தா. நான் ஆபீஸ் போயிட்டு வர்றேன். ஆள் மாறிப் போயிட்டா!" என்றான்.

அப்போதுதான் அப்பா அந்த வார்த்தையைச் சொன்னார்.

"ஏப்பா, முதல் தடவை நாம அவங்க வீட்டுக்குப் போனப்ப அவங்கப்பா ஒரு வார்த்தை சொன்னாரே, நினைவிருக்கா?" என்றார்.

"என்ன சொன்னார்ப்பா?" என்றான் புரியாமல்.

"எல்லாரையும் யதார்த்தமா நம்பிடுவா, அப்படீன்னாரே! ஒரு வேளை யாராவது அவ மனசைக் குழப்பி விடறாங்களோ...?" என்றார்.

"அப்படி யாருக்கப்பா அவசியம்?" என்றான்.

"சொல்ல முடியாதுடா நம்பி. இந்தப் பெண்கள் இருக்காங்களே... மனசு வச்சா தேவதைகளாட்டம் இருப்பாங்க. இல்லை.. நேர் எதிராவும் இருப்பாங்க. அப்புறம் இன்னொண்ணு. என்னன்னா மனசுக்குள்ளே காம்ப்ளெக்ஸ் ஆயிடுச்சுன்னா புழுங்கியே சாவாங்க!" என்றார்.

அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்தான்.

"உங்கம்மாவையே எடுத்துக்க. அந்தக் காலத்துல அவங்க குடும்பத்துக்கும், நம்ம குடும்பத்துக்கும் பகை. வசதிக் குறைவானவங்க அவங்க. தாத்தா கல்யாணத்துக்கு ஒத்துக் கலயே! அப்புறம்தான் நான் வேலைக்குப் போனேன். உங்க சொத்தும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்னு பிடிவாதமா இருக்கப் போய்த்தான் கல்யாணம் செஞ்சு வச்சாரு."

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"இன்ட்ரஸ்டிங்பா..." என்றான் இளந்திரையன்.

"இரு... அதோட முடியலை. கல்யாணம் ஆனதும் உங்கம்மாவுக்குக் காம்ப்ளெக்ஸ் ஆயிடுச்சு. அப்புறந்தான் மில்லை ஆரம்பிச்சேன். மில்லு ரெடியாகவும் உனக்கும் பத்து வயசிருக்கும். வெளியே வந்தேன். இதுக்கு நடுவில அவளுக்குத் தெரிஞ்சும் தெரியாமையும் அவள் தம்பிக்கு உதவி செஞ்சு கை தூக்கி விட்டேன். அவன் ஐம்பது பவுன் நகை போட்டான். அஞ்சு ஏக்கர் நிலம் குடுத்தான்னு உங்கம்மா நினைச்சுகிட்டிருக்கா. அத்தனையும் நான் அவன்கிட்டே குடுத்து, அவனே குடுக்கற மாதிரி ஏற்பாடு செய்தேன்..." என்றார்.

"அப்பா... நீங்களும் என்னை மாதிரிதான்!" என்று லேசான மனத்துடன் இளந்திரையன் சிரிக்க,

"தப்பாச் சொல்றடா நம்பி.. நீ என்னை மாதிரின்னு சொல்லு!" என்றார். இருவரும் சிரித்தார்கள். அவர் தொடர்ந்தார்.

"ஆனா.. அவ தம்பி பொண்டாட்டி... இருக்காளே, ஏதாவது திரி பத்த வச்சுகிட்டேயிருப்பா. யங்கப்பா சாமி! ஒரு வழியா அம்மா அவளைப் புரிஞ்சுகிட்டதுக்கப்புறம்தான் வீட்ல நிம்மதி வந்தது!" என்றார் தொடர்ந்து.

"பாரு.. நம்பி. இனிமே கொஞ்சம் சுத்து வட்டாரத்தைக் கவனி. ஆனா, என் மனசுக்கு ஒண்ணு படுது. ஷி இஸ் பேஸிக்கலி ஆல்ரைட்!" என்றார்.

"சரி, திரும்பலாம்ப்பா..!" என்றான். கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டரே நடந்து விட்டார்கள். மீளவும் திரும்பி நடந்தார்கள். அப்பா ஆழ்ந்த குரலில் தொடர்ந்தார்.

'நம்பி..! அவகிட்டே உட்கார்ந்து பேசு. அவளே செல்ஃப் அனாலிசிஸ் செய்யக் கூடிய பொண்ணுதான். விட்டரேரியன் மூதல்ல. நட்பைக் குடு. நண்பர்கள் ஆயிட்டா நம்பிக்கை



தானா வரும். அந்தக் காலத்துல எல்லாம் புருஷன் மேலே பக்தி வேணும்னு சொல்லிச் சொல்லி மைண்ட் செட் பண்ணி வச்சாங்க. ஆனா, இன்னைக்கு அதெல்லாம் எடுபடாது. நம்பி.. நட்புதான் வழி!" என்றார்.

அவன் முகமும், மனமும் தெளிந்தன. 'தாங்க்ஸ்ப்பா. வரும்போது பேசாம டைவர்ஸ் குடுத்தர்லாமாங்கற அளவுக்கு யோசிச்சேன்."

அப்பா சிரித்தார். "ஆமாடா. இந்தக் காலத்துப் பசங்க ஆ ஊன்னா இதைச் சொல்லிடறீங்க. டைவர்ஸ் குடுத்தா ஒரு வேளை அவ தாங்கிக்குவாடா. பயலே! நீ தாங்க மாட்டே. அந்த அளவுக்கு அய்யா பைத்தியமா இருக்கீங்க. ரோஜாப்பூவைப் பார்த்துகிட்டு அந்தப் புள்ளை நிக்கறதை ஓவியமா வரைஞ்ச காவிய ராஜாவாச்சே... நீயி..." என்று கிண்டல் செய்தார்.

வீட்டுக்கருகில் வந்து விட்டார்கள். போர்ட்டிகோ விளக்கு வெளிச்சத்தில் மகன் முகம் சிவந்து கிடப்பதை அப்பா ரசித்துப் பார்த்துச் சிரித்தார்.

"டேய்! தோக்கறது நம்ம பரம்பரையிலயே இல்லைடா! ஜெயிச்சுக் காட்டு!" என்றார்.

"ஆமாப்பா.. ஜெயிச்சே ஆகணும்!" என்று சிரித்தான். முகத்தில் உறுதி தெரிந்தது.

"அப்ப நான் காலையில புறப்படவா?" என்றான்.

"வேண்டாம். மெதுவா மத்தியானம் போய்ச் சேரு. அம்மிணிக்குத் தவிப்பு வருதா இல்லையான்னு பார்க்கலாம்!" என்று நண்பனாகச் சிரித்தார்.

★ ★ ★

தெரிந்தோ தெரியாமலோ, அப்பா பிரச்னையின் ஆழத்தைக் கண்டு கொண்டார் என்பது அப்போதைக்கு இளந்திரையனுக்குப் புரியவில்லை.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தானே எம்பி நின்று அவன் கன்னத்தில் இதழ் பதித்த தேனருவி கலகலப்பாகத்தான் இருந்தாள். மகிழ்வோடுதான் இருந்தாள் - பாமாவிடம் இருந்து போன்கால் வரும்வரை.

யதார்த்தமாக நடந்ததை எல்லாம் அவளிடம் சொன்னாள். அவளும் துருவித் துருவி அக்கறையாய்க் கேட்பவள் போல் கேட்டுக் கொண்டாள். பிறகு, "நான் நினைச்ச மாதிரித்தான் ஆயிருக்கு!" என்றாள்.

"என்னண்ணி, இப்படிச் சொல்றே?" என்றாள் தேனருவி.

"ஆமா.. இப்பதானே தண்ணி போடற பழக்கம் இருக்குறது தெரிஞ்சுருக்கு. இனிமே ஒண்ணொண்ணா வெளிய வரும். அப்புறம் தொடுப்பு ஏதாவது வெளிலே வரும். இப்ப என்ன? ஊருக்கு ஒண்ணு இருக்கு. ஏதோ இது ஒண்ணுதானேம்பாங்க. எப்படியோ எல்லாருமா குடும்பமே ஒண்ணு சேர்ந்து, உன்னைப் பலி குடுத்துட்டாங்க. ஏதுடா அவ்வளவு பெரிய பணக்காரங்க இங்க வந்து விழுகறாங்கன்னு நெனைச்சேன். ஊர்ப் பக்கம் பொண்ணு குடுக்க மாட்டேன்னுருப்பாங்க!" என்று பாமா பொரிந்து தள்ளினாள்.

உண்மையாகவே தேனருவி வாயடைத்துப் போனாள். பிறகு மெதுவாக,

"இல்லையே.. அண்ணி.. அவங்க ஊருல அவருக்கு நல்ல மதிப்பு... தெரியுமா?" என்றாள்.

பாமா அசரவில்லை. "அடிப்போடி! நம் ஊர்ல எல்லாம் அவ்வளவு சீக்கிரம் அடுத்தவங்களைக் காட்டிக் குடுக்க மாட்டாங்க. கேட்டுப் பாரு... நாம ஏன் ஒரு வாழ்க்கையைக் கெடுக்கணும்பாங்க!" என்றாள்.

தேனருவிக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

'அவ்வளவு சீக்கிரம் நம்பிடாதே. ஜாக்கிரதை. அவ்வளவு சீக்கிரம் வுட்டுக் குடுக்காதே!' என்று திரும்பத் திரும்ப உருவேற்றினாள் பாமா.



தேனருவி இந்தப் பக்கம் திகைத்துப் போயிருக்க, அந்தப் பக்கம் திருப்தியுடன் போனைக் கீழே வைத்தாள்.

"என்னமோ பெரிய இடம் கிடைச்சுருச்சுன்னு ஆடுனீங்களே! இப்ப பாரு, அந்த ஆள் வெறுத்துப் போய்த் துரத்தி விடணும்!" என்று கறுவிக் கொண்டாள்.

அவள் குணம் புரியாமல் தேனருவி குழம்பிப் போனாள்.

"அண்ணி ஏன் இப்படி நெகட்டிவ்வாகவே சொல்கிறாள். பொறாமையோ. சேச்சே! நம்மளோட நல்லதுக்குத்தான் சொல்றா. பின்னே நேத்துக் கையை வீசிக் கன்னத்துல அறைந்தவருக்கு நாமாதான் விவஸ்தை கெட்டுப் போயி என்னென்னமோ குடுத்தமே. எவ்வளவு கேவலம்!" என்று எண்ணிக் கொண்டாள்.

மனதில் நிறைந்து வழிந்த உற்சாகமெல்லாம் வடிந்து போனது.

அதற்கேற்றாற்போல் அவன் ஊருக்குக் கிளம்பிய பின் தனிமையில் இன்னும் குழப்பம் மேலிட்டது. எங்கு பார்த்தாலும் அவன் நிற்கிறாற் போலவே இருந்தது. அவன் சிரிக்கிறாற்போலவே இருந்தது.

சில நேரங்களில் குறும்பாகச் சிரித்துக் கொண்டே அவளிடம் வம்பு பேசுவது, இழைவது எல்லாம் அவளுக்கும் பிடித்துத்தான் இருந்தது. ஆனால், அண்ணி சொல்கிறாற் போல, அவருக்கு ஊரில் பெண்ணே கிடைக்கவில்லையோ?

போன முறை பேசிய போது பாமா,

"ஏய், மில்லுக்குப் போறேன்னுட்டு வாரத்துல மூன்று நாள் போயிடறாரு. வேற ஏதாவது தொடர்பு இருக்கா பாரு!" என்று வேறு ஒரு குண்டைப் போட்டாள்.

அவளுக்குத் தலையே வெடித்து விடும் போல் இருந்தது. அப்படியெல்லாம் ஏதாவது இருப்பதாகத் தெரிந்தால் தன்னால்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தாங்க முடியாதே! அது சரி... நமக்கே அவர் மேல் உண்மையான நேசம் இல்லாத போது எங்கே தொடர்பு இருந்தால் என்ன என்றும் தோன்றியது.

எல்லாக் குழப்பமும் மறுநாள் காலை வரைதான். மறுநாள் காலை நேரத்தில் வருவதாகச் சொன்னவன் பத்து மணியாகியும் வரவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவள், பத்து மணிக்கு அழைத்தாள்.

மாமனார்தான் போனை எடுத்தார்.

''மாமா! அவரு காலையில் நேரத்துலயே புறப்பட்டு வர்றேன்னாரு. புறப்பட்டுட்டாரா?'' என்றாள் தயக்கத்துடன்.

''அம்மா தேனருவி, எங்களுக்கும் ஒரு நாள் விட்டுக் குடும்மா... அவனை!'' என்று கிண்டல் செய்தவர்,

''டேய்! உன்னோட மஞ்சள் ரோஜா மங்கை அழைச்சாச்சு!'' என்று உரத்த குரலில் மகனை அழைத்தார்.

அவன் வந்து போனை எடுத்தான்.

''என்ன... அருவி! நாம இல்லாம இருந்தா நீயாவது கொஞ்சம் தொல்லையில்லாம இருப்பியேன்னு...'' என்று அப்பாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

''விளையாடாதீங்க! சீக்கிரம் வந்து சேருங்க!'' என்றாள் கடுப்பாக.

''வருகிறேன் அம்மிணி! எப்ப வேண்ணாலும் வந்து எதிரில் நிற்பேன்!'' என்று கலகலவென்று சிரித்தான்.

சொன்ன மாதிரியே பிற்பகலில் அவள் வீட்டில் இருக்கும் நேரம் வந்து சத்தமில்லாமல் ஹாலில் நுழைந்தான்.

போன் மணி அடித்தது. அந்தப் பக்கம்...

எப்போதும் தேனருவி எடுத்ததும் நாகரீகமாக வைத்து விடுவான். ஆனால், தேனருவி - தான் இந்தப் பக்கம் ரிசீவரை எடுக்கும்போதே - அந்தப் பக்கம் எடுப்பதை அறிந்தும் வைக்கவில்லை. முழுவதும் கேட்டான்.



முகம் இறுகிக் கொண்டே போக வரி விடாமல் கேட்டான்.

## 19

''எத்தனை தடவை சொன்னேன். நீயாய்க் கூப்பிடாதே, பேசாதேன்னு..!'' என்று பாமா வெகு காரமாய்ப் பேசினாள்.

இவள் எதற்கு இவ்வளவு தூரம் தன் விஷயத்தில் தலையிடுகிறாள் என்று ஒரு நிமிடம் கோபம் வந்தது. ஆனால், உடனே அண்ணி, பாவம்! தன் மேல் உள்ள அக்கறையினால்தானே இப்படி நடந்து கொள்கிறாள் என்ற பச்சாதாபமும் தோன்றியது.

''என்னண்ணி செய்யச் சொல்றே? நேத்துக் காலையில் கலகலப்பாய்ப் பேசினேன். மத்தியானம் நீ போட்ட போட்ல மூடு அவுட் ஆயிட்டேன். நான் மூடு அவுட் ஆனவுடனே அவரும் மூட் அவுட் ஆயிட்டாரு. அப்படியே ஊருக்குப் போனாரா? காலையிலயும் நேரத்துல வர்லேன்னவுடனே எனக்குக் கவலையாப் போச்சு. எங்க பார்த்தாலும் அவர் நிக்கற மாதிரியே இருக்கு... சிரிக்கற மாதிரியே இருக்கு!'' என்றாள்.

அவள் அதைச் சொல்கிற நேரம் அந்தப்புறம் ரிசீவரைக் காதில் வைத்துக் கொண்டிருந்த இளந்திரையனின் முகம் மென்மையாக மாறியது. இளம்புன்னகை ஒன்று படர்ந்தது. அதற்குள் பாமா தொடர்ந்தாள்.

''நல்லா ஆச்சு போ. அப்புறம் இப்படி என்னையாட்டம் முழிக்க வேண்டியதுதான். இப்ப எப்படி உங்க அண்ணன் எல்லாப் பழியையும் எம்மேல போட்டுட்டுத் தான் நல்லவரா ஆயிக்கறாரு, அது மாதிரித்தான் உன் நிலைமையும் ஆயிடும்!'' என்றாள்.

தேனருவி சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு ஒரு பெருமூச்சு விட்டபடி,

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தாங்க முடியாதே! அது சரி... நமக்கே அவர் மேல் உண்மையான நேசம் இல்லாத போது எங்கே தொடர்பு இருந்தால் என்ன என்றும் தோன்றியது.

எல்லாக் குழப்பமும் மறுநாள் காலை வரைதான். மறுநாள் காலை நேரத்தில் வருவதாகச் சொன்னவன் பத்து மணியாகியும் வரவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தவள், பத்து மணிக்கு அழைத்தாள்.

மாமனார்தான் போனை எடுத்தார்.

''மாமா! அவரு காலையில் நேரத்துலயே புறப்பட்டு வர்றேன்னாரு. புறப்பட்டுட்டாரா?'' என்றாள் தயக்கத்துடன்.

''அம்மா தேனருவி, எங்களுக்கும் ஒரு நாள் விட்டுக் குடும்மா... அவனை!'' என்று கிண்டல் செய்தவர்,

''டேய்! உன்னோட மஞ்சள் ரோஜா மங்கை அழைச்சாச்சு!'' என்று உரத்த குரலில் மகனை அழைத்தார்.

அவன் வந்து போனை எடுத்தான்.

''என்ன... அருவி! நாம இல்லாம இருந்தா நீயாவது கொஞ்சம் தொல்லையில்லாம இருப்பியேன்னு...'' என்று அப்பாவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

''விளையாடாதீங்க! சீக்கிரம் வந்து சேருங்க!'' என்றாள் கடுப்பாக.

''வருகிறேன் அம்மிணி! எப்ப வேண்ணாலும் வந்து எதிரில் நிற்பேன்!'' என்று கலகலவென்று சிரித்தான்.

சொன்ன மாதிரியே பிற்பகலில் அவள் வீட்டில் இருக்கும் நேரம் வந்து சத்தமில்லாமல் ஹாலில் நுழைந்தான்.

போன் மணி அடித்தது. அந்தப் பக்கம்...

எப்போதும் தேனருவி எடுத்ததும் நாகரீகமாக வைத்து விடுவான். ஆனால், தேனருவி - தான் இந்தப் பக்கம் ரிசீவரை எடுக்கும்போதே - அந்தப் பக்கம் எடுப்பதை அறிந்தும் வைக்கவில்லை. முழுவதும் கேட்டான்.



முகம் இறுகிக் கொண்டே போக வரி விடாமல் கேட்டான்.

## 19

''எத்தனை தடவை சொன்னேன். நீயாய்க் கூப்பிடாதே, பேசாதேன்னு..!'' என்று பாமா வெகு காரமாய்ப் பேசினாள்.

இவள் எதற்கு இவ்வளவு தூரம் தன் விஷயத்தில் தலையிடுகிறாள் என்று ஒரு நிமிடம் கோபம் வந்தது. ஆனால், உடனே அண்ணி, பாவம்! தன் மேல் உள்ள அக்கறையினால்தானே இப்படி நடந்து கொள்கிறாள் என்ற பச்சாதாபமும் தோன்றியது.

''என்னண்ணி செய்யச் சொல்றே? நேத்துக் காலையில் கலகலப்பாய்ப் பேசினேன். மத்தியானம் நீ போட்ட போட்ல மூடு அவுட் ஆயிட்டேன். நான் மூடு அவுட் ஆனவுடனே அவரும் மூட் அவுட் ஆயிட்டாரு. அப்படியே ஊருக்குப் போனாரா? காலையிலயும் நேரத்துல வர்லேன்னவுடனே எனக்குக் கவலையாப் போச்சு. எங்க பார்த்தாலும் அவர் நிக்கற மாதிரியே இருக்கு... சிரிக்கற மாதிரியே இருக்கு!'' என்றாள்.

அவள் அதைச் சொல்கிற நேரம் அந்தப்புறம் ரிசீவரைக் காதில் வைத்துக் கொண்டிருந்த இளந்திரையனின் முகம் மென்மையாக மாறியது. இளம்புன்னகை ஒன்று படர்ந்தது. அதற்குள் பாமா தொடர்ந்தாள்.

''நல்லா ஆச்சு போ. அப்புறம் இப்படி என்னையாட்டம் முழிக்க வேண்டியதுதான். இப்ப எப்படி உங்க அண்ணன் எல்லாப் பழியையும் எம்மேல போட்டுட்டுத் தான் நல்லவரா ஆயிக்கறாரு, அது மாதிரித்தான் உன் நிலைமையும் ஆயிடும்!'' என்றாள்.

தேனருவி சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு ஒரு பெருமூச்சு விட்டபடி,

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அண்ணி, பாவம்ண்ணி, அவரு. நான் ரொம்ப அவரைத் தொல்லைப்படுத்தறனோன்னு எனக்கே தோணுது!" என்றாள்.

"அப்ப என்னமோ செய். நீதானே அன்னைக்குக் குடும்ப வாழ்க்கையில என்னென்ன பிரச்னைகள் இருக்குன்னு எனக்குத் தெரியாது, எப்படி நடந்துக்கணும்னு கைடன்ஸ் குடுன்னு கேட்டே?" என்றாள் ஏதோ உதவி செய்பவள் போல.

"சரியண்ணி, நீ சொன்னது போலவே இருந்து... பார்க்கறேன்..." என்றாள் தேனருவி.

பாமா அந்தப் பக்கம் ஃபோனை வைத்தவுடன் தேனருவியும், ஃபோனை வைத்தாள். அவனும் அரவமில்லாமல் ஃபோனை வைத்தான்.

'போயும் போயும் இந்தப் பாமாவிடம்தானா இவள் அறிவுரை கேட்க வேண்டும்?' என்று நொந்து போனான் இளந்திரையன்.

அதே சமயம்!

ஆஹா! இன்றைக்குத் தேனருவியை வேண்டு மட்டும் குழப்பியாகி விட்டது என்று மகிழ்ச்சியாகத் திரும்பினாள் பாமா.

திகைத்து நின்றாள்.

வேள்பாரி அவளை முறைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

இது நாள்வரை இல்லாத மாதிரி மட்டுமல்லாமல், இனி வாழ்நாள் வரை மறக்க முடியாத வண்ணம் ஓங்கி ஒரு அறை அறைந்தான்.

பொறி கலங்கினாற் போல் நின்றாள் பாமா. கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது.

"என்னடி நெனச்சே நீ? துரத்தி விட்டா சோறு போடக்கூட ஆள் இல்லாதவ! பாவம் பாவம்னு நான் பொறுத்துப் போகப் போக, நீ பண்ற வொள்ளு தாங்கலை. இன்னைக்கு என் தங்கச்சி குடும்ப வாழ்க்கையையே கெடுக்கற அளவுக்குப் போயிட்டே.



என்ன ஜென்மம்டி நீ?" என்று வலக்கையால் ஆக்ரோஷமாகத் தள்ளி விட்டான். அச்சம் மேலிட்டவளாய் அவள் சோபாவில் பொத்தென்று அமர்ந்தாள். பாமாவைப் பார்க்கப் பார்க்க அவனுக்குக் கோபம் அதிகமாகியது. கொலையே செய்து விடலாமென வெறி தோன்றியது.

"பழிகாரி..! நாசகாரி நீ..!" என்று அவன் கோபம் பார்த்த அவள் தயங்கியபடி, "நான்.. நான் கொஞ்சம் விட்டுப்பிடிச்சா நல்லாருக்கும்னு..." என்று இழுத்தாள்.

"பேசாதே.. பேசினே கொலையே விழும்!" என்று மிரட்டினான்.

அந்த நேரம்!

அவன் செல்போன் ஒலித்தது. எடுத்தான்.

"மச்சான், நான் நம்பி பேசறேன். உங்க வைஃப்..." என்று ஆரம்பித்தான்.

வேள்பாரி வெலவெலத்துப் போனான். அவசரமாக வெளியே போய் நின்று பேசினான். பத்து நிமிடங்களுக்கு மேல் பேசி விட்டு வந்து,

"மச்சானுக்கு எல்லாமும் தெரிஞ்சுபோச்சு!" என்று நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டு அமர்ந்தான்.

பாமா பீதியடைந்தவளாய் அவனைப் பார்த்தாள்.

★ ★ ★

இளந்திரையனுக்கு வருத்தம், கோபம், ஆச்சரியம் எல்லாம் ஒரே சமயத்தில் பொங்கின. அப்பா எப்படிப் புரிந்து கொண்டார். என்ன இருந்தாலும் அனுபவம் அனுபவம்தான் என்ற ஆச்சரியம் ஒரு பக்கம்.

குடும்பத்தைக் கலைப்பதில் இந்த அம்மாவுக்கு என்ன இவ்வளவு ஆர்வம் என்று பாமாவின் மேல் கோபம்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இவ்வளவு அறிவாளியாய் இருந்தும் இப்படி ஏமாளியாகவும் இருக்கிறாளே இந்தத் தேனருவி என்று வருத்தம் ஒரு பக்கம். வந்த சுவடு தெரியாமல் அலுவலகம் போனவன், அப்போதுதான் வந்தவன் போல்,

''அருவி... நான் இப்பத்தான் வந்தேன். நீ நேரா ஆபீஸ் வந்துரு!'' என்றான் போனில்.

அவளும் எதுவும் தெரியாதவளாய் யதார்த்தமாய் அலுவலகம் போனாள். அந்த இடைவெளிக்குள் மைத்துனன் வேள்பாரியிடம் பேசி முடித்தான்.

★ ★ ★

அன்றிரவு!

உணவு முடித்தவுடன் தங்கள் அறைக்கு வந்தார்கள்.

தினமும் சற்று நேரம் பொதுப்படையாக ஏதாவது பேசுவான். அலுவலக விஷயங்கள், கொடுக்கல், வாங்கல்கள் பற்றிப் பேசுவார்கள். அதற்குப் பின் வேலையிருப்பவள் போல் அவள் சமையலறையில் புகுந்து கொள்வாள்.

வந்ததற்குப் பின் களைப்பில் உறங்கி விடுவாள். தன்னிடமிருந்து தப்பிப்பதற்காக அவள் செய்கிற முயற்சிகளை அவன் உள்ளூர ஒரு சிரிப்புடன் கவனித்துக் கொள்வான். ஆனால், தொல்லை செய்ய மாட்டான்.

இன்றைக்கு அவள் 'கிச்சனில் கொஞ்சம் வேலை' என்று கிளம்பியவுடன், ஓய்வாகப் படுக்கையில் சாய்ந்தபடி ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்த அவன்,

''ஹேய்! அருவி, இன்னைக்கு வேலையை எல்லாம் கொஞ்சம் வேலம்மாகிட்டே விட்டுட்டு வா, பேசணும்,'' என்றான்.

அவளும் தயங்கியபடி மேலே வந்தாள்.

''பார்..! அருவி! ஏன் என்கிட்டேயிருந்து தப்பிக்கறதுலயே இருக்கறே?'' என்றான்.



அவள் விழித்தாள்.

''உட்கார்!'' என்று படுக்கையைத் தட்டி அருகில் அமர வைத்தான்.

அவளும் அமர்ந்தாள்.

''இத பார், அருவி. நாம வாழ்நாள் முழுக்கச் சேர்ந்து இருக்கப் போறவங்க. எல்லா உறவுகளும் உடல் சம்பந்தமாத்தான் இருக்கணுங்கறதில்லே. ஆனா, ஒரு விஷயம் நான் சொல்லியே ஆகணும். நான் உன்னை ரொம்ப நேசிக்கறேன். உயிருக்குயிராய். அது பத்தி உனக்கு இன்னும் நம்பிக்கை வரல்லே. உனக்கு முழு நம்பிக்கை வர்ற வரைக்கும் நான் காத்திருக்கேன்...'' என்று அவன் உணர்ச்சிகரமாகப் பேசுகையில், அவள் தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் தொடர்ந்தான்.

''அதனால நாம இனிமே நண்பர்களா இருக்கக் கூடாதா? அதுக்குக் கூடவா வாய்ப்பு இல்லே?'' என்றான்.

அவள் தலை குனிந்து யோசிக்கிறாற் போல் ஒரு நிமிடம் கடத்தினாள். பிறகு நிமிர்ந்து,

''இருக்கலாம். தப்பில்லே!'' என்றாள்.

''அப்பாடா! எங்கே ஐ.நா. சபை கூடி முடிவெடுக்கணும்னு சொல்லியோன்னு நெனச்சேன்!'' என்று கலகலவென்று சிரித்தான்.

அவள் புன்னகைத்தாள்.

''எப்பவும் படபடப்பா இருக்கறே. அன்ஈசியா ஃபீல் பண்றே. வேண்டாம். அதெல்லாம் விட்டு. கணவன் மனைவி உறவு கூட ஒரு வயசுக்கப்புறம் நட்பாய்த்தான் இருக்கப் போகுது. புரியுதா?'' என்றான்.

அவளுக்குப் புரிந்தது. தலையாட்டினாள்.

''பார்..! இது உன் வீடுங்கற உணர்வு உனக்கு இருக்கணும். உனக்கு இங்கே சம உரிமை இருக்கு. ஈஸியா இரு. சந்தோஷமா

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இரு. நான் ஒருத்தன் இருக்கேங்கறதையே மறந்துட்டு ஹாப்பியா இரு, என்ன?'' என்றான்.

அவள் முகம் மெல்ல மலர்ந்தது. ''ம்.. சரி!'' என்றாள்.

''குட்!'' என்றான் குழந்தைக்குச் சொல்வது போல். தனக்குத் தானே தலையாட்டிக் கொண்டாள். அவன் நிறுத்தவில்லை.

''அப்புறம் இன்னொரு விஷயமும் இருக்கு!'' என்றான்.

''ம்.. சொல்லுங்க..!'' என்றாள்.

''நீ ரொம்ப புத்திசாலி. திறமைகள் உள்ள ஒரு பொண்ணு. அது மட்டுமில்ல.. ஒரு பார்ன் ஃபைட்டர். அதனால எல்லா முடிவுகளையுமே நீயே யோசிச்சு எடு, என்ன?'' என்றான்.

''சரி...!'' என்றாள்.

''போதும். உன் வயசுக்கு நீ வேணுங்கற பாரம் சுமந்தாச்சு. இங்க... இந்த வீட்டு மகாராணிங்கறதை மனசுல வச்சுகிட்டு நிம்மதியா இரு. ஆடணும்னா ஆடலாம். பாடணும்னா பாடலாம். இயற்கையாய் இரு!'' என்றான்.

அவள் நெகிழ்ந்து விட்டாள்.

''தாங்க்ஸ் நம்பி!'' என்றாள்.

''நமக்குள்ளே தாங்க்ஸ் கூடத் தேவையில்லை. ஏன்னா... நாம ஃப்ரண்ட்ஸ்!'' என்றான்.

அவள் மகிழ்ச்சியாகச் சிரித்தாள்.

''நான் ஒண்ணு சொல்லட்டா?'' என்றாள்.

''சொல்லு.''

''நீங்க மட்டும் டீச்சிங்குக்குப் போயிருந்தீங்கன்னா ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லா இருந்திருப்பீங்க!'' என்றாள்.

''நீ வேற! ஒரே ஒரு ஆளுக்கே நான் எடுக்கணும்னு நினைக்கிற பாடத்தை விவரமா எடுக்க முடியலே!'' என்று சோகமானான்.



அவள் ஆட்காட்டி விரலை நீட்டி மிரட்டினாள்.

''மிஸ்டர் நம்பி! லைன் கிராஸ் பண்றீங்க?'' என்றாள்.

''நோட் பண்ணி வச்சுக்க. நான் பண்ற தப்பையெல்லாம் நோட் பண்ணி வச்சுக்க. அப்புறம் ஒண்ணா தண்டனை குடுப்பியாம்..!'' என்றான் சளைக்காமல்.

''யு ஆர் இம்பாசிபிள்..'' என்றாள். சிரித்தபடி எழுந்து போனாள்.

அன்றிலிருந்து மனம் லேசானது போல் உணர்ந்தாள். மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்த பய உணர்வும் எதிர்ப்புணர்வும் மறைந்த வுடனேயே இலேசாக உணர்ந்தாள்.

அவனுக்குச் சமமாக விளையாடினாள். ஆனால், உள்ளுக்குள் யோசனையாக இருந்தாள்.

மனைவியிடம் கூட இவ்வளவு நாகரிகமாக நடந்து கொள்கிற கணவன் உண்மையா? அல்லது அன்றைக்குத் தான் கேட்டது உண்மையா? இப்போது பார்க்கிற இவன்தான் உண்மையானவனாக இருக்க முடியும்.

அவருடைய நடத்தையில் எங்கேயும் பொய்ம்மையோ நடிப்போ இருக்கவில்லை என்பதை உணர்ந்தாள். மெல்ல மெல்ல அவள் மனமும் மாறிக் கொண்டு வருவதை உணர்ந்தாள்.

அதற்கேற்றாற் போல் அந்த வாரத்தில் வேறொன்றும் நடந்தது.

★ ★ ★

ஞாயிற்றுக் கிழமை!

வேள்பாரியும், பாமாவும் குடும்பத்தோடு வந்தார்கள்.

''அண்ணன்தான் ரொம்ப வற்புறுத்திக் கூப்பிட்டாங்க!'' என்றாள் பாமா.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அண்ணன்!" இளந்திரையன் கண்களில் ஒரு குறும்புச் சிரிப்போடு நின்று கொண்டிருந்தான்.

"இரண்டு நாளும் இங்கேதான் இருக்கப் போறாங்க!" என்று புன்னகைத்தான்.

வழக்கம் போல் குழந்தைகள் அவனிடம் தொற்றிக் கொண்டார்கள். அவன் தோளில் ஏறி விளையாடுகிற பாரியின் மகன் தருணைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த தேனருவியின் மனத்தில் மற்றக் குழந்தைகளையே இவ்வளவு அன்பாக நடத்துகிறாரே, அவருக்கே அவருக்குன்னு ஒரு குழந்தை பிறந்தால் எப்படி வைத்துக் கொள்வார் என்ற எண்ணம் தோன்றியது. முகம் சிவந்தது.

உள்ளுக்குள் ஏதோ குறுகுறுப்புத் தோன்ற, அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் பார்வை அவன் முகத்தின் மேல் ஆழப் படிந்திருப்பதையும் தன் உள்ளத்தில் ஓடுவதை அவன் புரிந்து கொண்டு விட்டதையும் அவள் உணர்ந்து கொண்டாள்.

தாமரை ஓடி வந்து மாமாவின் அருகில் அமர, "தாமரை, உங்க அத்தையைப் பிடி. அத்தை மடிதான் மெத்தை மாதிரி இருக்குமாம்!" என்று அவளிடம் தள்ளி விட்டான்.

சற்று நேரம் குழந்தைகளுக்கு இணையாக விளையாடினார்கள்.

பகலுணவு முடிந்த பின் வேள்பாரி, ,"பாமா! நீயும் தேனுவும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டிருங்க. நானும், மச்சானும் கொஞ்சம் ஷாப்பிங் போயிட்டு வரோம், குழந்தைகளோட!" என்று கிளம்பினார்கள்.

அப்போது பாரி கண்களில் ஏதோ செய்தியைப் பாமாவுக்குச் சொன்னமாதிரியையும், அவளும் சரியெனத் தலையாட்டியதையும் தேனருவி கவனிக்கவில்லை. விருந்தினர் அறையில் பாமா கட்டிலில் சாய்ந்து கொள்ள, தேனருவி ஏதோ பூவேலை செய்ய ஆரம்பித்தாள்.



பாமா மெதுவாக, "தேனு..! நேத்து நீ பேசினதுக்கப்புறம் ரொம்ப யோசிச்சேன். நீ சொல்றதெல்லாம் பாத்தா உங்க வீட்டுக்காரர் ரொம்ப நல்ல மாதிரின்னுதான் தோணுது!" என்றாள்.

பாமா இப்படித் தலை கீழாய்த் தட்டைத் திருப்பிப் போடுவாள் என்று தேனருவி சற்றும் எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனாள்.

பாமா வெகு அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு தொடர்ந்தாள்.

"ஆமாம்... ஆச்சரியப்படாதே! உங்க மாமாவோட படிச்சவங்க ரெண்டு பேரு எங்களுக்கு உறவுக்காரங்க. யதேச்சையாய் நேத்து சந்திச்சேன். உங்க வீட்டுக்காரரைப் பத்தி விசாரிச்சேன். எல்லாரும் அவரை ரொம்ப நல்ல மாதிரின்னுதான் சொல்றாங்க!" என்றாள்.

தேனருவி நொந்து போனாள். இந்த அண்ணியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு எத்தனை நாள் தன் கணவனை அலைக்கழித்தாள். எவ்வளவு வேதனைப்படுத்தினாள். அப்போது அவளுக்கு இன்னொரு கேள்வியும் மனதுக்குள் தோன்றியது.

திடீரென்று இரண்டு நாளுக்கு முன்பு தன் கணவன், "நீ ரொம்ப புத்திசாலி. எந்த முடிவை எடுக்கறதுன்னாலும் நீயே யோசிச்சு எடு!"ன்னு சொன்னாரே, ஏன் என்ற யோசனை எழுந்தது.

'ஷாப்பிங்' போய் வருகிறேன் என்று போய் வந்த கணவன் பாமாவுக்கும் அண்ணனுக்கும் குழந்தைகளுக்கும் வாங்கிக் கொடுத்த பரிசுப் பொட்டலங்களைப் பார்க்கும்போதும் வேள்பாரி அவளுக்கும், கணவனுக்குமாக வாங்கித் தந்த பரிசுப் பொட்டலங்களைப் பார்க்கும் போதும், அவர்களெல்லாம் புறப்படும் வரைக்கும் சரி, மனது ஒட்டாமலே நடமாடிக் கொண்டிருந்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சரமாரியாகக் கேள்விகள் உள்ளே அலைஅலையாய் எழுந்து கொண்டிருந்தன. அவைகளுக்கெல்லாம் விடை அடுத்த நாள் கிடைத்தது.

## 20

திங்கட் கிழமை!

நான் மில்லுக்குப் போயிட்டு வரேன் என்று இளந்திரையன் கிளம்பிப் போனதன் பின் தேனருவிக்கு ஒரு போன் வந்தது.

"தேனு! நான் பாரி பேசறேன். உங்கிட்டே நான் கொஞ்சம் பேசணுமே!" என்றான்.

"என்ன, ஏதாவது பணம் கேட்பானாயிருக்கும்!" என்று எண்ணிக் கொண்டாள் தேனருவி.

"தாராளமா வா அண்ணா, பேசலாம்," என்றாள்.

வந்தான். பகலுணவு உண்டபடியே வேலைக்காரர்களை அந்தப்புறம் அனுப்புமாறு சொல்லிவிட்டு நடந்த கதையெல்லாம் சொன்னான்.

பாமா, அண்ணியின் இரட்டை வேடம் பற்றிக் கேட்டுத் தேனருவி உண்மையாகவே அதிர்ந்து போனாள்.

"அம்மா.. தேனு! இவ்வளவு தெரிந்த பின்னேயும் கூட மாப்பிள்ளே ரொம்பப் பெருந்தன்மையா நடந்துகிட்டாரு. 'மச்சான்!' என்ன இருந்தாலும் அவங்க உங்க வைஃப். அவங்களோட கௌரவம் கெடறதை நான் விரும்பலே. அருவி மனசில அவங்க விதைச்ச விஷச் செடியை அவங்களையே பிடுங்கி எறியச் சொல்லுங்க. நான் பிஸினஸ் மேன். எனக்கு வேற விதமாக் கூட டீல் பண்ணத் தெரியும். ஆனா, அருவியை நான் ரொம்ப நேசிக்கறேன். அவளுக்கு எந்தச் சங்கடமும் வரக் கூடாதுன்னு பாக்கறேன்!' அப்படீன்னுதாம்மா சொன்னாரு," என்றான்.

தேனருவியின் முகம் கனிந்தது.



"அது மட்டுமில்லம்மா. உங்கிட்டக் கூட எதையும் சொல்ல வேண்டாம்ன்னுதான் சொன்னாரு. ஆனா, உங்க அண்ணி சாகசக்காரி. திடீர்ன்னு ஏதாவது விஷமம் செஞ்சாலும் செய்வா. அதனால்தான் நான் உனக்கு எச்சரிக்கை பண்ணி வைக்கிறேன்!" என்றான்.

அன்றைக்குத் தன் வீட்டில் நடந்த காட்சி அவன் மனதில் ஓடியது.

மச்சானிடம் பேசிவிட்டு வந்தவுடன் அவன் பாமாவைப் பின்னி யெடுத்து விட்டான்.

"ஏய்.. ஏன் இப்படிச் செஞ்சே?" என்று பொங்கியவன், கடைசியாகத் தளர்ந்து போய்க் கண்ணீருடன் தலையைப் பிடித்தபடி அமர்ந்து விட்டான்.

அதைப் பார்த்த பின் தான் பாமா இனிமேல் அப்படி நடக்க மாட்டேன் என்று உறுதி கொடுத்தாள். அதற்குப் பிறகு மறுநாள் இளந்திரையனே லைனில் வந்தான்.

"பாமா... உங்களை நான் என் சிஸ்டராத்தான் நினைக்கறேன். உங்களுக்கு என்னென்ன விதத்துல ஹெல்ப் பண்ண முடியும், உங்க குடும்பத்தை எப்படிக் கை தூக்கி விடறது, உங்க குழந்தைகளை எப்படி நல்லபடியா படிக்க வைக்கிறது, உங்களையும் காரு பங்களான்னு எப்படி வசதியா வாழ வைக்கறதுன்னு எத்தனையோ திட்டங்கள் வச்சிருக்கேன். அதையெல்லாம் புரிஞ்சுக்காமே நீங்க என் லைஃப்ல நுழைஞ்சு குழப்பறீங்களே, இது நியாயமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

பாமா அடி வாங்கினாற் போல ஆகிவிட்டாள். "அண்ணா, உங்க பெருந்தன்மை எனக்கு வராதுண்ணா! எல்லாப் பொம்பளைகளுக்கும் இருக்கிற பொறாமை என்னையும் ஆட்டிப் படைச்சிடுச்சுன்னு நெனைக்கிறேன்!" என்றாள்.

"என்ன? எல்லாப் பொம்பளைங்களுக்கும் இருக்கிற பொறாமைங்கறீங்க? பாருங்க, என்னோட அருவிக்குப்

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பொறாமை, பேராசை இதெல்லாம் சுட்டுப் போட்டாலும் வராது.. தெரியுமா?" என்றான் மீண்டும் சிரித்தபடி.

பாமாவே ஒரு கணம் நெகிழ்ந்து விட்டாள்.

"ஆமாண்ணா! அதுதான் அவ குணத்துக்கு நீங்க கிடைச்சிருக்கீங்க. நான் விதைச்ச வினையை நானே அறுக்கிறேன் அண்ணா. என்னை மன்னிச்சிடுங்க!" என்றாள்.

செல்போனை வைத்த பிறகு பாரியின் தோளில் சாய்ந்து அழுதாள். பாரி ஆழ்ந்த வருத்தத்தோடு சொன்னான்.

"நீ என்னைப் பழுது பண்ணினாக் கூடப் பரவாயில்லே! ஆனா, எவ்வளவு நல்லவ என் தங்கச்சி..! அவ வாழ்க்கையைக் கெடுக்கப் பார்த்தியே..!" என்றான்.

அதற்குப் பிறகு பாமா வருந்தி வருந்திப் பாவமன்னிப்புக் கேட்டதையெல்லாம் விவரமாகச் சொன்னான். கடைசியாக,

"அம்மா..! உனக்குக் கிடைச்சிருக்கிற மாப்பிள்ளை தங்கம். அது மட்டுமில்லை. கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய்னு சும்மாவா சொல்லி வச்சாங்க!" என்றான். பிறகும் சற்று நேரம் குடும்ப விஷயங்கள் பேசினான்.

புறப்பட்டுப் போனான்.

தேனருவியின் மனம் வெகுவாகக் கனிந்தது. இத்தனை நடந்திருக்கிறது, கணவன் எதுவுமே சொல்லவில்லையே என்ற எண்ணம் உள்ளே ஓடக் கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

வந்ததற்குப் பிறகு அவன் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையைப் பார்த்த அவன் குமிழ்ச் சிரிப்புடன்,

"ஹேய்! வாட்ஸ் த மேட்டர்?" என்றான்.



"இல்லே! பாரி அண்ணன் வந்திருந்தாரு..." என்றாள்.

ஒரு கணம் அவன் முகத்தில் சிந்தனை ரேகைகள் படிந்தன.

"என்ன சொன்னாரு?" என்றான்.

"சும்மா.. கொஞ்ச நேரம் இருந்துட்டுச் சாப்பிட்டுப் போனாரு..." என்றாள்.

"நல்ல சாப்பாடாய்ப் போட்டியா?"

"என்ன அப்படிக் கேட்கறீங்க...? நான் எது சமைச்சுப் போட்டாலும் அண்ணனுக்கு அது நல்ல சாப்பாடுதான்!" என்றாள்.

இருவரும் சிரித்தார்கள். அவன் சட்டென்று நெருங்கி நின்று,

"ஹேய்! உங்கண்ணனுக்கு மட்டுமில்ல. எனக்கும் உன் கையால விஷமே குடுத்தின்னாலும் அமிர்தம்தான் தெரியுமா?" என்றான்.

அவனது அண்மையில் அவள் விக்கித்து நின்றாள். பிறகு மெல்லிய குரலில்,

"நீங்க பசிச்சுக் கிடந்தவளுக்குப் பால்சோறு மாதிரி என் வாழ்க்கையில வந்தவரு. உங்களுக்கு எதுக்கு நான் விஷம் கொடுக்கப் போறேன்?" என்றாள்.

"ம்...?" என்று அவன் கிறங்கி நின்றான்.

அவள் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டாள். பின் சிரித்தபடி,

"எதுவானாலும் சாப்பிடுவீங்களா?" என்றாள்.

"ம்...!" என்றான், அதே உறுதியுடன்.

"அப்ப நாளைக்குப் பாகற்காய் பொரியல். சுண்டைக்காய்க் குழம்பு..." என்று கலகலவெனச் சிரித்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் கைகள் அவளைத் தழுவின.

"ஹேய்! நிஜம்தான். இப்படிக் கலகலன்னு சிரிச்சுகிட்டு நீ பாகற்காய் குழம்பே பரிமாறினாலும் அது எனக்கு இனிப்பாத்தான் இருக்கும்!" என்றான்.

அவள் அவன் முகம் பார்க்கத் துணிவின்றி அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள். அவனும் அவள் முகம் நோக்கிக் குனிந்து முத்துச்சரம் ஒன்று தொடுத்தான்.

இன்னும் கொஞ்சம் என்று முன்னேறிய கணத்தில் அவன் தன்னை மீட்டுக் கொண்டான்.

"வேண்டாம். உனக்கு இன்னும் முழுசாத் தெளிவு வரலை. வரட்டும். அப்புறம்... அப்புறம்..." என்று விலகினான்.

அவளும் வெட்கத்துடன் விலகிக் கொண்டாள்.

நம்பியால் எப்படி நினைத்த மாத்திரத்தில் தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முடிகிறது என்ற வியப்பு ஏற்பட்டது அவளுக்கு. அன்றைக்கு அப்படித்தான் இரண்டு நாட்கள் தன் பிரியத்தையெல்லாம் வித விதமாய்க் கொட்டியவன் அதே ஆழத்துடன் விலகியும் நிற்கிறான் என்று ஆச்சரியப்பட்டாள்.

அவன் உலவி வருவதாய்ச் சொல்லி வெளியே போனான். ஏனோ தீர விசாரிப்பதே மெய் என்று சொன்ன அண்ணனின் குரலே அவள் காதுகளுக்குள் ஒலித்தது.

அவன் திரும்பி வரும்போது அவள் விழித்திருந்தாள். இளகிய மனநிலையில் இருந்தாள் என்று புரிந்த போதும் அவன் புன்னகையுடன்,

"குட் நைட்... டார்லிங்! நாளைக்கு நிறைய வேலையிருக்கு. ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு..." என்றபடி உறங்கி விட்டான்.

படுத்தவுடனே குழந்தையைப் போல் உறங்குகிற அவனை முதல் முதலாக முழுமையாகப் பார்த்தாள்.



அப்போதுதான் ஒன்று புரிந்தது அவளுக்கு. தன் கணவன் உண்மையிலேயே அழகானவன்தான், கம்பீரமானவன்தான், பெருந்தன்மையானவன் தான் என்று.

முதல் முதலாக அவனைப் பற்றிய பெருமையும், பெருமிதமும் அவளுக்குள் தோன்றின..

★ ★ ★

அவனிடமும் மாற்றம் ஏற்பட்டது.

அவளிடமும் மாற்றம் தெரிந்தது.

அவள் செய்கிற எல்லா வேலைகளுக்கும் உதவிக்கு வந்தான்.

"ஐயோ! எதுக்கு நீங்க இந்த வேலைக்கெல்லாம் வர்றீங்க?" என்று பதறினால்,

"ஏன்! நீ என் கூட வேலை செய்ற ஆபீசுக்கு வரலை? அது மாதிரித்தான் இதுவும்!" என்றான்.

அவள் எதிர்பாராத இடத்தில், டிரஸ்ஸிங் டேபிளில், தலையணைமேல் புத்தக அலமாரியில் என்று அவ்வப்போது சின்னதாக அழகான பரிசு ஏதாவது இருக்கும்.

வேலையில் திறமை காட்டினால் உடனுக்குடன் பாராட்டுக் கிடைக்கும். தவறு செய்து விட்டால் திட்டும் உண்டு. ஆனால், கோபம் மட்டும் அந்த நிமிடம் மறைந்து விடும்.

கேலியும், கிண்டலுமாய்ப் பொழுது ஓடியதால் உழைப்பு அவர்களுக்கு எளிதாக இருந்தது.

அடிக்கடி அவர்கள் வீட்டிலிருந்து கயல்விழி, கிள்ளி, கோப்பெருஞ் சோழன் மூவரையும் வரவழைப்பான்.

ஒரு நாள் அவனும், கிள்ளி வளவனும் சமையல் கூடச் செய்தார்கள்.

நன்றாகவே இருந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அன்றைக்குக் கயல்விழி விளையாட்டுப் போல், "மாமா.. இந்த வீட்டுக்கு வந்தாலே ஜாலியா இருக்கு. உங்களோட பிக்னிக் போனா ரொம்ப நல்லாருக்குமில்ல..." என்றாள்.

"உங்கக்கா வர்றாளா? கேளு, போலாம்," என்றான்.

தேனருவியிடம் இருந்து சம்மதம் கிடைத்தவுடன், எல்லாருக்கும் மேல் அவன் குதித்தான். ஆனால் புறப் படுவதற்கு முதல் நாள் அவளிடத்தில் வந்து,

"ஹேய்! அருவி! உன் ஃப்ரண்டு சங்கீதாவையும் வரச் சொல்," என்றான்.

தேனருவிக்கு மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிக் கொண்டதோ என்று சந்தேகம் வந்தது.

"எதுக்கு?" என்றாள்.

"வரச்சொல்லு.. ஒரு சஸ்பென்ஸ் இருக்கு..." என்றான்.

அவள் வேண்டா வெறுப்பாக ஒத்துக் கொண்டாள். பாரியின் குடும்பம், கயல்விழி, கிள்ளிவளவன், சோழன், மற்றும் அவர்கள் இருவர் என்று போகிற வகையில் ஒரு வேன் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னான்.

பெருத்த ஆலோசனைக்குப் பிறகு காலையில், நேரத்தில் 'கல்லாறு' என்கிற இடத்தில் ஓடுகிற சின்ன அருவியில் குளித்துப் பின்னர் ஊட்டி போவதென்ற ஏற்பாடு செய்தான்.

"மாமா! பிளாக் தண்டர்!" என்றான் சோழன்.

"சரி ஜஸ்ட் டூ அவர்ஸ்!" என்றான். அவசியப்பட்டால் ஊட்டியில் ஃப்ரெண்டின் கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறது, தங்கிக் கொள்ளலாம்," என்றான்.

மறுநாள் அவன் போட்ட திட்டமெல்லாம் மாறி விட்டது.

பிளாக் தண்டரில் நுழைந்த குழந்தைகள் விரும்பிய நேரம் செலவழித்தார்கள். அனுமதித்தான்.



பிறகு கல்லாறு அருவியில் குளித்து முடித்து விரட்டி விரட்டி வேனில் ஏற்றினான்.

சங்கீதா வந்தது முதலில் ஏனோ அருவிக்கு நெருடலாக இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் மறந்து போனாள். வழக்கம் போல் அவளிடம் சிரித்துக் கொண்டாள்.

"மாமா பசிக்குது... சாப்பாடு?" என்றாள் இளந்திரை யனிடம் கெஞ்சலாக.

"ஜஸ்ட்.. டென் மினிட்ஸ் டிரைவ்.. அருமையான பழத் தோட்டம். அங்கே நம்ம ஃப்ரண்ட் ஒருத்தர் காத்துக் கிட்டிருக்காரு!" என்று சஸ்பென்ஸ் வைத்தான்.

உணவுக்குப் போன அந்தப் பழத்தோட்டம் அருமையாக இருந்தது. பாக்கு மரங்கள் வேறு அடர்ந்து வளர்ந்திருந்தன. அவுட்டோர் பிக்னிக் போல அமர்க்களப்படுத்தியிருந்தான்.

"பூஃபே' என்றான். தண்ணீரில் அளைந்து விட்டு வந்ததனால் எல்லாருமே பசியாய் இருந்தார்கள்.

அவரவர்களுக்குப் பிடித்த மாதிரி விரும்பி ரசித்து உண்டார்கள்.

தருண், "தேங்க்ஸ்... மாமா... தேங்க்ஸ்.. மாமா!" என்று கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தம் வைக்க, அவன் தேனருவியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்தான்.

அவர்கள் உணவில் பாதி முடித்த நேரம் ஒரு கார் சர்ரென்று வந்து நிற்க, அதிலிருந்து ஒரு விருந்தாளி வந்து இறங்கினார்.

யாரென்று வியப்புடன் பார்த்தாள், தேனருவி.

அசோக்குமார்! சிரித்தபடி வந்தான். தேனருவி உடனே இளந்திரையனைப் பார்த்துச் சிரித்தாள். அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்,

"எதுக்கு உன் ஃபிரண்டை வரச் சொன்னேன்... தெரியுதா?" என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''ம்.. ம்... இப்பப் புரிஞ்சுது!'' என்று அவள் குதூகலமாக,

''எல்லாமே உனக்குக் கொஞ்சம் லேட்டாத்தான் புரியுது, கண்ணம்மா!'' என்று மட்டம் தட்டினான்.

அவள் கோபித்துக் கொள்ளாமல் ரசித்துச் சிரித்தாள்.

## 21

பிற்பகல் முழுக்கக் குன்னூரில் உள்ள சிம்ஸ் பார்க்கில் செலவழித்தார்கள்.

வளைந்து வளைந்து சென்ற பூந்தோட்டத்தின் நடைபாதைகளில் காலார நடந்தார்கள்.

''ஏன்... அசோக், டென்ஷனான வேலைக்கு நடுவே கொஞ்சம் இப்படியும் தேவையிருக்கு. இல்லே?'' என்றான் நண்பனிடம்.

''ஆமடா... நம்பி..!'' என்று அவனும் ஒத்துக் கொண்டான்.

''தேனருவி சிஸ்டர், நாங்க ஸ்கூல்ல பிளஸ் டூவில் ஒண்ணாப் படிச்சோம். அப்ப இவன் ஹாஸ்டல்ல இருந்தான்னு பேரு. நெனச்சா ஊருக்கு ஓடிடுவான்... அம்மா செல்லம்!'' என்றான் அசோக்.

''ஆமா.. இப்பப் பொண்டாட்டி தாசன்!'' என்று சற்றும் வெட்கமில்லாமல் சிரித்தான் இளந்திரையன்.

தேனருவியின் முகம் சிவந்தது. ''அது சரி.. இப்படி ஒரு லேடி லை ஃபாக் கிடைச்சா நீதான் என்ன செய்வே?'' என்றான் அசோக்.

''அதான்டா, உன்னையும் விடறதில்லே. சிக்க வச்சுர்லாம்னு முடிவு!'' என்றான் இளந்திரையன். அவனும் தேனருவியும் ஏதோ பெரிய திட்டம் தீட்டுபவர்கள்போல் இரகசியப் பார்வை பார்த்துக் கொண்டார்கள்.

''நம்மளைச் சமாளிக்கிற மாதிரி பொண்ணு கிடைக்கணுமே...'' என்றான் அசோக்.



சங்கீதா அப்போது குழந்தைகளுக்கு நடுவில் நின்றபடி பந்து வீசிக் கொண்டிருந்தாள்.

''எல்லாம் கிடைக்கும். கிடைக்காம எங்கே போகும்? இங்கயே சுத்தி முத்தியும் பாரு. பக்கத்திலேயே இருந்தாலும் இருப்பாங்க. பந்து வீசிகிட்டு இருக்காங்களோ, என்னமோ!'' என்றான்.

அசோக் புரியாமல் விழித்தான். இளந்திரையன் கண்ணமர்த்திச் சிரித்தான். அசோக்குக்குச் சட்டென்று புரிந்து போனது.

''பேசிப் பாரு, பழகிப் பாரு. ஏன்னா, நல்லாப் பேசிப் பழகினதுக்கப்புறம் நேரடியா ப்ரபோஸ் பண்றதுதான் நல்லதுங்கறது நான் அனுபவத்தில் கத்துக்கிட்ட பாடம்!'' என்றான்.

தேனருவிக்குக் கொஞ்சம் சுருக்கென்று பட்டது போலிருந்தது. ஆனால் காட்டிக் கொள்ளவில்லை.

''பேசிப் பார்றா.. பிடிக்குதான்னு சொல்லு. அப்புறம் அவங்க சைட்ல பேசலாம்!'' என்றான்.

மற்றவர்களை நோக்கிப் போவதற்கு முன் சற்றே திரும்பி, ''டேய்.. இன்னும் சங்கீதாவுக்கே முழுசா விவரம் சொல்லலை. நீ யெப்படி டெவலப் செய்றேங்கறதைப் பொறுத்துத்தான். டபால்னு போட்டு உடைச்சிராதே!'' என்றான்.

★ ★ ★

'என்ன டாக்டர் சார், விளையாட வர்றீங்களா?'' என்றான் கிள்ளி வளவன்.

அசோக்குமாரும் போய்ப் பந்து விளையாட்டில் கலந்து கொண்டான். பாரியும், பாமாவும் தயங்கி நின்றார்கள்.

''வாங்க.. மச்சான்.. விளையாடுங்க!'' என்று இழுத்து விட்டான் இளந்திரையன். ஒரே கலகலப்பாக இருந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

கலகலப்பில் தேனருவி இயல்பாகக் கலந்து கொள்வதையும் முகம் மலரச் சிரிப்பதையும் தன் மனப்பெட்டகத்தில் அவன் பதித்துக் கொள்வதை அவள் அறியவில்லை.

இரவு ஊட்டி கெஸ்ட் ஹவுஸ் போய்ச் சேர்ந்தார்கள்.

கெஸ்ட் ஹவுசில் சூடான உணவு தயாராக இருந்தது. ரசித்து ருசித்து உண்டார்கள். மீண்டும் ஒரு குழுவாக அமர்ந்து பேசினார்கள். சிரித்தார்கள். பிறகு அவரவர்கள் அறைக்குப் போனார்கள்.

பாரி குடும்பத்துக்கு ஒரு அறை, கிள்ளிக்கும், அசோக்குக்கும், சோழனுக்கும் ஒரு அறை.

சங்கீதாவுக்கும், கயல்விழிக்கும் ஒரு அறை.

இளந்திரையனுக்கும், தேனருவிக்கும் ஒரு அறை என்று ஒதுக்கினார்கள்.

"அருவி, நீ வேண்ணா கொஞ்ச நேரம் சங்கீதா கிட்டே நேரம் செலவழிச்சுட்டு வா. உங்களுக்கு இப்படி நேரம் கிடைச்சு ரொம்ப நாளாயிருக்கும் இல்லே?" என்றான்.

தேனருவிக்கும் அதுதான் எண்ணமாக இருந்தது. ஆனால், தானாக எப்படிக் கேட்பது என்று தயங்கிக் கொண்டிருந்தாள்.

'நீங்க?' என்றாள்.

"நான் அசோக்கிட்டே கொஞ்ச நேரம் பேசணும்..." என்றான்.

தேனருவியும், சங்கீதாவும் கெஸ்ட் ஹவுசுக்கு முன்னாலே இருந்த புல்வெளியில் இருந்த சிமெண்டு பெஞ்சுகளில் அமர்ந்திருந்தார்கள்.

"ஹேய்! தேனு... உங்க வீட்டுக்காரர் ஜெம் ஆஃப் எ மேன்... தெரியுமா? நீங்க ஃபாமிலியாப் போறீங்க. அதுல நான் எப்படின்னு தயங்கினா, "ஏன் நீங்க என்னோட அருவிக்குப் பிடித்தமான தோழி... எனக்கு சிஸ்டர்... அப்படீன்னாரு..." என்றாள்.

'ஓ...!' என்று மகிழ்ச்சியில் பேச்சற்றுப் போனாள் தேனருவி.



"தேனு... அவரு ரொம்ப உன்னை நேசிக்கறாரு. ஆனா, இந்தப் பக்கம் இருந்து பெரிய ரெஸ்பான்ஸ் இல்லை போலிருக்கே?" என்றாள்.

தேனருவி அப்போதுதான் முதல் முறையாகத் தன் மனம் திறந்தாள்.

'ரொம்ப நல்லவராத்தான் இருக்கறாரு!' என்று சொல்லி விட்டுக் கண்காட்சியில் தான் கண்டது இவரைத்தான் என்பதை விளக்கிச் சொன்னாள்.

சங்கீதா சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள். பிறகு,

"ஏன்... தேனு... நீதானே சொல்வே? எப்பவும் நம்ம ஆழ்மனசிலே ஒரு குரல் எது சரி, எது தப்புன்னு சொல்லும்னு. அது இந்தத் தடவை எதுவும் சொல்லலியா?" என்றாள்.

தேனருவி சிந்தனை வயப்பட்டவளாக, மெல்லிய குரலில் "ஒருமகனா, முதலாளியா, கணவனா எல்லா விதத்துலயும் அவர் நடந்துக்கறதைப் பார்த்தா... இவரு அப்படிச் சொல்லக் கூடியவர்ன்னு. எனக்குப் படலே. ஆனா, இல்லேன்னும் சொல்லிட முடியாதே!" என்றாள்.

"நேர்ல கேட்க வேண்டியதுதானே?" என்றாள் சங்கீதா.

"ஐயய்யோ... வேண்டாம்!" என்று பதறினாள் தேனருவி. "இப்பத்தான் ஒரு வழியா ஒரு குழப்பம் முடிஞ்சிருக்கு!" என்று பாமா செய்த தில்லு முல்லுகளையெல்லாம் சொன்னாள்.

சங்கீதாவின் முகம் கடுமையாகியது. "தேனு! உன்னை நான் இதுவரைக்கும் ரொம்பப் புத்திசாலின்னு நெனச்சுட்டிருந்தேன். கேவலம், பாமாக்கா மாதிரி சராசரி லேடீஸ் எல்லாமா உன் வாழ்க்கையைக் குழப்பறதுக்கு அனுமதிப்பே?" என்றாள். பின்னும் சற்று நேரம் கோபமாகத் திட்டினாள்.

தேனருவி அமைதியாக வாங்கிக் கொண்டாள். 'இதெல்லாம் நம்பி திட்டியிருக்க வேண்டிய திட்டு. தனக்கு இது

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

வேணும்தான்!' என்று எண்ணிக் கொண்டாள். அவள் பொறுமையாக வாங்கிக் கொள்வதைப் பார்த்தது சங்கீதாவுக்கே பாவமாகிப் போனது. ஆனால், தேனருவி,

"திட்டுடி. நல்லாத் திட்டு. இதெல்லாம் அவரே திட்டியிருக்கணும். ஆனா, ஒரு வார்த்தை கூட என்னைக் கேட்கலை!" என்றாள் வருத்தத்துடன்.

"இதுலயே அவரைப் பத்தி நீ புரிஞ்சுக்க வேண்டாமா?" என்றாள்.

"புரியுதுடி... ஆனா, போராட்டமாவும் இருக்கு..." என்றாள்.

சட்டென்று சங்கீதாவுக்கு அந்தச் சந்தேகம் வந்தது.

"ஏய்! நீ சொல்றதைப் பாத்தா... உங்களுக்குள்ளே எதுவுமே..?" என்று நிறுத்தினாள்.

தேனருவி முகம் சிவக்க வேறு பக்கம் பார்த்தாள். "அப்படீன்னும் இல்லே... ஆனா, எனக்கு ஏதோ குழப்பம்னு அவருக்குத் தெரிஞ்சு போச்சு. அதனாலே... உன் மனசு தெளிவாகட்டும்னு அவரே..." என்று நிறுத்தி விட்டாள்.

"இது ஒண்ணு போதும்டி, அவரோட கேரக்டரை நீ புரிஞ்சுக்கறதுக்கு...." என்றாள். பிறகு எழுந்து மேலும் கீழும் நடந்தாள்.

"சரி... நான்... ஒண்ணு சொல்றேன். அந்தக் கண்காட்சி மேட்டரையே மறந்துடு. அவரு சொன்னதை நாம நேரடியாப் பாக்கலை. பேசிக்கிட்ட மூணு பேர்ல இவரு ஒருத்தரு. அவ்வளவுதானே?" என்றாள்.

"இல்லையே... இவரோட குரலேதான்... அது!" என்றாள்.

"சரி... விடு... அந்த நேரம்... ஃபிரண்ட்ஸோட ஜாலியா ஏதோ சொல்லிட்டாரு. பணக்காரர் வேறயா? நம்ம ஊர்ல மேட்ச் மேக்கிங் அப்படீங்கற பேர்ல மேல நிறையப் பேர் விழுந்து புடுங்கியிருப்பாங்க. அந்தக் கோபமாயிருக்கும்..." என்று அந்த விஷயத்தைப் புறந்தள்ளி விட்டாள்.



"இப்ப நான் சொல்றதைக் கேளு!" என்றாள்.

தேனருவியும் தயாரானாள். "எப்பவாவது நல்ல மூட்ல இருக்கும் போது ஏன் அப்படிச் சொன்னீங்கன்னு கேட்டு க்ளியர் பண்ணிக்க. அது ஒரு பக்கம். ஆனா, இப்ப இருந்து அவரைப் புது மனுஷனாப் பாரு. கல்யாணம் ஆன நாள்லே இருந்து அவர் உன்கிட்டே எப்படி நடந்துக்கிட்டாரோ அதை மட்டுமே வச்சு ஜட்ஜ் பண்ணு..." என்றாள் பிறகு திடீரென்று,

"அது சரி... இப்படி ஒண்ணை மனசுல வச்சுக்கிட்டு எதுக்கு கல்யாணத்துக்குச் சரின்னு சொன்னே?' என்றாள்.

"எங்க வீட்ல எல்லாருக்கும் பிடிச்சிருந்தது. அதுவுமில்லாம, ஏனோ எனக்கும் மறுக்க முடியல. ஆஸ் எ பர்ஸன்... எனக்குப் பிடிச்சுத்தான் இருந்தது...." என்றாள்.

"தட்ஸ் குட். அதே மனப் போக்கோட ஃப்ரெஷ்ஷா ஸ்டார்ட் பண்ணு!" என்றாள்.

"ஆமாடி, அப்படித்தான் செய்யணும்!" என்றாள் தேனருவி.

மனந்தெளிந்தாள். உற்சாகமாக எழுந்து வந்தார்கள். சற்று தூரம் வந்ததும், ஒரு அழகான புதர்ச் செடியின் அந்தப்புறம் அசோக்கும், இளந்திரையனும் பேசிக் கொண்டதும், அதில் சங்கீதாவின் பெயர் அடிபடுவதும் கேட்டு நின்றார்கள்.

"என்னடா, அசோக்... சங்கீதா எப்படி?" என்று கேட்டுக் கொண்டிருந்தான் இளந்திரையன்.

"ம்.... அழகா... ஸ்மார்ட்டா இருக்காங்க... என்ன திடீர்னு மேட்ச் மேக்கிங்கெல்லாம் ஆரம்பிச்சுட்டே?" என்றான் அசோக் சிரித்தபடி.

அதற்கு இளந்திரையன், "டேய்... அசோக்... என் வைஃப் இருக்காளே... ரொம்ப இன்டலிஜென்ட். ஷார்ப், கேரிங் அண்ட் லவ்வபிள் லேடி. ஆனா, ரொம்ப சென்சிடிவ். ஒரு

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

விஷயம் அவளைப் பாதிச்சுதுன்னு வச்சுக்க. திடீர்னு ஆமை மாதிரி உள்ளே ஒடுங்கிக்குவா, அவ. கலகலன்னு சிரிச்சுக்கிட்டே பழகற ஆளு... இந்தச் சங்கீதாதான்!"

இதைக் கேட்டவுடன், 'பார்த்தியா?' என்பது போல் சங்கீதா தேனருவியைப் பார்க்க, அவள் கனவில் நிற்பவள் போல நின்றாள்.

"சங்கீதாகிட்டே விசாரிச்சப்ப, ஸ்டேட்டஸ் டிஃபரன்ஸ் இருந்தாக் கூட சங்கீதாதான் விரும்பி நெருங்கிப் பழகினாங் களாம். எங்க ஆளுகிட்டே நெருங்கிப் பழகணும்னா... உண்மையிலே சங்கீதா சராசரிப் பொண்ணா இருக்கமுடியாது. ஏன்னா எங்க ஆளு, சராசரி ஆளுங்களுக்கெல்லாம் மேலே, தனிவிதம்!" என்று பெருமையாகச் சிரித்தான். அசோக்கும் புன்னகைத்தான். மேலும் தொடர்ந்தான். 'நீயும் கொஞ்சம் அந்த டைப்தான்... நம்மளை மாதிரிக் கிறுக்குகளெல்லாம் ஒண்ணாச் சேர்ந்தா... இப்படி அப்பப்ப ஏதோ கலகலப்பாய்ப் பொழுதைப் போக்கலாமே...!" என்றான்.

சங்கீதாவுக்கு இப்போதுதான் விஷயமே முழுமையாகப் புரிந்தது.

'அப்படியா விஷயம்?' என்று அவள் தேனருவியைப் பார்க்க, மெதுவாக அந்தப் பக்கம் நகர்ந்தார்கள்.

"அசோக்.... உனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு அவரு ரொம்ப ஸ்ட்ராங்கா ஃபீல் பண்றாரு..." என்றாள் தேனருவி, முணுமுணுப்பாக.

சங்கீதா உடனே ஒன்றும் இளகிவிடவில்லை. 'இப்பத் தானே விஷயம் சொல்றீங்க. நாளைக்குப் பேசறேன்,' என்று நகர்ந்தாள்.

போனவள் திரும்பி வந்து, "நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். இன்னையிலிருந்து நீ புது ஆள்... என்ன?" என்றாள்.



தேனருவி தலையாட்டியபடி நகர்ந்தாள். அறைக்குப் போய் உடனே உறங்கி விடாமல் அமர்ந்திருந்தாள். இளந்திரையன் வந்தான்.

லுங்கி, பனியனுக்கு மாறி வந்தான். அவள் அவன் உடைகளை மடித்து வைத்தவள், "ஆனாலும் இப்படியா... சின்னப் பையனாட்டம் சட்டை யெல்லாம் அழுக்குப் பண்ணிட்டு வந்து நிப்பாங்க...?" என்று உரிமையாகக் கடிந்து கொண்டாள், முதல் முறையாக.

ஒரு நிமிஷம் வியப்பாகப் பார்த்தவன்,

"ஸர்ஃப் எக்ஸெல் இருக்கே!" என்று விளம்பரம் போல் நடித்துக் காட்டினான். அவள் சிரித்தாள். 'ஐயோ! போதுமே!' என்றாள்.

அன்றைய நிகழ்வுகளையெல்லாம் கலகலப்பாகப் பேசிக் கொண்டார்கள்.

"நீ ஏதாவது சங்கீதாவுக்கு விஷயம் சொன்னியா?" என்றான்.

"ம்... அது சரி... நீங்க பாட்டுக்கு இதெல்லாம் செய்றீங் களே? அவங்க அம்மா... அப்பா..." என்று இழுத்தாள்.

"ஐயாவை யாருன்னு நெனச்சே... ரெண்டு பக்கம் பெரியவங்ககிட்டே பேசி... ஜாதகப் பொருத்தம் பார்த்து எல்லாம் முடிஞ்சுது... இனி... அவர்களுக்கு ஒருத்தரை!" யொருத்தர் பிடிக்கணும். அவ்வளவுதான்!" என்றான்.

"அப்புறம்... என்ன? அரேன்ஜ்ட் மேரேஜாவே முடிக்க வேண்டியதுதானே?" என்றாள்.

'இல்லை அருவி... அவங்க கொஞ்சமாவது பழகணும். மனசுக்குப் பிடிக்கணும். அது ரொம்ப முக்கியம்..." என்றான்.

'ஓ...!' என்றாள். பிறகு, "ஆனா... நீங்க அப்படியொண்ணும் என்கிட்டே பழகலையே?" என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"பழகலை... ஆனா, உனக்கு என்னைப் பிடிச்சிருந்ததுன்னு எனக்குத் தெரியும்..." என்றான்.

"எப்படி?" என்றாள் ஆச்சரியமாக.

"எப்படின்னா... அம்மிணி ஒரு அறிவுஜீவி, உனக்குப் பிடிக்காத காரியத்தை யாருமே செய்ய வைக்க முடியாதுன்னு எனக்கு ஸ்ட்ராங் நம்பிக்கை..." என்றான்.

அவள் இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. மனமும், முகமும் குழைய நின்றாள். அவள் நெகிழ்ந்து நிற்பதைப் புரிந்து கொண்டு அவன் மெதுவாக நெருங்கினான்.

"ஹேய்! அருவி... இந்தத் தருண்குட்டி என் மேலே விழுந்து புரளும் போதெல்லாம் நமக்கும் எப்ப இப்படி.... உன் ஜாடையிலயோ அல்லது என் ஜாடையிலயோ... ஒரு பய பிறந்து... மேல புரள்றதுன்னு ரொம்ப ஏக்கமா இருக்கு!" என்றான்.

அவள் விக்கித்து நின்றபடி, அவன் கைச்சிறைக்குள் அடங்கினாள். அவன் அடிக் குரலில் சிரித்தான்.

"பரவாயில்லை. ஊட்டிக் குளிர் ஏதோ மாய மந்திரம் பண்ணிடுச்சு போல... தேவியாருக்கும் என்மேல கருணை வந்திருச்சு போலருக்கு..." என்று முணுமுணுக்கவும்.

"ப்ளீஸ்... நம்பி..." என்றாள் தவிப்புடன்.

"தட்ஸ் வாட் ஐ ம் டெல்லிங்... ப்ளீஸ் நம்பி...மேடம்!" என்று அவன் அதையே திருப்பிப் போடவும், அவள் மிகவும் திகைத்துப் போனாள்.

"சே! உங்ககிட்டே பேச முடியாது!" என்று போலியாய்ச் சலித்துக் கொள்ள,

"தட்ஸ் வாட் ஐ ம் டெல்லிங்... பேசாதே... நோ மோர் டாக்கிங்!" என்றான்.



இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையில் அவள் இசைந்து கொடுத்தாள். ஆனால், அவள் உறங்கிய பிறகு அவன் வெகுநேரம் விழித்துக் கொண்டிருந்தான்.

அவள் மனதில் ஊவா முள் போல் ஏதோ உறுத்தல் இருக்கிறது என்று அவன் உள் மனது சொன்னது.

மறுநாள்!

இதுவரை யில்லாத வழக்கமாய் நம்பியின் இரகசியச் சீண்டல்களையும் குறும்புப் பேச்சையும் அவள் அனுமதித்தாள்.

மாலை ஊருக்குப் புறப்படுவதற்கு முன் கெஸ்ட் ஹவுசில் மாலைச் சிற்றுண்டி வந்தது... அப்போது ஒரு புதரோரம் நின்ற இளந்திரையன், 'இங்கே வா!' என்று கையசைத்து அழைக்க அவளும் அவனருகில் போனாள்.

'அங்கே... பார்!' என்று காட்ட இரண்டு கைகளிலும் சூடான இரண்டு காஃபிக் கோப்பைகளை ஏந்தியபடி அசோக் ஒரு வட்ட சிமெண்ட் மேஜையை நோக்கி வர, அங்கே சங்கீதா அமர்ந்திருந்தாள்.

'பய சிக்கிட்டான்!' என்று சிரித்தான் இளந்திரையன்.

இருவர் முகத்திலும் தெரிந்த நாணம் கலந்த சிரிப்புப் பார்த்துத் தேனருவியும் மனம் மகிழ்ந்து சிரித்தாள். அதே நேரம் ஒரு வாய் அருந்திய பின் சங்கீதா மேடையின் மேல் கப்பை வைக்க, அசோக், 'சங்கீதா, அங்க... பாரு!' என்று எதையோ காட்டவும், அவள் திரும்பிப் பார்க்கிற நேரத்தில் கப்பை மாற்றுவதையும், சங்கீதா அதைக் கண்டுபிடித்து வெட்கப்படு வதையும் பார்த்த தேனருவி திகைத்து நிற்க, இளந்திரையன் நின்ற வாக்கிலேயே வலக்கையால் வலத்தொடையின் மேல் ஒரு தட்டு தட்டிக் கொண்டு வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

"எங்கப்பா... சாமி! செம... பாஸ்ட்! பய விழுந்தே... விழுந்துட்டான்!" என்றபடி.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

தேனருவி முறைத்தபடி, "சிக்க வைக்கறதுல என்ன இவ்வளவு சந்தோஷம்?" என்றாள்.

பொய்க் கோபத்துடன்,

"ஆமா... யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம்..." என்று மறுபடியும் சிரித்தான்.

"துன்பமா? நேத்து உளறின உளறல்... பார்த்தா அப்படித் தெரியலியே?" என்று அவள் வம்பிழுத்தாள். அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"ஆனா... அந்தப் பக்கம்... இன்னும்..." என்று சொல்ல வந்தவன் நிறுத்தி விட்டான்.

அவள் பயத்துடன் நிமிர்ந்து பார்க்க, "இன்னும்... எதுக்குமே தைரியம் வர மாட்டேங்குதேன்னு சொன்னேன்!" என்று சொல்லிவிட்டு,

'வா... நாம டிஸ்டர்ப் செய்ய வேண்டாம்' என்று அழைத்துக் கொண்டு நகர்ந்தான், பிறகு, "ஹேய்! இந்த விஷயம் மட்டும் ஒரு வகையில் பார்த்தா துன்பம்தான்... இன்னொரு வகையில பார்த்தா இன்பம்தான்..." என்று அனலைஸ் வேறு செய்தான்.

அவள் வெட்கத்துடன் நகர்ந்து மற்றவர்களோடு சேர்ந்து கொண்டாள்.

அவன் குறும்புச் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது.

## 22

ஊருக்கு வந்ததுமே இளந்திரையன் முற்றிலும் மாறிப் போனான்.

வேலைப்பளு அவ்வளவு கூடியிருந்தது. இந்த ஆண்டு உற்பத்தி கூடுதலாக இருந்தது. அவன் இரவு பகலாக அலைய வேண்டியிருந்தது.

"அருவி! சில முன்னேற்றங்கள் செய்ய வேண்டியிருக்கு. புதுசா இயந்திரங்கள் கொஞ்சம் வாங்கிப்



போட வேண்டியிருக்கு..." என்று சொல்லி அதற்காக அலைந்து கொண்டிருந்தான். அவளும் அலுவலகத்தில் நேரம், காலம் பாராமல் உழைத்தாள்.

சொந்த விஷயங்களை நினைக்கவோ, அலசவோ அவளுக்கும் கூட நேரம் இருக்கவில்லை. ஒரு மாதம் இயந்திரங்களைப் புதுப்பிக்கிற வேலை முடிந்த பின்தான் கொஞ்சம் ரிலாக்ஸானான். ஆனால், 'மார்க்கெட்டிங் கொஞ்சம் இம்ப்ரூவ்... செய்ய வேண்டும், அருவி!' என்று அதற்காகக் கொஞ்சம் அலைச்சல்.

தேனருவி அந்த அலைச்சலின் காரணமாய் எழுந்த கோப தாபங்களையெல்லாம் பொறுமையாகத் தாங்கிக் கொண்டாள்.

நேரத்துக்கு அவன் உணவு சாப்பிடுகிறானா என்பதையெல்லாம் கவனமாகக் கவனித்துக் கொண்டாள். மாலை நேரங்களில் வெஜிடபிள் சாலட், சுண்டல், பழங்களினாலான சாலட், காலை நேரங்களில் முட்டை என்று பார்த்துப் பார்த்துச் செய்தாள்.

'ஏய்! விடு, சாப்பாடா இப்ப முக்கியம்?' என்று எரிந்து விழுந்தால்,

'ப்ளீஸ்! ப்ளீஸ்! நீங்க சட்டையைப் போடறதுக்குள்ளே ஊட்டி விட்டுடறேன். மார்னிங் ஃபுட் ரொம்ப அவசியம். தெரியுமா?' என்று கூடவே நடந்து ஸ்பூனால் எடுத்துக் கொடுத்துச் சாப்பிடச் செய்வாள்.

சில நேரம் சிரித்து விடுவான். செல்லமாய் இதழ் பதித்து விட்டுச் செல்வான்.

அன்றைக்கு!

அவசரமாய் வந்தவன்,

"அருவி! ஒரு கான்ஃபரன்ஸ் இருக்கு. டெல்லியில! உடனே போகணும்!" என்று புறப்பட்டான்.

"எவ்வளவு நாள்?"

"நாலு நாள்!" என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள் முகம் வாடிவிட்டது கண்டு வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

"ஹேய்! நாலு நாள்தானே... ஓடி வந்தர்றேன்..." என்றான்.

அவள் மனத்தைத் தேற்றிக் கொண்டு அவனுக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்து வைத்தாள்.

அன்று மாலையே டெல்லி போய்ச் சேர்ந்து ஃபோன் செய்தான்.

மறுபடியும்

இரவு ஃபோன் செய்தான். "அருவி! ஒரு ஆப்ளிகேஷன். நீ தான் ஹெல்ப் செய்யணும்!" என்றான்.

"ஆணையிடுங்கள்... அரசே!" என்று சிரித்தாள்.

"ஹேய்! விஷயம் சீரியஸானது. அமெரிக்க நண்பர்கள் சில பேர் நம்ம வீட்டுக்கு வருவாங்க. நாளைக்குக் காலையில அங்க இருப்பாங்க! மூணு நாளைக்கு நம்ம வீட்ல இருப்பாங்க. ரெண்டு நாள் சமாளிச்சேன்னா நான் வந்துடுவேன்..." என்றான்.

சற்று நேரம் திகைத்தாள். அதற்குள் அவளுடைய வழக்கமான உடன்பாட்டு மனப்பான்மை சிலிர்ந்தெழுந்தது.

"கவலைப்படாதீங்க... சமாளிச்சர்றேன்..." என்றாள்.

"தட்ஸ் குட்!" என்றான்.

"எத்தனை.... பேர்?" என்றாள்.

"ஏழு... பேர்... நாலு பேர் ஜென்ட்ஸ். மூணு பேர் பெண்கள்!" என்றான்.

"சரிங்க... நீங்க மெதுவா கொஞ்சம் அவங்க கிட்டே பேசி... அவங்க பழக்க, வழக்கங்கள் பத்தியெல்லாம் விவரம் சேகரிச்சு ஈ மெயில்ல அனுப்பிச்சுடுங்க..." என்றாள்

"அது ஒண்ணும் பிரச்னையில்லை. அவங்களுக்கு நம்ம கல்சர் பத்தித் தெரிஞ்சுக்கிறதிலே ரொம்ப இன்ட்ரஸ்ட்... அதைப் பத்தி முடிஞ்சவரைக்கும் சொல்லு ஒரு நாள். நம்ம



வீட்ல தங்கியதுக்கப்புறம் ஒரு நாள், நம்ம ஊருக்குக் கூட்டிட்டுப்போ. நான் வந்து ஜாயின் பண்ணிக்கறேன்... என்ன?" என்றான்.

"சரிங்க...!" என்றாள்.

"அப்புறம், உங்க வீட்லயிருந்து கயலு, கிள்ளி, சோழன் எல்லாத்தையும் கூடக் கூப்பிட்டுக்க. அவர்களுக்கு ஒரு ஃபாமிலி அட்மாஸ்ஃபியர் வேணுமாம்!" என்றான்.

அவள் தீவிரமாகக் கேட்டுக் கொண்டாள்.

மறுநாள் காலை.

இரண்டு கார்களில் போய் கிள்ளியும், அவளும் அவர்களை ஏர்போர்ட்டில் வரவேற்று அழைத்து வந்தார்கள்.

வீட்டுக்கு வந்தவுடன், சங்கீதா மாலை அணிவிக்க, தேனருவியின் அம்மா ஆரத்தி கரைத்து வரவேற்றார். சற்று நேரம் இருந்து விட்டு அம்மா கிளம்பிவிட்டார். வாசலில் தேனருவி போட்டிருந்த பெரிய கோலம் பார்த்து அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

"ஹேய்! திஸ் இஸ் நைஸ்! வொன்டர்ஃபுல்!" என்று எல்லாவற்றையும் ஹாண்டி கேமிராவில் பதிவு செய்து கொண்டார்கள்.

பூஜையறையைக் காட்டினாள். வீட்டுத் தோட்டம், அலுவலகம் என்று எல்லாவற்றையும் காட்டினாள்.

அந்தப் பெண்களுக்கு ஒரே ஆச்சரியம். கேத், ஜென்னி, பார்பரா என்று மூவருக்கும் அவள் அணிந்திருந்த சுடிதார் ரொம்பவும் பிடித்துப் போனது. புடவை கட்டக்கூடப் பழக்கிவிட்டாள்.

வின்சென்ட், ஹாரிஸ், வில்சன், ரோஜர் என்று ஆண்களுக்கும் எல்லாமே வியப்புத்தான். ஒவ்வொன்றுக்கும் கிளுகிளுத்துச் சிரித்தார்கள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள் நெற்றியிலிருந்த திருநீற்றைப் பார்த்து, இது என்ன என்று விசாரித்தார்கள்.

"இட் இஸ் ஹோலி... ஆஷ்..." என்றாள். இது எப்பவும் லைஃப் நிலையாததுதான்னு நமக்கு ஞாபகப் படுத்துது என்றவுடன் அவர்கள் மலைத்துப் போனார்கள்.

குங்குமப் பொட்டை 'வர்மீலியன் மார்க்' என்று விளக்கினாள்.

முருகன் என்ற தெய்வத்துக்கு ஆறு தலைக்கான ஆறு ஆதாரங்கள், அதே முகம், பன்னிரண்டு கைகள்ன்னா பன்னிரண்டு உயிரெழுத்துக்கள், பதினெட்டுக் கண்கள்னா மெய்யெழுத்துக்கள் என்று எல்லாவற்றிற்கும் அவள் விளக்கம் வைத்திருப்பதைப் பார்த்து அவர்கள் நிஜமாகவே வியந்து போனார்கள்.

கிழக்கத்தியத் தத்துவங்களின் மகத்துவம், ஆழம் பற்றியெல்லாம் சொன்னாள். மாம்பழத்துக்காக முருகனுக்கும், விநாயகனுக்கும் எழுந்த பிரச்னையை வேடிக்கையாய்ச் சொல்லிக் கடைசியில், "கான்செப்ட் என்னன்னா, விநாயகர் அம்மா அப்பா கிட்டேதான் உலகம் இருக்குதுன்னு புரிஞ்சுகிட்டார். முருகன் உலகமே அம்மா, அப்பான்னு புரிஞ்சுகிட்டார்!" என்றாள். அவர்கள் கைகொட்டி ரசித்தார்கள்.

தமிழ் இலக்கியங்கள், காதலும், வீரமுமாக வாழ்ந்த தமிழர் மரபு பற்றியெல்லாம் அவள் சொன்னதைக் கேட்டு அவர்கள் உண்மையாகவே வியந்து போனார்கள். இதற்கிடையில் நல்ல சைவ உணவு வகைகளாக அவள் சமைத்துப்போட ருசித்துச் சாப்பிட்டார்கள்.

அன்று பிற்பகல் கோயமுத்தூரைச் சுற்றிக் காட்டினாள். மறுநாள் ஊருக்கு அழைத்துப் போனாள்.

ஊரிலும் கிராமத்திற்கேற்ப அவள் நடந்து கொள்கிற விதம், மாமியார், மாமனாரிடம் அவள் காட்டுகிற உறவு நிலை எல்லாவற்றையும் பாராட்டினார்கள்.

விவேகானந்தனின் ஆங்கில அறிவு, அவர் சொன்ன வரலாற்றுக் கதைகள் எல்லாம் பெரிய விருந்தாக இருந்தன.



பக்கத்திலே இருந்த பாரியூர் அம்மன் கோயிலுக்கும், கொடிவேரிக்கும் அழைத்துச் சென்றார்கள் குடும்பத்தினர். இரண்டாவது நாள் அசோக் அவர்களோடு வந்து சேர்ந்து கொண்டான்.

இரண்டாம் நாள் நள்ளிரவில் இளந்திரையன் வந்து சேர்ந்தான்.

மறுநாள் அவர்கள் வயல், மில் என்று எல்லாவற்றையும் சுற்றிக் காட்டினான். அவர்களிடம் அவள் பேசிய அழகான ஆங்கிலத்தைப் பார்த்து இளந்திரையனே மலைத்துப் போனான்.

"ஹேய்! இவ்வளவு அழகாப் பேசுவேன்னு எனக்கே தெரியாதே?" என்றான் ஆச்சரியமாக.

'அவசியம் வர்லையே! எல்லா மொழி மாதிரி ஆங்கிலமும் ஒரு மொழி. தேவைப்படற இடத்துல பயன்படுத்த வேண்டியதுதான். தேவையில்லாத இடத்துல வெற்றுக் கௌரவத்திற்காக எதுக்கு அதைப் பேசணும்?" என்றாள்.

'யப்பா! நெத்தியடி... கண்ணம்மா...!" என்று சிரித்தான். மெல்ல அருகில் வந்து, "அப்புறம் இன்னும் என்னென்ன ரகசியம் வச்சிருக்கே?" என்றான்.

"நம்பி! நல்லா உதை வாங்குவீங்க!" என்றாள்.

"காத்திருக்கிறேன்... தேவியாரே!" என்று அவன் சிரிக்க... அவளும் சட்டென்று சிரித்து விட்டாள்.

அந்த நேரம் அங்கே வந்த ஹாரிஸ் - அந்தக் குழுவிலேயே இளைஞன் - சிரித்தபடி, 'உன்னைப் பார்த்தா எனக்குப் பொறாமையாயிருக்கு, மிஸ்டர் இளந்திரையன்!" என்றான்.

"ஏன் இந்திய மனைவிக்கு இவ்வளவு ஒரு பெருமைன்னு எனக்குப் புரியுது..." என்றான். அவன் மனைவி சொன்ன தத்துவ விளக்கங்களையெல்லாம் சங்கீதா விவரிக்க...

"அட்டா! ஔவைப் பாட்டியாரே நேர்ல வந்த மாதிரி இருக்கு!" என்று அவன் சிரித்தபோது, அந்தச் சிரிப்பில் நெஞ்சு கொள்ளாப் பெருமை இருந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அப்ப... நீங்க... தாத்தாதானே?" என்று சோழன் கேட்க...

"அடப்போடா! அப்பன் ஆகறதுக்கே வழியைக் காணமாம்!" என்று அவன் சிரிக்க

"அடேய்! அதை அங்க கேள்றா!" என்று தேனருவியைக் கைகாட்டி அசோக்குமார் சிரித்தான்.

"என்னமோ... பொங்கற மாதிரியுத் தெரியுது..." என்று நழுவினாள் தேனருவி.

மெதுவாகப் பின்னால் போனான் இளந்திரையன்.

"என்ன பொங்குவது? அங்க ஒண்ணும் பொங்கலே! இங்க... இங்கதான் காதல் பொங்கி வழியுது!" என்று மார்பின் இடப் பக்கத்தைத் தட்டிக் காட்ட,

"சும்மாயிருங்க...!" என்றாள் வெட்கத்துடன்.

"வேற வழி! பெரிய கூட்டமே சுத்திலும் இருக்கே...!" என்றபடி நகர்ந்தான்.

இரண்டு நாட்கள் திரும்பவும் கோயமுத்தூரில் செலவழித்து பின் நண்பர்கள் கிளம்புவதாக ஏற்பாடு. இடையிலே ஞாயிற்றுக்கிழமை காலை சர்ச்சுக்குப் போக வேண்டுமென்ற தனால் எல்லாருமாகப் போனார்கள்.

தேனருவியும் மண்டியிட்டுத் தீவிரமாகப் பிரார்த்தனை செய்வதை இளந்திரையன் கேள்விக்குறியுடன் பார்க்க, அவள் புன்னகைத்தாள்.

"எல்லா மதங்களின் சாரமும் ஒண்ணுதான். அவர்களுக்கு மேரி, நமக்கு மாரி. எல்லா மதமும் மத்தவங்க மேலே அன்பு வைக்கணும்னுதான் சொல்லுது. சாரம்தான் முக்கியம்... பின்னே சடங்குகளெல்லாம் சக்கை!" என்றாள் ஆங்கிலத்தில்.

அவன் கைகட்டி வாய்பொத்திக் கேட்பது போல் நடிக்க, அவள் செல்லமாக அவன் முதுகில் ஒன்று போட்டாள்.

எல்லாரும் சிரித்தார்கள்.



வில்சன் இளந்திரையனிடம் தனியே சொன்னான்.

'ஹேய்! யுவர் வைஃப் இஸ் வெரி ஸ்வீட். நாலெட்ஜபிள். வெரி இம்பார்ட்டன்ட் திங் இஸ் வித் ஆல் திஸ் டேலண்ட்ஸ், ஷி இஸ் ஹம்பிள் (உன் மனைவி ரொம்ப இனிமையானவள் அறிவாளி... இதைக் காட்டிலும் மனசுல பதியறது என்னன்னா, இத்தனை திறமையும் இருந்தும் கூடப் பணிவாக இருக்கிறாள்)!" என்றான்.

இளந்திரையன் பெருமையுடன் ஆமோதித்துக் கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமை மாலையே சங்கீதாவும், அவளும் காரில் புறப்பட்டார்கள்.

"நான் போய் எல்லா ஏற்பாடும் செய்து வைக்கிறேன்!" என்று வந்துவிட்டார்கள்.

நல்ல உணவு உபசரிப்பு பாரம்பரியம் பற்றிய நிறைவு விஷயங்கள் என்று அவர்கள் மகிழ்ந்து போனார்கள்.

திங்கட் கிழமை மாலை!

தேனருவியும், சங்கீதாவும் இணைந்து பாட்டுக்கள் வேறு பாடினார்கள்.

சிரிப்பும், பாட்டும் கொண்டாட்டமுமாய்க் கழித்து, அவர்களைத் தங்கள் ஊருக்கு வருமாறு அழைத்தார்கள். அவர்களைப் பகல் ரயிலில் அனுப்பி விட்டு, இளந்திரையன்,

"அருவி... ஒரு வார வேலை பெண்டிங், அப்பாவுக்குத்தான் தொல்லையா இருக்கும்... நான் போய்க் கொஞ்சம் செட்ரைட் பண்ணிட்டு நைட் வந்தர்றேன்!" என்று கிளம்பிவிட்டான்.

வீட்டுக்கு வந்தாள்... கிள்ளிவளவனும், கயல்விழியும், கோப்பெருஞ்சோழனும் கூடக் கிளம்பிப் போய்விட்டார்கள்.

அசோக்குமார் காலையிலேயே வேலை இருக்கிறது என்று போய்விட்டான். சங்கீதாவும் மாலை கிளம்பி விட்டாள்.

தேனருவிக்கு வீடே வெறிச்சோடிப் போன மாதிரி இருந்தது.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

குட்டி போட்ட பூனை மாதிரி அங்கும் இங்கும் அலைந்தாள்.

எட்டு மணி வாக்கில் ஃபோன் அடிக்கவும், அவசரமாய் ஓடி எடுத்தாள்.

'ஹலோ!' என்று அந்தப் பக்கம் இளந்திரையன் குரல் கேட்டது. தன்னை மறந்து தாபம் நிறைந்த குரலில்,

"என்னமோ நேத்து அப்படிக் கொஞ்சினீங்க! ஆனா இன்னைக்கு ஆளே வந்து சேரலை? எப்பத்தான் வருவீங்க?" என்றாள் கொஞ்சலாக.

அந்தப் பக்கம் மௌனம் நிலவியது.

"என்னங்க பேச மாட்டேங்கறீங்க? எனக்கு இருப்பே கொள்ள மாட்டேங்குது. சீக்கிரம்... வாங்க...!" என்றாள், மறுபடியும் கிறக்கக் குரலில்.

பதிலுக்கு...

"மேடம்! நான் இளந்திரையன் இல்லைங்க... நாகராஜ்... நாகராஜ். அவன் ஃப்ரெண்ட் பேசறேன்..." என்றான் ஒருவன்.

பொட்டில் அறைந்தாற்போல் நின்றாள். அவமான உணர்வு பிடுங்கித் தின்றது.

'ஓ... ஐம் சாரி... நான் அவர்ன்னு... நினைச்சுட்டு...!" என்று இழுத்தாள்.

அவன் அதைக் கண்டு கொள்ளாதவனாக, 'மேடம்... நான் அங்கதான் வந்துகிட்டிருக்கேன். பத்து நிமிஷத்துல இருப்பேன்!" என்றான்.

'சரி... வாங்க!' என்றாள்.

ஃபோனை வைத்தபின் அவளே மறுபடியும் இளந்திரையனுக்கு ஃபோன் செய்து விவரம் சொன்னாள்.

அதற்குப் பதிலாக அவன் படபடப்பாக இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுப்பதைக் கேட்டு ஆடிப் போனாள்.



## 23

"அருவி! நாகராஜ் கிட்டே தனியா எதுவும் பேசாதே! நல்லா உபசரிக்கலாம். தப்பில்லே. ஆனா, கூட வேலைக்காரங்களை வச்சுக்க... என்ன, நான் சொல்றது தெரியுதா?" என்றான் இளந்திரையன் படபடப்பாக.

'ஏன்?' என்றாள்.

"ஏன்னா, அவனுக்குப் பெண்கள் மேலே மரியாதை கிடையாது. ஒரு டைப்பான ஆள். இது மட்டும் இப்போதைக்குப் போதும். நான் அரைமணி நேரத்துல வந்துடுவேன்... என்ன?" என்றான்.

நாகராஜ் வந்து சேரவும் பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டது. அவள் நம்பியின் கட்டளைப்படி வேலம்மாவையும், மற்ற இரண்டு வேலைக்காரப் பெண்களையும் சமையலறை வாசலிலேயே நிற்க வைத்துக் கொண்டாள்.

தோட்டக்காரனைப் போர்ட்டிகோவின் முன்னாலே நிற்கச் சொன்னாள்.

பெண்கள் மேலே மதிப்பில்லாத ஆளாமே, அந்த ஆள் கிட்டே போயி வழக்கமில்லாத வழக்கமாகத் தான் கொஞ்சலாகப் பேசி என்று தலைவிதியை நொந்து கொண்டாள். ஆனால், எதையும் காட்டாமல் வரவேற்றாள். அவன் வந்து பேசும்போது வெகுவாகத் திகைத்துப் போனாள். ஏனென்றால் அவன் குரல் இளந்திரையனின் குரலைப் போலவே நேரிலும் ஒலித்தது.

எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று, "வாங்க... அண்ணா. நீங்க ரொம்ப க்ளோஸ் ஃப்ரெண்டுன்னு இவர் சொன்னாரு!" என்று ஒரு அண்ணாவைப் போட்டாள்.

அவனும் இயல்பாகத்தான் எடுத்துக் கொண்டான். "உங்க கல்யாணத்தப்ப நான் ஸ்டேட்ஸ்ல இருந்தேன். கிடைக்காத ஆஃபர் ஒண்ணும் கிடைச்சது. நம்பிதான் ஏற்பாடு செய்து கொடுத்தான்," என்று சாதாரணமாகத்தான் சொன்னாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சற்று நேரம் தாழ்த்துவதற்குள்ளாகவே இளந்திரையனும் வந்து சேர்ந்தான். உடனடியாக உணவு தயாரித்து ஒரு சின்ன விருந்தே வைத்தாள்.

இளந்திரையனும், அவனும் சற்று நேரம் பேசிக் கொண் டிருந்தார்கள்.

''அருவி! காலேஜ் டேஸ்ல இவன் செய்த தொல்லை தாங்க முடியவில்லை. இரண்டு பேர் குரலும் ஒரே மாதிரி இருக்குங் கறதை வச்சுட்டுப் பெண்களுக்கெல்லாம் ஃபோன் பண்ணி என் பேரைச் சொல்லி வைப்பான்!'' என்றவுடன் நாகராஜ் சிரித்தான்.

''அது ஒரு காலம் சிஸ்டர். பொண்ணுங்க இவன் பேரைச் சொன்னாத்தான் பேசுவாங்க. என் பேரைச் சொன்னாலே டொக்குன்னு ரிசீவரை வச்சுடுவாங்க. என்மேலே அவ்வளவு நம்பிக்கை...'' என்று சிரித்தான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

தேனருவி, ''ரெண்டு பேரோட குரலும் அச்சு அசலா ஒரே மாதிரி இருக்கு!'' என்றாள்.

''ஆனா, கொஞ்ச நாள்ல எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு. இவன் அப்படி யெல்லாம் பொண்ணுங்களுக்கெல்லாம் ஃபோன் பண்ற டைப் இல்லேன்னு. ஆனா, இவன்கிட்டே எல்லாரும் நல்லாப் பழகுவாங்க!'' என்றான் நாகராஜ்.

'ஆமாடா, உங்கிட்டே சாதாரணமாகப் பேசினாக்கூட அது நம்ம கேர்ள் ஃப்ரண்டு தெரியுமான்னு தண்டோரா போடுவே! யார் பழகுவாங்க?'' என்றான்.

சாப்பிட்டு முடித்த பின்னும் சற்று நேரம் இருந்தான். அவர்களுக்கு அழகான ஒரு ஹாண்டி காமிரா பரிசு கொடுத்தான்.

''எதுக்குடா... இவ்வளவு காஸ்ட்லியாய்?'' என்று இளந்திரையன் தயங்கியபோது, ''நடக்கிற காரியமா! உன்னோட ஹெல்ப் மட்டும் இல்லாம இருந்தா... நான் நல்ல நிலைக்கே வந்திருக்க முடியாது. அப்படியிருக்க... வேற எப்படிடா... என் நன்றியைக் காட்றது?'' என்றான்.



''சரி... சரி... ஓவர் சென்டிமென்டாப் போட்டுத் தாக்காதே. வாய்ப்பைப் பயன்படுத்திக்க... நல்லா வா... அப்புறம்... இந்த லேடீஸ் பத்திக் கண்டபடியா கதை பரப்பறதையெல்லாம் விட்டுடு. அது ஒண்ணு மட்டும் இல்லேன்னா... உன்னை மாதிரிக் கெட்டிக்காரன் யாரும் இல்லேன்னு சொல்லலாம்!'' என்றான்.

''டேய்! அதெல்லாம் ஒரு காலம்... இப்ப எனக்கும் எல்லாம் புரியுதுடா... கதை விட்டுக் கதை விட்டு ஒரு பெரிய விவகாரத்திலே சிக்கி... தப்பிச்சதே போதும்னு ஆயிடுச்சு... அதனாலே இந்த ஜாலிக்காகப் பேசறதெல்லாம் விட்டுட் டேன்டா...'' என்றான், உண்மையான வருத்தத்துடன்.

புறப்பட்டான். ''அம்மாவைக் கேட்டதாச் சொல்லு,'' என்று வழியனுப்பிவிட்டு வந்தான். வந்தவன் மனைவியிடம், 'அருவி! இவன் குரலும்... என் குரலும்... ஒரே மாதிரி இருக்குமா? எப்பவும் அது ஒரு குழப்பம்தான்!'' என்றான்.

அப்போது தேனருவியும் முகம் சிவந்தபடி, ''நான் கூட நீங்கதான்னு நெனச்சுகிட்டு...'' என்று இழுத்தாள்.

''நினைச்சுகிட்டு...?'' என்றான் கவலையாய். அவள் வெட்கத்துடன் பேசியதைச் சொன்னாள். அவன் கடுப்பாகி விட்டான்.

''பேசறது யாருன்னு கேட்டுட்டு அப்புறம் பேசித் தொலைக்கறதுக்கென்ன?'' என்றான் எரிச்சலாக.

'எனக்கு... எனக்கு... என்ன தெரியும்?'' என்றாள் வேர்த்துப் போய்.

''என்ன... உனக்கு என்ன தெரியும். உனக்கு என்னை வறுத்தெடுக்கிறதுக்குத் தெரியும். வேற என்ன தெரியும்? அவன்... எல்லாருகிட்டயும் இளந்திரையன் பொண்டாட்டி என்கிட்டே கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாடான்னு சொல்லிக் கிட்டுத் திரிவான்...''

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''உங்களுக்கு இப்படி ஒரு ஃபிரண்டு...'' என்று அவள் ஆரம்பிக்கும் போதே, அவன் மேலும்... ''அவன்கிட்டே... தனியாய்க் கூடப் பேசாதேன்னு... சொன்னேனே... அதுலயே புரிய வேண்டாம்?'' என்றான்.

''அது... அது... அப்புறம்... நான் ஃபோன்ல பேசினப்பதானே சொன்னீங்க...'' என்றாள்.

''ஆமாம்... இப்ப மட்டும் வக்கணையாப் பதில் சொல்லு...'' என்றான் கோபம் குறையாமல். அப்போதுதான் அவளுக்குச் சந்தேகம் தோன்றியது. ஒருவேளை... ஒருவேளை... அன்னைக்கு ஹோட்டலிலும் இவன்தான் பேசியிருப்பானோ என்ற எண்ணம்.

இருக்கும்... அப்படித்தான் இருக்கும் என்ற எண்ணம் தோன்றியதுமே, ஒரு பக்கம் மகிழ்ச்சி காட்டாற்று வெள்ளமாகப் பொங்கியது. மறு பக்கம் கவலையும் தோன்றியது. அந்த நேரத்தில் நம்பி ஏதோ சொன்னதை அவள் கவனிக்கவில்லை.

''ஏய்? என்ன? நான் பாட்டுக்குப் பேசிகிட்டிருக்கேன்...' என்று அவன் கத்த,

''இப்ப இப்படிக் கத்துங்க. அப்ப இப்படி ஒரு ஆளை ஏன் ஃபிரண்டாய் வச்சுகிட்டீங்க... அவனால்தானே இத்தனை குழப்பமும்...'' என்றுசொல்ல வந்தவள் நிறுத்தி விட்டாள்.

அவன் பார்வை கூர்மையாகியது.

''என்ன... என்ன... குழப்பம்?'' என்றான்.

அதற்குள் அவளுக்குச் சந்தேகம் வந்தது. அன்றைக்கு இவன் ஹோட்டலுக்கு வந்தானா என்று எப்படித் தெரிந்து கொள்வது? தெரியாமல் எப்படிச் சொல்வது என்று திகைத்து விட்டாள்.

என்ன விஷயம் என்பதுபோல் அவன் பார்க்க...

''இல்லே... அப்புறம் பேசலாம்...'' என்று மாடிக்குப் போய்விட்டாள். அவனும் தொடர்ந்தான்.



''என்ன... என்ன விஷயம்... சொல்லு...'' என்றான்.

அவள் தயக்கத்துடன் கேட்டாள்: ''இல்லே, இவரோட நீங்க வெளியே போறதுண்டா?''

'ம்...' என்றான்.

''எங்கேங்கே போவீங்க?'' என்றாள்.

''இதென்ன இன்டர்வ்யூ?'' என்று கேட்டுவிட்டு, ''எப்ப வாவது நண்பர்கள் சந்திச்சுக்கறதுதான். நம்ம கல்யாணத்துக்கு ஒரு நாலு மாசத்துக்கு முன்னாடி கூட சும்மா எக்ஸிபிஷன் போயிட்டு ஹோட்டல்ல சாப்பிட்டமே...'' என்றான்.

''எந்த ஹோட்டல்?'' என்றாள். அவன் சொன்னான். அதே ஹோட்டல்தான். ''யாராரு போயிருந்தீங்க...?'' என்றாள்.

''யாராரு! நான் இவன் மதுசூதனன். ஏன்... எதுக்குக் கேட்கறே?'' என்றான்.

அவள் சொன்னாள். தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

தங்களது திருமண வாழ்க்கையையே பாதித்த அந்த விஷயத்தைத் தெளிவு பண்ணிக்கொள்ளக் கேட்டாள். கடைசியாக,

''அப்படி ஒரு வாக்கியத்தைச் சொன்னது நீங்களா? அவரா?'' என்றாள்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பவள் போல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் மெதுவாக,

''அவன்தான்!'' என்றான்.

உலகமே பளீரென்று வெளிச்சமானாற் போல் உணர்ந்தாள்.

அவன் மார்பில் புரண்டு அழுதாள். அவன் லேசாக இடக்கையால் அணைத்துக் கொண்டு நின்றான். அவளைத் தேற்ற முயற்சிக்கவில்லை.

நிமிர்ந்து பார்த்தாள். அவன் முகம் இறுகியிருந்தது.

சட்டென்று விலகித் தன் அறைக்குப் போய் விட்டான். முதல் முறையாக அறைக் கதவைச் சாத்திக் கொண்டான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள் திகைத்துப் போய் நின்றாள்.

மறுநாள் காலை.

எல்லாம் வழக்கம் போல் நடந்தது ஆனால், பேச்சு மட்டும் சுருக்கமாகப் பேசினான்.

'நம்பி!' என்றாள் அவள் கெஞ்சலாக.

'என்ன?' என்பது போல் பார்த்தான்.

''உங்க ஃபிரண்ட்... சொன்ன வார்த்தை... ரொம்ப மோசமான வார்த்தைதானே? அது என்னைக் காயப்படுத்தியதில் என்ன தப்பு...?'' என்றாள்.

அவன் உச்சுக் கொட்டினான்.

''ப்ளீஸ்! ஏதாவது சொல்லுங்க... கோபமானா ரெண்டு அடி வைங்க... ஆனா... இப்படிப் பேசாம இருக்காதீங்க...'' என்றாள்.

''நான் யாரு... உன்னை அடிக்க?'' என்றான்.

''என்ன நம்பி... நீங்க... என் கணவர்!''

''ம்... அப்படியா?'' என்றான் நக்கலான குரலில்.

''கணவனைப் பற்றி எவ்வளவு உயர்வான அபிப்பிராயம் வச்சுகிட்டிருந்திருக்கே?'' என்றான்.

''எனக்கு... எனக்கு... எப்படித் தெரியும்?''

''நீ... நீ... இதை... என்கிட்டே நேரடியாகக் கேட்டுச் சண்டை போட்டிருக்கலாம். மனசுல... வச்சுகிட்டு... என்னை வதைச்சுட்டே. அப்புறம்... எதுக்குக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டே?'' என்றான்.

''நம்பி! நான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டப்ப இந்த விஷயத்தை அதோட விட்டர்லாம். மறந்துட்டு... நல்ல படியா வாழலாம்னு... நெனச்சுத்தான்... ஒத்துக்கிட்டேன்!'' என்றாள்.

''ம்... அப்புறம்?'' என்றான் அதே கிண்டல் குறையாமல்.



அவள் வேதனையுடன் அவனைப் பார்த்தாள். ஆனால், உறுதியாகத் தொடர்ந்தாள்.

''ஆனா... என்னையும் மீறி... நீங்க பக்கத்துல வரும்போதெல்லாம்... ஏதோ கூரை மேல சோறு... காக்காக் கூட்டம்... இப்படிப் பிக்சர்லாம் மனசுக்குள்ள... தோணும்... ஆனா... அதையும் மீறி உங்களை எனக்குப் பிடிச்சுத்தான் இருந்தது.''

''அடடா! அதையும் மீறி...'' என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான். அதில் கோபம் தெரிந்தது.

''அதையும்... மீறி! எனக்குப் பிச்சை போட்டியாக்கும்!'' என்றான்.

'நான்சென்ஸ்...' என்றான். பிறகு ஒற்றை விரல் நீட்டி மிரட்டலாக,

''இங்க... பார்! இனி... ஊருக்காக... ஊருக்காக... நாம ஒண்ணா இருக்கறோம்... அவ்வளவுதான்...'' என்றான்.

போய்விட்டான்.

அலிபாபா குகையில் மாட்டிக் கொண்டு கதவு அடைபட்டுப் போனாற் போல் அவள் வெறித்துப் பார்த்தபடி நின்றாள். பின் அவனைத் தொடர்ந்தாள்.

''அப்ப... இப்படிச் சீப்பான ஆள்கிட்டேயெல்லாம் எதுக்கு நட்பு வச்சுக்கிட்டீங்க?'' என்றாள்.

''அது உனக்குத் தேவையில்லாதது...'' என்றான்.

''ஏன் தேவையில்லாதது? என் வாழ்க்கையையே பாதிச்ச விஷயம்...'' என்றாள்.

அவன் மறுபடியும் நின்றான். ''அருவி! நீ அடக்கமான பொண்ணுன்னு நான் நெனச்சுகிட்டிருக்கேன். அட்லீஸ்ட் அந்த இம்ப்ரெஷனையாவது காப்பாத்திக்க!'' என்றான்.

போய் விட்டான். ஆனால், அவள் வேறு விதமாகப் போராட ஆரம்பித்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

## 24

மறுநாள் முதல்

அவள் படையெடுப்பு வேறு விதமாக இருந்தது.

சாதாரணமாக அவன் இருக்கும் போது அவ்வளவு சீக்கிரம் அவனுடைய அறைக்குள் வராதவள் இப்போது சுவாதீனமாய் வந்தாள். போனாள்.

வீட்டிலும் கலகலவென்று சிரித்துக் கொண்டு நடமாடினாள்.

'இது என்ன புது நாடகம்?' என்று அவன் பார்க்க, அலட்டிக் கொள்ளாமல், "நீங்கதானே சொன்னீங்க... நீ இந்த வீட்டு மகாராணி... ஆடலாம்... பாடலாம்னு... அதான் ஹேப்பியாய் இருக்கேன்..." என்று கிண்டலாகச் சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

அவன் புருவங்கள் உயர்ந்து தாழ்ந்தன. வேறு எந்த விதமான பிரதிபலிப்பும் இருக்கவில்லை.

அலுவலகத்துக்குச் செல்லும்போது அழகாக உடுத்துக் கொண்டாள். "ஏங்க... பாஸ்! இது என்ன? என்ன?" என்று நெருங்கி நெருங்கி நின்றாள்.

அவன் சலனமே காட்டாமல் ஆனால் வழக்கம் போலவே இருந்தான்.

அன்று பிற்பகல் அவன் உணவுக்கு வருவதற்குள் எதையோ வைக்க, அவன் அறைக்குள் போனாள். அப்போது அங்கே டைரி ஒன்று இருந்தது. எடுத்தாள். படித்தாள்.

அதிலே கவிதை ஒன்று இருந்தது. போன மாதத்துத் தேதி

என் மஞ்சள் ரோஜா மங்கையே!
நெஞ்சுருகி ரோஜாவை அன்றொரு நாள்
பார்த்தது போல் ஒருமுறை பார்!
நெஞ்சில் பதியனிட்டு வளர்த்துவிட்ட
செடியில் பூத்த இதழ்ப் பதிவைப்



பதிக்க வேண்டும், சொல் பெண்ணே!
எங்கே முதலில்?'

என்ற கவிதையைப் படித்தாள்.

நெஞ்சுருகி நின்றாள். அறையைச் சுற்றிலும் பார்த்தாள்.

அந்த மஞ்சள் ரோஜாவைப் பார்த்துக் கொண்டு நிற்கிற படத்தை லாமினேட் செய்து வைத்திருந்ததைப் பார்த்தாள்.

"இருங்க...நம்பி... இருங்க...' என்று கறுவிக் கொண்டு, கலகலவெனச் சிரித்தபடி அவன் படத்துக்கு லேசான முத்தம் வைத்துத் திரும்புகையில் அவன் கல்லுப் பிள்ளையார் மாதிரி நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

"இங்கே... என்ன செய்யறே?" என்றான்.

"ம்... தோட்டம்... போடறேன்!" என்று பதில் சொல்லி விட்டு இறங்கிப் போனாள். அவன் பார்வை சலனமின்றி அவளைத் தொடர்ந்தது. அவன் உணவுண்டு முடித்த பின் மீண்டும் மாடியேறிப் போக,

"எல்லா விஷயத்தையும் அரைகுறையா... அம்போன்னு விடறதுதான் வழக்கமோ?" என்றாள்.

"விஷயத்தைச் சொல்லு..." என்றான்.

"சங்கீதா மேரேஜ் என்னவாச்சு?" என்றாள்.

"எல்லா ஏற்பாடும் நடந்துகிட்டிருக்கு. அடுத்த வாரம் நிச்சயம், அடுத்த பத்து நாள்ல கல்யாணம்."

"சங்கீதாகிட்டேயெல்லாம் ஒண்ணும் சொல்லிக்கிட்டிருக்க வேண்டாம்!" என்றாள் தேனருவி விரைப்பாக.

"ஏய், ரொம்ப... ஓவராப் போயிட்டிருக்கே!" என்றான்... குப்பென்று அவன் முகத்தில் கோபம் ஏறியது.

"அவ்வளவு கோபமா? அடிப்பீங்களா? அடிங்களேன்! உரிமையுள்ளவர் தானே அடிக்க முடியும்!" என்றாள்.

'சே...!' என்று அவன் வெறுத்துப் போய் மாடியேறிப் போவதை அவள் சிரித்துக் கொண்டு பார்த்தாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

மறுநாள்... டைரியை எடுத்து எங்கோ வைத்து விட்டதை அறிந்து தேடிக் கண்டு பிடித்தாள்.

மற்றப் பக்கங்களைப் புரட்டினாள்.

எழுதி வைத்தாய்
நீ
கவிதை
எழுத வைத்தாய்
எழுதி வைத்தாய் என்னை
நெஞ்சில் எழுதி வைத்தாய்...!

சின்னக் கவிதைகளாக எழுதியிருந்தான். இன்னொரு பக்கம் புரட்டினாள்.

மேட்டுக் குடிமக்கள்
கேட்டு ரசிப்பதற்காய்
பாட்டாய் வடித்த
சீட்டுக் கவியல்ல நீ!
வெள்ளந்தியாய் என்
உள்ளத்தில் நுழைந்த
நாட்டுப் பாடல்
எப்போது நாமிருவர்
இசைந்து பாடுவது
கூட்டுப் பாடல்?

என்று எழுதியிருந்தான்.

அவன் வருகிற அரவம் கேட்டு வைத்துவிட்டு, ஓடி வந்து விட்டாள். அதற்குப் பிறகு அந்த டைரியைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. எங்கேயோ எடுத்து வைத்து விட்டான்.

'பயம்... பயம்... மனசுல உள்ளதெல்லாம்... கண்டு பிடிச் சுடுவாங்களோன்னு... பயம்!' என்று ஜாடை பேசி வம்பிழுத்தாள்.

"ஏய்! போய் உருப்படியா ஏதாவது வேலையிருந்தாப் பாரு!" என்றான்.

"தாங்க்ஸ்... ஃபார் தி அட்வைஸ். அப்ப... சங்கீதா வீட்டுக்குப் போலாமா?" என்றாள்.



ஒரு நிமிடம் முறைத்தான். ஆனால், கூடப் புறப்பட்டு வந்தான்.

சங்கீதாவின் நிச்சயம் முடிந்தது. அன்று தனிமை கிடைத்த போது நடந்ததையெல்லாம் சங்கீதாவிடம் சொன்னாள்.

"நான் வேணா அண்ணாகிட்டே பேசட்டுமா?" என்றாள்.

"வேண்டாம்... நானே பாத்துக்கறேன்..." என்று உறுதியாய்ச் சொல்லிக் கொள்கிற அவளைப் பார்த்துச் சங்கீதாவுக்கே ஆச்சரியம்.

"அநியாயமா ஏழெட்டு மாதங்கள் வாழ்க்கையையே தொலைச்சுட்டேன்டி!" என்று வருத்தப்பட்டாள் தேனருவி.

"அண்ணா இதே மாதிரிப் பிடிவாதமா இருந்தா...?" என்றாள் சங்கீதா.

தான் அவனைக் கடுப்படிப்பதையும், அவன் கவிதைகளை யும் சொன்னாள்.

"இத்தனை பிரியம் வச்சிருந்திருக்கறாரு! இன்னும் கொஞ்சம்... ஓரத்திலயாவது... மிச்சம்... இருக்காதா... தட்டி எழுப்ப முயற்சிக்கிறேன்!" என்றாள் தேனருவி.

சங்கீதா தேனருவியை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

சங்கீதாவின் திருமண ஏற்பாடுகளில் எல்லாம் ஆர்வமாகப் பங்கெடுத்துக் கொண்டார்கள். வேலை நிறைய இருந்தது. செய்தார்கள். அந்த நேரங்களில் இயல்பாய் இருந்தார்கள்.

கேலிப் பேச்சு கூடப் பேசிக் கொண்டார்கள். ஆனால், தனிமையில் அதே மாதிரி விலகியே நின்றான்.

சங்கீதாவின் திருமணம் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது.

இரண்டு வீட்டுக்காரர்களும் இளந்திரையனுக்கும் அவ ளுக்கும் நன்றி சொன்னார்கள். சங்கீதாவும் தன் திருமணத்தின் போது பெரும்பாலும் அவர்கள் நெருங்கி நிற்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டாள். இளந்திரையனும் எதுவும் காட்டிக் கொள்ளவில்லை.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

திருமண நாளன்றே முதலிரவு வைத்தார்கள். சங்கீதாவுக்கு அவள்தான் அலங்காரம் செய்தாள். சங்கீதாவின் முகம் சிவந்து கிடப்பதைக் காமென்ட் அடித்துச் சிரித்தாள்.

அந்தப் பக்கம் அசோக்குமாரின் எதிர்பார்ப்பு நிறைந்த முகத்தை இளந்திரையன் கேலி செய்து சிரித்துக் கொண்டிருந்தான். அவர்களை அனுப்பி விட்டு இவர்களும் கிளம்பினார்கள்.

கார் பயணம் மௌனமாகவே நடந்து முடிந்தது.

வீட்டுக்கு வந்தவுடன், "கல்யாணம் நல்லா நடந்துச்சில்லே....?" என்றாள்.

'ம்...' என்றாள்.

மேலே வந்தவுடன் தங்கள் அறைக்குப் போவதன் முன், 'நம்பி!' என்று அழைத்தாள்.

அவன் நின்று திரும்பிப் பார்த்தான்.

'எழுதி வைத்தாய்

என்னை

நெஞ்சில்

எழுதி வைத்தாய்!' என்று சொல்லிவிட்டு, அழகு காட்டினாள். கலகலவென்று சிரித்தாள்.

அவன் அவளை நோக்கி வந்து அருகில் நின்று அடிக்குரலில் சீறினான்.

"ஏய்! பொண்ணுன்னா ஒரு டிக்னிட்டி வேண்டாம்?" என்றான்.

முகத்தில் அறைந்தாற் போன்று அந்த வார்த்தையைக் கேட்டு அவள் திகைத்துப் போய் நின்றாள். ஏதோ நடை பிணம் போல அறைக்குள் நுழைந்தாள். கதவைச் சாத்திக் கொண்டாள்.

தேம்பியழுதாள். வெகு நேரம் அழுதாள். உறக்கம் வரவில்லை.



எல்லாம் முடிந்தது. இனிப் போராடிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தாள்.

இரவு வெகு நேரமாகி விட்டதாலோ என்னவோ... காலையில் உறங்கிவிட்டாள். வழக்கமாக ஐந்து மணிக்கே விழிக்கிறவள் ஆறு மணியாகியும் கதவைத் திறக்கவில்லை என்றவுடனே,

"அருவி! அருவி!" என்று அவனே கதவைத் தட்ட அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தாள்.

முகம் திருத்திக் கொண்டு கதவு திறந்தாள்.

அவன் கண்களில் கவலை தெரிவதைப் பார்த்தவுடன்,

"அப்படியெல்லாம் ஒண்ணும் செத்துட மாட்டேன்!" என்று சொல்லி விட்டுக் கீழே போய்விட்டாள்.

தினம் ஒருமுறை அசோக்குமார் வீட்டுக்குப் போய் வந்தார்கள்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்து அவர்கள் தேனிலவுக்குப் போவதாகப் பேச்சு நடந்தது. கதை கேட்பது போல் கேட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்தாள் தேனருவி.

அடுத்த நாள்!

அவள் டைனிங் டேபிளில் பாத்திரங்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கையில் அவன் வெளிநாட்டு மாகஸின் ஒன்றைக் கொண்டு வந்து பொத்தென்று அருகில் போட்டான்.

"அவர்கள் பார்த்ததிலேயே நீதான் பெஸ்ட் வைஃபாம்... எழுதியிருக்கானுக, கிறுக்கனுக...!" என்று பொரிந்து விட்டுப் போய் விட்டான்.

அவள் அமைதியாய் எடுத்து விரித்துப் பார்த்தாள். ஹாரிஸும் அவனுடைய குழுவும் சேர்ந்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள்.

இளந்திரையனையும், அவளையும் எடுத்த ஃபோட்டோக்கள், அவள் கோலம் போடும் போது... சமைக்கும் போது... என்று விதவிதமான ஃபோட்டோக்கள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவள் மனம் அலைபாய, அதைக் கையில் எடுத்துக் கொண்டு மேலே வந்தாள். அவன் அறைக்குள் நுழையாமல் வெளியே இருந்தபடியே மேஜையின் மேல் எட்டி வைக்க,

''அந்தக் காப்பி... உனக்குத்தான்... வச்சுக்க...'' என்றான். திரும்பிப் பார்க்காமல் பேசாமல் எடுத்துக் கொண்டு வந்து விட்டாள்.

வெள்ளிக் கிழமை இரவு!

ஃபோன் ஒன்று வந்தது. இளந்திரையன்தான் எடுத்தான். சற்றுப் பேசி விட்டு, 'அருவி! உனக்குத்தான்!' என்றான்.

எடுத்தாள்.

அந்தப்புறம் சங்கீதா கலகலப்பாகப் பேசினாள். சிரித்தாள்.

''ஹேய்! நாளைக்குக் காலையில தேனிலவுக்குக் கிளம்பறோம்... நீங்களும் வர்றீங்க... தேனிலவு எங்கே தெரியுமா! உங்க கொடைக்கானல் கெஸ்ட் ஹவுசில...'' என்றாள்.

தேனருவி கணவனைத் திரும்பிப் பார்த்தாள். பிறகு,

''ஏய், கிதா... பைத்தியம் மாதிரிப் பேசாதே! உங்க தேனிலவுக்கு நாங்க எதுக்கு...?'' என்றாள்.

''தெரியலியே! இவர் நீங்களும் வந்தே ஆகணும்கறாரே...!''

''அவருதான் விவரமில்லாச் சொல்றாருன்னா நீயும் என்னடி...? சாரி சங்கீதா... நான் வர்றதாயில்லை... என்ஜாய் யுவர் செல்ஃப்!'' என்று ஃபோனை வைத்து விட்டாள். மாடிக்குப் போய் விட்டாள்.

நார்மென் வின்சென்ட் பீலின் 'என்த்யூசாசம் மேக்ஸ் தி டிஃபரன்ஸ்' என்ற புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்.

எதிர்பாராத விதமாக அவள் அறை வாசலில் நின்றான் இளந்திரையன்.



''அசோக் சீரியஸாத்தான் சொல்றான் போலிருக்கு... நாம வர்லேன்னா டிரிப்பைக் கான்சல் பண்ணிடுவானாம்!'' என்றான் வறண்ட குரலில்.

அவள் வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

''அது.... அவங்க இஷ்டம்... நான் வர்லே!'' என்றாள்.

'புரிந்துகொள்! இனியும் என்னால் நடிக்க முடியாது!' என்று அவள் மனது ஓலமிட்டது. அவன் அறிந்து கொள்ளவில்லை.

''இங்க.... பார்! இவ்வளவு தூரம் நடத்திக் குடுத்தாச்சு. ஒரு நாலு நாள்... டாலரேட் பண்ணிகிட்டா... அப்புறம் அவங்க வழியை அவங்க பாத்துக்கறாங்க!'' என்றான்.

அவள் மௌனமாக நின்றாள்.

''நீ வர்றே! நான் சொல்றது புரியுதா? நீ வர்றே!'' என்று மிரட்டுவது போல் சொல்லி விட்டுப் போனான்.

அவள் பாத்ரூமில் நுழைந்து கொண்டு நெஞ்சமே வெடிக்கிறாற் போல் அழுதாள்.

## 25

ஒரு காரில் அவர்கள் போனார்கள். அங்கே தேவைப்பட்டால் நண்பன் ஒருவனுடைய காரை வாங்கிக் கொள்வதென்று ஏற்பாடு.

தேனருவி அமைதியாகவே வந்தாள். சங்கீதாவும் ஏனோ துருவித் துருவி விசாரிக்க வில்லை.

இளந்திரையனும், அசோக்குமாரும்தான் உற்சாகமாக அரட்டை அடித்துக் கொண்டு வந்தார்கள்.

''என்னடா ஆச்சு... தேனருவிக்கு? ஏம்மா இப்படி அமைதியா வர்றே?'' என்றான் அசோக்குமார்.

''ஒண்ணுமில்லையே, அண்ணா!'' என்றாள் தேனருவி.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"அது ஒண்ணுமில்லடா. எங்களுக்குக் கல்யாணம்னு ஆனதிலே இருந்து நாங்களும் எங்கயும் தேனிலவுன்னு போகலடா... இதுதான் எங்களுக்கும் தேனிலவுன்னு வச்சுக்கயேன்!" என்றான் இளந்திரையன்.

"அப்ப சரி... நீங்க எங்களை டிஸ்டர்ப் செய்யமாட்டீங்க!" என்று அசோக்குமார் சிரிக்க,

"அடப்பாவி! வலிஞ்சு வலிஞ்சு கேட்டு... வற்புறுத்திக் கூட்டிட்டு வந்து... இப்படி இன்சல்ட் பண்றியேடா!" என்று சிரித்தான் இளந்திரையன்.

"என்னடா இன்சல்ட்? வைஃபை ஒரு தேனிலவுக்குக் கூட்டிட்டுப் போகணும்னு கூட உனக்கு இதுவரைக்கும் உறைக்கலே! இதுக்கு மேலே எப்படிப் புரிய வைக்கிறது?" என்றான்.

இருவரும் சிரித்தார்கள் தேனருவிக்கு அவன் நடிப்பைப் பார்த்துக் கோபமாய் வந்தது. உள்ளுக்குள்ளே பற்றிக் கொண்டு எரிகிறாற் போல் இருந்தது.

ஒரு வழியாகப் பகலுணவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

பிற்பகலில் போட்டிங் போனார்கள். மாலையானதுமே கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து விட்டார்கள்.

தேனருவியும், இளந்திரையனும் மேலே தங்கிக் கொள்ள, சங்கீதாவும் அசோக்குமாரும் அந்த விசாலமான பங்களாவில் கீழ்ப்பகுதியில் தங்கினார்கள்.

இரவு கவிந்தும் கவியாததுமான அந்த நேரத்தில் தேனருவி பாரம் நிறைந்த மனத்துடன் பால்கனியில் நின்றபடி வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டு நின்றாள்.

பின்னாலேயே கணவன் வந்து நிற்பது தெரிந்தும் அவள் திரும்பவில்லை.

எதிர்பாராமல் அந்தக் காட்சியை அவர்கள் பார்க்க நேர்ந்தது. அசோக்குமாரும், சங்கீதாவும் மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள். சங்கீதாவின் தோளின் மேல் கையைப்



போட்டுக் கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டு வந்த அசோக்குமார் நின்று சிரிப்பதையும் சுற்று முற்றும் பார்த்து விட்டு அவள் முகம் நோக்கிக் குனிவதையும் பார்த்து அவள் திகைக்கையிலேயே சங்கீதா அவன் கழுத்தை வளைத்துப் பதிலுக்குப் பரிசுகள் அளிப்பதையும் அவள் படபடப்புடன் பார்த்துத் திரும்பி உள்ளே வர, இரண்டு பாண்ட் பாக்கெட்டுகளிலும் கைவிட்டுக் கொண்டு நின்ற கணவன் விலகி வழிவிட்டான்.

"இயற்கையாய் இருக்கிறவங்க இப்படித்தான் இருப்பாங்க..." என்றான்.

அவள் எதுவும் பேசவில்லை. என்ன செய்வதுஎங்கே அமர்வது என்று புரியாமல் அவள் திகைத்து நிற்கையிலேயே அவன் உள்ளே வந்தான்.

இதுவரை அவள் தேடிக் கொண்டிருந்த டைரி அங்கே மேஜை மேல் இருப்பதை அப்போதுதான் கவனித்தாள். சலிப்புடன் கட்டிலில் அமர்ந்தாள்.

இளந்திரையன் அழுத்தமாக மேஜைக்கருகில் ஒரு சேரை இழுத்துத் திருப்பினாற் போல் போட்டுக் கொண்டு டைரியை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"எங்கெங்கயோ தேடித் தேடிப் படிச்சயே! இந்தா... நானே இப்பத் தரேன்... படி!" என்றான்.

"ப்ளீஸ் வேண்டாமே..!" என்று கெஞ்சுதலாகப் பார்த்தாள்.

"படிங்கறேன், இல்லே?" என்று மிரட்டினான். அவள் கைகள் நடுங்க விரித்தாள். முதல் பக்கத்தில் -

பீரங்கிக் கோட்டைக்குள்
இதயப் பெட்டகத்தில்
பூட்டி வைத்தாய் என்னை!
பூட்டுக்குச் சாவி எங்கே என்றேன்!
பாரங்கே உன்னுடைய
இதயச் சுரங்கத்தின்
ஆழத்தி னுள்ளே

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

பத்திரமாய் வைத்திருக்கிறேனென்று சொன்னாய்

எந்த ஊர் நியாயம் இது?

கணவன் தன்னை 'டீஸ்' செய்கிறான் என்பது புரியத் தலை நிமிர மறுத்து அமர்ந்திருந்தாள். தான் நடந்து கொண்டதற்குப் பழிவாங்குகிறான் என உணர்ந்து கொண்டதும், அடுத்த பக்கத்தை அவளே புரட்டினாள்.

நீண்ட இரவுகளுன்
சீண்டல்களாலே
சிறுத்துப் போகட்டும்...!
சிறுவிதழ் முத்தங்கள்
சிந்தாமல் சிதறாமல்
பெருத்து வளரட்டும்...!
எத்தனை நாளைக்கு
இந்த வேதனை
என்றவென் உள்ளத்து
உறுத்தல் தீரட்டும்...!
உனக்கும் எனக்குமான...
உறவின் ஆழத்தை
உலகம் இனிமேல்
பொறுத்துப் பார்க்கட்டும்!

அவள் டைரியை மூட முயன்றாள். அவன் விடவில்லை. அடுத்த பக்கத்தைத் திருப்பினான்.

'ம்... படி...!' என்றான்.

பகல்கள் எல்லாம்
ஒருநாள் இரவாகவே
தொடர ஆணையிட்டேன்...!
நீயும் நானும்...
வேண்டு மட்டும்...
ஆமாம்... வேண்டுமட்டும்!
போனால் போகட்டுமென்று
அப்புறந்தான் அனுமதிப்பேன்
பகலை...!



அப்படியொரு கனவு!
கனவுக்குள் நீ...
கனவெல்லாம் நீ...!'

அதற்கு மேல் அவளால் படிக்க முடியவில்லை. புத்தகத்தை மூடினாள். நெஞ்சம் விம்மியது.

அவனிடமிருந்து விலகி முன்னறைக்கு ஓடினாள்.

சுவரில் சாய்ந்து சுவருக்கு முகம் காட்டிக் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள். நிமிடங்கள் யுகங்களாகக் கழிந்தன.

அவனது சக்தி மிகுந்த கரங்கள் அவளைத் தன்னை நோக்கித் திருப்பின.

'என்னைப் பார்!' என்பது போல் முகம் நிமிர்த்தினான்.

அவன் முகத்தில் கனிவு நிறைந்திருந்தது.

"ஹேய்! அருவி! அழாதே... நீ அழுதால் மட்டும் என்னால் தாங்க முடியாது!" என்றான் குழந்தைக் குரலில்.

அவள் நம்பவே முடியாமல் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னடா... கொழுப்பான்னு... ரெண்டு வைப்பேன்னு பார்த்தேன்... ஃபைட் பண்ணுவேன்னு நினைச்சேன்... இப்படி அழறியே... வேண்டாம்... போதும்... இனிமேல் நடிக்க என்னால் முடியாது... டோன்ட் க்ரை. மை டியர் டார்லிங். டோன்ட் க்ரை!' என்று கைகளில் சிறைப்பிடித்த போதும், வேகத்துடன் இதழ் பதித்த போதும், அவள் கிட்டத்தட்ட பைத்தியமாகிப் போனாள்.

சிரிப்புமாய், அழுகையுமாய் இழைந்து கொடுத்தாள்.

"இப்பத் தெரியுதா? மனசு நிறையப் பிரியத்தை வச்சுகிட்டு விலகி நிக்கறது எவ்வளவு கஷ்டம்னு... மக்கு... மக்கு...!" என்று அவன் செல்லமாய்த் திட்டியபோதும் உருகிக் கரைந்து பாடங்கள் சொல்லிக் கொடுத்த போதும்... அவள் தன்னை மறந்தாள்... அவனும்தான்.

பத்து மணியிருக்கும்!

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

ஃபோன் அடித்தது.

''என்னடா... சாப்பிடற ஐடியாவே இல்லையா? சமையற்காரர் மேலே ரூம் சர்வீஸ் மாதிரி கொண்டு வந்து டிரேயை வச்சிருக்கறாரு... எடுத்துக்குங்க...'' என்றான் அசோக்குமார். குறும்பாகச் சிரித்தான்.

''போடா! சாப்பாடு என்ன சாப்பாடு! ரொம்ப நாள் கழிச்சு இன்னைக்குத்தான் ஃப்ரீயாப் பேச முடிந்திருக்கு...'' என்று அவளிடம் கண்ணைச் சிமிட்டினான் இளந்திரையன்.

''பேசப்பா... பேசு... எவ்வளவு வேண்டுமானாலும் பேசு... காலையில் பத்து மணி வாக்கிலயாவது டிஃபன் சாப்பிட வாங்க...!''என்றான்.

''பார்க்கலாம்... அதை அப்ப!'' என்று வெடிச்சிரிப்புச் சிரித்து விட்டு ஃபோனை வைக்கிற கணவனைப் பார்த்து,

''ஏன்... இப்படி மானத்தை வாங்கறீங்க?'' என்றாள் தேனருவி.

''அங்கேயும் நிலைமை அப்படித்தான் இருக்கும். என்னடா வம்பாப் போச்சு... வீட்டுக்கு வீடு வாசப்படிதான்!' என்றான். கலகலவென்று சிரித்தான்.

பால்கனியில் சேர் போட்டு நிலவைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். எழுந்து உணவருந்தி விட்டு வந்தார்கள். மீண்டும் தன்னருகில் அவன் மனைவியை இருத்திக் கொள்ள, அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து, பொண்ணுன்னா டிக்னிட்டி வேண்டாமான்னு கேட்டீங்களே... எவ்வளவு அழுதேன்... தெரியுமா?'' என்றாள் ஆற்றாமையுடன்.

''பின்னே? நானே கொஞ்சம் விட்டுப் பிடிக்கணும்னு முயற்சி செஞ்சுகிட்டிருக்கறேன். நீ பாட்டுக்குச் சீண்டினா... ரெஸிஸ்ட் பண்ண முடியலே... அதான்... அப்படிச் சொன்னேன்...'' என்றான்.

பிறகு சிரித்தான்.

''ஹேய்! அன்னைக்கு எழுதி வைத்தாய் என்னைன்னு அழகு காட்டினியே, அது எப்படி? இன்னொரு தடவை செஞ்சு காட்டு!'' என்றான்.



அவள் கிளுகிளுவென்று சிரித்தாள். அவனும் சிரித்தான்.

''ம், தோட்டம் போடறேன்னு நக்கலான பதில் வேற!'' என்று மறுபடியும் சிரித்தான்.

''நான் உன்னை ரொம்ப அமைதியான பொண்ணுன்னு நெனச்சுக்கிட்டிருந்தேன். அம்மணி சீண்ட ஆரம்பிச்சப்புறம் தான், ஓ! இவ லேசுப்பட்ட கேஸில்லடா சாமி...! நாமளும் கொஞ்சம் தண்ணி காட்டணும்னு... முடிவு செஞ்சேன்!'' என்றான். சற்று நேரம் கொஞ்சி மகிழ்ந்தான். பிறகு, ''உனக்குள்ளயும் ஒரு ஃபயர் இருக்கு...'' என்று சிரித்தான்.

'என்னா லொள்ளு! ஏங்க... பாஸ்ன்னு நெருங்கி நெருங்கி நிக்கறதும், வித விதமா... அழகழகா.. டிரஸ் பண்ணிகிட்டு ஆளை அவஸ்தைப் படுத்தறதும்...பயம்... பாரு!'' என்று மேலும் சிரிக்க, அவள் வெட்கத்துடன் முறுவலித்தாள்.

''பின்னே...? நீங்க அந்தத் தப்பான வார்த்தையைச் சொல்லலேன்னவுடனே... எனக்கு உலகமே ஒளி மய மானமாதிரியாயிடுச்சு. அதான்... அப்படி விளையாடினேன்!'' என்றாள்.

''ஹேய்! தட் வாஸ் நைஸ்! எப்பவும் அப்படியே இயல்பாயிரு...'' என்றான். பிறகு சிந்தனையில் ஆழ்ந்தான்.

''ஆனா... நீ கேட்ட ரெண்டு கேள்வியும் சரிதான்...'' என்றான்.

''எந்த ரெண்டு கேள்வி?'' என்று புரியாமல் பார்க்க -

''ஹனி! எல்லாத்தையும் இன்னைக்கே பேசணுமா? நாளைக்கும் கொஞ்சம் பேசலாமே!'' என்றான்.

அவள் மௌனத்தையே பதிலாகத் தர, இசைந்தபடி, ''இன்னும் ஒரு கவிதை நல்லாயிருக்கும். சொல்லட்டா...'' என்றான். சொன்னான்.

காமம் என்பது
காட்டாற்று வெள்ளம்
காதல் நதியோ
ஆழமாய்ச் செல்லும்!

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

நீயும் நானுமாய்
வெள்ளத்தை உள்ளெடுத்து
பாய்ந்து சென்று
நீந்துகையில்
ஆறு கடலானது!
ஆசை புயலானது!

"ஐயோ! நம்பி!" என்று அவள் அடைக்கலமானாள். காலம் அங்கே பொருளற்றுப் போய் விரைந்து பின்னங்கால் பிடரி தெறிக்க ஓடிக் கொண்டிருந்தது.

## 26

பொழுது சுகமாக விடிந்தது இளந்திரையனுக்கு. மெல்லத் திரும்பிப் படுத்து விழித்தான்.

கனவுலகிலிருந்து இறங்கிய மாதிரி இருந்தது. இரவின் நினைவுகள் ஆக்கிரமிக்க உள்ளுக்குள் சிரிப்பு ஊற்றாகப் பொங்கியது.

படுத்த வண்ணமே மனைவியைத் தேடினான். மேஜை மேலே ஏதோ குறிப்பு எழுதி வைத்திருந்தாற் போல் இருந்தது.

எடுத்துப் பார்த்தான்.

'நானும் கீதாவும் குறிஞ்சியாண்டவர் கோயிலுக்குப் போயிட்டு வந்துடறோம். ஒழுங்கா, நல்ல பிள்ளையாய் எழுந்து குளிச்சு சுறுசுறுப்பா இருக்கணும், என்ன?' என்று எழுதி வைத்திருந்தாள்.

சிரித்துக் கொண்டான்.

எழுந்து குளித்து விட்டுத் தலை கோதிய வண்ணம் இறங்கி வந்தான்.

ஹாலில் அசோக்குமார் அமர்ந்திருந்தான். சோஃபாவில் அமர்ந்தபடி செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்தான். இவன் வருவதைப் பார்த்து நிமிர்ந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.



"என்னடா, காலையில சொல்லாமக் கொள்ளாம வெளியே போயிட்டாங்க... நம்மளை அம்போன்னு விட்டுட்டு!" என்று அசோக் சிரித்தான்.

"வேறென்ன? காலையில் ஃபேஸ் பண்றதுக்குக் கஷ்டப் பட்டுக்கிட்டு நம்ம அம்மிணிதான்... கூட்டிட்டுப்போயிருப்பா!" என்றான் இளந்திரையன்.

பிறகு சற்று நேரம் உலக விஷயங்களைப் பேசினார்கள். கிரிக்கெட்டில் இந்தியா அவ்வப்போது கேவலமாகத் தோற்றுப் போவதைப்பற்றி... ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது கிடைத்ததைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மணி நேரம் போயிருக்கும். அசோக்குமார் இளந்திரையனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

"என்னடா, இப்படிப் பார்க்கறே?" என்றான் இளந்திரையன்.

'இன்னைக்கு மாதிரி உன் முகத்தில் மலர்ச்சி பார்த்ததில்லடா... பயங்கரமான வெற்றி போலருக்கு!" என்றான் அசோக்.

இளந்திரையனின் மந்தகாசப் புன்னகை அவனையே ஈர்த்தது.

"ம்... மிஸ்அன்டர்ஸ்டாண்டிங்டா... உனக்குத்தான் தெரிஞ்சதாச்சே!" என்று சொன்னான்.

அப்போதுதான் அசோக் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

"எப்படிடா... இவ்வளவு பிரியத்தை மனசுல வச்சுகிட்டு... அவங்களை ரொம்பவும் நேசிக்கவும் செஞ்சுகிட்டு, விலகியிருக்க முடிஞ்சுது?" என்றான்.

இளந்திரையன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தான். பிறகு சொன்னான்.

"அசோக்... உனக்கு அது புரியறதுக்குக் கொஞ்ச நாளாகும். நான் அவ்வளவு அவளை நேசிச்சேன். எந்த அளவுக்குன்னா, என் நேசம் கூட அவளைக் கஷ்டப்படுத்தக் கூடாது, வேதனைப்படுத்தக் கூடாதுங்கற அளவுக்கு..." என்றான்.

அசோக் பிரமித்துப் போனான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

"சுபர்ப்டா... பயலே!" என்றான்.

அதே நேரம் செடிகொடிகளை ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்து விட்டுப் பக்க வாட்டு வழியாக வந்த தேனருவியும், சங்கீதாவும் கூட அதைக் கேட்டனர். தேனருவி மனம் நெகிழ்ந்து நின்றாள்.

இளந்திரையன் தொடர்ந்தான்.

'அவ மனசுக்குள்ளே ஏதோ வேதனை அரிச்சுத் திங்குதுன்னு எனக்குப் புரியுது. ஆனா, என்ன பண்றதுன்னு கூடத் தெரியலே. அப்பாகிட்டே சொன்னேன்... அவளுக்கு சந்தோஷம் கிடைக்கும்னா... நான் அவளுக்கு டைவர்ஸ் குடுக்கக் கூடத் தயார்ன்னு... அப்பா சிரிச்சார். தோக்கறதுல என்ன இருக்கு. ஜெயிச்சுக் காட்டுடா...ன்னார்."

"ஜெயிச்சுக் காட்டிட்டே!" என்று பாராட்டு ஒலிக்கும் குரலில் சொன்னான் அசோக். அதற்குள் பெண்கள் இருவரும் உள்ளே வந்தார்கள்.

"ஹேய்! போயும் போயும் முருகனையா கும்பிடப் போனீங்க... ரெண்டு பொண்டாட்டிக்காரனாச்சே... அவரு..." என்று அசோக் கிண்டல் செய்தான்.

சங்கீதா உடனே, "அவரு நினைச்சிருந்தா... உலகம் முழுக்க... பொண்ணுங்க கிடைச்சிருப்பாங்க. ஆனா, அவரே ரெண்டோட நிறுத்திக்கிட்டாரு..." என்று சொல்ல,

"டேய்! உன் சிஸ்டர் கிட்டே கேளு... ஏதாவது விளக்கம் வச்சிருப்பா..." என்றான் இளந்திரையன்.

"வேண்டாம்... அப்புறம் அறுக்கறேம்பீங்க..." என்றாள் தேனருவி.

"இல்லை... சும்மா சொல்லு..." என்றார்கள்.

"நம்ம நாட்டுல... ரெண்டு வகைக் கல்யாணங்கள் இருந்தன. ஒண்ணு கற்பு மணம். இன்னொன்னு களவு மணம். கற்பு மணத்துக்குத் தெய்வானை! களவு மணத்துக்கு வள்ளி!" என்றாள்.



அவர்கள் மிகவும் மும்முரமாகக் கேட்பது போல் நடிப்பதைப் பார்த்துச் சிரித்தாள். பிறகு இன்னொரு அர்த்தமும் சொல்லலாம் என்றாள்.

'ம்...!' என்றார்கள் கோரஸாக.

"ஒருத்தி தெய்வானை... தேவேந்திரனோட மக... இன்னொருத்தி... குறத்தி பொண்ணு. அன்பு மலரும் போது... அது அந்தஸ்துப் பாக்கறதில்லை..." என்றாள்.

"ஆமா... முருகன் செஞ்சாப் பாராட்டுவீங்க... நாங்க செஞ்சா... சந்தேகப்படுவீங்க..." என்றான் இளந்திரையன் சோகமாக.

"எதை, ரெண்டு கல்யாணத்தையா? என்றாள் சங்கீதா. "அந்தத் தடியை எடு... தேனு, ரெண்டு போடலாம்..." என்றாள்.

உடனே இளந்திரையன் பயந்தவன் போல் நடித்து... "ஐயய்யோ... நான் அதைச் சொல்லலைப்பா... அன்பு அந்தஸ்துப் பாக்காம பாயும்னு சொன்னீங்களே... அதை!" என்று பாய்கிறாற் போல் வேறு சைகை செய்தான்.

"சரி... சரி... போனது போகட்டும். இனி எல்லாம் சுகமே... சாப்பிடலாமா...?" என்றான் அசோக்குமார்.

"அதிலயே இருடா...நீ. சங்கீதா எப்படித்தான் சமாளிக்கப் போகுதோ?" என்று சிரித்தபடி சாப்பிட அமர்ந்தார்கள்.

சற்றுக் கழித்து -

"அப்புறம், ப்ரொகிராம் என்னடா?" என்றான் இளந்திரையன்.

"ப்ரொகிராம்... என்ன! நானும் சங்கீதாவும் கொஞ்சம் வெளியே சுத்தலாம்னு பிளான் போட்டோம்..." என்றான் அசோக்குமார்.

"நாங்க வர்லடா... நாங்க இங்கயே ஆசை தீர..." என்று இளந்திரையன் இழுக்கவும், தேனருவி, முகம் சிவக்கத் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள். அவன் கண் சிமிட்டிச் சிரித்தான்.

"ஆசை தீரப் பேசப் போறோம். பேசித் தீர்த்துக்க வேண்டியது நிறைய இருக்கு!" என்றான்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

'அப்பாடா!' என்றானது தேனருவிக்கு.

''அசோக், டேய்! நாளைக்குக் கான்ஃபரன்ஸ் இருக்கு... மதுரையில... நாங்க டாக்ஸியில் போயிடவா?'' என்றான்.

''வேண்டாம். வேண்டாம். நீ இந்தக் கார்ல போயிரு. டிரைவர் இன்னொரு கார் கொண்டு வரான்'' என்றான்.

தேனருவி ஆச்சரியமாக அவர்களைப் பார்த்தாள். ''அசோக் அண்ணா, கான்ஃபரன்ஸா, இப்பக் கூட என்ன கான்ஃபரன்ஸ்?'' என்றாள்.

''இல்லம்மா... கான்ஃபரன்ஸ் ரொம்ப முக்கியமான விஷயம். ஆக்சுவலா தேனிலவு எங்களுக்கு இல்லம்மா... உங்களுக்கு...'' என்று சங்கீதாவைப் பார்த்துச் சிரித்தான்.

தேனருவிக்குப் புரிந்தது.

''எல்லாருமாகப் பேசித்திட்டம் போட்டு... ஒன்னொன்னா... நடத்தறீங்க... இல்லே?'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

மற்ற மூவரும் சிரித்தார்கள்.

''ஏன்... செய்யக் கூடாதா? நம்பியண்ணா இவரையும், என்னையும் சேர்த்து வைக்கணும்னு பிரியப்படலே? அதுமாதிரி நாங்க உங்களைச் சேர்த்து வச்சோம்!'' என்றாள் சங்கீதா. பிறகு சிரித்தபடி,

''ஆனா இத்தனை நாள் பழகினதுல இன்னைக்குத்தான் உன் முகம் இவ்வளவு அழகா இருந்து பாத்திருக்கேன். எனக்கே ஆசையா இருக்கு...!'' என்று சொன்னவள்,

'வித் யுவர் பர்மிஷன்... அண்ணா!'' என்று அவனைப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டுத் தேனருவியின் கன்னத்தில் லேசாக முத்தம் வைத்தாள்.

'ம்...!' என்று அசோக்கும், இளந்திரையனும் கோரஸாகப் பெருமூச்சு விட. தேனருவியும், சங்கீதாவும் வெட்கத்துடன் சிரித்தார்கள். சற்று நேரத்தில்...!



காரில் சங்கீதாவும், அசோக்கும் பில்லர் ராக் பார்க்கிறேன் என்று கிளம்பினார்கள். கெஸ்ட் ஹவுஸின் சுற்றுப்புறப் புல்வெளிக்குப் போன இளந்திரையன்,

''அருவி...! இங்கே வா... ஸீன் ரொம்ப நல்லாருக்கு...'' என்று அழைக்கத் தேனருவியும் ஆவலாய் வந்தாள்.

மலை முகட்டில் மேகம் வந்து தழுவி நகர்வதைக் கண்களால் விழுங்கியபடி புல் தரையில் அமர்ந்தான். ஈரப்பதத்தோடு இளம் வெயிலும் கலந்து சூழ்நிலை ரம்யமாக இருந்தது. சுகமாக உணர்ந்தார்கள்.

அவள் தோளில் இருந்த பெரிய சால்வையில் அவனும் ஒண்டிக் கொண்டான்.

சுற்றிலும் சிறு சிறு செடிகளில் வளர்ந்திருந்த மலைப்பகுதிக் கேயான பல நிறப் பூக்களை ஆசையுடன் பார்த்தாள்.

'இயற்கை இவ்வளவு அழகையும் படைச்சு... அதை இரசிக் கிறதுக்கு...'' என்று எடுக்கு முன்னே அவன் குறுக்கிட்டான்.

''உன்னைப் படைச்சு, உன்னை ரசிக்க என்னைப் படைச்சு... யங்கப்பா...'' என்று சிரித்தான்.

அவன் அப்படிக் குறும்பாகச் சிரிக்கும்போது மிக அழகாக இருந்தது. அவள் கண் கொட்டாமல் பார்ப்பதைப் பார்த்து அன்புடன் புன்னகைத்தான். லேசாக அவள் தலையைக் கலைத்து விட்டு,

''நிறைய நிறைய... கேள்விகள், தேவியார் மனசுக்குள்ளே... கேட்டு முடிச்சிடு...'' என்று தோளில் சாய்ந்துக் கொண்டான்.

''நான் ஒண்ணும் கேக்கறதாயில்லை...'' என்றாள்.

''ஏன்?'' என்றான் வியப்பாய்.

'பொறியில சிக்கியாச்சு. இப்பக் கேள்வி கேட்டு... விளக்கம் வாங்கி... என்ன பண்ணப் போறேன்...? அதான்... டைவர்ஸ் குடுக்கற அளவுக்குப் போயிருக்கீங்க... குடுத்துருப்பீங்களா... என்ன?'' என்றாள் கோபமாக.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் முகம் தீவிர பாவத்துக்கு மாறியது.

''அருவி! உனக்குத் தெரியாது? நான் பக்கத்துல வரும்போதெல்லாம் நடுக்கத்தோட, முகமெல்லாம் வேர்த்து நிக்கும்போது... எனக்கே என் மேல கோபமா இருக்கும்... உன்னைச் சிறைப்படுத்தின மாதிரி... சிக்க வச்சுட்டமோன்னு எவ்வளவு உள்ளுக்குள்ளே வேதனைப்பட்டேன்னு உனக்குத் தெரியாது!'' என்றான்.

'ஓ...!' என்றாள் ஒன்றும் பேசத் தெரியாதவளாக.

''ஆனா, உனக்கு என்னைப் பிடிக்காத மாதிரியும் தெரியலே. அம்மா, அப்பாகிட்டே நல்லாப் பழகினே! வீட்டில் இயல்பா இருந்தே... என்னன்னே. எனக்குப் புரியலே. ஆனா... நீ கேட்ட ரெண்டு கேள்வியும் சரிதான்...'' என்றான். மறுபடியும் ஆரம்பத்தில் நின்ற இடத்துக்கே வந்து.

அவளும் புரியாதவளாய், 'எந்த ரெண்டு கேள்வி?' என்றாள்.

அவன் சொன்னான்.

27

''அன்னைக்குக் கோபத்திலே கேட்டியே... 'உங்க ஃபிரண்டு சொன்ன வார்த்தைகள் மோசமான வார்த்தைகள் இல்லையா?' அப்படீன்னு கேட்டயே, அது உண்மைதான். ரொம்பவும் கண்ணியக் குறைவான வார்த்தைகள்தான்... உன்னை மாதிரி ரோஷமான ஒரு பொண்ணைத் தாக்கினதுல ஆச்சரியமில்லே...'' என்றான்.

அவள் மௌனமாக அவன் மார்பில் சாய்ந்துகொண்டு, அவன் மார்பை நீவிக் கொடுத்தாள்.

''இன்னொண்ணும்சொன்னே!'' என்றான். அவனே சொன்னான்.

''அப்படிப்பட்ட ஆட்கள்கிட்டேயெல்லாம் உங்களுக்கு நட்பு எதுக்கு, அப்படீன்னு!'' என்றான்.



''அதுவும், கரெக்ட்தான்... ஒரு பழமொழி இருக்கு. உன் நண்பன் யாரென்று சொல் நீ எப்படிப்பட்டவன் என்று சொல்லி விடுகிறேன்'' என்று நிறுத்தினான்.

அவள் ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

'ஆனா... அருவி... பொதுவா ஜென்ட்ஸ் வந்து துருவித் துருவி நண்பர்களை விசாரிக்கமாட்டோம். ஒருத்தனுக்கு ஒரு வீக்னஸ் இருந்தா... முடிஞ்சா கரெக்ட் செய்யப் பார்ப்போம். ஆனா... ஒதுக்கிற மாட்டோம்... அதிலயும், இந்த நாகராஜ் மற்ற விஷயங்கள்ல எல்லாம் கெட்டிக்காரன். திறமைசாலி. இந்த ஒரு விஷயத்தைத் தவிர மத்தப்படி, எல்லாம் பிளஸ் பாயின்ட்தான்!'' என்றான்.

'ஓ...!' என்றாள்.

'ஆனா, அவனுக்கும் பாடம் கிடைச்சுருச்சு... உனக்கு ஒண்ணு தெரியுமா? பெண்களை ரொம்ப மட்டமா பேசறவங்கள்ளாம்... பெண்ணாசையினாலதான் விழுவானுங்க... இவனும் அப்படித்தான்...டெல்லியில் ஒரு பெரிய ஃபேமிலி பொண்ணு... சரி பண்ணிட்டான். ஆனா, அந்தக் குடும்பம்... இவனைக் கொலையே பண்ணிடுவோம்னு அலைஞ்சாங்க. பயல் அதுல பயந்து போயிட்டான். நான்தான் தலையிட்டுச் சமரசம் பேசி... ஸ்டேட்ஸுக்கு அனுப்பி வச்சேன்...'' என்றான்.

'.....'

''நீ மட்டும் இதைக் கேட்டுத் தெளிவாக்கியிருந்தா... இந்த ஏழெட்டு மாசத்தை ''வீணடிச்சிருக்க வேண்டாம்!'' என்றான் பெருமூச்சுடன்.

அவள் சற்று மௌனம் சாதித்தாள். ''கேட்கறதுக்கு எனக்குப் பயமாயிருந்துச்சுங்க... ஒருவேளை நீங்க அதைச் சொல்லலேன்னா... என்னை மட்டமா நினைச்சயேன்னு கோபிச்சா... என்ன செய்றதுன்னு... நீங்களும் அப்படித்தானே கோபிச்சுக்கிட்டீங்க...!'' என்றாள்.

அவன் புன்னகைத்தான்.



Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''அப்புறம்... உங்க நடத்தையைப் பார்க்கும்போது நீங்க அப்படியெல்லாம் பேசக்கூடியவரில்லேன்னும் உள்ளுக் குள்ளே ஒரு நம்பிக்கை...'' என்றாள்.

''ஆனா... அப்பப்ப சந்தேகம்... இல்லே?'' என்றான், அவள் தலையைக் கோதியபடி. மறுபடி சிரித்தான். ''அனிதாகிட்டே, சங்கீதாகிட்டே, கயலுகிட்டே எல்லாம் ஃப்ரீயாப் பேசறா னேன்னு எரிச்சல் இல்லே?'' என்றான்.

அவள் வெட்கத்துடன் தலையாட்டினாள்.

''ஆமா... அனிதா வேற சைக்கிள் கேப்ல மிஸ் பண் ணிட்டேன்னெல்லாம் சொல்றாங்க... சங்கீதாகிட்டே அடிக்கடிவாங்கன்னு சொன்னதை வேற கேட்டனா...'' என்றாள்.

'அடிப்பாவி!' என்று கிறக்கமாய்ச் சிரித்தான்.

''ஹேய்! அனிதா... சும்மா வெறும் பட்டாசு... ஆனா அவ சந்திரமோகன் மேல எவ்வளவு பிரியம் வச்சிருக்கான்னு எங்களுக்குத் தெரியும். அவனுக்குச் சின்னதா ஒரு தலைவலின்னாக் கூடத் தாங்க மாட்டா... அப்புறம்... சங்கீதா கிட்டே சொன்னதைப் பாதி கேட்டிருக்கே. நீங்க வந்தாத்தான் இவ கலகலன்னு சிரிக்கிறா... அதுக்காகவாவது அடிக்கடி வாங்கன்னு சொல்லிகிட்டிருந்தேன்...!'' என்றான்.

'ஓ...!' என்றாள் அடங்கிய குரலில்.

''என்ன... ஓ! மக்கு... மக்கு... கேவலம் பாமா சிஸ்டர்ல்லாம் உள்ளே பூந்து குட்டையைக் குழப்பற மாதிரிப் பண்ணிட்டே!'' என்றான்.

''ஆமா... அது ரொம்பவே கேவலம்தான்!'' என்று முகம் சிவக்க ஒத்துக் கொண்டாள்.

''ஆனா... அதுக்கு நீங்களும் ஒரு காரணம்!'' என்றாள்.

'எப்படி?' என்பதுபோல் அவன் பார்க்க...

''பின்னே? கல்யாணத்துக்கு முன்னாலே எங்கிட்டே தனியாய்ப் பேச வந்தீங்களே... அப்ப... நீங்க செலவு பண்றதையெல்லாம் எப்படித் திருப்பிக் குடுக்கறதுன்னா...



பணமாத்தான் குடுக்கணும்னு என்ன இருக்கு... வேற வேற விதமாக் குடுக்கலாம், அப்படீன்னீங்களே. அப்புறம்... வட்டியும் முதலுமா வாங்கிக்கறேன்னீங்க... எந்த நிபந்தனைக்கும் ஒத்துக்குவாயா, அப்படீங்கறீங்க!'' என்றாள்.

''அட! ஆண்டவா! நான் யதார்த்தமா சாதாரணமாப் பேசினதெல்லாம் பூதாகரமாய்க் கிளம்பிடுச்சு - போ...!''

''ஆமா... அன்னைக்கு ஒருநாள்... இரக்கத்தாலயா என்னைக் கல்யாணம் செஞ்சீங்கன்னு கேட்டேன். இது வாழ்க்கை... இதுக்கு வேற விலை, அப்படீன்னீங்களே! எப்பப் பாரு, விலை... விலைன்னே சொல்றீங்க. பாமா அண்ணி வேற உன்னை விலை குடுத்து வாங்கிட்டாங்கன்னே சொல்றாங்க...'' என்றாள் ஆற்றாமை நிறைந்த குரலில்.

''ஹேய்! நான் பிஸினஸ் மேன். சட்டென்று விலைங்கற வார்த்தைதான் வருது... இப்ப சொல்றேன். நீ என் விலைமதிப்பில்லாத சொத்து... இதயராணி! போதுமா?'' என்று அவன் சிரிக்க... அவள் கலகலவென்று சிரித்தாள். ''ஆமா... இங்க வச்சிருக்கன்டா... உங்கக்காவைன்னு நெஞ்சைத் தட்டித்தட்டிக் காட்டினவராச்சே...!'' என்று சிரித்தாள். 'யப்பா! என்ன வெடி வெடிச்சீங்க... தெரியுமா!'' என்றாள்.

''ஆமா... அதுக்கப்புறம்தானே... அம்மா கொஞ்சம் இடம் குடுத்தீங்க...'' என்றான்.

''ஏன் நம்பி? பாமா அண்ணி ஏன் இப்படி நடந்துக் கிட்டாங்க?'' என்றாள்.

''நான் சொல்லட்டா? கோபிச்சுக்கக் கூடாது. இந்தப் பெண்கள் இருக்கீங்களே... உங்களுக்கு ரெண்டு சைட் இருக்கு. நினைச்சா தேவதையாயும் இருப்பீங்க... இல்லாட்டா...'' என்று தயங்க,

''ராட்சசிகளாவும் இருப்போம்!'' என்று அவளே முடித்தாள்.

''உங்க அண்ணிக்குப் பொறாமை. இவ்வளவு நல்ல இடத்துல உனக்கு வாழ்க்கை அமைந்ததேன்னு...'' என்றான்.

'இருக்கும்...' என்றாள். ''ஆனா... அண்ணி... பாவம்... உங்களை ரொம்ப நல்ல இடம்ன்னு நெனச்சிருக்கா... நீங்க

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

எவ்வளவு மோசமானவர்ன்னு எனக்குத்தானே... தெரியும்...!" என்றாள் சோகமாக.

அவன் ரசித்துச் சிரித்தான்.

"ஆமா... எவ்வளவு தூரம் மோசமானவன்னு இன்னும் உனக்கு முழுசாப் புரியலே. இனிமேத்தான் புரிய வைக்கணும்..." என்று மறுபடியும் சிரித்தான்.

"அதை நினைச்சாத்தான் ரொம்பக் கவலையாயிருக்கு..." என்றாள்.

"ஆமா! ரொம்பக் கவலைதான். நேத்து அம்மிணி குடுத்த ஒத்துழைப்பைப் பார்த்தா... அப்படியெல்லாம் தெரியலையே!" என்று அவன் வம்பிழுக்க...

"சும்மாயிரு... இளந்திரையா... நானே அதை நினைச்சுத் தான் நொந்து போயிருக்கேன்!" என்றாள் அப்பாவியாய்.

அவன் பார்வை மாறியது. முகத்தில் கிறக்கம் ஏறியது... அந்த மாதிரி வார்த்தைகளுக்கான தண்டனை அவளுக்குக் கிடைத்தது. அவளும் கிறக்கமாய்ச் சிரித்தாள்.

'உனக்கும் சரியானலொள்ளு இருக்குது பெண்ணே... இங்கே என்ன பண்றேன்னு கேட்டா... 'ம்... தோட்டம் போடறேன்!'னு ஒருவிதமா சொல்லிட்டுப் போனியே... நினைச்சு நினைச்சுச் சிரிச்சேன்... தெரியுமா?" என்றான்.

அவளும் கிளுகிளுப்பாய்ச் சிரித்தாள்.

"ஆமா, அப்புறம் கவிதை வேற எழுதி... தொல்லைப் படுத்தினீங்க..." என்றாள். மறுபடியும் முத்திரைகள் பதித்தாள்.

"அப்புறம்... ஏன் தேடித் தேடிப் படிச்சயாம்?" என்றான். அவன் கேட்ட வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அந்தநிமிடம் அவள் முகம் வாடியது. அதற்கும் அவன் சிரித்தான். "நானே கொஞ்சம் விட்டுப் பிடிக்கணும்னு நினைச்சுகிட்டிருந்தேன். அதான்... சட்டுன்னு வார்த்தையைப் போட்டு, பிரேக் போட்டேன்!" என்றான்.



"எவ்வளவு வேதனைப்பட்டேன்... தெரியுமா?" என்றாள்.

"ஆமா... ஆனா... காலைல ஆறு மணி வரைக்கும், கதவைத் திறக்கலைன்னவுடனே... என்னென்னமோ கற்பனை பண்ணித் துடிச்சுப் போயிட்டேன், தெரியுமா?" என்று ஆவேசத்துடன் அருகில் இழுத்துக் கொண்டான்.

அவளும் இழைந்து கொண்டாள். சிந்தனையுடன் தொடர்ந்தாள்.

"எங்கண்ணன் சொன்னாரு... அம்மா... கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்... அப்படீன்னு... நம்ம விஷயத்துல முதல்லயே விசாரிச்சிருந்தா... எல்லாப் பிரச்சினையும் தீர்ந்திருக்கும், இல்லே!" என்றாள்.

"அதுக்கும் காரணம் இருக்கு அருவி... நாம சந்திச்ச சூழ்நிலை அப்படி... அதனால உனக்கு ஒரு காம்ப்ளெக்ஸ் ஆயிடுச்சு... ஆனா எனக்கு... எப்படியாவது முதல்லே உன்னைக் கல்யாணம்கற பேர்ல... நம்ம பக்கத்துல கொண்டு வந்தரணும். அப்புறம்... எப்படியாவது புரிய வச்சுக்கலாம்னு எண்ணம். இந்த நாகராஜ் பய இப்படிக் குட்டையைக் குழப்புவான்னு நெனைக்கலே... எப்படியோ எனக்கு ஏழெட்டு மாசம் வீணாப் போச்சு..." என்றான்.

அவள் சிரித்தாள். "அதுலயே இருங்க..." என்றாள்.

"உனக்கு அதெல்லாம் புரியாது..." என்று அவன் சோகமாக,

"போதுமே... இனிக் காம்பன்ஸேட் பண்ணிரலாம். என்ன?" என்று அவளே சொல்லவும் அவன் முகம் மலர்ந்து சிரித்தான்.

கணவன் சிரிப்பதை அவள் ஆசையுடன் பார்த்தாள்.

"நம்பி... நீங்க மெதுவா முகம் மலர்ந்து சிரிக்கும் போது... ரொம்பா அழகா இருக்கு... தெரியுமா?" என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

'தாங்க்ஸ்... தங்கம். அப்படி உன்கிட்டே சொல்றதுக்கு என்கிட்டே ஒரு பெரிய லிஸ்டே இருக்கு... தெரியுமா? அழகான நடை.... ஓரக்கண்ணால பாக்கறது... அக்கறையா சாப்பிட வைக்கிறது... அப்புறம்... இன்னும்..." என்று அவன் விளக்க,

"ப்ளீஸ்! ப்ளீஸ்!" என்று வெட்கத்துடன் அவன் வாயடைத்தாள். அவன் கிறங்கிப் போனான்.

"இனிமே... எதையும் மனசுல வச்சுகிட்டு அலையக் கூடாது...கேட்கணும். சண்டை கூடப் போட்ரலாம், என்ன?" என்றான்.

"ம்ஹூம்." மறுத்தாள்.

அவன் திகைப்புடன் பார்க்க... "எதையும் மனசுல வச்சுக்கக் கூடாதுன்னா... எப்படி? உங்களை என் மனசு பூரா வச்சிருக்கிறனே!" என்று அவள் மயங்க... அவன் உலகம் மறந்தான்.

இரண்டு நாட்களும் உலகம் மறந்து செலவழித்தார்கள்.

பகலும், இரவும் அவர்களுக்குப் பொருளே இல்லாமல் போய்விட.... நேரம் கரைந்தது. நெஞ்சங்கள் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போயின.

மறுநாள் மாலை!

அவன் தனியாகப் போய் ஏதோ செல்ஃபோன் பேசிவிட்டு வந்தான்.

'அதென்ன ரகசியம்?' என்றாள். அவன் சொன்னான்.

அவள் சிரித்தாள்.

'இதுக்குப் பேர் ஹனிமூனா?' என்று மறுபடியும் சிரித்தாள்.

"ஹேய்! அருவி... நமக்குப் பிரைவஸிக்கு எப்பவும் குறைச்சல் இல்லே... இந்த மகிழ்ச்சியை உங்க குடும்பத்தோட கொண்டாடணும்..." என்றான்.



அவன் வாஞ்சையாய் அவள் நெற்றியில் இதழ் பதித்தான்.

"அது மட்டுமில்லே... கூட்டத்துக்கு நடுவிலே உங்கிட்டே குறும்பு பேசணும்... தேவியார் அவஸ்தைப் படணும். அதைப் பார்த்து ரசிக்கணும்!" என்றான்.

'வேண்டாம்!' என்றாள் மிரட்டலாக.

'ஏன்?'

'அப்புறம்... நானும் திருப்பி... எக்குத் தப்பா... ஏதாவது செஞ்சு வைப்பேன்!' என்றாள்.

'ஐயோ... நீ செஞ்சாலும் செய்வே!' என்று உண்மையாகவே பயந்தான். அவள் வெற்றிக் களிப்புடன் சிரித்தாள்.

## 28

'**மா**... மா...' என்று ஓடி வந்த தருண் குட்டியை வாரிக் கொண்டான் இளந்திரையன்.

இளந்திரையனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு சிரித்த குழந்தையை இரு கைகளாலும் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி இறக்கினான்.

முதல் காரிலிருந்து இறங்கிய பாரி குடும்பத்தினர் அதை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். கயல்விழியும் அவர்களோடு வந்து இறங்கினாள்.

மற்றொரு ஏ.சி. காரில் கிள்ளிவளவன், தியாகராஜன், சங்கரி ஆகியோர் வந்து இறங்கினார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த தேனருவிக்கு முதல் நாள் கணவன், கிள்ளிவளவனிடம்,

'டேய், கிள்ளி! வந்தா நீங்க இங்க ஒரு வாரமாவது இருக்கற மாதிரி டிசைட் பண்ணிக்க. டாக்டர்கிட்டே அப்பாவை எப்படிப் பத்திரமாப் பாதுகாக்கிறதுங்கற எல்லா விவரமும் கேட்டுக்க... ஏ.ஸி. கார்ல வந்துருங்க... பொறுமையா டிராவல் பண்ணி வந்தாப் போதும்... என்ன?' என்று விதவிதமாக அறிவுரைகள் கொடுத்தது நினைவு வர, கணவன் மீது தனது

நன்றிப் பார்வையை வீசியபடி, வந்தவர்களை வரவேற்றாள். வந்து கணவன் அருகில் நின்றாள்.

'மாமா... என்னை...?' என்று இரு கைகளையும் தூக்கிக் கொண்டு ஆசையாய் அருகில் வந்த தாமரையையும் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி இறக்கினான்.

'ம்... என்னை?' என்று குதித்த கோப்பெருஞ்சோழனையும் ஒரு சுற்றுச் சுற்றி இறக்கியவுடன், இதை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு நின்ற மனைவியிடம் கண் சிமிட்டிக் கொண்டு அவளையும் இரு கைகளாலும் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி இறக்கினான்.

கிள்ளிவளவன், கயல்விழி, பாமா, பாரிவேள் எல்லாரும் கைகொட்டிக் கொண்டு சிரிக்க... பெரியவர்கள் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

'என்ன... நீங்க? என்று வெட்கப்பட்ட மனைவியைப் பார்த்து, மற்றவர்கள் அறியாத வண்ணம் கண் சிமிட்டிக் குறும்பாகச் சிரித்தான்.

இதைப் பார்த்தபடியே விவேகானந்தனும், செல்லம்மாவும் அந்த அழகிய புல்வெளி கார்டனின் ஒரு புறம் இருந்து வந்தார்கள். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

'ஏன், செல்லம்மா... நம்பி முகத்தில் எவ்வளவு... மலர்ச்சி... சந்தோஷம் பார்த்தியா? தேனருவி முகத்திலயும் மலர்ச்சிதான்... உன் மகன் எல்லாத்தையும் சரி பண்ணிட்டான் போல...'' என்று மகிழ்ச்சியாய்ச் சிரித்தார்.

'ஹேய்! அருவி...! நமக்கு எப்பவும் பிரைவஸி கிடைக்குது. ஆனா, இந்த மாதிரி ஒரு கோடை காலத்துல, நமக்கு ஒரு கெஸ்ட் ஹவுஸூம் இருக்கும்போது குடும்பத்துல எல்லாரும் என்ஜாய் பண்ண வேண்டாமா? எல்லாரையும் கூப்பிடலாம். இவங்கள்ளாம் ஒரு வாரம் இருக்கட்டும். நாமளும் ரெண்டு நாள் இருந்துட்டுப் போலாம்...'' என்றான்.



அவள் அவன் முகத்தைப் பார்க்க, ''ஆமடா... நாம போய் இந்த ஒரு வாரமா இருக்கிற ஆஃபீஸ் வேலைகளைப் பார்க்கலாம். இனிமே தேவியார் முழுசா என் பக்ககத்துல தானே இருக்கப் போறீங்க... அப்புறம் எப்ப வேணாலும் எது வேண்ணாலும் கிடைக்குமாச்சே!'' என்றான்.

அவள் வெட்கம் கலந்த புன்முறுவலுடன் தலையாட்டினாள்.

நாள் முழுதும் கலகலப்பாக ஓடியது. மறுநாள் காலை தேனருவி ஒரு யோசனை சொன்னாள். 'ஏங்க... இன்னைக்கு சாயங்காலம் நம்ம புல்வெளி கிரவுண்டிலேயே ஒரு சின்ன டின்னர் வைக்கலாமா?'' என்று.

''ஓ...!சமையல்?'' என்றான்.

''இத்தனை பேர் துணைக்கு இருக்காங்க... சமையற்காரர் வேற இருக்காரு... நானே செஞ்சுடுவேன்...'' என்றாள்.

''மெனு!'' என்றார்கள்.

''மெனு?''

''ம்... பிட்ஸா...?'' என்றாள் தேனருவி. உடனே குழந்தைகள் 'ஹே! பிட்ஸா!'என்று குதித்தார்கள்.

'செய்வியா?' என்றான் இளந்திரையன்.

'ம்... ம்... செய்வேன். அதுல நிறைய வகைகள் செய்யலாமே!' என்றாள் தேனருவி.

'குட்!' என்று சந்தோஷமானான் இளந்திரையன்.

'பிட்ஸா, ஃபிரைட் ரைஸ்... சப்பாத்தி... வெஜிடபிள் சாலட்... என்று அவர்கள் போட்டமெனுவைப் பார்த்தவுடன் இளந்திரையனுக்கு வேறு ஒரு யோசனை தோன்றியது.

'ஏன் அருவி! என்னோட ஃபிரண்ட்ஸ் கொஞ்சம் பேர் கொடைக்கானல்ல இப்ப வந்துருக்கானுக... இங்கயே ஒரு ஓட்டல் அதிபர்... மதுரையிலிருந்து இரண்டு மூணு பேர்... பெரியப்பா... எல்லாத்தையும் கூப்பிட்டர்லாமா? அட...

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

சங்கீதாவையும், அசோக்கையும் கான்ஃபரன்ஸ் முடிச்சு வரச் சொல்லீரலாமா... நல்ல சாப்பாடுன்னா... எல்லாரும் வந்துடுவானுங்க!'' என்று திட்டமிட ஆரம்பித்தான்.

அது ஒரு பெரிய விருந்தாகவே மாறிவிட்டது.

''அது மட்டுமில்லே... அருவி... நாம இப்படி ஒரு விருந்தை இனிமே அடிக்கடி குடுக்க வேண்டிவரும். உனக்கும் அனுபவம் கிடைக்குமில்லே...'' என்று சொன்னான் இளந்திரையன். எனவே தேனருவியும் ஆர்வமாகத் திட்டமிட்டாள்.

'பூஃபே' சிஸ்டம் வைத்தார்கள். பங்களாவில் இருந்த பெரிய டைனிங் டேபிளை ஒரு இடத்தில் போட்டார்கள். அதைச் சுற்றிக் கொஞ்சம் சேர்கள். தவிர வட்ட வட்டமாகக் கொஞ்சம் சேர்கள்... ஆங்காங்கே ஸ்பாட்டுகளில் பங்களாவில் இருந்த பூந்தொட்டிகளைக் கொண்டு வந்து வைத்து... அவள் செய்த ஏற்பாடுகளில் இளைஞர்கள் ஆர்வமாகப் பங்கெடுத்துக் கொள்ள... பெரியவர்கள் ஆலோசனைகள் சொல்லிக் கொண்டு கலந்துகொண்டார்கள்.

ஐஸ்கிரீம், இனிப்பு வகைகள் மட்டும் வெளியில் வாங்கினர். உணவு தயாரிப்பதைத் தேனருவியே நின்று செய்ததோடு, ஐந்து மணிக்கெல்லாம், தயாரிப்புகளை முடித்து... சூடாக இருப்பதற்கான ஏற்பாடுகளை செய்து... ஒரு நீள மேஜையில் அந்தந்த ஐட்டங்களை யெல்லாம் வரிசைப் படுத்தி, உதவிக்கு அழைத்திருந்த கேட்டரிங் நிறுவனத்தின் உதவியோடு பரிமாற ஆட்களை நிறுத்தி என்று எல்லாவற்றையும் தயார் செய்தாள்.

''ஹேய்! உங்கிட்ட... நல்ல ஆர்கனைசிங் கெப்பாசிட்டி... இருக்கு...'' என்றான் இளந்திரையன்.

''ஆமா... காதல் மனைவியாச்சே! கணவனின் எல்லாக் காரியங்களிலும் கை கொடுக்க வேண்டாமா?'' என்றாள். அரைமணி நேரத்தில் தயாராகிப் புத்தம் புது மலர் போல்



ஐந்தரை மணிக்கே கணவன் அருகில் வந்து நின்று எல்லாரையும் வரவேற்கத் தயாரானாள் தேனருவி...

அவளே தொடர்ந்தாள். ''ஏங்க... எம்.எஸ்.உதயமூர்த்தி இருக்காரில்லே... அவர் அமெரிக்காவில இதுமாதிரி உணவுப் பொருட்கள் தயாரிப்பில் ஆலோசகராக இருந்திருக்காரு. அப்ப யாரு தெரியுங்களா, அவங்க வைஃப்தான் எல்லா உதவியும்... செய்வாங்களாம். அது மாதிரி... இந்த அம்மாவும்னு வச்சுக்கங்களேன்... என்றவள்,

''ஏங்க நீங்க அவர் புக்ஸ் படிச்சிருக்கீங்களா?'' என்றாள்.

''ம்... 'எண்ணங்கள்' புத்தகத்திலே ஆரம்பிச்சு... எல்லாத்தையும் படிச்சிருக்கேன்!'' என்றான். பிறகு.

'ஏன்' அருவி! இந்த மாதிரிப் புத்தகப் படிப்பெல்லாம்தான்... உங்க அப்பா உடம்பு சரியில்லாம இருக்கப்ப... உனக்கு எல்லாத்தையும் சந்திக்கத் தைரியம் குடுத்துச்சோ...?'' என்றான்.

'ஆமாங்க!' என்று அவள் ஒப்புக் கொண்டு தலையாட்டினாள்.

'அது மட்டுமில்லைங்க... என்னோட பாஸிடிவ்வான எண்ணங்கள் கூட... எனக்கு நல்லதா ஒரு வாழ்க்கை அமையக் காரணமோன்னு நினைக்கறேன்!'' என்றாள்.

'பின்னே அதிலென்ன சந்தேகம்!' என்றான் இளந்திரையன். அதற்குள் விருந்தனர்கள் வரவும் வரவேற்கத் தயாரானார்கள்.

அக்காவின் முகத்தில் இருக்கிற மலர்ச்சியையும், மச்சானிடம் பேசும் போது தோன்றுகிற வெட்கம் நிறைந்த உணர்ச்சி பாவங்களையும் பார்த்த கிள்ளிவளவன் மனம் நிறையப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மைத்துனரிடம் நெருங்கி, ''மாமா! அக்கா அழகுன்னு தெரியும். ஆனா... அக்கா முகத்திலே இப்படிச் சிவப்பும், மினுமினுப்பும் போட்டி போடற மாதிரி... என்ன வித்தை செஞ்சிங்க மாமா?'' என்றான் மெல்லிய குரலில்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

''அந்த வித்தையெல்லாம் இப்ப சொல்ல முடியாதுடா... மாப்பிள்ளே... உனக்கு அவசியம் வரும் போது நானே சொல்லித் தரேன்!'' என்று கலகலவென்று சிரித்தான், இளந்திரையன்.

''மாமா... பிட்ஸா... சூப்பர்!'' என்று வந்தான் கோப்பெருஞ் சோழன்.

''நீ அதிலயே இருடா!'' என்று கிள்ளி வளவன் வாரவும், எல்லாரும் மறுபடியும் சிரித்தார்கள்.

அசோக்கும், சங்கீதாவும் வந்து சேர்ந்தார்கள். இன்னும் கலகலப்பாகியது. பேச்சோடு பேச்சாக மதுரையில் காகித சப்ளைக்கு ஒரு ஆர்டர் வேறுபிடித்துக் கொடுத்தான் பாரி...

எல்லாரும் கூட்டங் கூட்டமாக நேரம் செலவழிக்கையில், இளந்திரையன் மெதுவாக நெருங்கினான்.

''ஹேய்! எல்லாரும் டேஸ்டா இருக்குங்கறானுக... பேசாம ஒரு கேட்டரிங் யூனிட் கூட ஆரம்பிச்சர்லாம் போல இருக்கு...!'' என்று பாராட்டினான்.

''ஹேய்! இதுவரைக்கும் நீயும் சாப்பிடல. வா... நாம அந்தப் பக்கம் போயிரலாம்!'' தன்னுடைய தட்டில் கொஞ்சமாகவும் அவளுடைய தட்டில் சற்று அதிகமாகவும் வைப்பதை அவள் புரியாமல் பார்க்க...

'வா... சொல்றேன்!' என்று ஒரு புதர்ச்செடியின் அந்தப் பக்கம் அழைத்துப் போனான்.

அந்த நேரம்... 'தேனு!' என்று ஏதோ கேட்க வந்த பாமாவை வேகமாக வந்து தடுத்த வேள்பாரி -

'ஏய்! வா...மச்சான் அருவி கிட்ட ஏதோ தனியாப் பேசணும்னு போறாரு போலருக்கு...நீ இடைஞ்சல் பண்ணிகிட்டு..!'' என்று இந்தப் பக்கம் இழுத்துவர... இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

'ஏன்... இப்படி? உங்க தட்டில குறைவா...' என்றுகேள்வி கேட்ட மனைவியைப் பார்த்துச் சிரித்தான் இளந்திரையன். தன்



கையில் இருந்த தட்டைப் பக்கத்தில் இருந்த சிமெண்ட் மேடை மேல் வைத்தவன்,

''அறிவுக் களஞ்சியம் போ... எல்லாத்தையும் விளக்கமாகச் சொல்லணும்...'' என்று மனைவியைத் தன்னருகில் இழுத்ததோடு, மனைவியின் திறமையைப் பறைசாற்றிய அந்த உணவு வகைகளை ஒரு அன்புக் கணவனாகத் தனக்கு விருப்பப்பட்ட முறைகளில் அவளிடமிருந்து பெற்றுக் கொண்டான். பிறகு மெல்ல விடுவித்தான்.

வெட்கத்தில் தவித்து நிற்கிறவளைப் பார்த்து மகிழ்ச்சியாய்ச் சிரித்தான்.

''அழகா... ட்ரிம்மா... உடுத்திகிட்டு வந்து மனுஷனைக் கொல்றே!'' என்றான் கிறக்கக் குரலில்.

''ஹேய்! நிஜம்மாவே... நீ டேலண்டட்தான். நிர்வாகம்தான் ஈஸியாக் கத்துகிட்டேன்னு பார்த்தேன்... எல்லாமே நல்லாச் செய்றே! இனிமே... நம்ம மில்லு தொடர்பா நடக்கிற பிஸினஸ் மீட்டிங்குக்கெல்லாம் நீதான் டின்னர் ஏற்பாடு...'' என்றான்..

அவள் சரியென்று தலையாட்டினாள். மறுபடியும் அவன் அவளை அருகில் இழுத்துக் கிறங்கிக் கொஞ்சினான்.

''என்ன... நீங்க... இப்படிக் கூட்டத்துல?'' என்று தவிக்க,

''அருவி! சும்மாயிரு... எல்லாருக்கும் நான்... உன்னைத் தவிர... இழுத்துகிட்டு வந்தது தெரியும். எல்லாரும் இங்கிதம் தெரிஞ்சவங்கதான்... யாரும் டிஸ்டர்ப் செய்ய மாட்டாங்க...'' என்றான்.

'சரியான... ஸ்கீமர்...' என்று மெல்லிய குரலில் சிரித்தாள்.

தன் கழுத்தில் முகம் புதைத்து அவன் பேசுகிற அன்பு மொழிகளை அவள் மனப் பெட்டகத்தில் பதித்துக் கொண்டாள். பின் அவன் மார்பில் அடைக்கலமாகி, ''ரொம்ப ரொம்ப... உளர்றீங்க!'' என்றாள்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

அவன் அதற்கும் அதே கிறக்கச் சிரிப்புச் சிரித்தான்.

சற்று நேரம் கழித்து...!'

மெதுவாக அந்த மங்கிய ஒளியில் நடந்தார்கள். அவன் சொன்னான்.

''அருவி! நீ நிஜமாவே அருவிதான். என் இதய அருவி. அன்பைப் பொழியறதிலே... உழைக்கறதிலே... எல்லாத்திலயும்... உன்னை முதன் முதலாப் பாத்தப்போ... உதவி கேட்கறதுலயும் நீ கம்பீரமா நின்ன விதம்... எளிமை... அப்பவே என்னைத் தாக்கிடுச்சு. அப்பவே என்னோட ஆழ்மனசு சொல்லீருச்சு... இவதான்டா உனக்குன்னு பொறந்தவ... விட்ராதே... அப்படீன்னு. அதான் சட்டுன்னு நம்ம கோட்டைக்குள்ளே கொண்டு வர ஏற்பாடு செஞ்சேன்!'' என்றான் பெருமையுடன்.

'நாந்தான் உங்களைத் தப்பா நினைச்சு...' என்று அவள் வருந்தவும்,

''ஹேய்! உன்னோட அந்தச் சுயமரியாதையும் எனக்கு ரொம்பப்பிடிச்சுத்தான் இருந்தது. ஒண்ணு சொல்லட்டா... நானும், அப்பாவும் ஒரு திட்டம் போட்டிருக்கோம். நீ திருப்பிக் கொடுக்கிறியே. அதையே முதலீடா வச்சுகிட்டு சாரிட்டி அமைப்பு ஒண்ணு ஆரம்பிக்கறது, மில்லு வருமானத்துல ஒரு ஷேர், மத்தவருமானத்துல ஒரு ஷேர்ன்னு போட்டு கிட்னி பேஷன்ட்ஸ் யாராவது ஒருத்தருக்காவது அப்பப்ப ஹெல்ப் பண்ணலாம்னு முடிவு!'' என்றான்.

தேனருவியின் கண்களில் மலர்ந்த காதலையும் கனிவையும் ஆழப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''நான் உன் மேல வச்ச காதலுக்கு... தாஜ்மஹால்தான் கட்டணும்னு இல்லயே... இப்படியும் செய்யலாமே!'' என்றான்.

அவள் தானாக அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.



''இவ்வளவு அன்புக்கு எனக்கு என்ன தகுதி? நான் இதுக்கு எப்படிப் பதில் கொடுக்க?'' என்றாள்.

''வெரி ஈஸி... மேடம். நான் கேக்கறப்ப... கேக்கறதெல்லாம்... மறுக்காமல் குடுக்கணும்...!'' என்றான்.

''அது ஏற்கெனவே முடிவான விஷயம்தானே...'' என்று அவளும் சிரித்து...

''இப்ப என்ன வேணுமாம்?'' என்றாள்.

'ஏதோ கொஞ்சம்...' என்று அவன் கேட்ட பரிசுகளைக் கொடுத்தாள்.

'எல்லாரும் தேடப்போறாங்க...' என்று முணுமுணுத்தாள்.

''ஆமா... இனி எல்லாரும் புறப்படுவாங்க. வழியனுப் பணுமில்லே!'' என்று இயல்பாக வருவது போல் வெளியே வந்தார்கள்.

சற்று தூரம் நடந்தவுடன் அவளுடைய அப்பாவும், அவனுடைய அப்பாவும் பேசுவது கேட்டு நின்றார்கள்.

''சம்பந்தி... உலக அதிசயம் தெரியுமா? எங்கயாவது மாமியார் மருமகளைப் பாராட்டறது உண்டா? எங்க வீட்ல நடக்குது. செல்லம்மாவுக்கு உங்க மகளை ரொம்பப் பிடிச்சுப் போச்சு...'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் விவேகானந்தன்.

''ஆமாங்க... சம்பந்தி... எங்க வீட்லயும் எல்லாருக்கும் இன்னும் இது கனவோன்னு... ஒரு நல்ல வாழ்க்கையும் கிடைச்சது!'' என்று நிறுத்தினார். பிறகு பெருமூச்சுவிட்டபடி சொன்னார்.

''என்... மக இதுக்கெல்லாம் தகுதியானவதான்... உழைப்பாளி, படிப்பாளி, பொறுமைசாலி. உங்க மகன் மட்டுமென்ன?'' என்று சொன்னார்.

விவேகானந்தன் அதை ஆத்மார்த்தமாக ஒத்துக்கொண்டார்.

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

இளந்திரையனும், தேனருவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதற்குள் விவேகானந்தன்,

"அது கிடக்கட்டும்... சம்பந்தி... நமக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு... பேரனோ... பேத்தியோ... எதுவானாலும், ரெண்டு பேருமா ஆலோசனை பண்ணி ஒரு நல்ல தமிழ்ப் பேரா தேர்ந்தெடுத்து வைக்கணுமே..." என்றார், தீவிரமான குரலில்.

இளந்திரையன் புன்னகையுடன் நடக்க, அவள் இணைந்து நடந்தாள்.

"அருவி! ரெண்டு பேரும் ரொம்ப ஆசையா இருக்காங்க... பேரு வைக்கணுமாம். குழந்தை வேணுமில்ல! ஏற்பாடு செஞ்சர்லாமா?" என்றான். வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

அவனது மலர்ந்த சிரிப்பை அவள் உள்வாங்கிக் கொண்டு காதலுடன் நிமிர்ந்து பார்த்துப் பேச்சற்று நின்றாள்.

அந்த இனிய இரவில் அந்தச் சிறிய விருந்தினர் கூட்டத்தில் காதலும் பாசமும், உறவும் நெருக்கமும் பரவிக் கிடக்க, சாதனைகள் படைக்கிற ஒரு வாழ்க்கைக்கு, சமுதாயத்துக்கு நல்லது செய்தபடி காதலும்... என்று வாழ்கிற ஒரு வாழ்க்கைக்கு அவர்கள் தயாராகிக் கொண்டிருக்க,

பார்வைகள் ஒன்றை ஒன்று கவ்வி நின்றன.

காலம் அவர்களின் வெற்றிகரமான வாழ்க்கையைக் கண்டு களிக்க...

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer

Create PDF with GO2PDF for free, if you wish to remove this line, click here to buy Virtual PDF Printer